# புதிய மழை

## தூறல் - 02

## பிரதேச இலக்கிய விழா – 2018
## சிறப்பு மலர்








வெளியீடு :
பிரதேச செயலகம்
பிரதேச கலாசார அதிகார சபை
மண்முனைப்பற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மழை

## தூறல் - 02

## பிரதேச இலக்கிய விழா - 2018
## சிறப்பு மலர்



வெளியீடு

**பிரதேச செயலக கலாசார அதிகார சபை**
**மண்முனைப்பற்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | புதிய மழை |
| தொகுதி | : | தூறல் - 02 |
| மொழி | : | தமிழ் |
| நூல் அளவு | : | B5 |
| பிரதிகள் | : | 100 |
| பக்கங்கள் | : | 153 |
| தொகுப்பு | : | மௌலவி A.L.முசாதிக்<br>அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>திருமதி சங்ஹீத்தா கஜமுகன்<br>அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| கணணி வடிவமைப்பு | : | திரு.உ.உதயகாந்த்<br>முகாமைத்துவ உதவியாளர்<br>திருமதி.மிதிலா ஜெயமோகன்<br>அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| அட்டைப்படம் | : | ஜெஸ்லியா அச்சகம், ஆரையம்பதி |
| பதிப்பு | : | 2018 |
| வெளியீடு | : | பிரதேச கலாசார அதிகாரசபை மண்முனைப்பற்று. |
| மலருக்கான அனுசரனை | : | கலாசார அலுவல்கள் திணைக்களம், அஷ்ஷபாபான் நலன்புரிச்சங்கம் |
| அச்சிட்டோர் | : | ஜெஸ்லியா அச்சகம், ஆரையம்பதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கலாசார பண்பாடுகளை இன்னும் நேர்த்தியாக பின்பற்றும் ஆற்றல் மிக்க கலைஞர்களையும் கலைகளையும் பின்பற்றுகின்ற பிரதேச இலக்கிய விழாக்கள் மற்றும் எற்பாடுகள் போற்றுதற்குரியதோடு, பல் துறை கலாசாரங்களின் நிர்ணய சமத்துவத்தை விரல் சுட்டும் அளவிற்கு பின்பற்றும் நம் நாட்டவர்கள் இவ்வாறான விழாக்களின் மூலம் சர்வதேசத்திற்கும் பண்முக சமூகத்திற்கும் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றமை பெருமைக்குரியதே.

அந்த வகையில் கிழக்கு மாகாண கலை இலக்கிய சிறப்புகளை நான் அறிவேன் வெறுமனே பட்டியல் படுத்தப்பட்ட இலக்கிய ஆக்கங்களை முன்வைப்பதற்கு மாறாக இது ஆக்கமாளருக்கும் இரசனையாளருக்கும் ஒரு புதிய அனுபவமாக அமைவது நிச்சயம். அது மாத்திரமன்றி காலத்தின் போக்கில் மறைந்து போய்கொண்டிருக்கும் கலைகள் நாட்டார் கதை விமர்சனம் என்பவை மறுமலர்ச்சி பெறுவதாயின் எமது முயற்ச்சிகள் எதிர்காலத்தில் பயனுடையதாக அமையும்

மண்முனைப்பற்று பிரதேச கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக “புதிய மழை” என்ற மலரை வெளியிட மண்முனைப் பற்று பிரதேச செயலக கலாசார அதிகாரசபை எடுத்த முயற்சியானது வரவேற்கத்தக்கது இதன் மூலம் கலை ஆக்கத்திறனை வெளிப்படுத்துகின்ற அனைத்து படைப்பாளர்கள் மற்றும் கலைஞர்களின் கலை வாழ்க்கை வழிகளை மேலும் பிரகாசப்படுத்துவதால் தேசிய தரத்தின் கலைஞர்கள் உருவமெடுக்க இறைவன் அருள் அவர்கட்கு கிடைக்க வேண்டுமென பிராத்திக்கின்றேன்.

**அனுஷா கோகுல பர்ணாந்து**
**கலாசார அலுவல்கள் திணைக்களம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரஅதிகார சபையும் இணைந்து நடாத்தும் இலக்கிய விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் "புதிய மழை" – தூறல் 02 எனும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ் இலக்கிய விழாவினை முன்னிட்டு "புதிய மழை" – தூறல் 02 நூல் வெளியீடானது மண்முனைப்பற்று ஆரையம்பதிக்கே உரித்தான பாரம்பரியங்கள், கலாசார விளிமியங்கள், கலை வெளிப்பாடுகள், எழுத்தாக்கங்கள் ஆகியவற்றை தாங்கி வருவதோடு இலக்கிய விழாவில் வெற்றி பெற்ற ஆக்கங்களையும் தாங்கி வரும் ஆவணமாக அமையும் என்பது வெளிப்படை.

மண்முனைப்பற்று வாழ் மக்களின் கிராமிய பண்பாடுகளையும் பாரம்பரிய கலாசார விளிமியங்களையும் எடுத்துரைக்கும் விழாவாக இவ்விழா அமைவது பாராட்டுக்குரியது. ஒரு பிரதேசத்தில் கலைஞர்கள், அறிஞர்கள் ,பண்டிதர், பாமரர், இளைஞர்கள், முதியோர் ஆகிய பல தரப்பினரும் உள்ளக்கிடக்கைகளையும் மன எழுச்சிகளையும் வெளிக்கெணரும் ஆவணமாகவே இவ்விலக்கிய நூல் வெளியீடு அமையும் என்பது தெளிவு.

எனவே இந்நூல் வெளியீட்டுக்கு முன்னின்று உழைத்த பிரதேச செயலாளர், கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீட்டுக்குழுவினர் மற்றும் கலாசார அதிகாரசபை உறுப்பினர்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு இக்கலாசார பணி மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.

**எஸ் ஸ்ரீகாந்த்,**
**மேலதிக அரசாங்க அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலில் எமது பிரதேச செயலகத்தில் வருடம் தோறும் இடம் பெறும் இலக்கிய விழா போட்டியினை சிறப்பிக்கும் வகையிலும் எமது பிரதேச இலக்கிய படைப்பாளிகளை ஊக்குவிக்கும் நோக்கிலும் பிரதேசமட்டத்தில் நடாத்தப்படும் இலக்கிய விழா போட்டியில் வெற்றி பெறும் ஆக்கங்களை தொகுத்து வெளிவரும் "புதிய மழை" இன் தூறல் 2 இம் முறை வெளிவருவதை இட்டு மிகவும் மன மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பிரதேசம் மூத்த தலைமுறையில் இருந்து இன்றைய இளம் தலைமுறை வரையில் அதிகமான இலக்கிய வாதிகளையும் கலைஞர்களையும் கொண்டுள்ளதுடன் அவர்களுக்குரிய இடத்தினையும் வழங்கியுள்ளது. இவ்வாறான இலக்கிய படைப்பாளிகளளுக்கு இலக்கிய விழா மூலமாக கௌரவத்தினையும் ஊக்கத்தினையும் வழங்கும் வகையில் அவர்களது ஆக்கங்கள் பிரசுரிக்கப்படுகின்றது. அந்த வகையில் இப்போட்டியில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் கலைஞர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இவ்விழா சிறப்பாக இடம் பெறுவதற்கும் இம்மலர் வெளிவருவதற்கும் எமது பிரதேச செயலகத்துடன் இணைந்து செயற்பட்டுவரும் பிரதேச கலாசார அதிகாரசபை உறுப்பினர்களுக்கும் கலைஞர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதுடன் இம் மலர் மென்மேலும் சிறப்பாக அமையவேண்டும் என இறைவனையும் பிராத்திக்கின்றேன்.

**திருமதி.ந.சத்தியானந்தி**
**பிரதேசச செயலாளரும், கலாசார அதிகார சபைத்தலைவரும்**
**பிரதேச செயலகம், மண்முனைப்பற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## தேசிய இலக்கியப் போட்டி - 2018


1. கலை ........................................................... 08
2. உதயவும் மறைவும் ........................................ 17
3. மட்டுமண்மகிமை ............................................ 22
4. விதைத்ததே விளையும்.................................. 23
5. ஒரு மொட்டு மலர்கின்றது.............................. 25
6. இலக்கியம் கலைகளினூடான மனிதனின் மகிழ்வான வாழ்வு.......................................... 28
7. வலை.............................................................. 32
8. மழையில் கருகும் பூ........................................ 37
9. இனியும் கொல்லாதே........................................ 43
10. மாந்திரிகச் செயல்முறைகள்.......................... 45
11. இலக்கியம் காலத்தின் கண்ணாடி................. 49
12. ஏற்றம் = ஏமாற்றம் ........................................ 54
13. ஒன்றிணைந்து வெண்றிடுவோம்.................... 63
14. 153 .............................................................. 64
15. நாட்டார் கலை கற்றல் ................................. 69
16. இலக்கியத்துக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்து மறைந்த கலைஞர்கள்............ 148
17. நன்றியுரை ..................................................... 153





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய இலக்கியப் போட்டி – 2018
## பிரதேச மட்ட பெறுபேறுகள்

| தொ இல | போட்டியின் பெயர் | மொத்த ஆக்கங்கள் | பிரிவு | 1ம், 2ம், 3ம், இடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் | பாடசாலையின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01 | கையெழுத்துப்பே ாட்டி | 22 | பாலர் பிரிவு | 1.மோ.சிபந்தி ஜக்சிதா | மட;/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம |
| | | | | 2.கோ.ஜதுஷியன் | மட்/கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம் |
| | | | | 3.ஸ்ரீ.ஜிக்சிதா | மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம் |
| 02 | கவிதைபாடல் | 13 | சிறுவர் பிரவு | 1.ஜீ.அபிநயா | மட்/ஆரையம்பதி இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயம் |
| | | | | 2.ம.கோபிகா | மட்/மாவிலங்கன்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| | | | | 3.மா.லக்மினி | மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம் |
| 03 | கையெழுத்துப் போட்டி | 32 | | 1.ஸ்ரீ.பிருத்விகா | மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம் |
| | | | | 2.ந.ரி' ழினி | மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம் |
| | | | | 3.மா.லக்மினி | மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம் |
| 04 | கட்டுரைப்போட் டி | 07 | கனிஸ்டபிரிவு | 1.ம.அனுரு'ா | முட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம் |
| | | | | 2.கோ.பிரவீனா | மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம் |
| | | | | 3.பா.கோகிலா | மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம் |
| 05 | கவி தைப் பாடல் | 17 | | 1.மோ.பிறிமிக்கா | மட்/ஆரையம்பதி இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயம |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 2.ஜீட்ஜீலியானா யஸ்மிதா | மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம் |
| | | | | 3.க. கஜேந்தினி | மட்/மாவிலங்கன்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| 06 | கவிதை எழுதுதல் | 10 | | 1.மோ.தர்சிகா | மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம் |
| | | | | 2.தி.அபிலாசினி | மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம் |
| | | | | 3.கு.டோஜினி | மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம் |
| 07 | நாடகப்பிரதி எழுதுதல் | 03 | சிரேஷ்டபிரிவு | 1.க.கோவிநாத் | மட்/மாவிலங்கன்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| | | | | 2.கௌ.தேவநந்தினி | மட்/மாவிலங்கன்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| | | | | 3.ரி.குவேணுகா | மட்/ஆரையம்பதி இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயம் |
| 08 | பாடலாக்கப் போட்டி | 11 | திறந்த மட்டம் | 1.திரு. தஇன்பராசா | புதுக்குடியிருப்பு |
| | | | | 2.திருமதி.ரதி தனஞ்செயன் | ஆரையம்பதி |
| | | | | 3.ந.சறோஜினி | தாழங்குடா |
| 09 | சிறுகதைப போட்டி | 04 | | 1.ஜனாபா சல்மாநாச்சி முஹம்மட் இப்ராகிம் | காங்கோயனோடை |
| | | | | 2.திரு.ஜீ.எழில்வண்ணன் | கிரான்குளம் |
| | | | | 3.திரு. தஇன்பராசா | புதுக்குடியிருப்பு |
| 10 | நாட்டார் கலை கற்றல் போட்டி | 02 | | 1.திருமு.அருளம்பலம் | ஆரையம்பதி |
| | | | | 2.திரு.ஜீ.எழில்வண்ணன் | கிரான்குளம் |
| 11 | சிறுவர் கதைஆக்கப் போட்டி | 01 | | 1.திரு மு.அருளம்பலம் | ஆரையம்பதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டுரை**
**கனிஷ்ட பிரிவு**
**முதலாமிடம்**

# கலை

கலை என்பது ஒரு வெளிப்பாடு கலைஞன் தனது உள்ளுணர்வை வெளிக்கொணரும் கருவி. தன் மனச் சுதந்திரத்தை தனதுரசிகர்களுடன் தன் எண்ண அலைகள் பற்றி பகிர்ந்து கொள்ளும் யுக்தி, தான் தன் மனக்கண்ணில் காணும் காட்சியை மற்றவரும் பார்க்க செய்யும் மார்க்கம். அதுதான் கலை. ஓவ்வொரு மனிதனுள்ளும் ஒரு கலைஞன் இருக்கிறான் உறங்கிக் கொண்டு! அன்றாட வாழ்வில் சிக்கி பூட்டிக்கிடக்கும் இந்த உணர்வு சுதந்திரத்திற்கு என்றும் எப்போதும் ஏங்கிக் கொண்டே தவிக்கிறது.

அழகியல் பற்றிய வகையீட்டில் ஆயகலைகள் அறுபத்து நான்கு எனக் கூறப்பட்ட வகைப்பாடானது மாற்றப்பட்டு இன்று நூற்றுக்கு மேற்பட்டவையாக வகையீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான மாற்றத்தின் அதிகரிப்பினால் மனித மனம் ஆறுதல் அடைகிறது என உளவியலாளர் கூறுகின்றார். ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் மனச் சுமையால் கட்டுண்டு கிடக்கின்றான். இந்நிலையில் கலைகளின் வகையீட்டின் அதிகரிப்பானது மனச்சுமைகளைக் குறைப்பதற்கு ஏற்ற களமாக அமைகின்றது என்ற கருத்தினை சிக்மன்புறொய்ட் என்ற உளவியலாளரும் ஆதரித்துச் செல்கின்றார்.

இக்கருத்துக்களின் முக்கிய செல்வாக்கானது அரிஸ்ரோட்டிலின் உளவியலின் அடிப்படையான கதாசிஸ் என்ற கொள்கையிலிருந்து உருவாக்கம் பெற்றிருக்கின்றது. கதாசிஸ் என்பதன் பொருள் உணர்வு வெளியேற்றம் ஆகும். அந்த உணர்வு வெளியேற்றம் இன்பவியலாக அல்லது துன்பவியலாக அமையலாம் எனக் கூறுகின்றார். உதாரணமாக ஓர் நாடகத்தினை நாம் பார்க்கின்றபோது எம்முடைய மனங்களில் ஆனந்தம் பொங்கி சிரிப்போடு சேர்ந்த ஓர் வகையான உணர்ச்சி வெளியேற்றம் நடைபெறும். அதேபோல அந்நாடகத்தில் எமது மனதினைப் பாதிக்கின்ற சம்பவங்கள் காட்சிகளாக வருகின்ற போது எம்மை அறியாமலே எமது மனதில் ஏற்படுகின்ற கழிவிரக்கத்தினால் வாய்விட்டு அழுகின்ற போது மனதில் இருக்கும் துன்பச் சுமையானது குறைக்கப்படும்.

இவ்வாறான செயற்பாட்டின் மூலம் நாம் எமது மனதில் உள்ள பாரச் சுமைகளில் இருந்து விடுபடுவதற்கு ஏற்ற ஓர் வாய்ப்பினை இக்கலைகள் உருவாக்கின்றன. ஓர் படைப்பாளியைப் பொறுத்தவரையில் அதாவது கலைதனைப் பொறுத்தவரையில் எப்பொழுதும் அவருடைய மனநிலையினை வெளிப்படுத்தக் கூடியவாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப்படைப்புக்கள் காணப்படும். பெரும்பாலான கலைஞர்கள் தமது மனங்களில் ஏற்படுகின்ற பாதிப்புகளை குறைத்துக் கொள்வதற்காகக் கவிதை,பாட்டு, நடனம், ஓவியம் என்று பல்வேறுபட்ட உணர்வுகளைப் பரிமாறிக் கொள்வதற்கு ஏற்ற காரணியாக அமைகின்றது.

மேலும், எம்முடைய மனங்களில் உள்ள துன்பச் சுமைகளைப் போக்குவற்காகவே கோயிலுக்குச் செல்கின்றோம். இவ்வாறான செய்கையினை உளவியல் கண்கொண்டு நோக்குகின்ற உளவியலாளர்கள் நாம் கோயிலுக்குச் சென்றவுடன் கடவுளை எமது மனதில் இருத்துவதற்கும் அவ்வாறானதொரு பக்தியை எங்கள் மனங்களில் எழுவதற்கும், அங்கே கடவுள் வடிவத்தில் அமைக்கப்படுகின்றன. சிற்பங்கள் உணர்வினை ஊட்டுகின்றன. மேலும் அதனை நம் இரு கரம் கூப்பித் தொழுவதற்கு அந்தச் சிற்பக்கலையில் இருக்கின்ற பூரணமான கலை அம்சமே முக்கிய காரணமாக அமைகின்றது.

இதனாலே நாம் கோயிலுக்குச் செல்வதால் மனநிலையில் ஒருமைப்பாடு ஏற்பட்டு எமது மனக்குறைகளை நீக்குவதற்கு சமய உளவியல் என உளவியலாளர்கள் கூறுகின்றனர். இதுமட்டுமன்றி "கலைகள் பண்பாட்டு ரீதியாக மனிதனை வளப்படுத்துபவை" ஏனெனில் ஒவ்வொரு காலங்களிலும் கலைகளின் தேவைகள் நன்கு உணரப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்றாற்போல் கலைஞர்கள் கலைகளைப் படைக்கின்றனர். இதனாலே ஒவ்வோர் கலைகளையும் நாம் எடுத்து நோக்கினால் அந்தக் கலைகளின் இயல்புகள் அன்றைய காலவோட்டத்தின் தன்மையினையும் மக்களின் பண்பாட்டியல் முறைமைகளையும் நன்கு தெளிவுபடுத்தக்கூடியதாக அமைகின்றது. உதாரணமாக மாக்சியனுடைய காலத்தில் எழுந்த கலைகள் எல்லாம் அன்றைய பொருளாதாரப் பிரச்சினைகளையும் வகுப்புப் போராட்டங்களையும் இயல்பினையும் பிரதிபலிப்பதாகவே காணப்பட்டன. அதுமட்டுமன்றி எமது ஈழத்து மரபுகளில் இன்னும் கூட தெருக்கூத்துக்கள் என்பவை மக்களுடைய பிரச்சனைகளை வெளியில் கொண்டுவருதற்காகக் தெருவில் கலைஞர்கள் குழுவாக ஒன்று சேர்ந்து பாடல்கள் மூலமோ அல்லது கதைகள் மூலமோ குறித்து குதித்து ஆடிக் கருத்தினை வெளிப்படுத்துகின்றனர்.

இவ்வாறான மரபுகளை ஈழத்தில் இப்பொழுதும் காணக்கூடியதாக இருக்கின்றது. அதுமட்டுமன்றி 1990ம் ஆண்டு காலப்பொழுதில் ஈழப்போராட்ட விடுதலைப் போக்கினை மையப்படுத்தி நெறியாள்கை செய்யப்பட்ட மண் சுமந்த மேனியர், அன்னையிட்ட தீ போன்ற நாடகங்கள் போராட்ட வரலாற்றில் முக்கிய தடம் பதித்ததோடு இவைகள் அக்காலத்தின் போராட்ட உணர்வுகளை காலத்தின் கண்ணாடியாக படம்பிடித்துக் காட்டியிருந்தன ஏன்பதில் ஐயமில்லை. அந்த நிலையில் கலைகளைப் பொறுத்தவரை எந்த இனமொழி வேறுபாடுகளுமின்றி ரசிக்கக்கூடியதும் மன உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியதுமே கலையின் பொதுவான இயல்பு என டாக்டர் ராதாகிருஷ்ணர் கூறுகின்றார். இவடைய உளவியல் கருத்தினை யதார்த்ததுடன் இணைந்து நோக்குன்ற போது எந்த மொழிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களாய் இருந்தாலும் சரி அம்மொழிகளை நாம் விளங்கிக்கொள்ளாவிட்டாலும், மனிதனைச் சென்றடைகின்ற இசையினைப் பொறுத்தே நாம் அதனைச் சுவைக்கின்றோம்.

இதனால் கலை என்பது பண்பாடு கடந்த ஓர் பொதுமொழியாக விளங்குவதால் அதுவே கலையின் மிகப்பெரிய வெற்றியாகும். அத்தோடு இது கலைஞனின் உணர்வு ரீதியான திறமையாகும். கற்பனை வளத்தினாலும் கலைநுட்பத் திறமையுடன் கூடிய பொருட்கள் நிகழ்வுகளைப் புனைந்து காட்சிப்படுத்தல், அரங்கேற்றல், கைவினை, கலைநயம் படைத்தல் ஆகும். இதன் மூலம் பண்பாடு, வரலாறு, அழகியல் போன்றவை பாராட்டுதலுக்காகவும் ரசிக்கும் படியாகவும் காட்சிப்படுத்தப்பட்டு உளவெழுச்சியில் விளைவுகளை ஏற்படுத்தும் நோக்கம் உடையதாகும். பிற உயிரினங்களிருந்து மனிதனைத் தனித்துக் காட்டுவது கலைநுட்பமாகும். ஊடல் மற்றும் உள்ளதின் திறன்களை ஒருங்கிணைத்து கற்பனை வளத்தை ஊக்குவிப்பது அதுவே கலையாகும். மிகப்பழமையான கலைகள் யாவும் காட்சிப்படுத்தப்பட்டவைகளையோ (ஓவியங்கள், புகைப்படங்கள், கட்புல ஊடகங்கள்) காட்சிப்பொருட்களையோ (சிற்பங்கள், அச்சுக்கள், வார்ப்புகள்) சார்ந்த காட்சிக்கலைகளாக உள்ளன.

எனவே தான் அதன் வரலாறு மிகவும் வியக்கத்தக்க ஒன்றாக உள்ளது கட்டிடக்கலையும் காட்சிக் கலைகளுள் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. ஆனாலும் காட்சி விளம்பரமும் அலங்கார வனப்பும் கலைகளின் ஈர்ப்பு மையங்களாகும். இசை, அரங்கு, திரைப்படம், நடனம், நாடகம் உள்ளிட்ட ஏனைய அரங்கேற்றல் கலைகள், இலக்கியம், ஊடகங்கள், போன்றவையும் கலையின் அகன்ற வரையறையுள் அடங்கும் 17ம் நூற்றாண்டு வரையிலும் கலை திறமைக்கும் ஆளுமைக்கும் ஒப்பான அறிவியல் நுட்பத்தின் பகுதியாகக் கொள்ளப்பட்டது. அதன் பின்னர் அழகியல் நுட்பத்தின் முதன்மை பெற்று கற்பனை வளம் திறன் சார்ந்து பயனுறுகலைகளாகவும் நுண்கலைகளாகவும் பகுத்தாயப்பட்டன.

கலையானது நிலை நிகழ்வின் நகலாக்கம் கதைப்புனைவு, நிகழ்வின் வெளிப்பாடு, உணர்ச்சிகளின் தொடர்பு மற்றும் இதர தரவுகளைக் கொண்டிருக்கலாம். உரோமாயர்களின் கலை வரலாறானது மனிதனின் மதம் மற்றும் அறிவியல் தொடர்பாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. எக்கலையானாலும் அதற்குரிய கதைப்பின்புலம் (கலை பற்றிய அறிவு, அழகியல், பார்வை) செய்திறன், சமூகப் பயன்பாடு என்பன இருக்கும். எனினும் இதுதான் கலை என்றும் இது கலை அல்ல என்றும் எச்செயற்பாட்டையும் அறுதியிட்டுச் சொல்ல முடியாது.

மேலும் கலை சமூகம் சார்ந்ததாகவும் இருக்கின்றது. அதாவது பொருள் படைத்தவர்கள் கலை, பொதுமக்கள்கலை என பல சமூகத் தாக்கங்களும் கலைக்கு உண்டு. எனவே கலை பல நிலைகளிலும் பல்வேறு தலங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராயப்பட வேண்டிய ஒன்று. மனிதன் திறன், ஆற்றல் கற்பனை வளத்தின் முகவாண்மையாக கலை விளங்குகிறது

கலை சரியானதொரு காலகட்டத்தில் தோன்றியதென்று வரையறுக்கவியலாது இருப்பினும் கலை சார்ந்த ஆக்கங்களை கொண்டு கலை இனம் காணப்படுகின்றது. மேலும் கலையின் வரலாறுகள் அது தோன்றின இனம் மொழி தேசம் பண்பாடு சார்ந்து பின்வருமாறு பகுக்கப்படுகிறது வரலாற்றுக்கு முந்திய கால ஐரோப்பியக் கலைகள், வரலாற்றுக்கு முந்தியகாலஆசியக் கலைகள், ஆபிரிக்க சுதேசக்கலைகள், அமெரிக்க சுதேசக்கலைகள், ஓசானியச் சுதேசக் கலைகள் இவை யாவும் வரலாற்றுக்கு முந்திய காலக்கலைகள் என வகைப்படுத்தியுள்ளனர்.

பண்டைய உலகின் கலைகளாக பண்டைய மெசொபொத்தேமியக் கலைகள் சுமேரியக் கலைகள், பபிலோனியக் கலைகள், ஆசியக்கலைகள், பண்டைய எகிப்தியக் கலைகள், பண்டைய எஜியன் கலைகள் என ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இலக்கியம் ஒரு கலையென்றால் சொல்கிற அல்லது சொல்ல விரும்புகிற செய்திகளை அழகும் நேர்த்தியும் படச் சொல்வது காண்பார் கேட்பார் அல்லது படிப்பார் மனதில் சுவைபடவும் அவர்கள் மனம் கொள்ளுமாறும் அவர்கள் சிந்தையில் அல்லது உணர்வில் ஓரளவாது அசைவையும் தாக்கத்தையும் ஏற்படுத்துமாறும் அமைவது. மேலும் மேலும் காணுமாறும் கேட்டுமாறும் படிக்குமாறும் ஓர் ஆர்வத்தைத் தூண்டுவது படைப்பாற்றல் பண்பு, கலைகளின் அடிப்படைப் பண்பும் அதுவே ஆகும்.

கலைகள் பல 64 எனக் கருதுவது ஒரு மரபு இலக்கியம் அவற்றுள் தலையாய கலை இது மொழிசார் கலை என்றும் ஏற்கனவே நாம் சொல்லியிருக்கிறோம். மேலும் மொழியை ஊடிழையாகக் கொண்டு அமையும் இந்தக் கலை நுண்கலை (Fine Art) என்றும் பயன்கலை (UseFulArt) என்றும் சொல்லப்படுகின்றது. கலைகளை பல வகையாக பகுப்பார்கள் நுண்கலை, பயன்கலை பருண்மைக்கலை (PlasticArt) கவின் கலை (Aesthetic Art) நிகழ்த்து கலை (Perforning Art) என்பன இவற்றுள் முக்கியமானவை.

நுண்மையான உறுப்புகளையும் நுண்ணிய திறன்களையும் நுண்ணிய உணர்வகளையும் கொண்டது நுண்கலை கவிதை, இசை, ஆடல், ஓவியம் முதலியன இதனுள் அடங்கும். பயன்கலை முக்கிய நோக்கமாகக் கொண்டது பயன்கலை இலக்கியம் இதனுள்ளும் அடங்கும். கட்டடக்கலை, அண்மையில் தோன்றிய திரைப்படக்கலை முதலியவை பயன்கலைகளாவன. இதனுள் பருண்மைக்கலை என்பது பருப்பொருளாலான ஊடுபொருள்களைக் கொண்டு அமைவது. கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவை இவற்றுள் அடங்கும்.

ஓவியம் ஒப்பனை முதலிய கலைகள் கவின் கலைகளாகும். அதாவது அழகான தோற்றத்தை நோக்கமாக கொண்டு அமைவது. நிகழ்த்துக் கலை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையாளர் (Audience) மத்தியிலிருந்து நிகழ்த்திக் காட்டப்படும் கலையாகும். ஆடல், கூத்து (நாடகம்) ஆகியவை முக்கியமான நிகழ்த்துக் கலைகளாகும். இசையும் இவ்வாறே நிகழ்த்தப்படுகின்ற கலையேயாகும். கலையின் பண்புகளும் வகைகளும் கண்டோம். கலை எதன் மூலமாக நுகரப்படுகிறது எனப் பார்த்தால் ஐம்புலன்கள் இருந்தாலும் அடிப்டையில் கண், செவி ஆகிய இரண்டினாலேயே பெரும்பாலும் கலைகள் நுகரப்படுகின்றன. இவற்றுள் சில கண்ணால் மட்டுமே நுகரப்படுகின்றன. அவை ஓவியம், சிற்பம், கட்டிடம் போன்றவையாகும் சில கலைகளுக்கு செவியே பிரதானம் இசைக்கலை அத்தகையது. சில கலைகளுக்குக் கண் செவி இரண்டுமே முக்கியம். ஆடல், கூத்து ஆகியவை இத்தகையன. கவிதை இலக்கியக் கலையின் அரசி என்று அழைக்கப்படுகின்றது. மேலும் அதுவே ஏனைய இலக்கிய வகைகளுள் மூத்தது, மையமானது. பழந்தமிழ் சிலம்பு முதற்கொண்டே பல நூல்களில் ஆடல், பாடல், இசை, அல்லது இயல் இசை நாடகம் என்று மூன்று கலைகள் ஒன்றோடு ஒன்று இணைந்தும் தழுவியும் வருபவையாகக் கூறப்படுகின்றன. இயல் என்பது பாடல் அல்லது கவிதையை குறிக்கும்

இந்த மூன்று கலைகளும் சேர்ந்து முத்தமிழ் என்று சொல்லப்படுகின்றது. இவற்றுள் இசை நடுத்தரமானது அது கவிதைக்கும் வேண்டும் ஆடல் அல்லது கூத்துக்கும் வேண்டும். "ஆடல் பாடல் இசையே தமிழே" என்று அரங்கேற்றுக் காதையில் (மாதவி அரங்கேற்றுவதை வருணிக்கும் இயல்) இளங்கோ அடிகள் இந்த மூன்று கலைகளையும் இணைத்துக் காணுகிறார். மேலும் பாடல் எனும் கலை இசையோடு சேர்ந்து அமைவதையும் அவர் கூறுகிறார். சிலம்பின் இந்த வரிகள், மூன்று கலைகளும் சேர்ந்து இயங்குவதையும் அதே போது பாடலுக்கு இசை ஒரு பகுதியாக அமைவதையும் மேலும் கவிஞுடைய குறிப்பு அல்லது கோட்பாடும் அதிலே உள்ளது என்பதையும் சொல்லுகின்றன. இசை மனதை நெகிழ்விப்பது மொழிக்கடந்து பொதுமைத்தன்மை (Uriversal) கொண்டது. தமிழ் இலக்கியம் இதன் சிறப்பைத் தொடர்ந்து பேசுகின்றது திறனாய்வு இத்தகைய இலக்கியம் பற்றிப் பேச வேண்டியிருப்பதனால் கலையறிவு இல்லாமல் இலக்கியத்தைக் காண முடியாது என்பதனாலும் திறனாய்வாளனுக்கு இசை பற்றிய அறிவும் அது பற்றிய கண்ணோட்டமும் இருப்பது அசியமாகின்றது.

முத்தமிழ் கூத்து என்பது ஒன்று இது ஆடல் என்றும் சொல்லப்படும். ஆடல் தனியாளாகவும் அல்லது குழுவாகவும் நிகழ்த்தப்படுவது அதற்கு கதை என்பது அவசியமில்லை. கூத்து என்பது நாடகம் என்று பின்னர் சொல்லப்பட்டது இது குழுவாக ஒப்பனை நடிப்பு முதலியவற்றுடனும் கதை நிகழ்சியுடனும் நிகழத்தப்படுவது சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் மாதவியின் ஆடற்கலையும் அதற்குரிய முன்னேற்பாடுகளும் விரிவாகப் பேசப்படுகின்றன. கூத்து நிகழ்ச்சிகள் மற்றும் உணர்வுப் பின்னல்களால் கட்டமைக்கப்படும் அமைப்பை உடையது. இத்தகைய கட்டமைப்பு சற்று நீளமான வருணனைக் கவிதையிலும் காவியத்திலும் கட்டாயமாகக் காணப்படுவதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் நாடகம் நிகழ்த்தப்படுவதாக மட்டுமல்லாமல் எழுதப்படுவதாகவும் அமைகிறது. தவிரவும் கோயில்களிலும் திருவிழாக்களிலும் தெருக்களிலும் கூத்துக்கள் அல்லது நாடகங்கள் நிகழ்த்தப்படுகின்றன. இலக்கியம், புராணம், காப்பியம் முதலியவற்றிலிருந்து கதைகளையும் கதைச் சூழல்களையும் இந்தக் கூத்துக்கள் பெற்றுக்கொள்வதுண்டு. அதேபோல் கூத்துக்கள் அல்லது நாடகங்களிலிருந்து இலக்கியம் பல கூறுகளை எடுத்துக் பெற்றுக்கொள்வதுண்டு. அதேபோல் கூத்துக்கள் அல்லது நாடகங்களிலிருந்து இலக்கியம் பல கூறுகளை எடுத்துக் கொள்வதுமுண்டு உதாரணமாகப் பாரதியின் பாஞ்சாலி சபதம் என்பது ஒரு சிறிய காப்பியம். இது 19ம் நூற்றாண்டின் இறுதியிலும் அதன் பிறகும் பிரசித்தமாக இருந்த திரவுபதி வஸ்திராபரணம் என்ற தெருக்கூத்தைப் பின்பற்றி எழுந்ததாகும். அதுபோல கோபால கிருஷ்ணபாரதி என்பாரின் தந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள் கதாகாலட்சேபம் என்பது அன்றைய பிரசித்தமான கீர்த்தனை வடிவத்திலான கதாகாலட்சேபம்.

இது சேக்கிழாரின் திருநாளைப் போவார் புராணத்தைப் பின்பற்றிச் சில மாற்றங்களுடன் உருவாக்கப்பட்டதேயாகும். இவ்வாறு கூத்து அல்லது நாடகம் இலக்கியத்தோடு நெருக்கமாக உள்ளது. அமைப்பு முறையிலும் ஒத்து விளங்குகிறது. எனவே திறனாய்வு இத்தகைய கூறுகளைக் கண்டறிந்து சொல்ல வேண்டியிருக்கிறது. ஓவியம் மிகப் பழங்காலத்திலேயே தோன்றிய ஒருகலை ஒன்றினைப் போல் இன்னொன்று அதாவது ஒவ்வுதல் எனும் பொருளையுடையது ஓவியம் உவமம் என்ற சொல்லும் அதனோடு உறவுடையது ஒவ்வுதல் - ஓவம் - ஓவியம் காட்சியளவில் பார்த்ததற்குரிய இந்த நூல்களைப் புணர்ந்து செய்யப்படுவது புனையா ஓவியம் என்று சங்கப்பாடல் கூறுகின்றது.

ஓவியம் பேசாத கவிதை. கவிதை பேசுகிற ஓவியம் என்பது பிரான்சு நாட்டு ஓவியர் சார்ல்ஸ் பிரஸ்நொய் என்பவர் கூறுகிறார். கவிதைக்கும் ஓவியத்துக்கும் எவ்வளவு நெருக்கம் உண்டு என்பதை உணர்த்துகின்றது இதன் கருத்து ஆகும். பேராசிரியர் எனும் தொல்காப்பிய உரையாசிரியர் இதனையே வேறொரு வகையில் சொல்லுகிறார். மெய்ப்பாடு பற்றிப் பேசுகிற போது மெய்ப்பாடு எனும் உணர்ச்சி வடிவம் கவிதையில் காட்சி வடிவமாக இதனை இலக்கியமும் ஓவியமும் என இரு பிரிவாக்கப்பட்டது இக்கலை.

இவைகள் அறுபத்து நான்கு கலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவைகளுள் இசைக்கலை, ஆடற்கலை, சிற்பகலை, சித்திரக்கலை, கட்டடக்கலை, கவிதைக்கலை, நாடகக்கலை, இசைக்கருவிகள் இசைக்கும்கலை, நீரலை இசைக்கலை, பன்மொழித்திறமை, பல நூல்களைக் கற்றுணர்தல் கவி நயம் விளக்கல், கவி நடையில் பேசுதல், கவிதை வினாவிடை, கவிதையை முழுமையாக்கல், ஒப்புவித்தல், அழகுறப் பேசுதல், பல்சொற் பொருள் திறன், திறனாய்வுக்கலை, குண இயல்புகளை அறிதல், ஒப்பனைக்கலை, வண்ணப்பூச்சுக்கலை, திலகமிடும் கலை, கூந்தல் முடிக்கும்கலை ஆடைஅணியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை, நகைஅணியும் கலை, தோட்டம் அமைத்தல், மலரால் அழகுபடுத்தல், கோலமிடுதல், உருவங்களைத் தோற்றுவித்தல், பொம்மைகள் செய்தல், அணிகலன்களைத் செயதல், புதுப்பொருள் தோற்றுவித்தல், சமயல் தொழில், உணவு ஆக்குதல், தையற் கலை, படுக்கைகள் உருவாக்கம், மற்போர்க்கலை, நீச்சல்கலை, சதுரங்கம், சூதாட்டம், புதிர்போடுதல்,வேடிக்கைக்கணக்கு வித்தைகள், மாயவித்தை, இளமை காக்கும்கலை, ஒலிஎழுப்பும்கலை, பிறர்போல்பேசும் கலை, கவரும்கலை, செல்லப்பிராணி வளர்க்கும்கலை, சண்டையிடும் பிராணிவளர்க்கும் கலை, நறுமணம் நெய்படைத்தல் மனையடிக்கலை, தச்ச, (நெசவுக் கலைகள்), பிரம்பு வேலைப்பாடுகள், மரவேலைப்பாடுகள், எந்திரப்பயிற்சி,மாழை (உலோக) அறிவு, கற்கள் பற்றிஅறிதல், பட்டைதீட்டுதல், போர்க்கலை, மந்தன் மொழிக்கலை, பயிரிடும்கலை, மாவை மாற்றுக்கலை, வெவ்வேறு வகையாகக் கூறப்படும் 64 கலை வகைகளிலும் தற்போதைய கலைகளாக கூறப்படும் வகைப்பாட்டிலும் இடம்பெற்றுள்ள வேறு சில கலைகள் எனினும் வெவ்வேறு வகையாக கலைகள் கூறப்படுகின்றன.

இசைக்கலையாக பண்டைத் தமிழர் நம்மொழியை இயல், இசை, நடகம் என மூவகைப்படுத்தி வளர்த்தனர்.எனவே தமிழ், முத்தமிழ் ஆயிற்று முத்தமிழுள் இசைத்தமிழ் ஒன்று இசைத்தமிழ் ஒரு கலையாய் நுண்கலையாய் இசைக்கலையாய் வளர்ந்தது இசைக்கலை ஒலியின் அடிப்படையில் அமையும். கலை செவிவழிதுய்க்கும் கலை. குழல்இசை, பாடல்இசை, போன்றவை இனியவை என்றும் பூனை கத்தல், காக்கை கரைதல் போன்றவை சாதாரணமானவை என்றும். புலியின் உறுமல், இடியின் ஓசை போன்றவை கடுமையானவை எனவும் ஒலியை மூவகைப்படுத்துவார்.

இனிய ஒலிகள் தனித்து இனிப்பவை, இணைந்து இனிப்பவை என இரு வகைப்படும். தனித்து ஒருவர்பாடுதல், இசை மற்றும் ஒலித்தல், குழல் மட்டும் இசைத்தல், போன்றவை தனித்து இனிப்பவை குரல், குழல், யாழ் முழவு, தாளம் ஆகியவை கூட்டாய்ச் சேர்ந்து இசைத்தல் இணைந்து இனிப்பானவை. இனிய ஒலி செவி வழி புகுந்து இதய நாடிகளைத் தழுவி உயிரினங்கள் இசையவும் பொருந்தவும் வைக்கின்ற பொழுது அது இசை எனும் சொல் இயைவிப்பது பொருந்தச் செய்வது. இசை எனும் சொல் தன்வயப்படுதுவது எனப்பொருள்படும். இசை கல் மனதையும் கரைந்துருக்கச் செய்யும் ஆற்றல் வாய்ந்தது. கற்றோரும் மற்றோரும் இசைவயப்பட்டு நிற்பர். அன்பைப் பெருக்கி ஆருயிரை வளர்ப்பது இசை. இசைநோய் தீர்க்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. பயிர் வளர்ந்து நிறைந்த பயன் விளையவும், பசு மிகுந்த பால் சுரக்கவும் தூண்டும் அது இசை உயிரினங்கள் அனைத்தையும் தன்பால் ஈர்ந்து உய்விக்கும் தன்மையைப் பெற்றது. பண்டையர் தமிழர் வளர்த்த நுண்கலைகளுள் இசைக்கலை முதன்மையானது தலை சிறந்தது. முக்காலத்தில் இசைத்தமிழ் நூல்கள் பல இருந்தன பரிபாடல், முதுநாரை, முதுகுருகு போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரம் பல்வகைப்பண்கள், இசைக்கருவிகள், இசைக்கலைஞர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான செய்திகளைச் சொல்கிறது. இவற்றுள் போர்க்கலை மக்களைக் காத்தல், மன்னர்க்குக் கடன், உள்நாட்டுக் கலவரம், முதல் வெளிநாட்டுப் படையெடுப்பு வரை தம் குடிமக்கள் எதிலும் பாதிப்படையா வண்ணம் பாதுகாக்கும் பொறுப்பை நாடாள்வார் ஏற்க வேண்டும் மண், பெண், பொன் என எக்காரணத்தாலும் போர் எழலாம் அதனை தடுக்கவும் தொடுக்கவும் அரசுக்குப்படை பலம் வேண்டும்.

போரினால் உயிர் உடைமை இழப்புமிகும், அழிவும்மிகும். தமிழ்ச்சான்றோர் இவற்றை எல்லாம் எண்ணி வருந்தி போர் இன்றியடையாதவிடத்தும் அது அறத்தின் அடிப்படையிலேயே இருத்தல் வேண்டும் எனச் சில நெறிமுறைகளை வகுத்தனர். பகை நாட்டின் மீது படையெடுக்கும் முன் அந்நாட்டு அறவோரையும் தன்நாட்டு அறவோரையும் அல்லலின்றி பாதுகாப்பது அரசனின் முதற்கடமை என முறை செய்தனர். அத்தோடு பசு, பசுவின் இயல்புடைய அந்தணர், மகளிர், நோயுற்றோர், சிறார்கள் தம் முன்னோர்க்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்ய வல்ல புதல்வரைப் பெற்றிராதோர் ஆகிய அனைவரையும் பாதுகாப்பு நாடி வேற்றிடத்திற்கு செல்வித்தல் வேண்டும்.

இதனை முரசறைந்து தெரிவித்தல் வேண்டும். போர் தொடங்கும் முன் தன் படைவீரர்களை ஏவி எதிரி நாட்டுப் பசுக்களை மீட்க அவற்றுக்கு உரியவர் வருவர். பசுக்களைக் கவர்தல் கரந்தை என்றும் அப்பசுக்களை மீட்டல் வெட்சி என்றும் சொல்லப்படும். போரைத் தொடங்கிய மன்னன் பகைவன் நாட்டை எதிர் நின்று தாக்குதலை வஞ்சி என்பர். பகைவன் நாடு புறமதிலை முற்றுகை இடலும் முற்றுகையிடப்பட்ட தன் மதிலைக் காத்தலும் உழிஞை எனப்படும்.

இரு மன்னரும் காமிறங்கி கடும்போர் புரிதலைக் தும்பை என்பர். இதில் வெற்றி பெறுதல் வாகை எனப்படும். இவை அனைத்தும் பூக்களின் பெயர்களே மன்னரும் போர் மறவரும் அப்பூக்களை அணிந்தே போரிடுவர். தேர்ப்படை, யாடைப்படை, குதிரைப்படை, காலால்படை என நால்வகைப்படைகளையும் போரில் ஈடுபடுத்துவர்.

அறிவு வளர்ச்சியும் நாகரீகமும் முதிர்ச்சிப் பெறுவதற்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதன் ஆடலிலும் பாடலிலும் ஈடுபட்டு வந்தான். நாகரிகம் வளர்ச்சி அடைய அடைய இசை, ஆடல் முதலியவை முன்னேற்றம் கண்டு கலை வடிவங்களாக முகிழ்ந்தன. இந்தியாவில் மிகத் தொன்மையான கூத்து நூல் எனக் கருதப்படும் நாட்டிய சாத்திரத்தை இயற்றிய பரத முனிவர் (கி.பி 2ஆம் நூற்றாண்டு) நாட்டியம் எனும் சொல்லுக்குப் பாடல், ஆடல், அபிநயம் உரையாடல், ஒப்பனை, காட்சித்திரைகள் ஆகியவை ஒருங்கமைந்த நாடகம் என்றே பொருள் கூறினார்.

அவருடைய காலத்திலிருந்து ஆடல் தாண்டவம் (ஆண்களுக்குரிய கூத்து) இலாசியம் (பெண்களுக்குரிய கூத்து) நிருத்தம் (சுத்த நடனம்) என வகுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் நிருத்தமும் அபிநயமும் கலந்த நிருத்தியம் எனும் வகையும் தோன்றியது. சிவபெருமான் ஆடிய ஆடல் தாண்டவம் என்றும் பார்வதி ஆடிய ஆடல் இலாசியம் என்றும் சொல்லப்பெறுகிறது. பிற்கால ஆடல் இலக்கண நூல்களில் எண்ணற்ற ஆடல் வகைகள் குறிக்கப் பெறுகின்றன. பாரத முனிவர் தம் நூலில் தென்னாட்டில் தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் இசையிலும் நடனத்திலும் சிறப்புற்று விளங்கினர் எனப் புகழந்துரைக்கின்றார்

ஆகவே ஒருநாட்டின் கலை மற்றும் கலாச்சாரம் அச்சமூகத்தினை பிரதிபலிக்கும் சிறந்த கருவியாகும் கலை என்பது பொழுது போக்கிற்காக மட்டுமன்றித் தகவல் ஊடகமாக கலாச்சாரப் பலகனியாகவும் திகழ்கின்றது. கலை என்பது மன உணர்வுகளின் வெளிப்பாடு குறிப்பாக நாட்டுப்புறக் கலைகள் நமது மண்ணோடு நம்மோடு தொடர்புடையவை நமது பாரம்பரியத்தையும் அடி ஆழத்து வேர்களையும் பிரதிபலிப்பவை கலை சமூக வளர்ச்சிக்கும் மன எழுச்சிக்கும் சிறந்த கருவி.

**செல்வி.ம. அனுருஷா**
**மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகப்பிரதி எழுதல்
சிரேஷ்ட பிரிவு
முதலாமிடம்

# உதயமும் மறைவும்

## காட்சி – 01

(வீதியோரமாக நடந்து செல்லும் போது)

சங்கர் - என்னடா பார்த்தலும்Phoneலேயே நோண்டிக் கொண்டிருக்கிறா?அப்படி என்னத்தத்தான் பார்க்கியோ?

விமல் - நம்மட தமிழ் ரீச்சர் கேட்டாவே கேள்வி, அதுக்குத்தான்விடைதேடிக்கிட்டுருக்கன்

சங்கர் - நான் அதுக்கு விடையை புத்தகமொன்றிலதான் தேடிக்கண்டுபிடிச்சன்

விமல் - புத்தகத்திலயா? அது பெரும் அலுப்பு ஓர விஷயத்துக்குஒன்பது புத்தகம் திறக்கணும் Phoneல என்டால தட்டிட்டா வரும்.

சங்கர் - தமிழ்ப் பாடத்தில உனக்கு Marks கூடவா? எனக்கு Marksகூடவா?

விமல் - உனக்குத்தான்

சங்கர் - அதுக்குக் காரணம் என்ன தெரியுமா?

விமல் - உனக்குத் தெரிஞ்சாச் சொல்லு (Phone ஐ நோண்டிக் கொண்டு அலட்சியத்துடன்)

சங்கர - நீ Phone ல தேவையான விஷயத்த மட்டும்தான் பார்ப்பாய்.ஆனால் நான் எத்தனையோ புத்தகத்தைத் தேடி விஷயத்தை எடுக்கிறன். அப்போது அந்த விஷயம் மட்டுமில்லமல் இன்னும்வேற விஷயங்களைத் தெரிந்து கொள்ளுறன்

விமல் - அது சரி. இதுதான் காரணம் என எனக்கு இப்பதான் விளங்குது. (Phoneஐ பக்கெட்டினுள் வைத்துக் கொண்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கர் - வா இருவரும் Coffe ஒன்று குடிக்கலாம்

(Coffe குடிக்க கடைக்குச் சென்ற போது அவர்களது நண்பர்கள் இருவரைக் காண்கின்றார்கள்)

விநோத், சரத் - Hi சங்கர்,Hi விமல்,
சங்கர்எப்படி சுகமா இருக்கீங்களா?

சரத் - நல்ல சகம் எப்போவுமே Phone ஓட திரிகிற விமல் இன்றைக்கு வெறும் கையோட வந்திருக்கான்

விமல் - நான் இப்ப திருந்தித்தன் Phone எல்லாம் இப்ப பெரிசா பாவிக்கிற இல்ல.

விநோத்- அப்படியென்டால் கேள்விக்கு விடை எல்லாம் எப்படி தேடி எடுக்கா?

விமல் - இலக்கியங்களிலிருந்துதான்

சரத் - திருந்தின உன்னிடமே கேட்கம். இலக்கியங்களின் இப்போதைய சூழ்நிலை என்ன?

விமல் - என்னைப் போல பிள்ளைகளால இலக்கியங்கள் நாளுக்கு நாள் மறைந்து கொண்டே போகுது. உதாரணமா சங்க நூல்கள்,தொல்காப்பியங்கள், புராணங்கள். இப்போது இலக்கியங்கள் எழுதப்படுவதே மிகக் குறைவு இருந்தாலும் எழுதப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

சங்கர் - இப்போதைய சூழ்நிலையில் எழும் இலக்கியங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்று யோசித்தீங்களா?

விநோத்- இந்தக் காலகட்டம் சமூகமே சீர்குலைந்து போய்விட்டது எல்லாத்துக்கும் காரணம் இந்த தொழில்நுட்ப வளர்ச்சிதான்

சரத் - (ஒருவரைக் காட்டி) அதோ பாருங்கடா. ஒருவரை ஒருவர் முகம் பார்த்து செல்போனில் பேசுறாங்க. (ஓடி ஓடி வேலை செய்யும் இருவரைக்கட்டி) அங்கே வேலைப்பழு இவ்வாறிருக்க எவ்வாறு இலக்கியம் கற்பது? எவ்வாறு தகவலறிவது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமல் - எது எவ்வாறிருந்தாலும் இலக்கியங்களை வாசிக்கும் நம்மைப் போன்றதொரு கூடடம் இருக்கத்தானே செய்யும். அவர்களுக்காக என்றாலும் இலக்கியங்கள் படைக்கப்படத்தானே வேண்டும்.

சங்கர் - இனியெழுகின்ற இலக்கியங்கள் சமுகத்திற்கு நற்கருத்துக்களைக் கொண்டு சேர்ப்பனவாக அமைய வேண்டும். நேரமாகி விட்டது வாருங்கள் செல்லலாம்.

(சரத் தனது வீட்டைச் சென்றடைகின்றான் அதன்போது…..)

**காட்சி – 02**

சரத்தின் அம்மா (சீலா) (சமைத்துக் கொண்டு)

பழைய சோறு பச்சைமிளகாய் ம்ம்…ம்ம்…
பக்கத்து வீட்டு குழம்பு வாசம்
அடியில் சோறு பத்திப் போச்சி ம்ம்…ம்ம்..
பத்தின சோறு கருகி நாத்தம்
அட எல்லாம் ஒரு சுவைதான்
அதில் இந்த சுவை மிகைதான்

சரத் அப்பா (சுதா) - பாட்ட விட்டுப்போட்டு சமையல முடி
எவ்வளவு நேரம் தான் T.V உம்
Phoneஉ_னுமாவே வாழ்க்கை போகுது

சரத் தங்கை (வாணு) - என்னப்பா நீங்க எப்பவுமே அம்மாவுக்கு ஏசிக்கிட்டு

சரத் - அம்மாவும் மகளும் ஒண்டுதான். அம்மாவுக்கு TV மகளுக்கு Phone படிக்கச் சொன்னாPhone அத் தூக்குறாவு என்னென்டு கேட்டா கேள்விக்கு விடை தேடுறன்

வாணு - பேசாம இரு அண்ணா நான் படிக்கன்தானே

சரத் - நீ படிக்கா சரி ஆனால் தாரத மட்டுந்தானே படிக்கா, தேடுறா. நீயும் என்ட friend விமலப் போலத்தான்

வாணு - அவனும் என்னைப் போல் Phone ல தானா படிக்கிறவன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரத் - முதல் அப்பிடி ஆனால் இப்ப அப்பிடி இல்ல அவன் திருந்தித்தான் நீயோ திருந்தாத ஜென்மம்

வாணு - ஜென்மத்தைப் பற்றி கதைக்காத அண்ணா (கோபத்துடன்)

சரத் - நீ மனித ஜென்மமே இல்ல மாடுதான்

வாணு - அம்மா அண்ணாவப் பேசாம இருக்கச் சொல்லுங்க

சரத் அம்மா (சீதா) - ரெண்டு பேரும் பேசாம இருங்க சரத் வா நீ சாப்பிட வாணு நீ Phoneஅ வச்சிட்டு வா சாப்பிட அப்பா நீங்களும் வாங்க

சுதா - நான் இந்த வீட்டுல பெரியாள்தானே நான் சொல்லுறத ரெண்டு பேரும் கேட்க வேணும் நான் Phone ஐ விற்கப் போறன்

வாணு - என்னப்பா? நீங்களுமா? (வருத்தத்துடன்)

சுதா - நான் இன்னும் சொல்லி முடிக்கல்ல Phoneல பார்க்க வேண்டிய விஷயத்தையெல்லாம் நம்மட வீட்ட இருக்கிற புத்தகத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம் எல்லாம் புத்தகங்களில் இருக்கும்

வாணு - இந்த வீட்ட என்னுடைய சுதந்திரத்திற்கு இடமே இல்லாம போகுது எல்லா நேரமும் அப்பாவும் அண்ணாவும் எனக்கு எதிராகத்தான் பேசுறா?(குறுகுறுத்துக்கொண்டு)

சுதா - சரத் நீ இனி வாணுவோட வாக்குவாதம் வைக்கக் கூடா. சீலா நீ இனி TV பார்க்கிறதைக் குறைக்கணும்

பாடகர் - பம்மத்துக் காட்டுகின்றஇந்தக் காலத்தில
சும்மாட்டத் தலையில் வச்சிப் போக நேரமில்ல
புத்தகப் பூச்சைத் தேடிப்போன காலமிது இந்தக்
காலமிது Phoneஓட போய் வருது (02)

நம்மளச் சுத்தி நடக்கும் எல்லா விஷயத்தையும் நடந்து போகும்போதே பார்க்க முடிகிறது. சின்னப்பிள்ளையிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய பிள்ளை வரைக்கும் Phone அத் தூக்கித் திரியும் காலம் வந்திடிச்சி(02)

**காட்சி 03**

விமல் - டேய் சங்கர் நேற்று கதைச்சதைப் பற்றி இப்ப கொஞ்சப் பிள்ளைகள் பாட்டு படிச்சாங்ங உனக்கு விளங்கிச்சிதா?

சங்கர் - நான் இவ்விடத்தே நிக்கவில்லையே எதைப்பற்றி பாட்டு படிச்சாங்க

விமல் - எதைப் பற்றி என்று சரியா Spot பண்ணி சொல்லேல்ல ஆனால் அந்தப் பிள்ளைகளும் இலக்கியங்களைப் படிக்கிறதில் ஆர்வம் கொண்டவர்கள் போலத்தான் தெரிஞ்சுது

சங்கர் - நம்மோட முயற்சி வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு நம்ம இந்தப் பிள்ளைகளுக்காகவென்றே இலக்கியங்களைப் படைக்க வேணடும்

விமல் - அதுமட்டுமல்லாமல் இவை நம்முடையசமுகத்திற்கும் நல்ல படிப்பினையும் பண்பாட்டினையும் வழங்குவதாக அமைக்க வேண்டும்.

சங்கர் - அப்படி எழுதினால்தானே அந்தப் பிள்ளைகளின் மூலம் சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

விமல் - சமூக மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என்றால் சிறுவர் மனப்பாங்கிலும் பெரியோர் மனப்பாங்கிலும் மாற்றம் ஏற்பட வேண்டும் என்னள ரெடியா?

சங்கர் - Iam Ready

பாடகர் குழு - சொல்றத சொல்லிப்புட்டோம் சொன்னத
நினைச்சுப்பாருங்க(2)
சிந்தித்து செயற்படுங்க
சிரழிவைத் தேடாதிங்க
செல்றத – தேடாதிங்க

**திரு.க.கோபிநாத்**
**மட்/மாவிலங்கத்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலாக்கம்
திறந்த மட்டம்
முதலாமிடம்

# "மட்டு மண்மகிமை"

**இராகம் : நெஞ்சுருட்டி**
**தாளம் : கண்டநடை**

வங்கக்கடல் வளம் பொங்கியெழும் தேசம்
சிங்கார மீனிசையால் வாவிபுகழ் பேசும்
செங்கதிர் கிழக்கிலே மங்களமாய் வீசும்
மங்காத மட்டக்களப்பெங்கள் வாசம் (வங்கக்கடல் வளம்.......)

பண்பான கலைவளம் பண்ணோடு தேங்கிடும்
பண்பாட்டை எழுவானும் படுவானும் தாங்கிடும்
மண்ணில் பல சந்நிதிகள் வண்ணமாய் துலங்கிடும்
பண்டுலக நாச்சியர சாண்ட மண் ஓங்கிடும் (பண்பானகலைவளம்.....)

முதிர்வான ஐவகை நிலங்களின் தாயகம்
மதிபுகழ் மாண்புறு மக்களின் வாழ்வகம்
கதிராடும் களனிமுக் கனிதரும் கானகம்
பதிகளில் கைப்பணி நிதிதரும் ஆவினம் (முதிர்வான ஐவகை.......)

கோலாட்டம் களிகம்பு கரகமுடன் ஆட்டம்
காலிலே சதங்கையிசை கூத்தாடும் கூட்டம்
தாலாட்டு தவில்சங்கு குரவையிலும் நாட்டம்
தாளமுடன்தமிழ் வாழும் மட்டுநகர் கோட்டம்(கோலாட்டம் களிகம்பு.....)

வந்தாரை வரவேற்கும் விருந்தோம்பல் பண்பும்
சந்தோசமாய் இனிய சொற்பேசும் அன்பும்
சொந்தங்கள் சுகதுக்கம் ஊர்கூடும் ஒன்றாய்
நந்தவனம் போல் எங்கள் மாநிலம் வாழ்க! (வந்தாரை வரவேற்கும்......)
(வங்கக்கடல் வளம்......................)

**திரு.த.இன்பராசா**
**புதுக்குடியிருப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுவர் கதையாக்கம்**
**திறந்தமட்டம்**
**முதலாமிடம்**

# விதைத்ததே விளையும்

சிற்றரசான சிவகங்கையாண்ட சிவநேசன் என்னும் மன்னனுக்கு தன் பின் சிற்றரசையாள மகப்பேறு இல்லாததால் ஊரின் தென் திசையில் அருள் நிறைந்த அன்னையாகிய நீலியெனும் காளி கோயிலுக்குச் சென்று வழிபட அவவருளால் அவனுக்கு ஒரு மைந்தன் பிறந்தான் உரிய காலத்தே மந்திரிக்கும் ஒரு மகன் பிறந்தான். மன்னனுடைய மைந்தனும் மந்திரியின் மகனும் சம கால நண்பர்களாகி சகல விதமான கலைகளையும் கற்றனர் மன்னர் உரிய காலத்தில் மகனுக்க மகுடம் சூட்டியும் மந்திரியின் மகனை அமைச்சருமாக்கினார். அவர்கள் ஆட்சி புரியும் வேளையிலே மழையின்றி அச்சிற்றூரே வறண்டது தண்ணீரின்றி பல உயிர்கள் மடிந்தன. மக்கள் உணவின்றி உயிர் வாழத் துடித்தனர் நிலவன்னை வயிற்று புல்பூண்டுகள் வறண்டு தீய்ந்தன ஆறு, குளம், கிணறு, ஏரிகள் எல்லாம் வறண்டு கிடந்தன. மரங்கள் தண்ணீரற்றுக் காய்ந்தன. அனல் வீசியது மக்கள் தண்ணீருக்கும் உணவுக்குமாக அலைந்தனர். ஏழை பணக்காரர் வேறுபாடின்றி உணவக்காகக் கஸ்ரப்பட்டனர் இதனால் அவ்வூர் மக்கள் ஒருவருக்கொருவர் பகைத்து வாழ்ந்தனர்.

மந்திரியும் அமைச்சரும் தம் மக்கள்படும் துயர்கண்டு பெரிதும் வருந்தி இவ்வாறு நேரக்காரணம் தெய்வக்குற்றமோ என்று சிந்தித்தனர் அப்போது தான் தன் தந்தை கூறிய நீலியெனும் காளியின் கருணை வேண்டி வழிபடுவோமென இருவரும் கோயிலை நாடிச்சென்று அன்னயயின் முன்னின்று எல்லாம் மறந்தவராய் அன்னையின் அருளை வேண்டி பயபக்தியுடன் விழுந்து வணங்கி அன்னையே நாட்டையும் மக்களையும் பஞ்சத்திலிருந்து காக்கவும் மழை பெழிய அருளும் படியும் வேண்டினர் மனம் கசிந்து கண்ணீர் மல்கினர். தங்களை மறந்து மண்றாடி நின்றனர்.

அந்த வேளையிலே "நம்முடைய சந்தியில் ஒரு நரபலியிட்டால் மழை பெய்யும்" என்ற அசரீரி வாக்கு வானிலிருந்து கேட்டது. கருணையுள்ளம் கொண்ட இரக்கசிந்தையுள்ள மன்னன் மனம் சற்றுச் சாந்தமடைந்தாலும் ஒரு ஏழையைக்கொண்டு பலி கொடுக்க விரும்பவில்லை ஆகவே, அரசன் அமைச்சரைப் பார்த்து இந்த நாட்டுக்கு நான் மன்னன் தந்தை போன்றவன் மக்களின் துயர் போக்குவது தகப்பனின் பொறுப்பு வேறொருவரை பலிகொடுப்பதில் நன்மையில்லையென்று கூறித் தமது உறைவாளை உருவி அமைச்சரிடம் கொடுத்து தன் தலையைக் குனிந்து நின்றதைக் கண்ட அமைச்சர் துடித்துப் பதறி,"அரசே உங்களுயிர் முக்கியமானது நீங்கள் வேறெரு அமைச்சரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம், நண்பனாகிய என்னைப் பலியிடுறங்கள்" என்று வினயமாய் வேண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றான். அரசனோ, பிடிவாதமாக நான் தான் பலிக்குரியவன் எனக்குப் பின் நீ அரசையேற்று நடத்து அது தான் என் முடிந்த முடிவு என்று கூற ஒப்புக்கொள்ளாத அமைச்சர் நீண்ட நேர சர்ச்சைக்குப் பின் அன்னையிடம் கேட்டு அவள் கட்டளைப்படி நடப்போமென முடிவுக்கு வந்தனர். மன்னன் தேவியை நோக்கி வணங்கி,"அன்னையே என்னை பலியாக ஏற்பதா? அல்லது அமைச்சரை ஏற்பதா? என்று அடியினைப் பணிந்து அரசன் வேண்டி நிற்க! "அரசனே! நீதி தவறாது அரசு புரியும் நீயோ? அல்லது மதியூகியாகிய மந்திரியோ? எனக்குப் பலியாக வேண்டாம் தவறுகள் இளைத்து, உங்கள் வரவைக் கண்டு ஒளித்து நிற்கும் பூசாரியே பலிக்குரியவன்" என்ற இடி போன்ற சத்தம் செவியில் ஒலித்தது. அரசனுக்கும் அமைச்சருக்கும் சிலையின் பின்னால் நின்ற பூசாரி நடு நடுங்கி கண்ணீர் சிந்தக் கதறிக்கொண்டு வெளிவந்தான்.

காளியம்மா! உனக்குப் பூசைகள் பல செய்து உன்னையோ சார்ந்து நிற்கும் என் மேல் இப்படி கருணையற்றுவிட்டாயே இது நீதியா? நியாயமா? நீ கொடியவள், என்று புலம்பினான். அப்பா! பூசாரி நீ நன்றாக யோசித்துப் பார். 30 ஆண்டுகளுக்கு முன் என்ன செய்தாய் என்று நாள் தோறும் நாற்பத்தொரு நாள் உனக்கு விரும்பிய பொங்கலிட்டு, பூசித்து பின் அப் பொங்கலை நீயே அதிகமுண்டு உமக்கேற்பட்ட நோய்க்காக உன் சயநலத்துக்காக என்பேரைச் சொல்லி கிராமத்திலுள்ள இரண்டு ஆட்டுக்குட்டிகளை எனக்கு நீயாகவே பலியிட்டாய். நான் எல்லா உயிர்களுக்கும் தாய் அப்படிப்பட்ட நான் எனக்குப் பலியிட பிறவுயிர்களை ஒரு போதும் விரும்பமாட்டேன் நீ பலியிட்ட ஆடுகள் தான் இந்த இருவரும் அவர்களே அரசனும் அமைச்சருமாக பிறந்தனர்

பிறருக்கு இன்னா விளைத்தான் அது தனக்குப் பின் விளையும் என்பதை அறிந்தவன் நீ என்ன விதைத்தாயோ அதுவே விளையும் வினையைச் செய்தவன் பால் அதன் பலனைச் சேபர்ப்பது என் தொழில் எனவேயிது நீ செய்த வினை என்னைக் குறை கூறுவதில் பலனில்லை என்றாள் பூசாரி மன மடக்கி, வாயடக்கி, தலைகுனிய மன்னன் வாளை எடுத்து வெட்ட தலை துண்டாக மழை பெழிந்தது

அன்னையோ மன்னனை நோக்கி நீயொரு வரம் கோள் தருகிறோன் எனக் கூற மன்னனும் உடனே பூசாரியை உயிர்பெறச் செய்யுங்கள் என்று வேண்டினான். பூசாரியும் உயிர்பெற்று தான் செய்த தவறுணர்ந்து திருத்திவாழ்ந்தான்.

**திரு.மு.அருளம்பலம்,**
**ஆரையம்பதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை**
**திறந்த மட்டம்**
**முதலாமிடம்**

# ஒரு மொட்டு மலர்கிறது!

சஹ்லா ஆசிரியை தரம் 9ல் தமிழ் பாடம் நடத்திக்கெண்டிருந்தார் அப்போது பியோன், சுற்று நிருபம் ஒன்றைக் கொண்டு வந்து ஆசிரியரிடம் கொடுத்தார். .சஹ்லா அதை வாசித்து விட்டு மாணவிகளே! உங்களுக்கு அகில இலங்கை ரீதியில் சித்திரப் போட்டியொன்று நடைபெறவுள்ளது "ஆர்வமுள்ளவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுங்கள்"எனக் கூறினார். மாணவிகள் நான், நீ எனப் போட்டி போட்டுக் கொண்டு பொயர்களைப் பதிந்தனர். ஆனால் சீதா மட்டும் எந்த வித சலனமும் இன்றி சிலையாக அமர்ந்திருந்தாள்.

"என் சீதா ஒரு மாதிரியாக இருக்கிறாய் நீ போட்டியில் பங்குபற்றவில்லையா? "என்று அவளின் அருகில் சென்று அவளின் தலையைத் தடவினாள் சஹ்லா ஆசிரியை. அவளாவது போட்டியில் பங்கு பற்றுவதாவது அவளுக்குத்தான் எதுவுமே தெரியாதே டீச்சர் என சக மாணவிகள் அவளைக் கேலி செய்தனர். அது க.பொ.த (சா? த) வரையுள்ள தமிழ்ப் பாடசாலையாகும். அங்கு புதிதாக நியமனம் பெற்று வந்தவர் தான்சஹ்லா ஆசிரியை .

அவ் வகுப்பறையில் எல்லோராலும் எதற்கும் லாயக்கற்றவள் என ஒரங்கட்டப்பட்டவள் தான் சீதா. எந்த ஆசிரியர் வந்தாலும் "உனக்கு ஒன்றுமே விளங்குவதில்லை நீ பாடசாலைக்கு வந்து எங்களுக்கு தெல்லை தராமல் வீட்டிலிருப்பது மேல்" என்றே வசைபாடுவார்கள்.

இதனால் சீதாவும் தமது தலையேழுத்து இவ்வளவுதான் தமக்குப் படிப்பே வராது எனத் தீர்மானித்துக் கொண்டாள். ஏனெனில் அவளின் வீட்டிலும் அவளுக்கு ஆதரவு இல்லை. தாய் வறுமை காரணமாக வெளிநாடு சென்று விட்டாள். தந்தையும் பிரிந்து சென்று விட்டார். தாயின் உறவினர் வீட்டில் தான் அவள் இருக்கிறாள். அவர்களுக்கும் சீதாவின் படிப்பில் அக்கறையில்லை. தாயின் வெளிநாட்டுக் காசுக்காகத்தான் அவளை வைத்திருக்கிறார்கள். இவ்விபரங்களை சக ஆசிரியை மூலம் தெரிந்து கொண்ட சஹ்லாவுக்கு சீதாவை நினைக்க மிகவும் கலலையாக இருந்தது. சித்திதரப் போட்டிக்கு மாணவிகள் தெரிவு செய்யப்பட்டு ஆக்கங்களும் அனுப்பப்பட்டன.

சில நாட்களின் பின் சஹ்லா ஆசிரியை வகுப்பில் இருக்கும் போது ஆசிரியையும் சீதாவையும் அதிபர் அறைக்கு வருமாறு அழைப்பு வந்தது நான் ஏதும் தப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து விட்டேனோ அதற்குத் தான் அதிபர் வரச் சொல்கிறாரோ எனப் பயத்துடன் அதிபர் முன் நின்றாள் சீதா.

என்ன இப்படியொரு வேலை செய்து விட்டாய்! என்னால் நம்பவே முடியவில்லை! நீயா இதைச் செய்தது? என வியப்புடன் வினவினார் அதிபர். சீதாவுக்கு எதுவுமே விளங்கவில்லை.

அதிபர் சீதாவை அருகில் அழைத்து அக் கடிதத்தை நீட்டினார். அதில் சித்திரப் போட்டியில் சீதா முதலாமிடம் பெற்றிருப்பதாகவும், பரிசிலையும் சான்றிதழையையும் பெறுவதற்கு கொழும்பிற்கு வருமாறும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது . அவளது கண்களையே அவளால் நம்பமுடியவில்லை . நான் போட்டிக்கு ஆக்கம் அனுப்பவில்லையே எப்படி எனக்கு முதலிடம் கிடைத்தது என அங்கலாய்த்தாள் அப்போது சஹ்லா அதிபரின் அறைக்குள் நுளைந்தாள் அதிபர் சஹ்லாவிடம்சீதா முதலிடம்பெற்ற விபரத்தைக் கூறினார். அப்போது தான் சஹ்லா நடந்த விடயத்தை அதிபரிடம் எடுத்துரைத்தார்.

ஒரு நாள் தனிமையில் இருந்த சீதா தன் எண்ணக்கிடக்கைகளை"அன்றில் பறவை" ஒன்று பாசத்துக்காக ஏங்குவதைப் போன்று சித்திரமாக வரைந்தாள். அதைச் சுருட்டி வீசி விட்டாள் அவள் வீசுவதை தற்செயலாக அவதானித்த சஹ்லா அதை எடுத்து வைத்த வேளையில் தான் சித்திரப்போட்டிக்கான அழைப்பும் விடுக்கப்பட்டிருந்தது.சீதாவை எப்படியாவது முன்னிலைக்கு கொண்டு வர வேண்டுமென்ற உத்வேகத்துடன் நான் தான் சீதாவின் பெயரில் அச்சித்திரத்தை அனுப்பி வைத்தேன் என விளக்கினார். சீதா சஹ்லா டீச்சரை நன்றிப் பெருக்குடன் நோட்டமிட்டாள். எல்லா ஆசிரியர்களுக்கும் என் மேல் அக்கறை இல்லாத போது உங்களுக்கு மட்டும் ஏன் என் மீது அக்கறை வந்தது என நாத்தழுதழுக்கக் கூறினாள் சீதா.

நான் என் கடமையைத் தான் செய்தேன். உனக்குள்ள திறமையை வெளிக்கொணர்வதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது . அதில் நீ வென்றுவிட்டாய் என பதில் அழித்தாள் சஹ்லா. பரிசிலை பெறுவதற்காக சீதா அழைக்கப்பட்டாள் . தன்னுடன் சஹ்லா. ஆசிரியையும் அனுப்பி வைக்குமாறு அதிபரிடம் வேண்டினாள் சீதா. அதிபரும் அதற்கிசைந்து சஹ்லாவுடன் சீதாவை அனுப்பி வைத்தார்.

கொழும்பில் சீதாவுக்கு 20000/= பணப் பரிசும் சான்றிதழும் கிடைத்தது. அப்போது சீதா அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. காலச்சக்கரம் உருண்டேடியது.

சீதா இப்போது படிப்பில் கொஞ்சங் கெஞ்சமாக அக்கறை செலுத்த ஆரம்பித்தாள் அதற்கு சஹ்லாவும் உறுதுணையாக நின்றாள். மூன்றாந் தவணை பரீட்சையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதா 5வதாக வந்தாள். எதற்குமே லாயக்கற்றவள் என ஓரங்கட்டப் பட்ட சீதா இப்போது சமூகத்தின் சவாலுக்கு முகங் கொடுக்கத் தயாராகி விட்டாள். அவளை ஏளனமாகப் பார்த்த மாணவிகள் எல்லாம் இப்போது மூக்கின் மேல் விரலை வைத்தனர்.

சீதாவின் அம்மாவும் வெளிநாட்டிலிருந்து வந்து சோர்ந்தார். தாயின் அரவணைப்பும் இப்போது அவளுக்கு கிடைத்து விட்டது . படிப்படியாக முன்னேறி க.பொ.த சாதாரண தரத்தில் சிறந்த முறையில் சித்தியடைந்து க.பொ.த உயர்தரப் பரீட்சையிலும் கலைப்பிரிவில் 3A சித்தியைப் பெற்றாள் சீதா. ஒவ்வொரு வெற்றியிலும் அவள் சஹ்லா ஆசிரியையை மறக்கவே இல்லை.

ஆம் இப்போது சீதா ஒரு வழக்கறிஞராக கடமையாற்றிக் கொண்டிருக்கிறாள். அவள் படித்த பாடசாலையின் ஆண்டு விழாவிற்கு அவளைப் பிரதம அதிதியாக அழைத்திருந்தனர். சீதா அங்கு உரையாற்றும் போது தாரமும் குருவும் தலை விதிப்படி என்பார்கள். என் தலை விதி நல்லதாக அமைந்ததாலோ என்னவோ எனக்கு சஹ்லா ஆசிரியை குருவாகக் கிடைத்தார்.

சுடர் விளக்கானாலும் தூண்டு கோல் வேண்டும் . நான் எரியாத தூர்ந்து போன விளக்கு என்னைத் துலங்க வைத்த பெருமை சஹ்லா ஆசிரியையே சாரும் எனக் கூறி தனது உரையை முடித்தாள்.

விழாவில் அதிபர் தனது உரையில் மாணவர்கள் கருங்கல்லைப் போன்றவர்கள் அவர்களைச் செலுத்தி அழகான சிலையாக உருவாக்குவது ஆசிரியர்களின் பெறுப்பாகும். இப்பணியை ஆசிரியை சிறப்பாக நிறைவேற்றியுள்ளார் இவ்வறப்பணிக்காகத் தன்னை அர்ப்பணித்த சஹ்லா ஆசிரியையைப் பாராட்டுவதாகக் குறிப்பிட்டார் அங்கு வீற்றிருந்த அனைவரும் சஹ்லாவின் பணியை கிலாகித்துப் பேசினர் தன் சேவைக் காலத்தில் இது தனக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும். என்ற பெருமிதத்துடன் சஹ்லா வீடு நோக்கிச் சென்றாள்.

**ஜனாபா சல்மாநாச்சி முஹமட் இப்ராஹிம்**
**காங்கேயனோடை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை
கனிஷ்ட பிரிவு
இரண்டாமிடம்

# இலக்கியம் கலைகளினூடான மனிதனின் மகிழ்வான வாழ்வு

இறைவனின் உன்னதமாகன படைப்புக்களில் சிறப்பானது பூமிப்பந்து. இப்பூமியானது பலநூறு கல்பகோடி ஆண்டுகளின் முன்பு தோற்றம் பெற்றது. இங்கு பல கோடிக்கான உயிரினங்கள் வாழ்கின்றன. இவற்றுள் இறைவனின் ஒரு சிறப்பான படைப்பே மானிடன் ஆவான். விஞ்ஞான ரீதியில் நோக்கினால் மானிடனின் தோற்றம் பூமி தோன்றிய காலத்திலிருந்து பல மில்லியன் வருடங்களின் பின்பேயாகும். இவ்வாறு தோற்றம் பெற்ற மனிதன் படிப்படியாக பல சவால்களையும், இன்னல்களையும் எதிர்கொண்டு அதிக வெற்றிகளையும் அவனது முயற்சியினால் பெற்று தற்காலம் வரை நிலைத்து இருக்கின்றான்

இங்கு நாம் நோக்க வேண்டிய விடயம் யாதெனில் அவன் தோற்றம் பெற்ற காலத்தில் இருந்தே அவனது கலை திறன்களும் தோன்றி விட்டன. இக்கலைகள் யாவும் இலக்கிய நயங்களுடன் பின்னிப்பிணைந்துள்ளன. இவற்றின் பரிமாண ங்களை நாம் பார்ப்போமானால் இக்காலத்தில் வாழ்ந்த மனிதன் தன் அறிவுக்கு எட்டிய வகையில் பல கலையிலும் சிறந்து விளங்கியுள்ளான். "கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்த தமிழ்" என தமிழ் மொழியின் அருமை, பெருமையை இவ்வுலகமே அறியும். தமிழ் மொழி செம்மொழிகளில் ஒன்றாகும். இம் மொழியிலே பல இலக்கிய நாவல்கள் அருளப்பட்டுள்ளன. இவ் இலக்கிய காவியங்களில் மானிடர்களின் பல்வேறு தரப்பட்ட நற்குண இயல்புகளையும் மனிதன் இவற்றால் எவ்வாறு முன்னேறி வந்துள்ளான் என்பதையும் உணரலாம்.

பெண்களின் வீரம், கடமை, பொறுமை, பாசம், சாதுர்யம் போன்றவைகளை நாம் அறியக்கூடிய வகையில் இலக்கிய நாவல்கள் அமைந்துள்ளன. முற்காலத்தில் போர்க்களத்தில் பெண்களும் தமது திறமைகளை வெளிப்படுத்தியமை மகாபாரதக் கதையின் வாயிலாக பிதாமகர் வீஷ்மருக்கு எதிராக சன்டையிடும் சிகண்டியின் திறமையிலிருந்து புலப்படுகின்றது. மணிமேகலை காப்பியத்தில் மணிமேகலையின் சாதுர்யச் செயல்களும், மகாபாரத காவியத்தில் திரௌபதி தேவியின் கடமை உணர்வுகளும் பெண்களின் பல சிறப்பம்சங்களை எடுத்தியம்புகின்றன.

மேலும் காதல் காவியங்களில் பெண்களின் நாணம், அழகு என்பன சிறப்பாக எடுத்துக்கூறப்பட்டுள்ளன. மங்கயற்கரசியின் காதல் காவியம் இதனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலப்படுத்துகின்றது. அது மட்டுமின்றி அக்காலத்தில் வாழ்ந்த ஆண்களின் இயல்பானது வீரத்தையே பறை சாற்றி நின்றது. வில்வித்தை, கதாயுத்தம், மல்யுத்தம், மாயவித்தைகள் போன்றவற்றையும் அறிந்திருந்தனர். இவற்றை கர்ணன் வீரச் செயல்களில் இருந்து நாம் அறியலாம். இது போன்ற அக்கால மானிடர்கள் தர்மத்தை மிகவும் போற்றி வாழ்ந்தார்கள். தமது குருவிற்கு உரிய மதிப்பை வழங்கினார்கள். தாய், தந்தையைப் பேணி நடந்தார்கள். கல்வியை முறைப்படி கற்று வந்தார்கள். இவற்றையெல்லாம் இலக்கிய நாவல்களில் செவ்வனே விளக்கப்பட்டுள்ளன. இதே போல் கலைகளான அறுபத்துநான்கு வகை கலைகளும் முற்காலத்தில் இருந்தே தோற்றம் பெற்றது மடடுமின்றி நடைமுறையில் இருந்து வந்தமையும் நாம் கண்கூடாக அவதானிக்கலாம். அதாவது இந்தியாவில் உள்ள தஞ்சைப் பெருங்கோவிலிலன் கோபுரம் தொழில்நுட்பமுறை வளர்ச்சி அடையாத அக்காலத்திலேயே பாதுக்காப்பான வகையிலும், அழகாகவும், நேர்த்தியாகவும் வடிவமைக்கப்ட்டுள்ளமையிலிருந்து கட்டடக் கலை, சிற்பக் கலையின் சிறப்புக்கள் எல்லோரையும் வியக்க வைக்கின்றன.

பழங்கால மன்னர்களின் அந்தப்புரங்களின் பெண்களின் அழகிய நடனங்களும், கோயிலில்களில் இடம்பெறும் நிருத்தங்களும் நாட்டடியக் கலையின் சிறப்பை வெளிப்படுத்துகின்றன. இதன்மூலம் மக்கள் மனதிற்கு மகிழ்ச்சி மட்டுமின்றி உடல், உள நோய்களும் நீங்கி சிறப்பாக வாழ்கின்றனர். தங்கள் வீரத்தை தக்க வைத்துக்கொள்ள குஸ்தி, கராத்தே, மல்யுத்தம் போன்ற சன்டைப் பயிற்சிகளை செவ்வனே பயின்று வந்தனர். சண்டைகளில் வெல்பவர்களுக்கு அக்காலத்தில் அழகிய இளவரசிகளும், மணப்பெண்ணாக கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் எல்லோருமே சண்டைப் பயிற்சியைப் பெற்றனர். இதிலிருந்து சண்டைக் கலையும் மக்களின் வாழ்வில் முக்கியத்துவம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

முக்காலத்தில் வாழ்ந்த மக்கள் அரச சபையிலும், பொது இடங்களிலும் அனைவரையும் கவரும் வகையிலும், பணம் பெறும் வகையிலும்சங்கீதக் கலையை வெளிப்படுத்தி வந்தனர். இதனாலும் மக்கள் மனம் மகிழ்ந்தனர். ஆலயங்களில் பண்ணிசையோடு, தேவாரங்களையும் இசைத்து இறைவனின் அருளையும், இன்பத்தையும் பெற்றனர். இதிலிருந்து இசைக்கலையும் மக்களுடன் பின்னிப்பிணைந்து உள்ளமை குறிப்பிடத்தக்கது. முற்காலம் மட்டுமில்லாமல் தற்காலத்திலும் மனிதர்கள் கலையில் சிறந்து வாழ்கின்றனர். புதிய புதிய கட்டங்கள் நவீன நகர மயமாக்கலில் தோற்றம் பெற்றுள்ளன. பொழுது போக்கிற்காகவும், பணம் பெருக்குவதிலும் புதிய பல நாடக, நாட்டியக் கலைகள் திரையுலகில் தோற்றம் பெற்றுள்ளன. இதனால் தற்கால மனிதர்கள் பல்வேறு வகையிலும் மகிழ்ச்சி அடைந்து வருகிறார்கள்.

தற்காலக் கோயில்களில் இசைக்கப்படும் பஜனை, அலங்கார விளக்குகள், நடன நாடக கலைநிகழ்ச்சிகளும் கலையம்சம் மனிதனுடன் பின்னிப்பிணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றமை தெளிவாகின்றது. அரசியல் கட்சிகள், சமூகசேவையாளர்கள், பட்டிமன்றப் பேச்சாளர்கள் போன்றோர்கள் தற்கால்த்தில் தங்கள் பேச்சுத் திறமையை வெளிப்படுத்துகின்றனர். இதன்மூலம் பேச்சுக்களை மக்களுடன் இணைந்துள்ளமை தெளிவாகிறது. இக்கலையும் மாணிடர்களுக்கு மன அமைதியும், இன்பத்தையும், பொருளாதாரத்தையுமே ஈட்டித் தருகின்றது. நூதன சாலைகளில் பேணப்பட்டு வரும் பழம்பெரும் பொருட்கள் அக்கால மனிதனின் கலையம்சத்தை வெளிப்படுத்துகிறது. அக்காலத்தில் வாழ்ந்த பெரியார்கள், கவிஞர்களின் பாடல்கள் மனிதர்களின் கவித்தன்மையை பறைசாற்றுகின்றது. இவற்றுக்கான ஆதார நூல்களும் தற்காலத்தில் பேணப்படுகின்றன. இதன் வெளிப்பாடாக பழங்கால அரசபையில் புலவர்கள் பல கவிகளைப் பாடி பொற்காசுகளையும், பரிசுப் பொருட்களையும் பெற்று வந்ததாக நாவல்கள் தெரிவிக்கின்றன. இதிலிருந்து இலக்கியம், கலை போன்றவை மனிதனின் வாழ்வில் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது புலனாகின்றது.

மனிதர்களின் அறிவியல் ரீதியல் கண்டுபடிக்கப்பட்டுள்ள கண்டுபிடிபபுக்ளில் பல கலைகளின் வெளப்பாட்டையே எடுத்துக் காட்டுகின்றது. இதனாலும் மனிதன் நன்மையே பெற்றுள்ளான். இக்காலத்தில் மருத்துவத் துறையும் சிறப்ப பெற்று விளங்கயமை தற்காலத்தில் கண்டு பிடிக்கப்ட்டுள்ள மருத்து ஓளடதங்கள், மருத்துவ நூல்களில் இருந்து புலனாகின்றது. இதனால் மருத்துசக் கலையிலும் மனிதனின் நற்பலன்கள் வெளிப்படுகின்றன. சிகிரியா, அஜந்தா போன்ற குகையோவியங்கள் சித்திரைக்கலையைப் போற்றி புகழுகின்ற அம்சமாகும். தற்காலத்திலும் மனிதர்கள் பொழுது போக்கிற்காகவும் போட்டிற்காகவும், அலங்கார வேலைப்பாடுகளுக்காவும் சித்திரக்கலை பெரிதும் பங்களிப்புச் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் அக்காலத்தில் பல எழுத்தாளர்களால் எழுதப்பட்ட நூல்களும், தற்கால நடைமுறையில் எழுதப்படும் திரைக்காவிய நூல்களும், கதைகளும், மக்களின் எழுத்துக் கலையை விளக்குகிறது. இதனாலும் மனிதன் பல நன்மைகளைப் பெற்றுள்ளான். இன்னும் பெற்று வருகின்றான். இவ்வாறான பல எண்ணிக்கையான கலையம்சங்களும், இலக்கியங்களும் மக்களுடன் இணைந்து காணப்படுகின்றது. அக்காலத்திலும் சரி இக்காலத்திலும் சரி மறுக்க முடியாத ஒன்றாகும்.

இதனால் மனிதன் பொருளாதாரம், ஒழுக்கம், அமைதி போன்றவற்றைப் பெற்று சந்தோசமாக வாழ்கின்றான். அதாவது ஒவ்வொரு கலை இலக்கிய வகையிலும் ஏதோ ஒரு வகையில் அவனுக்கு பொன்னும், பொருளும் கிடைக்கப்பெறுகிறது. இக்கலைநயங்களை சிறப்புறச் செய்வதால் மனிதன் மன நிம்மதியைப் பெறுகின்றான். எவ்வாறெனின் கோயில்களில் கலையை வெளிப்படுத்தும்போது அதன் பிரமிப்பு புலனாகும். கண்களுக்கு விருந்தளிக்கும் வகையிலே இவ்வம்சங்கள் காணப்படுகின்றது. இலக்கிய நடைமுறைகளை கற்றுக் கொடுக்கின்றமை இவ்வாறான செயற்பாடுகளினால் ஒவ்வொரு மானிடனும் முழுமையான ஒழுக்கமுள்ள சிறந்த பிரஜையாகவே உருவாகியுள்ளான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகிக் கொண்டிருக்கின்றான் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்பதே ஜதார்த்தமான உண்மையாகும்.

**செல்வி.கோ.பிரவீனா**
**மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம்**

## கனிஷ்ட பிரிவு கவிதை பாடல் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபாம்

1ம் இடம் - **செல்வி.மோ.பிறிமிக்கா**
**மட்/ஆரையம்பதி இராமகிருஸ்ணமிஸன் மகா வித்தியாலயம்**

2ம் இடம் - **செல்வி.ஜுட் ஜீலியானா யஸ்மிதா**
**மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ்மூத்ததம்பி வித்தியாலயம்**

3ம் இடம் - **செல்வி.க.கஜேந்தினி**
**மட்/மாவிலங்கன்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாடகப்பிரதி எழுதல்**
**சிரேஷ்டபிரிவு**
**இரண்டாமிடம்**

# வலை

காட்சி - 01

பாத்திரங்கள் - கட்டியக்காரன், கிழவன், தாய், தந்தை, மகள்(கமலி), மகன், நண்பி(சியாமா), பாட்டி

கட்டியக்காரன் - காப்பாத்துங்க, காப்பாத்துங்க, காப்பாத்துங்க, காப்பாத்துங்க

எங்கள் சமூகம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது. உங்கள் பிள்ளைகளின் வாழ்வு எங்கே!

கோடாலிக் காம்புகள் போல் எம்மினமே எம்மை அழிக்கும் பருபாதகம் மேலும் மேலும் வளர இடமளிக்கலாமா?

கிழவன் - பொறு பொறு தம்பி என்னடா அது
கோடாலிக்காம்புகள் போல் எம்மிடமே எம்மை அழிக்கிறது என்பதால் எனக்கும் இத்தனை வயசாப் போச்சு அதுட விளக்கம் தான் இன்னும் தெரியல்ல

கட்டிக்காரன் - அதுக்கென்ன சொல்லுறன் கேழும் பெரியவரே

நல்லது நல்லது பெரியவரே
நன்றாய் கேட்டீர் பெரியவரே
சொல்லுவன் கேழும் பெரியவரே - நன்றாய்
சொல்லுவன் கேழும் பெரியவரே

பாடல் - கோடாலிக் கொருபிடி
கோணாத ஒரு பிடி
ஒரு மரம் கொடுத்த பிடி (02)
அப்பிடி கொண்டே அவன்
அம்மரமும் பலமரமும்
அழிக்கப்படும் பரிதாப நிலைதனை அறிந்து
கொண்டீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்து கொண்டீரே பெரியவரே புரிந்து கொண்டீரே(02)

கிழவன் - அட இப்பதான் எனக்க விளங்குது நீயும் சும்மா கிம்மா ஆளில்ல நீ பெரிய விசயம் தெரிந்த ஆள்தான் நீ என்னமோ பெரிசாத்தான் சொல்லப்போற என்டுதான் நினைக்கிறன் அது என்ன எண்டு இருந்து கேட்டுத்தான் போகப்போறன்

கட்டியக்காரன் - காப்பாத்துங்க, காப்பாத்துங்க, காப்பாத்துங்க, காப்பாத்துங்க

எங்கள் சமூகம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது. உங்கள் பிள்ளைகளின் வாழ்வு எங்கே!

(வீடு, தாய், தந்தை, மகள், மகன், பாட்டி)

மகள் (கமலி) - அம்மா, அம்மா எனக்கு இனி பள்ளிக்கூடம் போக ஏலா

தாய் - ஏன்? என்ன விஷயம் எதுக்காக பள்ளிக்கூடம் போகமாட்டன் என்டு சொல்லுறா?

மகள் (கமலி) - அவங்க எல்லாப் பிள்ளைகளும் இன்ரநெற்றிலதான் எல்லாம் விசயங்களும் பார்த்துக் கொண்டு வாறாங்க ஒப்படை குழுவேலை எல்லாமே Internet விஷயங்கள்தான்

தந்தை - அதுக்கும் நீ பள்ளிக்கூடம் போகமாட்டன் என்றதற்கும் என்ன சம்மந்தம்

பாட்டி - மொட்டத்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போடுறதப் போல

மகன் - அதுசரி, அதுசரி

மகள் - என்னடா அதுசரி, இதுசரி வாய்மூடு

தாய் - என்ன பிள்ள இப்படிக் கதைக்கிற எப்பயிருந்து இந்தப் பழக்கம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலி - இல்ல அம்மா நானும் எத்தன நாளா எனக்கு எனக்கு ஒரு லப்டப் வாங்கித் தாங்க என்டு கேட்டுக் கொண்டிருக்கிறன். O/L எழுதி A/L லும் படிக்கத் தொடங்கினாலும் நீங்க வாங்கித் தரமாட்டிங்க. பள்ளியில எல்லோரும் Internet விஷயங்களைக் கதைக்கும் போது நான் மட்டும் அவங்கட வாயைப் பார்த்துக் கொண்டு மக்கு மாதிரி இருக்கிறன்

தந்தை - என்ன பிள்ளை செய்யிறது எல்லாத்துக்கும் கையில காசு

வேணுமே. பொறு பாப்பம் லோனென்டாலும போட்டு வாங்கப் பார்ப்பம்

மகன் - அப்ப அக்கா எனகும் லப்டப் விளையாடத் தருவியா?என்ர பிரன்ஸ்செல்லாம் கன்ரிகிரஸ். ரெம்பிள்ரன் என்டெல்லாம் கதைக்கிறவங்க. அதெல்லாம் என்ன விளையாட்டுக்கள் எண்டே தெரியாது நானும் உன்னமாதிரி ஆவெண்டு கொண்டுதான் இருக்கிறவன்

கமலி - அப்ப கொசு ஒண்டு உண்ட வாய்க்குள்ள போனதெல்லா

மகள் - அம்மா.....சினுங்கள் (எல்லோரும் சிரித்தல்)

**காட்சி – 02**

**பாடல்** - மடிக்கணணி இல்லையென்டா
மகிழ்ச்சியே இல்லை (02)
மாறிவரும் சமுகமிது
மாய வலையிலே
கண்டதையும் பார்த்திடத்தான் இன்ரநெற் இன்று
இழிநிலைக்கும் வழிசமைக்கும்இயந்திரமிது (மடிக்கணணி)
கையடக்கத் தொலைபேசி
கையில் இல்லையா
கணக்கெடுக் ஆளில்லை
கௌரவமில்ல – சுய
கௌரவமில்ல (மடிக்கணணி)
(நண்பி கையில் போனை வைத்து நோண்டியபடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலி - சியாமா..... சியாமா..... என்னடாப்பா அதையே நோண்டிக் கொண்டிருக்கிறா கொஞ்சம் அதoffiபண்ணிப்போட்டு படிப்பம் வாவன்

சியாமா - ம் சரி கையிலபோன் இருந்தா எதுவுமே

எனக்கு ஞாபகத்துக்கு வராது அதுசரி லப்டப் வங்கப்போறன் எண்டு சொன்னீயே... வாங்கித்தயோ.. இல்ல....

கமலி - எங்கப்பா எங்கடா அப்பா, எப்ப பாரு பஞ்சப்பாட்டுத்தன் நான் படிச்சு கம்பசுக்கு போனாலும் என்ட கனவு நனவாகாது போல

சியாமா - அட இதுக்கு ஏன் கவலப்படுற நெற்கபேக்குப் போனா ஐம்பது ரூபா கொடுத்தா 2 மணித்தியாலயம் பார்க்கிறதயெல்லாம் பார்த்துப் போட்டு வாறத்துக்கு வீண் கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறா என்னிட்ட என்ன லப்டப் இருக்கா என்றா எப்படியும் 2 நாளைக்கு ஒருக்கா என்டாலும் 2, 2 மணிததியாலயம் அஙக போயிருவன் விமல் தான் School விட நாங்க போவம்

கமலி - இல்லப்பா அம்மா அங்கெல்லாம் போக விடமாட்டா

சியாமா - அட நீவேற இதையெல்லம் அம்மாட்ட சொல்லிட்டா போவாங்க எக்ரா கிளாஸ் எண்டு சொல்லி 2 மணித்தியாலத்திற்கு 100 வாங்கு அது 2 நாளைக்கு நெற்கபேக்கு போகக் காணும்

கமலி - பாப்பம்

சியாமளா - என்ன பாப்பம் கீப்பம் நீ நாளைக்கு எங்களோட வாறா அண்டைய செலவ வேணுமென்றால் நான் தாறன் (நெற்கபே சோடி சோடியிருந்து பார்த்தல்)

**காட்சி – 03**

பாடல் - ஆணும் பெண்ணும் சரிநிகராம் அறிவு வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்கிறது ஏட்டுச் சுரக்காய் படிப்பதற்கு ஏற்புடைய கணணி அதற்கிருக்கு கண்டதையும் கௌரவமென்று தப்புக் கணக்கு இவளும் போட்டாள் தப்பின் மேல தப்புச் செய்து கற்பையும் காற்றில் பறக்க விட்டாள் கையை மீறி போனதனால் வாழ்க்கை கணக்கை முடிக்க துணிந்து விட்டாள்

(கமலி நஞ்சை அருந்தி இறத்தல்),(தாய், தந்தை, தம்பி, பாட்டி புலம்பல்)

ஐயோ!

தாய் - என்ற பிள்ளையப்பா... என்ன நடந்ததென்று தெரியலையே

தந்தை - லப்டப் வாங்கித்தரல்ல என்டதற்காக இப்படி செய்தாளே தெரியலையே போட்ட லொன் நாளைக்கு வருகிறது. லப்டப் வாங்க கூட்டித்துப் போக இருந்தேன் கடவுளே!

கட்டியக்காரன் - காரணம் அறியாது புலம்பும் பெற்றோர் காரணம் கை மீறியதால் தன்னுயிர் மாய்த்த காரிகை சமகால அறிவுடமையை பொருளாதாரச் சமூகத்தில் உள நெருக்கடிகளையும் சமூக சீழிவுகளையும் ஏற்படுத்த விழையும் நிலை இலத்திரனியல் மோகம்

பாடல் - சொல்லுற சொல்லிப்போட்டோம் சொன்னதை
சிந்திச்சுப் பாருங்க சிந்திச்சுப் செயற்படுங்க சீரழிவைத் தேடாதிங்க (02)(சொல்லுறத....)
உங்கள் வாழ்வு உங்கள் கையில்(02)
சிந்திச்சுப் செயற்படுங்க சீரழிவைத் தேடாதிங்க (02)

கிழவன் - அது சரி பொடியன் எல்லாம் நல்லாத்தான் சொல்லுறான் இப்ப எல்லாம் T.V பேப்பர் பார்த்தா இப்படியான செய்திகள் கனக்க வருது விஞ்ஞான வளர்ச்சி, நாகரீகம், எண்டு உலக விஷயமெல்லாம் நுனி விரலில் காட்சியாக செல்போனிலே வருகுதான் என்டாலும் சில விஷயங்களில் நாங்கள்தான் யோசித்து நடக்ணும் உச்சி வெயில் மண்டயப் பிளக்குது நான் போயித்து வாறன்

**செல்வி.கௌ. தேவநந்தினி**
**மட்/மாவிலங்கதுறை விக்னேஸ்வரா வித்தியாலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை**
**திறந்தமட்டம்**
**இரண்டாமிடம்**

# "மழையில் கருகும் பூ"

"டிங் டிங்" என்ற மணியோசை உடைந்த பலகைக் கேற்றுக்குள் நுட்பமாக நுழைய றோட்டுக்கு ஓடினாள் பார்வதி. அழைத்தது வேறு யாருமல்ல தபால்காரன் தான். "என்ன பார்வதி அக்கா இதோட மூணாவது வேங் கடிதம்","இன்னும் நகையை ஈடு எடுக்கலயா"…..? என்ற தபால்காரன் கேள்விக்கு பதில் சொல்ல பார்வதி பெரும் மூச்சோடு என்ன தம்பி செய்யிற கையில காசு இல்லையே, மாச செலவு கைக்கு அளவா இருக்கே இதுல எங்க ஈடு எடுக்கிற என்றாள். பதிவுத் தபாலுக்கு கையொப்பம் வைத்து உடைந்து கிடந்த கேற்ற ஒரு மாதிரியா தூக்கி அடைத்து வீட்டுக்குள் போனாள் பார்வதி.

நின்ற நிலையில் கடிதத்தை உடைத்தாள். நிபந்தனைகள் நிரலாக இருந்தது. இது இறுதி அறிவித்தல் நகைய எடுக்கத் தவறினால் அறுதியாகிவிடும். என எழுதப்பட்டிருப்பதைக் கண்டு அவள் மனம் ரணமானது. "இரண்டு பவுன் மாலை புள்ளட சாமத்தியம் செய்ய வைத்தது. ஒரு வருசமாயிற்று. "என்று தனக்குள்ளேயே பார்வதி சொல்லிக் கொள்ள, எப்படித்தான் நகைய எடுப்பது என்று யோசனை அவளை சுற்றிச்சுற்றி வந்தது.

பார்வதியின் கணவன் கணபதி சாதாரண கூலித் தொழிலாளி, இவர்களுக்கு ஒரு மகளும் ஒரு மகனும் உள்ளார்கள். மகள் சுஜீவாவுக்கு சாமத்தியம் (பூப்புனித நீராட்ட விழா) செய்ய தன் கழுத்தில் கிடந்த மாலையை அடகு வைத்தாள் பார்வதி. நல்ல கருமானம், அநாவசிய செலவு இல்ல, சேமிப்பு வீண்விரயம் இல்ல, அப்படித்தான் வாழ்பவள். குடும்பத்தைக் கொண்டு நடத்துபவள். ஒரே ஒரு மகள் என்றபடியாள் சுஜீவாவின் சாமத்திய கல்யாணத்த கொஞ்சம் சிறப்பாக கணபதியும் பார்வதியும் செய்தார்கள். அந்த செலவுதான் இந்த அடகு என்று பார்வதி கடந்த ஒரு வருட நினைவை நீட்டினாள்.

விறாந்தை சுவரில சாய்ந்த பார்வதி என்ன செய்ற, எப்படி இரண்டி பவுண் நகைய எடுக்கிற என்று யோசித்தாள். யோசனைதான் அவளை யாசகம் செய்தது. இருந்தும் ஒரு நம்பிக்கை ஈடு எடுக்கலாம் என்று, அப்பதான் அவள் மனதில் உதித்தது. "மரமுந்திரிகை" பார்வதியின் தாய் கனகம்மா ஒரு ஏக்கர் மர முந்திரிகை காணியை கணபதிக்கும் பார்வதிக்கும் சீதனமாக கொடுத்தாள். மட்டக்களப்பு தெற்குப் பக்கம் அதிகமான குளம். அதில் கிரான் என்னும் மூலிகைப்புல் கொண்ட ஊர் கிரான்குளம் மரமுந்திரிகையும், வெள்ளரிப்பளமும், நன்னாரி, தென்னை மரங்கள், வயல், கடல், ஆறு, ஓடை என்று ஊருக்கு புகழ் பாடும் பாட்டுடைகள், மட்டக்களப்பு வாவி தாவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட, ஓடக்கரையில் ஒரு நிலம் காணியின் பெயரோ "தீவு" அங்குதான் வெள்ளக்காரன் கப்பல் விற்ற பருப்பாம் முந்திரிகை.

தேன்பாணி சுவை, சுண்டி இழுக்கும் வாசைன, சக்தி நிறைந்தது. அந்நியன் எண்ணி விரும்பும் ஆகாரம், அதுதான் எங்கள் வாழ்வாதாரம். பார்வதி போன்ற எங்கள் கிராமத்து மக்களின் சொத்து. போனவருஷம் பார்வதி பார்த்தெடுத்த முந்திரிப்பருப்பு நல்ல விலை போயிற்று, அதில்தான் இரண்டு பவுண் மாலை வாங்கினாள். முந்திரி எங்கள் ஜீவனோபாயம். எங்கள் ஜீவனுக்குள் ஊறிவிட்டது. முந்திரிப் பழமும் விற்று பலன் பெற்றாச்சு அந்த நம்பிக்கைய அப்படியே மனசுக்குள் கட்டிப்பிடிச்சாள் பார்வதி.

வங்கி ஈட்டுக் கடிதத்தை தனது முந்திரி தோட்டத்தில் பின்புலனாக பதிவேற்றி பார்த்தாள். "இப்ப பங்குனி இனி முந்திரி பூத்திரும் வைகாசியில் காய்க்கும் விற்றிரலாம். ஆக மீண்டும் ஈடு எடுத்திடலாம். நஸ்டம் வராட்டி கஸ்டம் போகிடும்" என்று மனசுக்குள் ஆனந்தமாய் வாய்திறந்து சொன்னாள். "முந்திரி என்னை விடாது என்றாள்" இவள் போல் ஊராக்களும் ஏதோ பிரச்சினையில் மனசுக்குள் அர்ச்சனையாக தங்கள் ஊரு சொத்தின் நாமம் அந்த பருவ காலத்தில் "முந்திரி" என்று உச்சரிப்பார்கள்.

சுவரில் சாய்ந்த பார்வதி போன வருசம் அவள் முந்திரிகை தோட்டத்தின் அனுபவங்களை அணை கட்டினாள். ஒவ்வொரு நாளும் தோட்டம் சென்று வரும் பார்வதி முந்திரிகை இலைகள் துளிர் விட்டதைக் கண்டு அவளாக சிரித்தாள். மெல்லிய இலைகளை மென்மையான கையால் தடவிப்பார்த்தாள், வானத்தைப் பார்த்தாள் வெளியில் நின்ற பார்வதி ஆசையின் ஆர்வத்தால் முந்திரிகைத் தோட்டத்தின் கூடாரம் போல் பரந்து கிடந்த வனத்திற்கு செல்ல உதிர்ந்த சருகுகள் "சரசர" என சத்தமிட, சருகுக்குள் இருந்து உடும்பும், பாம்பும் ஓட பயந்தாள் பார்வதி.

"என்னடாப்பா இது கடும் சருகாக்கிடக்குது" என்று சொன்ன பார்வதி தோட்டத்தில் இருந்த கெப்பு கப்பால் பூர்வாங்க ஏற்பாடாக சருகை கூட்டினாள். சருகுகள் மலை போலாயிற்று செல்லாத சருகுகளை குப்பவாரியினால் விரட்டினாள். அவள் வியர்வை நிலத்தில்பட்டு நிலம் ஈரமாக அவள் சற்று அமர்ந்தாள். சோட்டியின் தோள்பட்டையில் கிழித்து தேய்ந்த துவாரம் அதை மறைக்க பழைய துவாய் அதை எடுத்து வியர்வையை துடைத்தாள். போத்தலில் கொண்டு போன குடித்து தாகம் தீர்த்து மரத்தோடு சாய்ந்து அமர்ந்தாள்.

தன்னம் தனியாகத்தான் சருகு இழுக்க வேண்டும் ஏனெனில் கணபதி வேலைக்குச் சென்று விடுவார். வேலை விட்டு வர ஆறு மணியாகும் படிக்கும் பிள்ளைகள் பாடசாலை, தனியார் கல்வி நிலையம் சென்றிடுவார்கள். வீட்டு வேலைகள், கணவனை வேலைக்கு அனுப்ப வேண்டும் காலை உணவு செய்ய வேண்டும் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட பட்டியல் அவளிடம் நிலுவையில் காணப்பட அதை முடித்த பின்தான் தோட்டம் வந்தாள் பார்வதி. வீதியில் கடும் வெயிலில் பழைய துவாய் தோளிலும் போட்டு நடக்க களைப்பு, ஆனாலும் அவள் உழைப்பு களைக்கவில்லை.

சற்று ஓய்வெடுத்த பார்வதி "சரி சரி எழுந்திரு நேரமாகுது பிள்ளைகள் வந்திடுவாங்க சமைக்கனும் நேரமில்லை" என்று ஓய்வைக் களைத்து மீண்டும் சருகு இழுக்கத் தொடங்கினாள். மாடுகள் மேய்த்து நிறைய சாணம், சாணத்திற்குள் அடியில் குளக்கரையில் வாழும் "ஆக்காண்டி" பறவையின் முட்டைகளைக் கண்டாள், பார்வதியின் மகன் சுதர்ஷனுக்கு ஆக்காண்டி முட்டை என்றாள் கொள்ளப் பிரியம் மகனுக்கு அவித்துக் கொடுக்க முட்டையை எடுத்து சிறட்டையாள் மூடி வைத்தாள்.

சருகுகளை இழுத்து மலையாக்கி நெருப்பு வைக்க அது எரிமலை போல் புகைந்தது. நெருப்புப்புகை முந்திரியம் பூவுக்கு நல்லதாம் என்று கனகம்மா ஆரம்பத்தில் சொல்லியதைக் கேட்டு அதன்படியே செய்வாள் பார்வதி. சுற்றிவர உள்ள தேற்றாப் பற்றையை கத்தியால் வெட்டி முட்களையும் வெட்டியும் முள்வேலி பேட்டாள். இடையிடையே நன்னாரியைக் கண்டு கொண்டு போன அருவாள் கத்தியாள் பிடுங்கி எடுத்தாள். பின்னேரம் "தேனீர் போட்டுக் குடிக்க" என்று சருகுப் பற்றைக் காடுகளில் மறைந்த முந்திரித்தோட்டம். வெள்ளை மணலில் வெள்ளை விரித்தது போல் கண்ணைப் பறித்தது பார்வதியோ "ஆ.... இது என்ட தீவா என்று வியந்தாள்."

பெரிய தேற்றாக் கம்புகளை வெட்டி முட்டுக் கொடுத்து உயர்த்தி அருகுகளையும் வெட்டி முட்டுக் கொடுத்து உயர்த்தி அருகுகளையும் வெட்டி சருகுகளை இழுத்தாள், பழைய வார்வக்கட்டால் (விளக்குமாறு) கூட்டினால். நிலம் பால் போல் வெள்ளையாகிற்று முந்திரிப் பூ காய்த்தால் "காவல் பார்க்கிறதிலேயே மனிசன் செத்துப் போயிறுவான்", என்று மனசுக்குள் நினைத்து ஏங்கினாள். முத்திய கருங்காய் பருப்புக்களை தின்ன வரும் பச்சை நிற கள்ளக் கிளிகள் ஒருபக்கம், இரவில் வௌவ்வால் பழத்தைச் சாப்பிட்டு சக்கை எங்க போடுதோ அது ஒரு பக்கம், பழம் சாப்பிடவாற குரங்குக் கூட்டம் ஒரு பக்கம்.

"இதுகளோட காவல் காக்கவே மனிசன்ட பாடு போயிரும்" என்று முணுமுணுத்தாள். அதிலும் கிளியை விரட்ட சத்தம் போடனும், கைதட்டனும், பார்வதி தொழில்நுட்ப அறிவு கொண்டவள் பழைய தகரத் துண்ட எடுத்து அதனோட பழைய சின்ன சின்னகண்ணாடிப் போத்தல்களைக் கட்டி தொங்க விட்டாள் அதுவும் அங்கு காற்றடிக்கும் போது "கணீர் கணீர்" என்று சத்தமிட பழம் தின்ன வந்த பறவைகள் பயந்து ஓடும் இது அவளின் புத்தி சாதுரியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதியப் போலதான் மகன் சுதர்ஷனும் கெட்டிக்காரன் அவன் மரத்தில் ஏறி கிளைகளை உசுப்பி பழங்களை கீழே விளச் செய்வான். மரத்தின் கிளையில் வலை போட்டு கிளி ஒன்றைப் பிடித்து வளர்த்து வந்தான். இதையெல்லாம் எண்ணி பார்வதி கோலமிட்டாள். நேரம் செல்லச் செல்ல சூரியன் தன் ஒளிக்கற்றை பரவலாக்க மர இடையே வெயில் அவள் முகத்தில் பட நினைவுகளை களைத்து நிதர்சனமான பார்வதி "சரி நேரம் போகுது பிள்ளைகளும் பள்ளி விட்டு வந்திடுங்கள்" என்று தனக்குத் தானே நினைவூட்டி வீடு போக ஆயத்தமானாள்.

மரத்தடியில் சாய்ந்திருந்தது "அம்மா" என்ற வலி கண்ட மருந்து சொல்ல உச்சரித்து எழும்ப மேலே இருந்த சிறு முந்திரிகம் கம்பு தலையில் அடிபட மீண்டும் அம்மா என்றாள். (கனகம்மாவின் உசுரு இந்தத் தீவுக்குள்தான் இருக்குது) தன் கையே தனக்கு உதவியென தலையைத் தேய்த்து விட்டு எழும்பினாள் சோட்டியின் தோள்பட்டை மறையும்படியும் தலைக்கு மேலால் துவாயை போட்டு, கொண்டு போன சாமான்களை கையில் எடுத்து நடக்க தொடங்கினாள் பார்வதி. தோட்டத்திற்குள் செருப்பு போடாமல் நடக்க அவள் மென்மையான காலில் பாகுபலி அரக்கனின் கொடூர முள் குத்த "ஆ..." என்று அழ அவள் நினைகளை நிறுத்தி சுவரோரம் சாய்ந்திருந்த பார்வதி வேங் கடிதத்தை மீண்டும் பார்த்தாள்.

போன வருஷம் மகன் சுதர்ஷன் கொலசிப் பாஸ் பண்ணினான் அவனுக்கு கொடுத்த வாக்குறுதியையும் நிறைவேற்ற அரசியல்வாதி போல எண்ணிணாள். "நீ கொலசிப் பாஸ் பண்ணினாள் உனக்கு சைக்கிள் வாங்கித்தருவேன்" என்ற வாசகமும் விசேட செய்தித்தாள் போல் புரட்டி எடுத்தது. "அம்மா சைக்கிள் வாங்கித் தரனும்" என்று மகன் அடிக்கடி கேட்க பார்வதியே " முந்திரிக் காய்க்கட்டும் பொறு பொறு" என்றாள்.

ஈடு எடுக்கனும், மகனுக்கு சைக்கிள் வாங்கனும், இது தான் இந்த முந்திரி போகத்தின் பார்வதியின் இலக்காக இருந்தது. போன வருஷத்தின் நினைவு அவளை சும்மா விட்டதா? மீண்டும் மீண்டும் வரும் மிஸ் கோல் போல அவளை அழைக்க முந்திரி காய்த்தது.பருப்பு சேகரித்தது, பழம் விற்றது எல்லாம் அவள் மனக்கண்ணில் காண்கின்றாள். பக்கத்து ஊர் கந்தசாமி அண்ணன் முந்திரியம் பழத்த வாங்கிக் கொண்டு போவார். கல்முனை, அம்பாறை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று ஊர்களுக்கு கொண்டு போய் விற்பார். ஏன் புதுக்குடியிருப்பு மெயின் றோட்டுலயும் சின்னச்சின்னக் கடை போட்டு விற்பாங்க.

வௌவால் சக்கையை பனை மரத்திற்கு கிழ எடுக்கலாம். பழங்களையும் பருப்பையும் சின்ன பசளை வேக்கில போட்டு கொண்டு போகும் போது பழத்தின் தேன் சுவை நீர் வடியும், கசியும் தாகத்திற்கு இரண்டு பழம் கடித்திட்டு நடப்பாள். பின்னேரம் என்றாள் மகன் சுதர்ஷன் தோளில் போட்டு நடந்து செல்வான். இப்படியெல்லாம் வீட்ட கொண்டு போன பருப்ப பெரிய தாச்சி சட்டியில கொட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவி சூத்தை பருப்பு போல மிதக்க அது வேறயா எடுத்திட்டு நல்ல பருப்ப வெயிலில் போட்டு காய வைத்து எடுத்து கம்பியூட்டர் போல கணக்கு தப்பாம பெரிய பசள வேக்குக்குள் எண்ணி வைப்பாள் பார்வதி.

சேகரித்த முந்திரியம் பருப்பு வாங்க கல்லாறு சரோஜா அக்கா வருவா? எடுத்து போக ஏறாவூர் முகமட் நானாவும் வருவார். சரோஜா அக்கா எண்ணி எடுப்பா, முகமட் நானா தராசுல நிறுத்து எடுப்பார். "என்ன பார்வதி இந்த வருஷம் நல்ல விளைச்சல் போல" என சரோஜா கேட்க "ஓம் அக்கா காவல் காக்கிறதிலே என்டபாடு போகிடும்" என்றாள் பார்வதி.

இப்படித்தான் காசு சேத்து வைப்பாள் பார்வதி, செட்டிபாளையம் கண்ணகி அம்மன் சடங்கு வங்தாள் முந்திரியம் பருப்பு விற்ற காசுல பெரிய அலுமினியம் பானை, தாச்சி, குடம், சுஜீவாவிற்கு காப்பும், கிளிப்பும் சுதர்சனுக்கு விளையாட்டு கார், புரிஷனுக்கு சாமிப்படமும், சாப்பிட தேன் குழல், முட்டாசு வாங்கிற்று கோயில் மணலில் கச்சானும், ஐஸ் கிறீமும் குடிக்கும் சுவையும் சங்தோசமும் இந்த முந்திரியம் பருப்புத்தானே தந்தது என்று நன்றி சொல்வாள் பார்வதி.

இதெல்லாம் பார்வதியின் போன வருஷத்து நினைப்பு வெயிலில் நிழலாக தொடர, இந்த வருஷம் ஈடு எடுக்கனும், மகனுக்கு சைக்கிள் வாங்கனும். இது தான் பார்வதியிடம் திட்ட முன் மொழிவாக இருந்தது. கையில் வேங் கடிதம் விறாந்தையில் அமர்ந்திருந்தவள் பார்வை கொஞ்சம் தெளிவில்லாமல் போக மீண்டும் கடிதத்தை பார்க்க கடிதம் இருட்டாக இருக்க, வெளியில்வந்து வானத்தைப் பார்த்தாள் பார்வதி திடீர் காலநிலை மாற்றம் இருள் ஒன்றாகக் கூடி கூட்டமைப்பாக கார் முகில் தாறு மாறாக இராவணனின் முகம் போல விகாரமடைய "அருச்சுனனுக்கு பயம் அடைக்கலம் என்று சொல்ல முதலே" பளீச் பளீச்சென்று மின்னல் வெட்ட இடி இடிக்க கையை நீட்டினால் பார்வதி, முதல் சொட்டு அவள் கைபட பார்வதி இடிந்து போனாள்.

"ஐயோ கடவுளே நான் என்ன செய்வேன்" நான் நினைச்சதெல்லாம் பாழாப்போகுதே ஐயோ ஆண்டவா இதுதென்ன கொடுமையப்பா மார்கழியிலே தானே மழை வரும் "மாசியிலே ஏனப்பா இந்த மழை இப்ப தேவை தானா" என்று ஏங்கினாள் பார்வதி. மழைக்கும் பார்வதிக்குமிடையில் மனஸ்தாபம் அதிகரிக்க என்ன காரணம் மழையைத் தானே எல்லோரும் விரும்புவாங்க மழை பயிருக்கு உயிருக்கு நல்லது தானே, ஏன் பார்வதி மழையைக் கண்டு பயப்படுகிறாள்.

"முந்திரி பூத்திருக்கு இப்ப இந்த மழை பெய்யனுமா?" என்று பார்வதி சொல்லத்தான் மழையால் முந்திரிக்கு அப்படி என்ன பாதிப்பு என்று நோக்கத் தூண்டியது. மழை நீர் பட்டால் முந்திரியம் பூ கருகிவிடும் இது இயற்கையின் நியதி, முந்திரிகையின் வியாதி "மழையில் கருகும் பூ முந்திரிகம் பூதான்" அதனாலதான் பார்வதி இப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிதவிக்கின்றாள். பார்வதி மட்டுமல்ல முந்திரிகை தோட்ட சொந்தக்காரர்களும் இப்படித்தான் மரண யோகத்திற்கு போவார்கள்.

மழைத் துளிகள் அவள் உடல் தொட அவள் கண்களில் இருந்து நீர் வழிய இது மழை நீரா இல்ல, விழி நீரா என்று தெரியாத அளவு நீரால் நனைந்தாள் பார்வதி அவள் ஆசைகள் தேவைகள் கற்பனைகள் கரு கலைந்தது போல் உதிர்ந்தாள். அவ்விடம் அசையாது நின்றாள். இனி ஈடு எடுக்க என்ன செய்வேன், மகனுக்கு சைக்கிள் வாங்க என்ன செய்வேன், கோயில் சடங்கு போக என்ன செய்வேன், செலவுக்கு என்ன செய்வேன் என்று அவன் எண்ணங்கள் வெள்ள மழையில் கரைய மழை காட்டாறாய் ஓட நானல் புல் போல அவள் வாசலிலே நிலை கொண்டாள். மர முந்திரிகை செய்கையால் அதிக லாபம் கிடைக்கும், ஆனால் மழை பெய்தால் அதன் பூக்கள் கருகிவிடும். அதே போலதான் பார்வதியின் மனக் கனவுகளும் மழையால் கருகிவிட்டது. இனி அவள் என்ன செய்வாளோ? மழையில் கருகும் பூவே.

**திரு.ஜீ.எழில்வண்ணன்**
**கிரான்குளம்**

## சிறுவர் பிரிவு கையெழுத்துப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம்

**1ம் இடம் - செல்வி.ஸ்ரீ.பிருத்விகா**
**மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ்மூத்ததம்பி வித்தியாலயம்**

**2ம் இடம் - செல்வி.ந.ரிஷாழினி**
**மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ்மூத்ததம்பி வித்தியாலயம்**

**3ம் இடம் - செல்வி.மா.லக்மினி**
**மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ்மூத்ததம்பி வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலாக்கம்
திறந்தமட்டம்
இரண்டாமிடம்

# இனியும் கொல்லாதே!

சிறுதுளி சிறுதுளி உயிர் கொண்டு
பலதுளிபலதுளி உதிரமுண்டு
மானிடர் பலரும் மாண்டிடவோ – நீ
ஜகத்தினில் ஜனித்தாயோ?
சொல்வாயா நுளம்பே -இனியும் எமை
கொல்வாயா நுளம்பே? !

(சிறுதுளி....

கொட்டும் மழையில் சொட்டு நீரிலும்
இட்டிடும் முட்டைகளில் உன்னினம் பெருகிடும்
வாட்டும் காய்ச்சலில் கூட்டும் நோயிலும்
எதிர்த்திடும் வலுவின்றி எம்மினம் மரித்திடும்
எம்மவர் அலட்சியமோ – உயிர் வாங்கும்
உங்களின் இலட்சியமா?
சொல்வாயா நுளம்பே -இனியும் எமை
கொல்வாயா நுளம்பே? !

(சிறுதுளி....

படையினர் காவலர் சுற்றி வளைத்து
நம் சுற்றம் தவித்தது ஒரு காலம்
கற்றோர் மற்றோர் சூழ வந்து
எம் முற்றம் சோதிப்பது உன் காலம்
எங்கும் நீ எதிலும் நீ
தேங்கும் நீரிலே வசதியாய் வளர்வதா? – உயிர்
வாங்கும் செயலிலே சாதனை புரிவதா?
சொல்வாயா நுளம்பே -இனியும் எமை
கொல்வாயா நுளம்பே? !

(சிறுதுளி....

கொல்லும் சக்தியை உனதாக்கி – மதியை
வெல்லும் யுக்தியை உனக்களித்து
தன் செயலாற்றிட உந்தனுக்கு – பதில்
நியமனம் தந்த எமனும் எங்கே?
பொறுப்பை விருப்புடன் கையளித்து – ஓய்வில்
சயனம் கொண்டாரோ அங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடிஸ் என்கிற இனமொன்று
மானிடர் அழிப்பது ஏனென்று
வானகம் வந்து கேட்டிடவா?
சொல்வாயா நுளம்பே -இனியும் எமை
கொல்வாயா நுளம்பே? !

(சிறுதுளி....

சிறுதுளி சிறுதுளி உயிர் கொண்டு
பலதுளிபலதுளி உதிரமுண்டு
மானிடர் பலரும் மாண்டிடவோ – நாம்
ஜகத்தினில் ஜனிக்கவில்லை
அண்டம் அவரும் செயல்மாற்றி
கண்டம் தாண்டி களிப்புடனே
சுத்தவாளி நாமென்று உரைத்து பறப்பீரோ?
சொல் சொல் நுளம்பே - இனியும் எமை
கொல்லாதே நுளம்பே !!!

(சிறுதுளி....

**திருமதி.ரதி தனஞ்செயன்**
**ஆரையம்பதி**

## சிறுவர் பிரிவு கவிதை பாடல் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம்

**1ம் இடம்** - **செல்வி.ஜீ.அபிநயா**
**மட்/ஆரையம்பதி இராமகிருஸ்ணமிஸன் மகா வித்தியாலயம்**

**2ம் இடம்** - **செல்வி.ம.கோபிகா**
**மட்/மாவிலங்கன்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் வித்தியாலயம்**

**3ம் இடம்** - **செல்வி.மா.லக்மினி**
**மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாட்டார் கலை கற்றல்**
**திறந்தமட்டம்**
**இரண்டாமிடம்**

# மாந்திரிகச் செயல் முறைகள்

"நிறை மொழி மாந்தர் ஆணையிற்கிளர்ந்த மறை மொழி தானே மந்திரம் என்பர்" என்ற தொல்காப்பியத்தின் கூற்றும் நிறை மொழி மாந்தர் பெருமை நிலத்து மறை மொழி காட்டிவிடும் என்ற திருவள்ளுவரின் திருவாக்கும் மந்திரத்தின் உயர்வு பற்றி நிறைவாக காட்ட இந்த மாந்திரிகம் மக்களோடு மக்களாக ஊறி கிராமிய செயல்வடிவமாக இன்றியமையாத உள்ளத்து உணர்வாக ஊறிவிட்டது.

அந்த வகையில் மாந்திரிகச் செயல்முறைகள் தொடர்பாக நோக்குமிடத்து அது மக்களிடையே மக்களுக்கு எவ்வாறு பயன் தருதின்றது என்பதை பார்ககும் போது மானிடமாந்தர்களுக்கு எதிரியால் வரப்பட்ட தீவினைகள், மிருக, விலங்குகளால் ஏற்பட்ட பாதிப்பு, துர் தேவதைகளின் பார்வைஇ கிரக தோசம் போன்ற காரணங்கள் செல்வாக்கு செலுத்த அவற்றில் இருந்து மக்களை விடுதலை பெற இந்தமாந்திரிகச் செயல்முறைகள பெருமை கொள்கின்றது.

**01. விபூதி போடுதல் :** மந்திரிக செயல் முறையை நோக்கினால் கல்லடி பட்டாலும் சொல்லடி படக்கூடாது என்பார்கள் மற்றவர்ளின் கண்படுதல், பயத்தால் நோய் ஏற்பட்டால், பயங்கர கனவு கண்டு பயப்பட்டால் விலங்கு மிருகங்களை கண்டு பயப்படும் சந்தர்ப்பங்களில் இந்த பயத்தை போக்கி மன தைரியத்தோடு நிம்மதியாக வாழ விபூதி போடுவார்கள் "பூமி வா, பூமா தேவி வா, ஆகாசம் வா..... இவர் மேல் இருக்குப்பட்ட தாய் கண்ணுறு, தகப்பன் கண்ணுறு இநினைத்தவன் கண்ணுறு பார்த்தவன் எனப்பட்ட சகல கண்ணுறும் இன் நீறு பட்டவுடன் இவர்களை விட்டு பூமியில் குதித்து குதித்து போகவே சுவாகா" மாலை வேளையில் நாற்சந்திகளில், பூசாரியின் பூசை பந்தலில் தீயது விலகிப் போக வெளியில் வைத்து நெற்றியில் வட்ட வடிவில் தலை உச்சியிலும் போடுவார்கள்.

**02. தண்ணீர் ஓதுதல்:** இந்த மாந்திரிக செயல் முறையானது வியாதி உள்ளவர்களுக்கு, தீய மந்திரத்தால் ஆட் கொள்ளப்பட்டு பீடிக்கப்பட்டவர்களுக்கு, தீய பார்வைபட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கும் தலைக்குத்து, நாலாம் முறைக்காய்ச்சல் எதிரியின் செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இவ் தண்ணீர் ஓதுதல் முறை மூலம் சுகம் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓதும் முறை:** செம்பால் செம்பெடுத்து நீர் எடுத்து (கை விரல் நகம் படாமல்) வீபூதி , குங்குமம், மஞ்சள், தெய்வ அம்சம் பொருந்திய வாசைன திரவியம், அத்தர், பன்னீர் இட்டு வேப்பம் பத்திரம், வெற்றிலை அறுகு ,துளசி போன்ற மூலிகை செடிகளால் ஓதுவார்கள்.) "அரி ஓம் சக்தி சிவ பட்சாச்சரி ஆதி மாகா மாரி சீக்கிரம் வா வா.... ஆதிபரமேஸ்வரன் ஆதி பரமேஸ்வரிக்கு அள்ளிக் கொடுத்த நீர், ஆதி மந்திரி மா முனிக்கு அள்ளிக் கொடுக்க அவர் ஆணைதான் இவர்களுக்கு ஓதிக்கொடுத்தேன் இன் நீர் பட்டவுடன் இவர் மேல் வரப்பட்ட வியாதி நாசம், சர்வநாச, சத்துருநாச, சர்வ பில்லி வஞ்சனை சூனியம் நாச, அளுக்குகள் நாச சர்வமுனிப்புகள் நாசமாகவே சுவாகா. ஓதிக் கொடுக்கப்பட்ட தண்ணீரால் உடலைக்கழுவி நீரைக்குடித்தால் நோய்கள் குணமாகும்.

**03. குலையடித்தல்ஷவிசக்களுக்கு தவணை போடுதல்** :பாம்பு விசம், சில்விசம், போன்ற ஊர்வன ஜந்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இவ் மாந்திரிக செயல்முறை பயன்படுத்தப்படும். நோயளியின் நிலையறிந்து பத்திரம் கொண்டு குலையடிப்பார்கள் தலையில் இருந்து அடித்து பாதம் வரை அடித்து இறக்கப்படும். சிங் மங் ஜங் கெருடா சிவ சிவ கொருடா சிவ பஞ்சாட்சர கொருடா ஆதி நாராயணன் ஆணை சீக்கிரம் ஓடிவா........இவர்களுக்கு ஏற்பட்ட சகல விசக்களும் உன் ஆணை என் ஆணை இவர் கடிவாயில் வரவே சுவாகா பின்னர் கடி வாயின் மேல் இருந்து அரையடி தூரத்தில் சுண்ணாம்பு, மண், மூலிகைக்கொடியால் வளையம் போடுதல் தவணை போடுதல் மூலம் விசம் இறங்கும்.

**04. வீடுமனை காவல் பண்ணுதல்** : இந்த மாந்திரிக செயல்முறையிலும் எம்பிரதேச மக்கள் தங்கள் குடியிருப்புகளை காவல் செய்து சந்தோசமாக வாழ இதனை மேற்கொள்ளுகின்றார்கள் எதிரிகளின் தீயசெயல், துர்தேவதைகளிகன் வாசம்,தீயபார்வைகள் வராது காத்தல், வந்தாரை தடுத்தல் என்பவற்றுக்காக இந்த செயல்முறை மேற்கொள்ளப்படுகின்றது.

**செயல் முறை :** கும்பம் வைத்து மடை வைத்து ஆறு. கடல்,குளம், கோயில் நீர் எடுத்து மூலிகைகள் (பேய் விரட்டி ஆடுதின்னாபாலை முடக்கொத்தான், வேப்பிலை, வில்வம் துளசி) சாறு எடுத்துவாசனை திரவியத்தை நீரில் போட்டு ஓதப்படும். இதற்கு வெட்டு மந்திரங்கள் உக்கிரமான மந்திரங்கள் வீரபத்திரன் அனுமான் மந்திரங்கள் உச்சரிக்கப்படும் காய் வெட்டுதல், வீரபத்ரன் காளி, மாமுனி மந்திரம் சொல்லப்பட்டு மண்பானையில் கடுக்காய், சாதிக்காய், சங்கு, சூலம், தானியங்கள் எண்ணெய்வகை கூட்டு எண்ணெய், தகட்டில் யந்திரங்கள் வரையப்பட்டு, கருங்காலி, அகில், சந்தனம், தேசிக்காய் என்பனவற்றை மண் பானையில் வைத்து மந்திர உச்சாடனம் செய்து வீட்டு வளவின் நான்கு மூலையிலும் வாசலிலும் நட்டுவிடுதல் வேண்டும். பின் வீட்டில் உள்ளவர்களுக்கு மருந்து தண்ணீர் தெளித்து நூல் தாயத்து கட்டப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம்வீரபத்திரா, சங்கரவீரபத்திரா, சிறிமுகவீரபத்திரா, கல்யாணவீரபத்திரா ……நான் இடும் நூல் காவல் நூலாக கால சக்தி நூலாக நில்லு நில்லு உடலிலே காவலாய் நில்லு, உடம்பிலே காவலாய் நில்லு என்றும் அகலாது நிற்கவே சுவாகா"

**05. முள்ளுப் பொறுத்தால் சோறு ஓதிக்கொடுத்தல் :** இந்த மாந்திரிக செயல்முறையும் கிராமங்களில் குழந்தைகளுக்கு முள்ளு பெறுக்கும் போது சோறு ஓதிக்கொடுத்து அந்த முள்ளை இருந்த இடம் இல்லாமல் செய்வார்கள்.

**செயல் முறை :** சுடுசோறு ஒருகைபிடி எடுத்து" ஒருகடல் இருகடல் முக்கடல் ….. ஆதிபரமேஸ்வரன் நாரையாக வடிவம் கொண்டு நிற்கையிலே நான் மீனாக போகும்போது ஆதிபரமேஸ்வரன் ஆணை பொறுத்த முள்ளும் களன்று போகவே சுவாகா" என்று ஓதிக்கொடுக்க முள் ஓடிவிடும் குழந்தைகள் குணமடைவார்கள்.

**06. பேய்பிசாசு விலக்குதல்**: இதன் மூலம் மாந்த்ரீக செயல் முறையின் ஊடாக மானிடர்கள் பாதுகாக்கப்படுகின்றார்கள். இதன் செயல் முறையாக இரவு நேரங்களில் பாழடைந்த மனை, இரவுப்பயணம், காட்டுவழி மயாணங்களில் இருந்து உணவு அருந்துவதால் பேய் பிசாசு பார்வை பட்டு அவதியுறும் நபர்களுக்கு கழித்தல் என்று சொல்லப்படும்.

**களிப்பு முறை :** சோறு சமைத்து கறிவகைகள், இறைச்சி, மீன், முட்டை சமைத்து பாதிக்கப்பட்டவர்களின் தலையின் மேல் வைத்து சுற்றி நீர் நிலைகளில் வீசிவிடுவார்கள். நீர் கரையோரம், மயாணம், காட்டு வெளியில் வைத்து இவ் செயல்முறை வழிபாடு இடம்பெறும் இரவு வேளையில் மாத்திரமடைந்த வைத்து மடையில் வெற்றிலை, பாக்கு, பழம், கள்ளு , சாராயம், பாளை வைப்பார்கள்.

ஓம் ஆம் ஆதி வைரவர் ஆதி சங்கர வைரவ்வா உத்தாண்ட நிர்மான வைரவா வா வா …… இன்னாக்கேல் இருக்கப்பட்ட தொடடையாக்கன், வட்டையாக்கன், இருளன், மருளன் இலங்கமாதேவி, கெங்க வைரவன், கெங்க காளி விலகு விலகு சகல தூர்பார்வைகள் அளுக்குகள், முளிப்புகள் இவர்களை விட்டு விலகு விலகு ஆதிபரமேஸ்வரன் ஆணை ஆதிபரமேஸ்வரி ஆணை மகாமுனி ஆணை இவர்களைவிட்டு விலகு விலகு சுவாகா தடைவெட்டுதல் காய் வெட்டுதல்

இதன்படி கழித்த இடத்தில் இருந்து வீடு வரும் போது காய் வெட்டப்படும் தேங்காய் பூசனிக்காய் பூமத்தங்காய் தேசிக்காய் கொண்டு கோடு சீறி மறித்து மந்திரம் சொல்லி வெட்டப்படும் பின் குங்கிலியம் அடிப்பார்கள் இதற்கு சிவகலை மந்திரங்களை பயன்படுத்துவார்கள். இந்த மாந்திரிக செயல்முறையால் அதிகமான பாதிக்கப்பட்ட நபர்கள் சுகமாக்கப்பட்டுள்ளார்கள் குறிப்பாக சகோதர மத இன சிங்ஙளவர்கள் முஸ்லிம் கிறிஸ்தவர்களும் எம் பிரதேசங்களுக்கு வந்து இவ்முறையை செய்து சுகம் பெறுகின்றார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. மைபார்த்தல்** மாந்திரிக செயல்முறை : திருட்டு தொலைத்த காணாமல் போன பொருள் காணாமல் போன நபர், புதையல் தீயவினை செய்தவளையும் கண்டறிய எம்பிரதேசங்களில் இம்முறையை மேற்கொள்வார்கள் மைபார்க்கும் வகைகள் பாதாள அஞ்சனம் ஆகாச அஞ்சனம் சித் அஞ்சனம் மோடி அஞ்சனம் என வகைப்படும்.

**செயல்முறை :** பிள்ளையாளர் மடை வைத்து அஞ்சனா தேசி ராமர் அனுமர் மடை கந்தசாமி மடைபரவி பழம் காய் வைகத்து மூலிகை மருந்து அரைத்து பறவைகள் மை அரைத்து வெற்றிலை ஆமணக்கு இலையில் எண்ணெய் எடுத்து சிறு தேன் குளைத்து வெற்றிலையிலோ, கோழிமுட்டையிலோ மை தடவி பார்க்க காட்சி தோன்றும். "ஓம் ஆம் அஞ்சனாதேவி உயிர் ஏறம்மா ஏறு சிவசக்தி உயிர் ஏறம்மா ஏறு.......அஞ்சனாதேவி ஆனந்ததேவி அறை திறந்து அஞ்சனம் திறந்து பூமி திறந்து பாதாளம் திறந்து ஓடம்மா ஓடு உன் மகன் ஆதி அனுமான் ஆணை ஓடம்மா ஓடு என் உடமை எடுத்த பொருள் கொண்டு சத்துருவையும் காட்டம்மா காட்டு ஆதிபரமேஸ்வரன் ஆணை மையில் குதிக்க குதிக்கவே சுவாகா"

இது போன்ற மாந்திரிக செயல்முறைகள் எமது பிரதேசத்தில் அன்று தொடக்கம் இன்று வரை முன்னோர்களால் பேணப்பட்டு வாய்வழி செவியேறி செயல் வடிவில் மக்களுக்கு நல்ல பல கருமங்களை சிரமம் போக்கி வாழ்வியலின் தாழ்வு பாதையை துறந்து துயர் போக்கி தொல்லை இல்லா இன்ப வாழ்வு வாழ வையகத்தில் கண்ணும் கருத்துமாக இந்த மாந்திரிக செயல்முறைகளை பின்பற்றுகின்றோம் அத்தோடு சகோதர மதத்தவர்களும் தங்களுக்கு இன்னல்கள் ஏற்படும் போது இச்செயல்முறையின் மீது நம்பிக்கை கொண்டு பின்பற்றுகின்றார்கள். எம் பிரதேசம் நோக்கி நாடி வருகின்றார்கள் அந்த வகையில் இவ் மாந்திரிக செயல் முறைகள் மக்களுக்கு நன்மை தருகின்றது. மாந்திரிகங்களை நல்ல செயல்களுக்கு பயன்படுத்துவோம்.

**திரு.ஜீ.எழில்வண்ணன்**
**கிரான்குளம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டுரை**
**கனிஷ்ட பிரிவு**
**மூன்றாமிடம்**

# இலக்கியம் காலத்தின் கண்ணாடி

படிக்க படிக்க சுவைக்க சுவைக்க மனதிற்கு இனிமையும் வாழ்விற்கு மேன்மையும் நல்குவது இலக்கியம் இலக்கியத்தின் பாகுபொருள் சமகாலத்தினதாக இருந்தாலும் அது முற்காலத்திற்கும் பொருந்தி வையகத்தில் அனைவருக்கும் பொது நிலையினதாக இருந்தால் இவ்வையகம் உள்ளவும் நிலைத்திருக்கும் உயிர்ப்பெற்றிருக்கும்

அதனால் தான் வள்ளுவமும் சிலம்பும் அகமும் புறமும் இன்றும் நீட்சியும் எழுச்சியும் பெற்றுத் திகழ்கின்றன எப்போது இவ்வையகம உருப்பெற்று மனித இனம் தோன்றியதோ அன்றே இலக்கியத்தின் பாகுபொருளும் தோன்றியது என்றே கூறலாம் கதைகள் வாயிலாகவும் கவிதைகள் வாயிலாகவும் மனிதனின் வாழ்வியல் கூறுகளைப் படைப்பாளியின் அறிவுத்திறத்தால் ஏற்படும் கற்பனை நயத்தினால் இன்பமுற எடுத்தியம்பி மனிதனின் வாழ்வியல் கூறுகளை நெறிப்படுத்திக் காட்டுவே இலக்கியத்தின் தலையாய கடமை.

ஆறம் பொருள் இன்பம் வீடு இவைநான்கும் மனித குலத்தின் அடிப்படைக் கூறுகள் அறச் செயல் செய்து அதன் வாயிலாக நேர்மையான முறையில் செல்வம் ஈட்டி அச் செல்வத்தைக் கொண்டு நியாயமான வழியில் இன்பம் துய்த்து அதன் மூலம் வாழ்வில் சாந்தியும் அமைதியும் பெற்று மறுவுலக வாழ்வைச் சென்றடைவதே மனித பிறவியின் நோக்கமாகும்.

வாழ்வியல் உண்மை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் பொய்யாமொழிப்புலவன் எப்படிப் புனைத்திருக்கிறான் பாருங்கள்!

வையத்துள் வாழ்வாங்க வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

காலங்கள் எத்தனை கடந்தாலும் யுகங்கள் எத்தனை மாறிமாறி வந்தாலும் இந்த வாழ்வியல் உண்மைக்கு ஏதேனும் மாற்றம் உண்டாகுமா? இல்லை....... ஏன்பது தானே விடையாக இருக்கும்

அக்காலம் முதல் இக்காலம் வரை உள்ள இலக்கியங்களில் நீங்கா இடம்பிடித்திருப்பது காதலும் வீரமும் என்னும் இருவேறு குணாதிசயங்கள் மனிதனுக்கு இயல்பாகவே இருக்கின்றன உணர்ச்சியும் செயல்களும் அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருக்களாக உள்ளன வாழ்க்கையானது ஆண் பெண் இருபாலாருக்கும் இடையே உருவாகும் காதலையும் அதன் அடிப்படையில் ஏற்படுத்தும் குடும்ப உறவுகளையும் பேணுகின்ற வீரச் செயல்களையும் புகழக்கூடியவை காதல் தொடர்பான ஒழுக்கங்கள் அக இலக்கியங்களாக மலர்ந்தன வீரம் புகழ் ஆகியவை புற இலக்கியங்கள் எனப்பட்டன இவ்இரண்டும் சங்க இலக்கியங்கள் எனும் பேழையை அலங்கரிக்கின்றன சங்ககால மக்கள் வாழ்ந்து வந்த வாழ்வைத் தெளிவாகப் புலப்படுத்தும் காலக் கண்ணாடி சங்க இலக்கியங்களாகும்.

ஊள்ளதை உள்ளவாறு உரைத்தல் சங்க இலக்கியங்களின் தலையாய சிறப்பாகும்இனம் குலம் என வேற்றுமை இல்லாமல் கவிதைத் தெய்வத்தின் முன்னர் சங்ககால கவிஞர்கள் யாவரும் சமமாக விளங்கி தங்களின் இதயங்களையே காணிக்கையாக்கியுள்ளனர் அத்தோடு மட்டும் நின்று விடாமல் இப்பூவுலகில் உள்ள மக்கள் அனைவரும் ஒரு தாயின் மக்களே எனும் உயிரிய சிங்தையையும் ஒவ்வொரு மக்களின் வாழ்வும் வளமும் அவரவர் செயலுக்குள்ளே அடங்கும் என்பதையும் இப்படி புலப்படுத்துகின்றார்கள்.

யாதும் ஊரே யாவரும் கேளீர்
தீதும் நன்றும் பிறர்தாவாரா
நோதலும் தணிதலும்
ஆவற்றோர் அன்ன

எனும் உயிரியச் சிந்தனையை எக்காலத்திலும் எவராலும் சிதைத்துவிட முடியாது என்பது நிதர்சனமான உண்மை

நம் நாட்டு குடும்ப அமைப்பு முறையில் பெண்களைப் பொறுத்தவரை பிறந்த வீடு புகுந்த வீடு என்ற இரண்டு உறவுமுறைகளளோடு வாழ்க்கையை அமைத்துக் கொள்வது வழக்கம் தான் பிறந்த வீடாகிய பெற்றோர் வீட்டில் எவ்வளவுதான் செல்வச் செழிப்பாது வாழ்ந்தாலும் திருமணம் முடித்து கணவனின் வீடாகிய புகுந்த வீட்டிற்குச் செல்லும் போது அங்கிருக்கும் சூழ்நிலைக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொள்வது பெண்களின் இயல்பு அங்கே அவர்கள் செல்வம் செழிப்பிற்கு கொடுக்கும் மரியாதையை விட தன்னை கொண்டவனிடம் உள்ள அன்பிற்கும் காதலுக்கும் தான் அதிக முக்கியத்துவம் கொடுகின்றனர்

இதனால் தங்களின் சுகபோக வாழ்க்கையைத் துறந்து எளிமையிலும் இனிமை காணவே முற்படுகின்றனர் ஒரு தலைவி தான் தேர்ந்தெடுத்த தலைவனோடு இல்வாழ்க்கை அமைத்துக் கொள்ளத் தயாராகுகிறாள். தான் பிறந்த வீடோ செல்வ மிகுதியால் இன்பப் பெருக்குற்று வாழும் வீடு ஆனால் அவள் இனி வாழப்போகும் தலைவன் இல்லமோ குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கூட இல்லாதது இதனை தனது தலைவியிடம் ஓர் எசசரிக்கையாக எடுத்தியம்புகிறார் தோழி அதற்கு அந்தத் தலைவி எப்படி பதிலுரைக்கிறாள் பாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாய் வாழி வேண்டு அன்ன நம்படப்பைத்
தேன் மயஙகு பாலினும் இனியவர் நாட்டு
உவைல கூவற் கீழமான் உண்டு
எஞ்சி கலிழி நீரே

தோழி! நீ கூறுவதை நான் மறுக்கவில்லை ஆனால் அவர் ஊரில் உள்ள நீரில் இலையும் தழையும் விழுந்து அழுகிக் கிடக்கின்றன மான் போன்ற விலங்குகள் உண்டு எஞ்சிய நீர் உள்ளது அச்சிறு பள்ளத்துள இருக்கும் அந்நீர் நம்தோட்டத்தில் விழைந்த தேனுடன் கலந்த பாலினும் இனியது என்று கூறுகிறார்கள்.

இலக்கியங்கள் படிக்க படிக்க இன்பம் தருவன மட்டுமின்றி எவ்வளவு பெரிய படிப்பினைப் படிப்போருக்குப் பகிர்ந்து கொடுகின்றன? ஆகா! இப்படியொரு குடும்ப வாழ்க்கை அமைந்துவிட்டால் அந்த வாழ்க்கையை எத்தனை ஆண்டுகள் அனுபவித்தால் ஆசை தீரும். ஆண்டுகள் என்ன? ஜென்மங்கள் எத்தனை எடுத்தாலும் கூட இன்னும் இவரே தான் எனக்குக் கணவராக அமைய வேண்டும் என்ற அவா துணைவர்க்கும், இவளே தான் மனைவியாபக வரவேண்டும் என்ற ஆசை கணவனிற்கும் எழும்புவது இயல்புதானே? ஆம் அந்த இயல்பை இப்படியொரு புலவர் புலப்படுகிறார்.

இம்மை மாறி மறுமை ஆயினும்
நீ ஆகியர் எம் கணவனை
யான் ஆகியர் நின் நெஞ்சு
நேர்பவளே!

எவ்வளவுதான் பசியும் பட்டினியும் வந்தாலும் துன்பமும் துயரமும் நேர்ந்தாலும் மனம் ஒத்த இல்லற வாழ்க்கை அமைந்துவிட்டால் இல்லாமையும் இயலாமையும் பஞ்சுபோல் பறந்து போகும், இன்பமே எங்கும் பெருக்கெடுக்கும் என்பதற்கு இதுவன்றோ சான்று. காதல் வாழ்க்கையும் குடும்ப வாழ்க்கையும் இப்படி இனிக்கவும் சுவைக்கவும் விருந்தாகின்றன. இதுபோல் வீர வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதை அறிவது அவசியமன்றோ?

ஒரு நாடு என்றால் அங்கே கலகமும் போரும் ஏற்படுவது இயற்கையான தன்றோ? அப்படிக் கலகமும் போரும் ஏற்படும் போது அந்நாட்டுக் காளையர்கள் போர்முனைப் புகுவதும், வெற்றிவாகைச் சூட்டுவதும் அதற்காக அவர்களுக்கு நடுகல் நாட்டு நினைவிடம் அமைத்தும் இலக்கியங்களில் அடையாளப்படுத்தப்பட்டுளள.

ஈன்றுப் புறந்தருதல் என்தலைகடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேலவடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
ஒளிருவாள் அருஞ்சமம் உருகிக் களிறு எறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்த்தல் காளைக்குக் கடனே

எனும் கூற்றிலிருந்து பெற்றெடுத்த தந்தையிலிருந்து நாடாளும் மன்னன் வரைக்கும் என்ன கடமையாற்ற வேண்டும் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

இதில் கொல்லனின் கடமையாக போருக்கு ஏற்ற வேல்வடித்துக் கொடுப்பதும், காளையாகிய இளைஞனுககு ஒளி வீசும் வாள் மோதும் போர்களத்தில் சென்று போர்புரிந்து பகைவர் யானைப்படையை வென்று வெற்றி வீரகாத் திரும்புவது என்று உரைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து குழந்தை பிறக்கும் போதே அவன் வீரனாக மாறவேண்டும் என்பது நிர்ணயம் செய்யப்படுகின்றது.

அப்ப அவன் போர்க்களத்தில் நின்று போரை எதிர்கொண்டு வெற்றிவாகைச் சூடவோ, விழுப்புண்ணேற்று வீரமரணம் அடையவோ செய்தல், அவனின் நினைவாக நடுகல் நட்டு வழிபடும் முறையும் நடைமுறையில் இருந்துள்ளது.

இதோடு மட்டும் நின்று விடாமல் ஒரு தாய் கருவுற்றால் அக்கரு இறந்து பிறந்தாலோ சதைப்பிண்டமாகப் பிறந்தாலோ அதை அப்படியே எடுத்துப் புதைத்து விடாமல் உடம்பில் கத்தியால் குத்திக்கீறி ஒரு வீரத்தழும்பை உருவாக்கி அதன் பிறகே புதைக்கின்றனர் இதனை

குழந்தை இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள் அன்றி என்று வாளின் தப்பார்

என்பதின் மூலம் உணரலாம் காதலும் வீரமும் மக்களின் இரு விழிகள் போன்றே இலக்கியங்ள் சித்தரிக்கின்றன. பண்பட்ட இல்லற வாழ்க்கைக்கு அதிகம் பெருமை சேர்ப்பது விருந்தோம்பல் என்ற வீரிய பண்பாகும் அதனால் தான் சிலம்பில் இளங்கோவடிகள் மூலப்பொருட்களில் ஒன்றாக விருந்தோம்பலை எடுத்தியம்புகிறார்.

கோவலன் பிரிவுற்றபோது அவன் பிரிவை விட தன் இல்லம் நாடி வரும் விருந்தினரை சீரும் சிறப்புமாக ஓம்ப முடியவில்லையே என்ற ஆதங்கம் தான் கண்ணகியை அதிக துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்த விருந்தோம்பலை வெறும் ஒரு சடங்காக மட்டும் எடுத்துக் கொள்ளக்கூடாது அதற்கு ஒரு குடும்ப நல்லுறவை ஏற்படுத்தக்கூடிய விந்தையுள்ளது.

ஏதோ ஒரு காரணத்திற்காக தலைவனும் தலைவியும் தங்களுக்குள் ஊடல் ஏற்பட்டு, ஒருவரிற்கு ஒருவர் மாறிமாறிப் பேசிக் கொள்ளாமல் இருக்கின்றனர் அந்த நேரத்தில்தான் அவ்வீட்டில் விருந்தினர்கள் வகின்றனர் உடனே விருந்தினர் முன் மனம் மாறி தலைவனும் தலைவியும் மனம் விட்டுப்பேசி விருந்தினர்களை உபசரிக்கின்றனர். இதனால் இருவரிற்கும் இடையே இருந்த நீண்ட நாள் ஊடல் நீங்கி இணக்கம் ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் வீட்டில் இருந்த விருந்தினர் உண்ட மிச்சம் மீதியை தலைவனும் தலைவியும் மாறிமாறி உண்டு மகிழ்ந்தனர் என்பதை இலக்கியம் இப்படியும் இயம்புகிறது.

விருந்துண்டடெஞ்சிய மிச்சல் பெருந்தகை நின்னோடு உண்டலும் புரைவது இதே நிலை இன்னும் எத்தனையோ குடும்பங்களில் இன்றும் தொடர்வதினை நம்பால் கண்டுணர முடியும்.

எனவே இலக்கியங்கள் விருந்தோம்பலை ஒரு சடங்குச் சம்பிராயமாகக் கொள்வதை விட ஓர் உறவுப்பாலமாகக் கொள்வதே வியப்பானதாகும்.

இவ்வுலகம் தோன்றியவுடன் எப்படி மனித இனம் தோன்றியதோ அது போல் மனித இனம் தோன்றிய அன்றிலிருந்து சில நம்பிக்கைகளும் தோன்றியுள்ளன. அவ்வாறு தோன்றிய நம்பிக்கைகள் மக்களின் அன்றாட நடைமுறை வாழ்க்கையில் சர்வசாதாரணமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. அந்த நம்பிக்கைகள் இலக்கியங்களிலும் பிரதிபலிக்கின்றன. அவ்வாறு பிரதிபலிக்கும் நமபிக்கைகளில் கண்ணேறு கழித்தல் என்பது ஒரு முக்கியமான நம்பிக்கையாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

பிறருடைய பார்வையால் ஏற்படும் துன்பத்தையே கண்ணுறு என்று கூறுவார். அதிகமாக இது குழந்தைகளைத் தான் பாக்கிறது. மனிதர்களில் சிலரின் கண்களுக்குத் தீமை விளைவிக்கும் சக்தியுண்டு. எனவே அத்தகையோரின் கண்பட்டால் குழந்தைகளுக்கு நோய்நொடி வருமென நம்புகின்றனர். அதனால் தான் கல்லடிப்பட்டாலும் கண்ணடி படக்கூடாது எனும் பழமொழி மக்கிளிடையே கூறப்பட்டு வருகிறது. பிறரின் பார்வையால் குழந்தைகளுக்கு ஏற்படும் தீங்கை மாற்றுவதற்கு சில வழிமுறைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளன.

இப்படி இலக்கியங்களைப் பொறுத்தவரையில் அவை குடும்ப வாழ்க்கையாயினும் காதல் வீரம் போன்ற பண்புணவர்வாயினும் கணவன் மனைவி அன்பு வாழ்வியல் முறையாயினும் நம்பிக்கைகளாயினும் அனைத்தும் காலத்தின் கண்ணாடியாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. என்பதை அனைவராலும் எள்ளளவும் ஐயமின்றி உணர்ந்து கொள்ள இயலும் என்பதே நிஜம்.

**செல்வி.பா.கோகிலா**

**மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாடகப்பிரதி எழுதல்**
**சிரேஷ்ர பிரிவு**
**மூன்றாமிடம்**

# ஏற்றம் = ஏமாற்றம்

**பாத்திரங்கள்**

01. சிறுவன்
02. இளைஞன்
03. பெண்
04. உயர்ந்த மனிதன்
05. 8 நபர்கள்
06. **Degree Cup**
07. அப்பாச்சி **Bike**
08. **Ipad**

**காட்சி – 01**

UE, UL, CR மூன்று இடங்களிலும் பொட்டொளி வழங்கப்படுகிறது. சோகமான பாடலுடன் திரைவிலங்குகின்றது மேடையின் மூவர் "டிரம்" ஓசையுடன் சோகமான பாடலுடனும் மெத மெதுவாக நடந்து வருகின்றனர். இவ்வாறு சோகம் சூழ்ந்திருந்த வேளையில் பொடடொளி மூன்றும் மெதுவாக அணைகின்றது.

பாடகர் - (ஆ.. ஆ.. ஆ.. ஆ.. ஆ.. ஆ.. ஓசையுடன் சிறுவன், இளைஞன்,பெண் மூவரும் வந்து மெடையில் DR, CC, DL ஆகிய பகுதிகளில் நிற்கின்றனர். சில நபர்கள் சிறைச்சாலை கம்பி, கடன்தொல்லை பதாதை என்பவற்றைக் கொண்டு இவர்கள் முன் வைக்கின்றனர்)

சிறுவன் - ஆசை

பெண் - அறிவு

இளைஞன் - ஆடம்பரம்

சிறுவன் - (அழுகை) சிறைக் கதைவைத் தழுவியவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா.......அம்மா.......என்னைக் காப்பாற்றுங்க
எனக்கு எதுவுமே வேண்டாம் என்னைக் காப்பாற்றுங்க.

இளைஞன் - காசும் போய் கை காலும் போய் -3 எனது ஆடம்பர வாழ்வால் காசும் போய் என் கைகளும், கால்களும் போனது

பெண் - அறிறு அறிவு என்று அறிவற்ற பாதையில் அறிவைத் தேடி மட்டாளாய் நிற்கின்றேன்

மூவரும் - ஆசை,அறிவு, ஆடம்பரம் என்று எங்களை ஏற்ற

உரைத்து ஏமாற்றி விட்டார்கள்

பாடகர் - ஆ.. ஆ.. ஆ.. ஆ.. ஆ.. ஆ.. (Back out)

**காட்சி – 02**

பின் "டிரம்" ஓசை கேடகிறது. மேடையின் UC பகுதியிலிந்து UR பகுதிக்கு 08 நாட்கள் கறுப்பு நிற உடையணிந்து கைகளுக்கு வெள்ளை நிறக் கையுறைகள் அணிந்து, இடுப்பில் சிவப்பு பட்டியுடன் தோன்றுகின்றனர். அவர்கள் ஒரு ஆட்டக் கோலத்தில் ஆடி வந்து CC .ல் அரை வட்டமாக மேடையின் பின்புறத்தை பார்தவாறு ஆடுகின்றனர். பின் அவர்கள் மத்தியிலிருந்து ஒரு உயர்ந்த மனிதன் வெளிவருகின்றான். அவரும் அத்தளத்திற்கேற்ப தனது ஆட்ட முறைகளை ஆடியாடி CC இல் இருந்து UR, UR இலிருந்து UC க்கு வருகின்றார. ஆட்டம் முடிகிறது.

உயர்ந்த மனிதன் - (கை தட்டி ஏழு பேரையும் அழைக்கின்றனர். அவர்கள் அதைக் கவனிக்காமல் தங்கள் வேலையைப் பார்க்கின்றனர். கோபத்தோடு மீண்டும். அழைக்கின்றார். உடனே அவர்கள் ஓடிவந்து நிற்கின்றனர். அவர்கள் ம்.....)

உயர்ந்த மனிதன் - நண்பர்களே! சண்டை, யுத்தம் அதற்கு மருத்துவம் என்று பல சொத்துக்கள் நாசமாகி விட்டன். இப்போது இவை தீர்ந்து ஏதோ ரொஞ்சம் கொஞ்சம் அபிவிருத்தி அடைந்து வருகின்றது. அதுவும் எம்மைப போன்ற கம்பனிகள் தலைதூக்கிக் தடம்பதிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமிது இதுதான் சமயம், தக்க சமயம்
இந்த நேரம் பார்த்து நாம் உழைத்தல்தான்
எம்மால் வாழிவின் உச்சத்துக்கே போக
முடியும்.

நபர் - சரி நீங்கள் சொல்வது சரிதான் ஆனால் எப்படி நாம் ஒழைப்பது?

உயர்ந்த மனிதன் - எம்மிடம் உள்ள எல்லாத் தயாரிப்புகளையும் கொண்டு செல்லுங்கள்அதன் மூலம் அவர்கள் சொத்துக்களை.............

நபர் - தோழரே நீங்கள் சொல்வது சரி கொண்டு சென்றால் மட்டும் போதுமா? அதை அவர்கள் பணம் கொடுத்து வாங்க வேண்டுமே! அதை எவ்வாறு வாங்கச் செய்வது?

உயர்ந்த மனிதர் - ஆசை!ஆசை! ஆசை! ஆசை அற்றவன் அண்டத்தில்லை. ஆசை யாரை விட்டது? அது எல்லோர் மனதிலும் வேரை விட்டது. உனக்கும் ஆசை, எனக்கும் ஆசை அதே போன்று அனைவருக்கும் ஆசையுண்டு.

நபர் - அது புரிந்து விட்டது. அவர்கள் ஆசைத்தீயில் எண்ணெய் ஊற்றினால் அது "குப்" என்று எரியும் அதில் நாம் குளிர் காயலாம் அப்படித்தானே..?

உயர்ந்த மனிதர் - சபாஷ்..! (புன்சிரிப்புடன்) இனி உங்கள் வேலைதான் உங்கள் உழைப்பிற்கு நான் உங்களை உயர்த்துவேன் ம் ம் சரி சரி எனக்கு நிறைய வேலை இருக்கிறது. நான் செல்கின்றேன் உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள்

(கூறி விட்டு உயர்ந்த மனிதன் மேடையின் UR பகுதியயில் அமர்ந்து நடப்பதை அவதானித்துக் கொண்டிருந்தனர். மூவர் மேடையில் வருகின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி ஈடுபாட்டோடு ஒவ்வொரு வேலைகளைச் செய்கின்றனர். அப்பொழுது ஒரு IPad உருவம் ஒன்று தோன்றுகின்றது. அது ஒரு சிறுவனை மையப்புடுத்திய ஆட்டக் கோலத்தில் அசைகிறது. அதைக் கண்ட சிறுவன் அதனை நோக்கி)

**காட்சி – 03**

சிறுவன் - நீயார்? இங்கு என்ன செய்கிறா?

IPad - நான்தான் I Pad. நான் அமெரிக்காவில் இருந்து வந்திருக்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவன் - I Pad ஓ...? அப்படியென்றால், எனக்கு உன்னை பற்றி கொஞ்சம் விபரமாச் சொல்லன்.

I Pad - ம்ம் சொல்றன் நான்தான் I Pad என்னில இந்த உலகமே சுருங்கி இருக்க என்னில Facebook, Twitter, Google, WhatSup, Viber, Imo என்று நிறைய Apps இருக்கு. இந்த FaceBook ல நீ உண்ட Photo வ போட்டா அத உலகத்துல இருக்கிற எல்லாரும் பார்ப்பாங்க உனக்கு 1000, 2000, ஏன் 5000 டுமைநள கூட வரும். இது தான் Google. இதில் போய் Type பண்ணி நீ என்ன தேடினாலும் அது உனக்குக் எல்லாத் தகவல்களையும் தரம் இது மட்டுமில்ல Candy Crush,Angry bird, Temple run, Talking tom என்று நிறைய Games இருக்கு

சிறுவன் - Games ஆ....!!

I Pad - ம் ம் Games தான் உனக்கு எது விருப்பமோ அது விளையாடலாம் அது மட்டுமில்ல அதுல Camera வும் இருக்கு நீ Selfi(செல்பி) கூட எடுக்கலாம்

சிறுவன் - இஞ்சே இஞ்சே நானும் என்னையும் ஒருக்க எடன்.

I Pad - நீ என்னை எடுத்தா நான் உன்ன விதம் விதமா எடுப்பன் நாம Friends ஆகுவோமா?

சிறுவன் - சரி சரி இனி நாம friends சரியா?

(அப்படியே இருவரும் கைகோர்த்து குறை நிலையில் நிற்க அப்போது இரண்டாவதாக ஓர் மோட்டார் சைக்கிள் ஓர் ஆட்டக் கோலத்திற்கு வந்து ஒரு இளைஞனைக் சுற்றி சுற்றி வருகின்றது

**காட்சி – 04**

பாடல் - பீ..... பீ..... வும் வும், பீ பீ பீ ப் வும் வும் (12)

பீ........ ........... .........(15 ..... .......15)(2)

Byke - ஏன் என்ன இப்படி பாக்கிற? நான் வடிவா இருக்கனா?

இளைஞன் - ம் ம் Ya Ya Nice எனக்கு உன்னைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிச்சிருக்கு உன்ட பேர் என்ன?

Bike - என்ட பேர் அப்பாச்சி. நான் ஜப்பானில் இருந்து வந்திருக்கன். என்னில் ஏறி நீ ஒரு முறுக்கு முறுக்கியென்டால் நீ சொய்யிங் என்டு போயிருவ.

இளைஞன் - ஆ அப்பிடியா? வேற என்னவெல்லாம் உன்னில இருக்கு?

Byke - இஞ்சே இஞ்சே இது தான் Ready Start இத இப்படி அமத்தினா போதும் Start ஆகிடுவேன். கால் வலிக்க உதைக்கவும் தேவல்ல இஞ்சே இஞ்சே இதுதான் "டிஸ்க் பிறேக்" நீ வேகமா போய் பிறேக் அடிச்சா சும்மா சராச் எண்டு நிப்பாட்டுவேன். இங்க பாத்திய சும்மா மெத்து மெத்தெண்டு பஞ்சு மாதிரி "சீட்"

இளைஞன் - ஆ.. ம்ம் (முகமாற்றம்) ஆனா இதுக்கெல்லாம் நிறையப் பணம் வேணுமே! என்னிட்ட அவளவு பணம் இல்லையே!

நபர் (Marketing officer) - கவலையே வெண்டாம் ஞசை அதுக்குத்தானே நாங்கள் இருக்கிறோம்! நீங்கள் பணம் பற்றி அநாவசியமாகக் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை.

இளைஞன் - நீங்கள் யார்?

நபர் officer) - நான்தான் பினான்ஸ் & லீசிங் கம்பனி (Marketing Marketing officer நீங்கள் Byke எடுக்க நாங்கள் உங்களுக்கு உதவுறம் But நீங்கள் பணத்தை மாதாமாதம் கட்டினால் போதும்

இளைஞன் - அப்படியா? அப்படியென்றால் சரி. Thankyou Sir

நபர் - No mention Mister அப்பாச்சி this your four lake check.இனி நீங்கள் இவருக்குச் சொந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானவங்க ok

Bike - ம்ம் ok Thankyou Hai Handsome நாம ஒரு Ride போகலாமா?

இளைஞன் - Oh Yes! Bye

காட்சி – 05

(அப்படியே அவர்கள் உறை நிலையில் நிற்க மூன்றாவதாக ஒரு Degree Cap ஒன்று ஆட்டக் கேலத்துடன் வருகின்றது. அரங்கில் உள்ள பெண்ணைப் பார்த்து ஆடிக் கொண்டே DC இல் நிற்கின்றது.)

பெண் - நீங்கள் யார்? எதற்காக என்னையே பார்த்துக் கொண்டு இருக்கிறீங்க?

Cap - நான்தான் Degree Cap நான் பிறிட்டீஸ்ல இருந்து வந்திருக்கிறன்

பெண் - ம்ம் சரி ஏன் *என்னையே பார்த்துக்* கொண்டிருக்கிறீங்க?

Cap - எனக்கு உங்களைப் பார்த்வுடன் உங்களின்ர தலையில ஏறி இருக்கனும்மெண்டு ஆசையா இருக்கு. அது மட்டுமல்ல உங்கட தலையில நான் இருந்தா
எல்லோரும் உங்கள மதிப்பாங்க அத்தோடு நீங்க ரொம்ப அழகா வேற இருப்பிங்க

பெண் - பிறகு ஏன் தாமதம்? உடனே வந்து என்ட தலையில இருங்க

Cap - அது அவ்வளவு சீக்கிரம் முடியாது

பெண் - ஏன் முடியாது? நான் சம்மதிச்சுட்டனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cap - சம்மதிச்சா மட்டும் போதாது கொஞ்சம் செலவாகும்

பெண் - எவ்வளவு செலவாகும்

Cap - அது நீங்க என்ன Course செய்யிறிங்களோ அதுக்கு ஏத்த மாதிரி செலவாகும்.

பெண் - உங்களிடம் என்னென்ன Course இருக்கு?

Cap - என்கிட்ட இதோ இந்த Cake making course. இத பிடிச்சா 200-300 வகையான Cake செய்யலாம். நிறைய"ஓடெர்சும்" வரும். இது Beautician course. இத படிச்சா கறுப்பா இருக்கிறவங்கள வெளளையாக்கலாம், வெள்ளையா இருக்கிறவங்கள கறுப்பாக்கலாம், கொட்டான் முடிய நீளமாக்கலாம், நீள முடியை கொட்டானாக்கலாம் இப்படி நிறைய வேலை செய்யலாம். இது 30 Days English Course இத படிச்சா நீ 30 தே நாள்ல தஸ்சு புஸ்னு English பேசலாம் அத்தோடு நீ வெளிநாட்டுக்குப் போய் வெலை செய்யலாம். இப்படி என்னட்ட நிறைய Course இருக்கு.

பெண் - நான் எல்லாக் courseசும் செய்ய வேணும் ஆனால் என்கிட்ட பணம் இல்லையே.

நபர் - Don't Worry Madam அதுக்குத்தனே நாங்க இருக்கிறம் நீங்க கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. உங்கட Course Fees ல 30% நாங்க உங்களுக்கு Discount வவுச்சர் தாரம். அத்தோட நீங்க Installment ல மாதா மாதம் காசு கட்டி Exam செய்ய வாய்ப்பும் தாரம் இப்போதைக்கு நீங்க Registration Fees மட்டும் கட்டினால் போதும்

பெண் - அப்படியா? Thank you So much Sir



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி – 06

உயர்ந்த மனிதனின் பாடல்
சிக்கிக் கொண்டார்கள்சிக்கிக் கொண்டார்கள் (02)
சிக்கிச்சிக்கிச்சிக்கிச்சிக்கிச்சிக்கிக் கொண்டார்கள் (தக்கிட...)
சின்னஞ் சிறார்கள் சிக்கிக் கொண்டார்கள்
சிறியதொரு சிலுமிசத் தட்டில் சிக்கிக் கொண்டார்கள்
(தக்கிட கிடதக தக்கிட கிடதக தக்கிட கிடதக தாம் - 04)
தருகிட தக்கிட கிடதக தாம்)
வயது வந்தவர்கள் வளமாய்ச் சிக்கினார்கள்
பைக்கை முறக்கித் தெருவில் பொறுக்கிச் சிக்கிக் கொண்டார்கள்
(தக்கிட கிடதக தக்கிட கிடதக தக்கிட கிடதக தாம் - 04)
தருகிட தக்கிட கிடதக தாம்)
கனவு கண்டவர்கள் சிக்கிக் கொண்டார்கள்.
காசைக் கொடுத்து கண்ட கண்ட கல்வியில் சிக்கிக் கொண்டார்கள்
தக்கிட கிடதக தக்கிட கிடதக தக்கிட கிடதக தாம் - 04)
தருகிட தக்கிட கிடதக தாம்)

(பாடலின் போது மூவரின் காட்சிகள் பாடல் தளத்தோடு நடைபெறுகின்றது. (செலவழிக்கும் காட்சி இதன் போது இவர்கள் செலவழிக்கும் பணம் முழுவதும் உயர்ந்த மனிதனின் இருப்பிடத்தில் கொண்டு வைக்கப்படுகிறது. இதன் போது சிறுவன் I Pad ற்காகச் சிறிது சிறிதாகப் பணம் செலவழித்து இறுதியில் களவெடுத்துப் பிடிபடுகின்றான். இளைஞன் பைக்கில் சென்று வீதி ஒழுக்க முறைகளைப் கடைப்பிடிக்காது வேகமாகவும் அலட்சியமாகவும் சென்று விபத்துக்குள்ளாகி மரணமடைகிறார். பெண் தன் கையில் உள்ள பணம், நகை, முழுவதையுமிழந்து இறுதியில் பட்டப்படிப்பு தொப்பி மற்றும் கடன் தொல்லையோடு நிற்கின்றனர். இவை அனைத்தும் இந்தப் பாடலினுள் இடம்பெறும்)

உயர்ந்த மனிதர் - ஹா.........ஹா......... ஹா.........
ஆசை அறிவு, ஆடம்பரம் - இதன் மூலம்
ஏற்றம் ஏற்றத்திற்கான ஆசை ஏமாற்றத்தின்
பாசை

இவர்கள் போன்ற ஏமாளிகள் இவ்வுலகில் உள்ள வரை எம்மைப் போன்ற கம்பனிகள் உயர்ந்த கொண்டே போகும். இந்த உலகம் ஒரு வியாபார ஸ்தாலம் அதில் பணம் தான் கடவுள் (முட்டையில் இருந்த பணத்தை எடுத்து முகர்ந்து விட்டு) இந்தக கடவுளை அடையத் துடிக்கும் பக்தர்கள் நாங்கள் எங்களின் பலித் தேங்காய்கள் ஆசையில் துடிக்கும் இளைஞர்களே இது போன்ற ஏமாளிகள் உள்ள வரை எங்கள் ஏகாபத்தியத்தின் கொடி ஏறிக் கொண்டே போகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இறுதியில் மேடையில் உயர்ந்த மனித பணமூட்டையுடன் பார்வையாளரைப் பார்த்து

உயர்ந்த மனிதர் - அதோ புதிய ஏமாளிகள் வருகிறார்கள
அவர்களை நோக்கிச் செல்கின்றேன்

(என்று கூறி பார்வையாளர்கள் பக்கம் தன் கவனத்ததைச் செலுத்த ஆ....ஆ.... ஓசையுடன் திரை மூடுகிறது)

**செல்வி.ரி.குவேனுகா**
**மட்/ஆரையம்பதி இராமகிருஸ்ணமிஸன் மகா வித்தியாலயம்**

## பாலர் பிரிவு கையெழுத்துப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபாம்

**1ம் இடம் - செல்வி.மோ.ஷிபந்தி ஜக்சிதா**
**மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ்மூத்ததம்பி வித்தியாலயம்**

**2ம்இடம் - செல்வன்.கோ.ஜதுஷியன்**
**மட்/கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம்**

**3ம் இடம் - செல்வி.சி.ஜிக்சிதா**
**மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடலாக்கம்**
**திறந்த மட்டம்**
**மூன்றாமிடம்**

# ஒன்றிணைந்து வென்றிடுவோம்

ஒன்றிணைந்து அமைதியாக வாழ்வோம் -நாங்கள்
நன்றனவே நீதிவழி.......
வாழவகை செய்வோம்.
அன்புடன் அறம் வளர வாழ்வோம் -மக்கள்
இன்பம் பொங்க மனிதம் தங்க.....
அணி திரண்டு ஆழ்வோம்.
பண்புடன் பணிவு இன்றேல் வீழ்வோம் -மண்ணில்
ஒன்றுபட்டு வாழ்ந்திடாத.....
மனிதரானால் தாழ்வோம்.
சண்டை கடும் பேரழிவு தூங்க –எங்கள்
எண்ணங்களில் சகோதர....
சிந்தனையை தாங்கி.....
பண்பாட கலாசாரம் ஓங்க –பாரில்
பண்டைய உறவுகள் போல்....
கூடிவாழ்வோம் வாங்க.
வங்கக் கடல் வாவி ஆறு குளங்கள் -வயல்
செங்கதிரைத் தாங்கிநிற்கும்
சேற்று நில வளங்கள்.
மங்கிடாத மாண்புமிகு தலங்கள் -மக்கள்
இங்கிதமாய் வாழ மன...
நிலையில் வேண்டும் நலங்கள்.
ஆற்றலுடன் ஆளுமை நல்லொழுக்கம் -புகழ்
போற்றும் நற்பிரஜையாக....
வேண்டும் நல்ல பழக்கம்.
காற்றடிக்கும் போது தூற்றும் வழக்கம் -இன்றேல்
நேற்றுவிட்ட பிழைகள் போல...
நேர்ந்திடும் ஒரு கலக்கம்...

**ந.சறோஜினி**
**தாழங்குடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை**
**திறந்த மட்டம்**
**மூன்றாமிடம்**

# 153

அன்று பகல் முழுவதும் எவருக்கும் சாப்பாடு இல்லை. ஓன்றுமே சமைக்கவில்லை. மண் சட்டி பானையெல்லாம் மரண வீட்டுக்குப் போய் வந்த சோகம் அப்பிய முகம் போல சோர்ந்து கிடந்தன. பலா மரத்தின் இலைகளும் மா மரத்தின் இலைகளும் வாசலில் "வார்" விளையாடிக் கொண்டிருக்க பூச்சட்டியில் இருந்த பூக் கன்றுகள் நீர் மகளின் வரவுக்காக தலைகளைத் தொங்க விட்டு தரையினைப் பார்த்த வண்ணம் தவம் கிடக்கின்றன.

மூன்று நான்கு பேர் வளைத்து நின்று தலைமுடியைப் பிடித்து இழுத்து மெல்லுக் கட்டினாற் போல் குழப்பப்பட்ட விரித்த முடியும் இடைவிடாது ஓடிக் கொண்டிருக்கும் கண்ணீரும் ஒதுங்கிக் கிடக்கும் உடுப்பைக்கூட ஒழுங்குபடுத்த முடியாத மனோநிலையும் இடையிடையே அழுகுரல் சத்தமாகவும் மெதுவாகவும் மூக்கினைச் சீறிச் சோட்டியால் துடைத்துக் கொள்வதுமாய் சுஜாதா வீட்டு மண்டபத்தின் ஒரு மூலையில் சக்கப்பணியக் கிடக்கின்றாள்.

மண்டபத்தை எட்டிப்பார்ப்பதும் கொட்டாவி விடுவதுமாய் வாசலில் அங்கும் இங்கும் பைத்தியக் காரன்போல் அலைகிறான் சுஜாதாவின் கணவன் திருக்குமரன். மதிய நேரம் கடந்து பிற்பகலை எட்டியதால் இன்று சமையல் இல்லை என்பது உறுதியாகிவிட்டது.

சுஜாதா வேகமாக எழுந்த விறுவிறு என்று நடந்துபோய் "கடார்" என்ற பாரிய சத்தத்துடன் கேற்றை இழுத்து அடைத்து ஆமைப் பூட்டைப் போட்டு அமத்திவிட்டு அதே வேக நடையில் மண்டபத்திற்குள் நுழையமுதல் திருக்குமரனை ஒருபார்வை பார்த்துவிட்டு மீண்டும் கத்துகிறாள்.

அந்தப் பார்வையின் அர்த்தம் திருக்குமரனுக்கு புரியாமல் இருக்க நியாயம் இல்லை. ஐந்து வருடம் கள்ளறத்திலும் பதினொரு வருடம் இல்லறத்திலும் இணைந்திருந்தவன் அல்லவா?

தோட்டிலுக்குள் கிடந்த மூன்றுமாதக் குழந்தை கீறிட்டு அழுகிறது. சுஜாதா கண்டுகொள்ளவில்லை. அசையாமல் இருக்கிறாள். அவளுக்கு இருக்கும் ஆத்திரத்திற்கு குழந்தை அழுதால் என்ன கணவன் செத்தாத்தான் என்ன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குமரன் தனக்குத் தெரிந்த பாணியில் தாலாட்டுப் பாடுகின்றான். தூங்கும் குழந்தையை தட்டியெழுப்பும் பாடலாக அது இருந்தாலும் குழந்தை நிலைமையை உணர்ந்ததோ என்னவோ மறுபடியும் நித்திரைக்குத் தயார் ஆகி விட்டது. ஏதோ சாதித்தவன் போல் திருக்குமரன் மண்டபத்திற்குள் வருகின்றான். சுஜாதாவைப் பார்க்கின்றான். பொறுமை இழந்தவனாக " நீ என்ன புருஷன் செத்தவள் மாதிரிக் கிடக்கிறா? நடந்தது நடந்து பொயிற்று இனி நடக்கப்போறதப் பாப்பம். முகமும் கழுவல்ல வாசலும் கூட்டல்ல"

" என்ன நடக்கிற இதவிடவும் என்னவும் நடக்க வேணுமா? எண்ட மானம் மரியாத எல்லாம் போயிற்று இனி நான் றோட்டில எப்படி முகத்த காட்டுற.. ஊர்ச் சனம் பகிடி பண்ணும் அதுவும் இல்லாம ஒண்ட கொக்க ஊரெல்லாம் சொல்லித்திரியும் காணுற ஆக்கள் எல்லாம் விசாரிப்பாங்க நான் என்னத்தச் சொல்லுற."

மீண்டும் சுஜாதா ஒப்பாரி வைக்க ஆரம்பித்து விட்டாள். இந்த ஒப்பாரி முடிய இன்னும் ஒரு மணித்தியாலம் எடுக்கும்.

நேற்றுவரை எவ்வளவு அழகாக அங்க லட்சணமாக இருந்தவள். இரவு பன்னிரெண்டு மணிக்கு வந்த செய்தி அவளை நிலைகுலைய வைத்துவிட்டது. சுஜாதா சும்மா ஆள் இல்ல. உசாரான பெண். அவளின் கதையும் நடையும் காண்போரைக் கண்கவர வைக்கும். மென்மையானவள்தான் சற்று வன்மையானவளும் கூட. ஆனால் ஒரு நாளைக்குள் அவளின் மொத்த அழகும் இப்படி மாறும் என்று நான் கூட நினைக்கவில்லை. இப்படியான ஒரு அலங்கோலம் இவளுக்குள் அடங்கிக் கிடந்ததா? என்று சிந்திக்கத் தோன்றுகின்றது. "ஆள்பாதி ஆடை பாதி" என்பதில் அர்த்தத்தைப் புரிய வைத்தவள் சுஜாதா.

மதியம் வந்து வட்டரும் சாப்பிட்டு தண்ணீரும் குடிச்சித்து போனவன் இன்னும் வரல்லையே அப்போதுதான் திருக்குமரனுக்கு மகனின் ஞாபகம் வருகிறது.

" மால பட்டுத்து. தம்பி இன்னும் வரல்ல.."
"எங்காவது செத்துத் தொலைஞ்சிருப்பான் சனியன்"
" ஏன் அப்படிச் சொல்றா பைத்தியமா உனக்கு? "

"பிறகு எப்படிச் சொல்ல நாசமறுவான் அவனப் பெத்த உடனே கழுத்த நெவிச்சுக் கொண்டிருக்கணும்"

கதைத்துக்கொண்டு நின்றால் சுஜாதாவுக்கு கோபம் தலைக்கேறி விடும் அது விபரீதமாக முடியும் . இது வீணாக வார்த்தை வளர்க்கும் சந்தர்ப்பம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் சந்திரனைத்தேடி தெருவுக்கு வருகிறான் திருக்குமரன். கண்ணுக்கெட்டிய தூரத்தில் அவனை எங்குமே காணவில்லை மனம் படபடக்கிறது. நடந்த சம்பவம் மகனைப் பாதித்திருந்தால் அவனின் எண்ணங்கள் பல கோணங்களில் தடுமாறுகின்றது மூன்று நான்கு வீடுகளைக்கடந்து காண்போரை விசாரித்து தேடுதல் ஆரம்பிக்கின்றது.

"சுஜாதா தனியே இருக்கிறாள் அவள் ஏதாச்சும்" மீண்டும் வீட்டுக்கு ஓடி வருகிறான் திருக்குமரன். மண்டபத்தை எட்டிப் பார்க்கின்றான். மண்டபத்திற்குள் சுஜாதாவைக் காணவில்லை. சத்தமாக "சுஜா...! "ஓய்..."''அப்பாடா"சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியேறுகின்றான் சந்திரனைதேடி இரவு 7.00 மணி.

இதுக்கெல்லாம் இப்படி கோபம் வருமா?

பத்திரகாளியாட்டம். கல்யாணம் கட்டின காலத்திற்கு இப்படி ஒரு கோரமுகத்தை பார்க்கல்ல பத்திரத்த கையில எடுத்திருந்தா ஆடி கட்டுச் சொல்லியிருப்பாள் கடவுளே! தூக்குன கத்தியால புள்ளைய வெட்டியிருந்தா குடி மூழ்கிப் போயிருக்கும். இப்படி ஆத்திரப்படுவாள் என்று நான் கனவுலயும் நினைக்கல்ல. பன்னிரெண்டு மணிவரைக்கும் முழிச்சித்து இருந்திருக்காள். திடீர் என்று நடந்த சம்பவம். நானும் எதிர்பார்க்கல்ல நித்திரக் கண்ணில போட்டு ச்சீ... நினைத்தாலே கேவலமாய் இருக்கு . கோபமும் வருது. என்ன பாடுதான் பட்டாள்.

பாடுபட்டவளுக்குக் கோபம் வருவது நியாயந்தான். கடவுளுக்கும் கண் இல்லை. கண் இருந்திருந்தால் முள்ளி வாய்க்காலப் பார்த்திட்டு இருந்திருப்பாரா? எல்லாமே நமக்கு அப்படித்தான். சரி சரி இரண்டொரு நாளில எல்லாம் சரிவரும். அந்த இரண்டொரு நாள சமாளிச்சா வெற்றி நம்மட பக்கந்தான்.

"அப்போவ்...அப்போவ்... நான் இஞ்ச இருக்கன்.."

நினைவுகள் கலைந்தன சைக்கிளுக்கு பிறேக் இல்லை என்பது அந்தக் கணந்தான் திருக்குமரனுக்கு விளங்கியது. பரவாயில்லை இரண்டு கால்களையும் பலமாக நிலத்தில் ஊன்றி சைக்கிளை நிறுத்தினான். சத்தம் வந்த திசையை நோக்கினான். மகன் சந்திரனின் சத்தம் தான் என்பதில் சந்தேகம் இல்லை. மனதில் இருந்த பாரம் சட்டெனக் குறைந்தது. ஆறுதல் அடைந்தான். ஆனால் ஆத்திரம் வந்தது.

நீண்டநாள் பகையாளி. வேலிஅடைக்கும் போது பொதுவில நிண்ட நான்கு தென்னை மரங்களையும் கட்டாயம் வெட்டித்தான் ஆகவேண்டும் என்று ஒத்தக்காலில் நின்றவன். அதற்காக விதானையார் தொடக்கம் நீதிமன்றம் வரைக்கும் அலைய வைத்தவன். வாய்க்கு வந்தபடி ஏசியவன். கண்ணகை அம்மன் கோயில் சடங்கில கூட அந்த ஆத்திரத்த மனசில வச்சித்து "வழக்குரை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கக்குள்ள பிழையாய் படிக்கிறதாகச் சொல்லி கொம்பித்து கிடந்தவன். போதாக் குறைக்கு போகக்குள்ள வரக்குள்ள குத்துப்பாடாய் கதைக்கிறவன். " அவண்ட வீட்டிலையா சந்திரன் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறான்'' நடந்த கதையெல்லாம் சொல்லியிருப்பான். இந்தச் சம்பவம் சுஜாதாவுக்குத் தெரிந்தால் நானும் கூட அல்லவா தூக்கில் தொங்க வேண்டி வரும். என்ன வேலையைப் பார்தான் சந்திரன். பக்கத்து வீட்டில கூட தண்ணி வாங்கிக் குடிக்காதவன் எண்ட எதிரிட வீட்டில சாப்பிடுறானே!

''சந்திரன் வா வீட்ட போவம்''

''நில்லுங்கப்பா இந்த முடிஞ்சு.. கையைக் கழுவித்து வாறன்''

எதுவுமே பேச முடியாமல் நிற்கின்றான் திருக்குமரன். இந்த விடயத்தை சுஜாதாவிடம் சொல்வதில்லை. இதற்காக மகனுக்கு ஏசுவதோ அடிப்பதோ இல்லை எனத் தனக்குத்தானே கட்டளையிட்டான் திருக்குமரன்.

இரண்டு கன்னங்களிலும் வீக்கம் வற்றவில்லை. ஓட எத்தணித்த போது. கிழிக்கப்பட்ட காற்சட்டை கிழிந்து தொங்குகின்றது. கண்ணீர் வடிந்து காய்ந்த தடம் கூட மாறவில்லை. முதகில் காயம் ஏற்பட்டிருக்கும். தும்புத்தடி முறியும் அளவுக்கு அந்த சின்ன முதகில் என்னவோ வலியாக இருக்கும். உடம்பிலே அடிபடாத இடம் இல்லை. இறைவன் புண்ணியத்தால் எதிரியின் வீட்டிலாவது உணவு உண்ண உயிர் உடம்போடு இருக்கின்றது. இல்லாவிடால் இன்று காலை ஒரு மரண ஓலம். சுஜாதா மரண தண்டணைக் கைதி திருக்குமாரனும் மூன்று மாதக் குழந்தையும்...

இத்தனை வலிகளையும் தாண்டி இந்தப் பத்து வயதுப் பாலகன் எதுவும் நடக்காதவன் போல இருக்கின்றானே. இந்த வெள்ளை மனதைக் கூடப் புரியாதவர்களா? நாங்கள். தொல்லைகளுக்கும் துயரங்களுக்கும் மத்தியில் போட்டி பொறாமைகளைத் தாண்டி கிடைக்கும் வெற்றி வளர்ந்தோருக்கென்றால் சாதகம். இந்தச் சிறுவனுக்கென்றால் பாதகம்தான்.

பால்குடி மறந்த உடனே அக்கினிப்பிரவேசமாய் ஆட்டிப்படைக்கவேண்டிய அவசியம் இல்லை. அவதானத்தை மாத்திரம் செலுத்தினால் போதும். அவனது ஆற்றல் தானே வளரும். சுமைகளுக்கு மத்தியிலே சுகத்தை அனுபவிக்க கங்கணம் கட்டி நிற்றல் வறட்டுக் கௌரவத்தின் மத்தியில் நாம் சிக்கி இருப்பதே...

திருக்குமரன் மகனை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு வீடு நோக்கிப் புறப்படுகின்றான். இனி மகனின் உடம்பில் ஒரு அடி கூட விள விடக்கூடாது எனும் உறுதியோடு சந்திரனைக் கையில் பிடித்துக்கொண்டு நுழைகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் மண்டபத்துக்குள் சுஜாதாவைக் காணவில்லை. " சுஜா.... சுஜா...." பதில் வரவில்லை. சமையல் அறைப்பக்கம் ஓடுகிறான். காணவில்லை. குழந்தை தூங்கிய அறையை எட்டிப் பார்க்கின்றான். அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை.

தலை வீட்டு மோட்டைப் பார்த்த வண்ணம்.

மனதை ஒருமுகப் படுத்தி வெளியில் வருகின்றான். மகனை கிணற்றடிக்கு கூட்டிச் சென்று நன்றாகக் குளிப்பாட்டி உடை அணிவித்து சாமியறைக்குள் அழைத்துச்சென்று திருநீறு பூசி விடுகின்றான்.

"சொற்றுணைவேதியன் சோதி.....
சந்திரனின் நடத்தையில் எந்தவித மாற்றமும் இல்லை.

குழந்தையின் அருகில் வருகின்றான் திருக்குமரன். சுஜாதா அப்படியே வீட்டு மோட்டைப் பார்த்த வண்ணம் தன் மார்பகங்களை குழந்தைக்கு முழுமையாகப் பரிசளித்து ஏக்கத்துடன் திருக்குமரனைப் பார்க்கின்றாள். அவன் அவள் அருகில் சென்று தலையைத் தடவி விடுகின்றான். நிலமை சுமுகமாவது மனதுக்கு நிம்மதியாக இருந்தது.

"அவன் கெட்டிக்காரன்தான். வகுப்பிலையும் முதலாம் ஆளாத்தான் வாறவன் பிராக்குப் பார்க்கின்ற குணம் கொஞ்சம் இருக்கு. அண்ணட்ட மகளும் இவர்ட அக்கட மகனும் எடுபட்டுத்துகள் அதானே எனக்கு கடும் கவலையா இருக்கு. மானம் மரியாதை எல்லாம் காற்றோட பொயிற்று. வகுப்பு வெச்ச மாஸ்டர்மார் எல்லாம் கோளுக்கு மேல் கோள் எடுக்கானுகள். நான் என்ன பதில் சொல்வன். மூன்றாம் ஆண்டிருந்து மூண்டு வருசமா ஒரு நாளைக்கு மூணு நாலு வகுப்புக்கு கூட்டிப்போயிருக்கன். வீட்டுல தங்குறதே இல்ல அவரு வேலைக்கு வெளிக்கிட்டா நான் வகுப்புக்கு வெளிக்கிட்டுடுவன். நூற்றி அம்பத்தி நாலு எடுத்திருந்தா.... ஒரு புள்ளிக்குள்ள...."

நெடுமூச்சு விடுகின்றாள் அவளின் எண்ண அலைகள் அவனுக்குப் புரிகின்றது.

"புதிதாய் வாங்கிய ஸ்கூட்டருக்கும் புரியும்"

**திரு.த.இன்பராசா**
**புதுக்குடியிருப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாட்டார் கலை கற்றல்**
**திறந்தமட்டம்**
**முதலாமிடம்**

# நாட்டார் பாடல்கள்

எமது மாவட்டம் பதின்நான்கு பிரதேசசெயலகங்களைக் கொண்டுள்ளது. எமது பிரதேசத்தில் பெரும்பான்மையான தமிழர்களும், சிறுபான்மையாக இஸ்லாமிய முஸ்லிம்களும் அன்றில் பறவைபோல் ஒன்றிவாழும் பிரதேசமாகும். இங்கு நாட்டார் பாடல்கள வீட்டிலும், தொழில் புரியுமிடங்களிலும், காடுகள் கழனிகளிலும், புதுவருட, பெருநாட் காலங்களிலும், மனமகிழ்வான விழாகக் ளிலும், பிரதானமாக ஆலய உற்சவ காலங்களிலும் சடங்கு வேளைகளிலும், ஒரு குழந்தை பிறந்து வளர்ந்து மரணிக்கும் வரையும், வாழ்த்துப்பாடல், தாலாட்டுப் பாடல், குழந்தைப் பாடல், விளையாட்டுப் பாடல், தொழில் பாடல், காதல் பாடல், கொண்டாட்டப் பாடல், பல்வகை சமுதாய சமய சம்பிரதாய சடங்குப் பாடல்கள், பல்வகைப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் எனவும் இவற்றுள் பல்வகையான உட்பிரிவுகளைக் கொண்ட நாட்டார் பாடல்களும் அன்று தொட்டு இன்று வரை செவி வழிப்பாடல்களாகப் பாடப்பட்டு வந்த போதிலும், இன்று நவீனவசதிகள் காரணமாக எழுத்து வடிவமும் ஒலிவடிவமும் பெற்றுள்ளதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இப்பாடல்களுள் பத்து வகையான பாடல்களை எடுத்துக்கூறி,அபப்பாடல்களைத் தருவதே சிறப்பம்சமாகும்.

### 1. தாலாட்டுப் பாடல்கள்

தாய் தன் குழந்தையை மடியிலோ, தொட்டிலிலோ, தோளிலோ, கைகளிலோ வைத்து ஆட்டிய வண்ணம் தன் உளள்க் கிடக்கைகளை சொற்களாய் உறுட்டித் திரட்டி, எதிர்காலத்திலே தன்குழந்தை எப்படி எப்படியெல்லாம் வளர வேண்டும், வாழ வேண்டும் என்ற எண்ணக் குவியல்களை எடுத்தியம்பித் தாலாட்டுவது ஒருவகைத் தாலாட்டாகவும், இப் பிரதேசத்திலே பல இந்து ஆலயங்களிலும் எழுந்தருளியிருக்கும் இறை முகுத்தங்களின் அவதாரப் பெருமைகளை எடுத்தியம்பிப் பாடும் மற்றுமொரு வகையான இறைத் தாலாட்டுப் பாடல்கள் மலிந்து காணப்படுவதும் நாட்டார் பாடலுக்கு மகுடம் வைத்தது போல் பாடப்படுவதும், பேணப்படுவதும் சிறப்பம்சமாகும். அவற்றுள் முதலாவது தாய், சேய்கசுப் பாடும் தாலாட்டில்,

"ஆராரோ....ஆரிரரோ....ஆரிரரோ ஆராரோ" என்ற தருவிலே (பாடலிலே)
"முத்தே பவளமே- என்ர முக்கனியே சரக்கரையே" என்றும்
"கண்ணு மணியுறங்கு கானகத்து வண்டுறங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னு மணியுறங்கு பூமரத்து வண்டுறங்கு'' என்றும், முஸ்லிம் தாய்மார்கள் “ஓராரோ ஓரகண்டே ஓராட்டக் கேளாயோ....'' என்ற தருவிலே,

“பிள்ளையில்லா அகமதுசா பெருந்தவத்தால் வந்துதித்த வளள்ல் என்னும் அபப்ாசே வளர் பிறையே நீ நித்திரை செய்.....'' என்றும் குழந்தைகள் உறவினர் பற்றியும்,

“ஆண்டம்மான் என்ன தந்தான் ஆனை கொடுத்து விட்டான் குட்டியம்மான் என்ன தந்தான்

2

குண்டுமணித் தொட்டிலிட்டான் செல்லம்மான் என்ன தந்தான் செம்பவளத் தொட்டிலிட்டான்....'' என்று தொடர்ந்து பல்வேறு உறவு முறைகளைக் கூறிப் பாடுவது தமிழ்த் தாய்மார்களின் திறனாகவும் மிளிர, முஸ்லிம் தாய்மார்களும்,

“மண்ணாலே சோறாக்க மரச்சட்டி பானை தனை கொண்டாற னெண்டு காகக்கா கொழும்புக்குப் போனாராம் பச்ச முநத்ரிக் குலயும் பப்பாளிகக்கா வப்புழும் பிச்சி வரப் போன காகக்கா பின்நேரம் வந்திடுவார்.''

“தேடியெடுத்த முத்து தேவாதியாண்ட முத்து பாண்டி பதிச்சமுத்து பஞ்சவர்ணங்களாண்ட முத்து கொட்டிவைத்த முத்தே'' என்று தாய்மார்கள், பாடடி மாரக் ள் முத்து, பவளம், இரத்தினம் என்றும் பாட,

“என்கண்ணே நீயுறங்கு என் கண்மணியே நீயுறங்கு பாலுக்கோ நீயழுதா?- என்ர வாப்பா தேன் தேடாப் பாலகனே வாடாத பூவே- என்ர வாப்பா வதங்காத மல்லிகையே சாதிக் குலமே- என் மகனார் சந்தனப்பூ மேனியரே'' என்று முஸ்லிம் தாய்மார்கள் தாலாட்டி தங்கள் குழந்தைகளைக் கண்துயில வைகக் இனிய குரல்களில் பாடுவதும், இன்று குறைந்து விட்டாலும் பாலமுனை, காங்கேயனோடை போன்ற கிராமங்களில் ஓரளவு கேடக்க் கூடியதாக உளள்து.

ஆனால் இன்று எமது தமிழ்க் கிராமங்களான ஆரையம்பதி, தாழங்குடா, புதுகக்டியிருப்பு, கிரான்குளமாகிய கிராமங்களிலுள்ள ஆலயங்களில் உற்சவங்களின் போதும், சடங்குகள் நடக்கும் கண்ணகை, மாரி, பேச்சி, காளியம்பாள ஆலயங்களில் வெள்ளிக கிழமைகள் தோறும், இறைமுகுத்தங்கள் மீது பாடப்படும் பக்திப்பரவசம் மிக்க தாலாட்டுப் பாடல்களை இன்றும் கேட்கக் கூடியதாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடல்கள் ஒலித்தட்டுக்கள் மூலம் ஆலயங்களில் ஒலிபரப்பப்படும் போது, இனம் புரியாத பக்திப் பரவசத்தை கேடடே பாருக்கு ஊட்டி இறைபக்தியில் ஆழவைகக்கும். அபப்டியான சில பாடல்கள்.

**கணண்கை அம்பாள் தாலாட்டு**

வாருமம்மா வாருமம்மா கணண்கைத் தாயே
வரம்கொடுக்க வாருமம்மா கணண்கைத் தாயே
அடியார் படும்துயரம் கணண்கைத் தாயே
ஆலயத்தில் கேடக்லையோ கணண்கைத் தாயே
அக்கினிக் கண்ணை விட்டுக் கணண்கைத் தாயே
அமிர்தக் கண்ணால் பருமம்மா கணண்கைத் தாயே

3

அதர்மம் தலை தூக்குதம்மா கணண்கைத் தாயே
தர்மம் காக்க மனமில்லையோ கணண்கைத் தாயே
அரனுடனே வாதாடிக் கணண்கைத் தாயே
அரியதுயர் அறுத்திடவா கணண்கைத் தாயே
அந்நிய நாடுகளில் கணண்கைத் தாயே
அகதியாகித் தவிக்கலாமோ கணண்கைத் தாயே
ஆரைநகர் அமர்ந்தவளே கணண்கைத் தாயே
ருள்பொழிய வாருமம்மா கணண்கைத் தாயே
ஆண்ட உமது மக்கள் கணண்கைத் தாயே
மாண்டிட நியாய மென்ன கணண்கைத் தாயே
ஆஸ்த்தி அழியுதம்மா கணண்கைத் தாயே
ஆச்சியே காருமம்மா கணண்கைத் தாயே
ஆட்சி அநீதி கண்டு கணண்கைத் தாயே
மதுரை மாட்சி ழித்தவளே கணண்கைத் தாயே
ஆயிரங் கண் கொணட்வளே கணண்கைத் தாயே
அரிராமன் தங்கையாளே கணண்கைத் தாயே
இளைஞர்கள் படும் துயரம் கணண்கைத் தாயே
என்ன வென்று கேளுமம்மா கணண்கைத் தாயே
உன பாலகர்கள் படும்துயரம் கணண்கைத் தாயே
உமயவளே கேடக்லையோ கணண்கைத் தாயே
உலையிலிடட் மெழுகதைப் போல கணண்கைத் தாயே
உருகித் தவிக்கின்றோமே கணண்கைத் தாயே
ஊரார் படும் துயரம் கணண்கைத் தாயே
உன செவிக்குக் கேட்கலையோ கண்ணகைத் தாயே
எல்லை பறிபோகுதம்மா கணண்கைத் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லைதனைத் தீருமம்மா கணண்கைத் தாயே
எல்லோருக்கும் சமநீதி கணண்கைத் தாயே
வல்லவளே தந்திடம்மா கண்ணகைத் தாயே
ஏழைகள் படும் துயரம் கணண்கைத் தாயே
ஏறெடுத்துப் பாருமம்மா கணண்கைத் தாயே
ஓட்டம் நடையுமாகக கணண்கைத் தாயே
ஓடிவர வேணடுமம்மா கணண்கைத் தாயே
கருப்பூரச்சட்டி ஏந்திக் கணண்கைத் தாயே
கழலடி போற்றுகினறோம் கணண்கைத் தாயே
காவடிகள் ஆடிவாறோம கண்ணகைத் தாயே
சவடியைப் போற்றிவாறோம கணண்கைத் தாயே
குழநதைகள் படுந்துயரம கணண்கைத் தாயே
கோயிலிலே கேடக்லையோ கணண்கைத் தாயே

**4**

கும்பத் தழகியல்லோ கணண்கைத் தாயே
கோபாலன் தங்கையாளே கணண்கைத் தாயே
கோபித்த கண்ணை விட்டுக கண்ணகைத் தாயே
குளிர்ந்த கண்ணால் பாருமம்மா கண்ணகைத் தாயே
சத்தியத்தின் நாயகியே கண்ணகைத் தாயே
சித்திபெற வரம் கொடம்மா கண்ணகைத் தாயே
செந்நெல் அரிசி குத்திக் கண்ணகைத் தாயே
தித்திக்கப் பொஙகலிட்டோம கண்ணகைத் தாயே
செந்தமிழ்ச் செல்வியல்லோ கண்ணகைத் தாயே
பைந்தமிழைக் காத்திடம்மா கண்ணகைத் தாயே
தாஙகத் தரிக்கிதில்லைக கண்ணகைத் தாயே
தாயாரே வாருமம்மா கண்ணகைத் தாயே
தாமரை மலரெடுத்துக் கண்ணகைத் தாயே
தாள் பணிந்து வணங்கிடுவோம் கண்ணகைத் தாயே
தீராத நோய் பிணியைக் கண்ணகைத் தாயே
தீர்த்து விட வேண்டுமம்மா கண்ணகைத் தாயே
நாடு படும்துயரம் கண்ணகைத் தாயே
நாச்சி காதில் கேடக்லையோ கண்ணகைத் தாயே
நீசர்களை ஒறுத்துக கண்ணகைத் தாயே
நிம்மதி தந்திடம்மா கண்ணகைத் தாயே
நெருப்பால் எரித்தவளே கண்ணகைத் தாயே
நீலவண்ணன் தங்கையாடே கண்ணகைத் தாயே
பக்தியோடு பணிபவர்கக்ச் கண்ணகைத் தாயே
சித்திதர வந்திடம்மா கண்ணகைத் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தாத பத்தினியே கண்ணகைத் தாயே
பழுது படாரத்தினமே கண்ணகைத் தாயே
பாவியர்கள் செய்பிழை கண்ணகைத் தாயே
பதைபதைக்கப் போக்கிடம்மா கண்ணகைத் தாயே
பாவேந்தர் பழகு தமிழ் கண்ணகைத் தாயே
பரிதவித்துப் போகலாமே கண்ணகைத் தாயே
பேராசை கொள்ளவில்லை கண்ணகைத் தாயே
பெரும் துயரைப் போக்கிடம்மா கண்ணகைத் தாயே
மக்கள் மடிகிறாரே கண்ணகைத் தாயே
விக்கினம் தீருமம்மா கண்ணகைத் தாயே
மக்களடிமை தீர்க்க கண்ணகைத் தாயே
னமிரங்கி வாருமம்மா கண்ணகைத் தாயே

5

மஞ்சள் அரைத்தெடுத்துக கண்ணகைத் தாயே
மனம் மகிழப் பொட்டுமிட்டோம கண்ணகைத் தாயே
மாற்றான் கைப்பட்டிடாமல கண்ணகைத் தாயே
காத்திட வாருமம்மா கண்ணகைத் தாயே
மாயன சகோதரியே கண்ணகைத் தாயே
மங்கையரே வாருமம்மா கண்ணகைத் தாயே
மாறாத நோய் பிணிகள் கண்ணகைத் தாயே
மாற்றிவிட வேண்டுமம்மா கண்ணகைத் தாயே
முக்கனிகள படைத்தோம் கண்ணகைத் தாயே
முனனின்று காருமம்மா கண்ணகைத் தாயே
மூவேந்தர் ஆண்டமொழி கண்ணகைத் தாயே
முடியிழந்து போகலாமோ கண்ணகைத் தாயே
வலல்வர்கள் வாட்டுகிறார் கண்ணகைத் தாயே
தொல்லை போக்க மனமில்லையோ கண்ணகைத் தாயே
வகைவகையாய் மடைகள்வைத்துக கண்ணகைத் தாயே
வரும் வழியைப் பார்த்திருக்கோம் கண்ணகைத் தாயே
வேபபிலையைக் கைப்பிடித்து கண்ணகைத் தாயே
வினையறுக்க வாருமம்மா கண்ணகைத் தாயே
வெள்ளிப் பிரம்பெடுத்துக கண்ணகைத் தாயே
வினைகளெல்லாம் விரட்டிடம்மா கண்ணகைத் தாயே
நீபெற்ற பிள்ளைகள கண்ணகைத் தாயே
நிம்மதியின்றித் தவிக்கலாமே கண்ணகைத் தாயே
தெரியாமல் செய்தபிழை கண்ணகைத் தாயே
தேவியரே நபோறம்மா கண்ணகைத் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் துன்பதுயரைக் கண்ணகைத் தாயே
தாயாரே தீர்ப்பதெப்போ கண்ணகைத் தாயே

**ஆரைநகாப் பேச்சியம்பாள ்தாலாட்டு**

ஆராரோ ஆராரோ ஆரிராரிரோ
தாலேலோ தாலேலோ தாலிலாலோ
அமரரூபன் தங்கையாளே ஆகாயப்பேச்சி
அடியவரைக் காத்திடவா ஆகாயப்பேச்சி
அயோத்தி ராமன் சோதரியே ஆகாயப்பேச்சி
அரிய வரம் தந்திடவா ஆகாயப்பேச்சி
அச்சுதனார் தங்கையாரே ஆகாயப்பேச்சி
மிக்க வரம் தந்திடம்மா ஆகாயப்பேச்சி
அவிராமன் சோதரியே ஆகாயப்பேச்சி
புவியாளச் செய்திடம்மா ஆகாயப்பேச்சி

**6**

அபிடேக ஆராதனை ஆகாயப்பேச்சி
அமிர்தமெனத் தித்திக்குதே ஆகாயப்பேச்சி
ஆரைநகர் அமாந்தவளே ஆகாயப்பேச்சி
ஆடிவெள்ளி தேடிவரும் ஆகாயப்பேச்சி
ஆண்டு தோறும ்அடியவர்க்கு ஆகாயப்பேச்சி
வேணடும் வரம் கொடுத்திடவா ஆகாயப்பேச்சி
உலகளந்தோன் தங்கையரே ஆகாயப்பேச்சி
உய்யவழி காட்டிடம்மா ஆகாயப்பேச்சி
ஏழைகளின் இன்னலக்ளை ஆகாயப்பேச்சி
ஏறெடுத்துப ்பார்த்திடம்மா ஆகாயப்பேச்சி
கரகத்துக் குள்ளிருந்து ஆகாயப்பேச்சி
கருணைகாட்டிக் காத்திடவா ஆகாயப்பேச்சி
கருப்பூர ஆலாத்தி ஆகாயப்பேச்சி
கன்னிமார்கள் ஏந்திவாறார் ஆகாயப்பேச்சி
கஸ்தூரி வாசமல்லோ ஆகாயப்பேச்சி
கன்னிமார்கள் காவலடி ஆகாயப்பேச்சி
எண்ணியதைத் தந்திடம்மா ஆகாயப்பேச்சி
கும்பத்துக ்குளளிருந்து ஆகாயப்பேச்சி
கும்பத்தழகி அல்லோ ஆகாயப்பேச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பிட்டோம் வந்திடம்மா ஆகாயப்பேச்சி
தீமிதிக்கக் காப்புக்கட்ட ஆகாயப்பேச்சி
திரண்டுவாறார் பக்தர்களும் ஆகாயப்பேச்சி
தீராத வலவினைகள ஆகாயப்பேச்சி
தீர்த்திட வந்திடம்மா ஆகாயப்பேச்சி
பச்சமால் சோதரியே ஆகாயப்பேச்சி
இச்சைகளை அகற்றிடவா ஆகாயப்பேச்சி
பக்தர்கள் கூட்டமிங்கே ஆகாயப்பேச்சி
மெத்த வந்து கூடுதம்மா ஆகாயப்பேச்சி
பள்ளயம் கொள்வதற்கு ஆகாயப்பேச்சி
பணிந்தழைத்தோம் வந்திடம்மா ஆகாயப்பேச்சி
வண்ணத் துரைமகளே ஆகாயப்பேச்சி
எண்ணமதில் வந்திடம்மா ஆகாயப்பேச்சி
வடமா முகத்தியல்லோ ஆகாயப்பேச்சி
வந்து வரம் தந்திடம்ம ஆகாயப்பேச்சி
வாக்கிட்டாப் பொய்யாது ஆகாயப்பேச்சி
வரமளித்தால் மீளாது ஆகாயப்பேச்சி

7

வரீகம்பம் வெட்டிவர ஆகாயப்பேச்சி
ஊரே வந்து சேருமம்மா ஆகாயப்பேச்சி
வெள்ளிப் பிரம்பெடுத்து ஆகாயப்பேச்சி
வசீ விளையாடி வாம்மா ஆகாயப்பேச்சி
சாய்ந்தாடிச் சாய்ந்தாடி ஆகாயப்பேச்சி
சஞ்சலத்தைப் போக்கிடம்மா ஆகாயப்பேச்சி
மாறாத வியாதிகளை ஆகாயப்பேச்சி
மாற்றிட வந்திடம்மா ஆகாயப்பேச்சி
நேர்த்திக் கடன்களெல்லாம ஆகாயப்பேச்சி
சேர்ந்து வந்து குமியுதடி ஆகாயப்பேச்சி
சமுத்திரத் தீர்த்தமாட ஆகாயப்பேச்சி
சடுதியாக வந்திடம்மா ஆகாயப்பேச்சி
திருக் கதவடைக்கும் காட்சிகான ஆகாயப்பேச்சி
திரண்டிடுவர் மக்க ளெல்லாம ஆகாயப்பேச்சி
பிழை பொறுத்து காத்திடவா ஆகாயப்பேச்சி
பகை யனைத்தும் தீர்த்திடம்மா ஆகாயப்பேச்சி
சந்தோசம் தந்திடம்மா ஆகாயப்பேச்சி
செந்திருவே வந்தருள்வாய் ஆகாயப்பேச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆரைநகர் வம்மிக்கேணி மாரியம்பாள் தாலாட்டு**

அதியரசன் மகளல்லலோ முத்துமாரி
அதிசயத்தைக் காட்டிடவா முத்துமாரி
அரனுடனே வாதாடி முத்துமாரி
அரியமுத்துப் பெற்றவளே முத்துமாரி
அபயம் அளித்திடம்மா முத்துமாரி
உபாயம் வேறில்லையமம்மா முத்துமாரி
அகம் மகிழ்ந்து அஞ்சலிட்டோம முத்துமாரி
அனல் தனிந்து ஆண்டிடவா முத்துமாரி
ஆரைநகர் வம்மிக்கேணி முத்துமாரி
ஆராதனைக் கமர்ந்த இடம் முத்துமாரி
ஈஸ்வரனார் அங்கமெல்லாம முத்துமாரி
இட்டெறிந்தாய் கனகமுத்து முத்துமாரி
எக்கலா தேவியல்லோ முத்துமாரி
எங்களைக் காத்திடவா முத்துமாரி
எறிந்திடும் முத்துகக்ளை முத்துமாரி
எத்தர்களைத் தெரிந்துஎறி முத்துமாரி
ஐந்தொழிலின் வித்தகியே முத்துமாரி
பைந்தழிலில் பாநயந்தோம் முத்துமாரி

**8**

ஐங்கரனும் அறுமுகனும் முத்துமாரி
அன்புச் செல்வங்களல்லோ முத்துமாரி
ஓட்டம் நடையுமாக முத்துமாரி
ஓடிவந்து வரம்கொடம்மா முத்துமாரி
காயாம்பூ நிறத்தழகி முத்துமாரி
காத்திட வந்திடம்மா முத்துமாரி
காமாட்சி யானவளே முத்துமாரி
காத்தானை ஈன்றவளே முத்துமாரி
காடேறி உருவெடுத்து முத்துமாரி
முகா சூரனைக் கொன்றவளே முத்துமாரி
காய்ச்சல கடும் பிணியைக் முத்துமாரி
கணப்பொழுதில் களைந்திடவ முத்துமாரி
கோபம் வந்து விட்டா முத்துமாரி
கொள்ளி தனலாக்கிடுவா முத்துமாரி
சத்துரு நாசினியே முத்துமாரி
முத்தி தனைத் தந்திடவா முத்துமாரி
சர்வ வியாதிகளும முத்துமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டென்று போக்கிடம்மா முத்துமாரி
சிற்றுடுக்கு கைப்பிடித்து முத்துமாரி
சிந்தையிலே நின்றிடம்மா முத்துமாரி
செகமெலாம் படைத்தவளே முத்துமாரி
சுகமதனைத் தந்திடவா முத்துமாரி
தடாதகை பிராட்டியாகி முத்துமாரி
தரணியை ஆண்டவளே முத்துமாரி
தாயல்லவோ நீயெனக்கு முத்துமாரி
சேயல்லவோ நானுனக்கு முத்துமாரி
தெற்கினிலே காளியாத்தா முத்துமாரி
வறீறிருக்கா கோயில்கொண்டு முத்துமாரி
வடக்கினிலே பேச்சித்தாயார் முத்துமாரி
வளம்பெற வமைந்த பதி முத்துமாரி
நடுவினிலே நீயமர்ந்து முத்துமாரி
நலமளித்துக ˙காத்திருக்கா முத்துமாரி
திரிகால ஞான மீர்ந்திடம்மா முத்துமாரி
திரிபுர வலல்வையே முத்துமாரி
தெண்டனிட்டுப் பணிந்தோமம்மா முத்துமாரி
தொண்டருக்கு இரங்கிடம்மா முத்துமாரி
தும்சலோசனை வதைத்த முத்துமாரி
சண்ட முண்ட சங்காரி முத்துமாரி

**9**

தேவர் தொழு தேவியல்லோ முத்துமாரி
தேடி வந்தோம் காத்திடம்மா முத்துமாரி
பத்திரங்கள் போனவிடம் முத்துமாரி
பழுதின்றிக் காத்திடவா முத்துமாரி
பூமித்தேவி பாரம் தீர்க்க முத்துமாரி
மதுகை டவரை வதைத்தாய முத்துமாரி
பூதநாதன் சூசகியே முத்துமாரி
ஓதினோமுன் நாமமதை முத்துமாரி
பாதகங்கள் செய்தவர்க்கு முத்துமாரி
பார்த்து நீ முத்தெறிவாய் முத்துமாரி
வாணவித்தைக் காரியல்லோ முத்துமாரி
வானவர்கள் போற்றும் சக்தி முத்துமாரி
வாழைப்பழம் கரும்பு முத்துமாரி
வகைவகையாய் படையலிட்டோம் முத்துமாரி
திருவிளையாடல் வித்தகத்தால் முத்துமாரி
முத்துமாரி யானவளநீ முத்துமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் நிற மேனியாளே முத்துமாரி
கண்ணெடுத்து பாருமம்மா முத்துமாரி
நவதுர்கக்க யானவளே முத்துமாரி
நன்மை செய்யு வந்திடம்மா முத்துமாரி
மகாமாரி யானவளே முத்துமாரி
பகை,தோஷம் போக்கிடவா முத்துமாரி
ஆண்டு தோறும் ஆனித்திங்கள முத்துமாரி
ஆடிடுவாய் திருக்குளுத்தி முத்துமாரி
சந்தோசமாய் சர்க்கரையமுது முத்துமாரி
சங்கரியே தொண்டிடுவாய் முத்துமாரி
சமுத்திரத் தீர்த்தமாடி முத்துமாரி
சங்கரிப்பாய் வினையனைத்தும முத்துமாரி
குற்றம்குறை பொறுத்து முத்துமாரி
குழந்தைகளைக் காத்திடம்மா முத்துமாரி
மிக்க மனது வைத்து முத்துமாரி
விக்கினங்கள் தீர்த்திடம்மா முத்துமாரி

**10**

**காளியம்பாள் தாலாட்டு**

அக்கினியில் பிறநத்வளே காளிகாதேவி
உககிரம் தணிந்து வாம்மா காளிகாதேவி
அணிந்த திருநீற்றழக காளிகாதேவி
அருளளிகக் வந்திடம்மா காளிகாதேவி
அக்கினி சொருபியல்லோ காளிகாதேவி
அடிபணிந்தோம் வந்திடம்மா காளிகாதேவி
ஆரைநகரிலு முறைபவளே காளிகாதேவி
ஆதரித்துக காத்திடம்மா காளிகாதேவி
ஓங்காரத்தின் உடபொருளே காளிகாதேவி
பாங்காய் வந்து காத்திடம்மா காளிகாதேவி
சிங்க வாகன மேறிக் காளிகாதேவி
தங்கத் தமிழ் தந்திடவா காளிகாதேவி
சிரித்த முகத்தழகியல்லோ காளிகாதேவி
சிலம்பலம்ப வந்திடம்மா காளிகாதேவி
செங்கை வளைகுலுங்க காளிகாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கோல் செலுத்திடுவா காளிகாதேவி
செய்வினைகள் அணுகாமல் காளிகாதேவி
உய்வினை அளித்திடவா காளிகாதேவி

செல்வா நகரிலும் முறைபவளே காளிகாதேவி
செல்வம் தந்து ஆளுமம்மா காளிகாதேவி
தக்கனுடை யாகம் காளிகாதேவி
தானழித்த தாட்சாயினி காளிகாதேவி
திரிசூலம் கொணட்வளே காளிகாதேவி
திரிசடையோடு காட்சிதாம்மா காளிகாதேவி
தீவளர்த்துத் தீமிதிப்போம் காளிகாதேவி
தீவினைகள் அகற்றிடவா காளிகாதேவி
துட்டர்கள் துன்பமெல்லாம காளிகாதேவி
துடைத்தெறிய வந்திடம்மா காளிகாதேவி
தேவிகளில் வரீசக்தி காளிகாதேவி ே
தடிவந்து காத்திடம்மா காளிகாதேவி
தோத்திரங்கள் செய்து வாறோம காளிகாதேவி
தொல்வினைகள் போக்கிடவா காளிகாதேவி
கோடரிப் பல்லழகி காளிகாதேவி
கோபம் தணிந்து வாம்மா காளிகாதேவி
பட்டுப் பளபளக்க காளிகாதேவி
பறந்தோடி வந்திடம்மா காளிகாதேவி
பகவதி சாமுண்டி காளிகாதேவி
படியழக்க வந்திடம்மா காளிகாதேவி

11

பில்லி சூனிய மெல்லாக் காளிகாதேவி
நில்லாமல் துரத்திடம்மா காளிகாதேவி
பூசைக்கு நேரமாசசி காளிகாதேவி
புறப்பட்டு வந்திடம்மா காளிகாதேவி
புன்னைச் சோலையமர்ந்து காளிகாதேவி
எங்களைக் காத்திருக்கா காளிகாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தாமரை குளத் தருகே | காளிகாதேவி |
| வரீமா காளியா நயீருக்கா | காளிகாதேவி |
| வேலூர் கொளனியிலும | காளிகாதேவி |
| வறீறிருந் தருளளிகக்ா | காளிகாதேவி |
| போரதீவிலும் நயீமர்ந்து | காளிகாதேவி |
| பேறான பேறளிகக்ா | காளிகாதேவி |
| திருக்கோண நகரினிலும் | காளிகாதேவி |
| அருளோங்க அமர்ந்திருக்கா | காளிகாதேவி |
| தெல்லிப் பளையிலும் | காளிகாதேவி |
| துர்க்கை யம்மனாக அமர்ந்தவளே | காளிகாதேவி |
| மகிடா சூரனை வதைத்த | காளிகாதேவி |
| மகிமைதனைத் தந்திடவா | காளிகாதேவி |
| மெய்யடியார்கள் வினை | காளிகாதேவி |
| பொய்யாமல் போக்கிடவா | காளிகாதேவி |
| வாணனக்ை மத்தளத்தில | காளிகாதேவி |
| வடிவழகைக் காட்டிவாறா | காளிகாதேவி |
| வறீடும் பத்தினியே | காளிகாதேவி |
| விரட்டிடவா சத்துருவை | காளிகாதேவி |
| வெள்ளிக் கிழமைதோறும் | காளிகாதேவி |
| பூப்போட மகிழ்ந்திடுவாய் | காளிகாதேவி |
| வையகத்தில் வாழும் மக்கள் | காளிகாதேவி |
| செய்பிழை பொறுத்திடம்மா | காளிகாதேவி |

**2. கும்மிப் பாடல்கள்**

கும்மிப் பாடல்கள் இந்துக்களின் பண்பாட்டுடன் வளர்ந்த கலையம்சமாக, எமது பிரதேசத்தில் நடைபெற்று வருகின்றது. இக்கும்மிப் பாடலானது ஆரம்ப காலத்தில் மாரியம்மன் ஆலயத்தில் மாத்திரமே கும்மியாட்டம் ஆடுவது வழக்கமாக இருந்து வந்த போதிலும், காலப்போக்கில் எல்லாக் கடவுளர்களின் பேரிலும் கும்மிப்பாடல்கள் ஆக்கப்பட்டு, பாடப்பட்டு வருவது நோகக்ற்பாலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்மிப்பாடல்களிலே எத்தெய்வத்தின் மீது பாடல்கள் பாடப்பட்ட போதிலும் முதலில் விநாயகப் பெருமானுக்குக் காப்புப் பாடியே, பாடல்கள ் குறித்த தெய்வத்தின் அவதாரம், சிறப்பு, அருள், திருவிளையாடல்கள் என்பன எடுத்தியம்பும் வகையில் அமைக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கும்.

**12**

கும்மிப் பாடல்கள ் பெரும்பாலும் பெண்களே பாடி, ஆடும் பழக்கம் ஆரம்ப காலங்களில் காணப்பட்ட போதும், தற்காலத்தில் இருபாலாரும் பாடியாடும் பழக்கம் மாற்றம் பெற்றிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. பெரும்பாலும் இளம்பிள்ளைகளே ஈடுபட்டு வருவது ஈண்டு குறிப்பிடத்தக்கது. பாட்டினைப்பாடி இரு கரங்களினாலும் கும்மி கொட்டி, வட்டமாக நின்று முனனோக்கியும், பின்நோகக்கியும் திரும்பியும் குனிந்தும் நிமிர்ந்தும் பக்கவாட்டிலும் கும்மியடித்தாடுவர். இரட்டை எண்களிலே இருவர், நால்வர், அறுவர் என்ற படியே சேர்ந்து ஆடுவர். கும்மிப்பாடல் தற்போது இறை முகுர்த்தங்களுக்கு மட்டுமல்லாது பொதுவாகவும் பாடப்பட்டு ஆடப்பட்டு வருவது கண்கூடு. முதலில் எமது பிரதேசம் அப்படியான ஒரு கும்மிப் பாடலை அவதானித்து, பின் கடவுளர்களின் கும்மிப்பாடல்களை நோகக்வோம்.

**காப்பு**

நாட்டமுடன் நாங்கள் நாட்டார் பாடல்பாட வாட்டிடும் பிழைகள் வராது நாளும்
தோத்திரம் பாடித் துதிக்கு மெம்மை – தூக்கி காத்திடக் கணபதி காப்போமே

மண்முனைப் பற்றுப் பிரதேசம் - என்றும் மண்வளம் மிக்க பிரதேசம் கண்ணாகக்
காத்துப் பயிர்வளர்கக் விண்ணோரும் போற்றிட வைத்திடுமே

செய்யும் தொழிலில் சிறந்ததொழில் - எமை உய்ய வைகக் உணவளிகக்ும்
தொழில் வையத்து மாந்தர் வளம் பெறவே மெய்யாக சோறிடும் எங்கள் தொழில்

ஒற்றுமையாகக் கழனி தன்னில் - நாங்க பற்றொடிரு பாலாரு முழைப்போம் தற்பரன்
தாளைத்தினம் துதிப்போம் கற்பது போல் வயல் காத்திடுவோம்

வரம்பமைப்போம் வாய்க்காலமைப்போம் உரம்பெறு கலப்பை கொண்டுழுவோம்
கரம்கொண்டு களைக எகற்றிவோம் - தரம் மிக்க நெல் வகைகள்
விதைத்திடுவோம்

ஏற்றம்கடடி நீர் இறைத்திடுவோம் தோற்றமுற வளமாக்கியிடுவோம் மாற்றம்
கண்டால் மருந்தடிப்போம் சேதம் காத்திட காவல்புரிவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர ˙பறிந்து சதிராடும் காட்சி காண்பதற்கோ கண் கொள்ளாகக்காட்சி வளர்ந்து விட்ட பூமி அன்னைக்கு – கதிர் வளைநந்து முத்தமிட்டு நன்றிகூறும் முற்றிப்பழுத்த கதிரறுப்போம் - அதை சுற்றி நின்று நாமும் சூடடிப்போம்

**13**

முத்தாய் விளைநத் நெல்மணி தன்னை பத்திரமாய்ச் சாக்கில் கட்டிடுவோம் சாதிபேதம் பேசும் மானிடரே – வயல் சாதிமதம் பார்த்து விளைவதுண்டோ? ஆதிமூல பரம்பொரு ளிறையேயெமை நீதி தவறாது வாழ வழிகாட்டிடுவரீ.

**நிசப்த ஸ்ரீ கிருஸ்ணர் கும்மி**

தானினத் தானினத் தானானத் - தன தானினத் தானினத் தானானம் தானினத் தானினத் தானானத் - தன தானினத் தானினத் தானானம்

**காப்பு**

மணமுனைப் பற்றின்˙ பொனனெழிலாம் கணண்ன தாழங்குடா நிசப்த கணண்னமேல் கும்மி பாடக் கரிமுக கணபதி காப்பாமே

தாழங் குடாச் சரிரமதில் சப்த மினறிய நிசப்தமதில் - கோயில் கொண்ட தாமோதரனைப் பாட நாமகளே நாவில் நீயிரம்மா

அரி நமோ நாராயணனை - அச்சுத அநந்த சாயி பகவானை அனைவரும் பனிந்தருள் பெற்றிடவே அன்புடன் நிசப்தம் வாருங்கடி

ஆயரிட பதிவளர்ந்த வன்டி ஆலிலை மேலும் துயில்பவன்டி ஆலயம் கொணட் நிசப்தபதி - காணத் தாழங்குடா நீங்க வாருங்கடி

இருடிகேச ஈசன் அவன்டி இசைத் தமிழுக்கு இசைபவன்டி இடருறு மக்கள் இரட்சுதன்டி - அவன் இருகக் மிடமே நிசப்தமடி

ஈன சுரங்கள் அறுப்பவன்டி ஈரடியால் மூவுல களந்தவன்டி ஈடிணையற்ற நிசப்த பதியென்றும் ஈவிரக்க மோடருள் பவன்டி

உறு பிணிகள் களைபவன்டி - நாளும் உடனிருந்து எம்மைக் காப்பவன்டி உல்காசமாய் நிசப்த மமர்ந்து உபாய மளித்திடு உபேந்திரன்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

ஊழ்வினைகள் என்றும் களைபவன்டி ஊமையைப் பேசிட வைப்பவன்டி ஊண்கணா ரொன்றி வழிபடு ஊற்றுக் களம் நிசப்தமடி

எண்ணிரண்டாயிர மிடையர்க் கிறைவனடி எண்ணிலடங்கா வதார புருடனடி எழில் வண்ண நிசப்தமதே - என்றும் அடியார்கள் வழிபடு மிடமடியோ

ஏதிலார்கத் உதவு வன்பனடி ஏய்த்திடு எத்தரை ஏய்பவன்டி ஏழு சுரங்களான பூபாலனின் ஏற்ற திருப்பதி நிசப்தமடி

ஐம்பொறி ஆசை அழிப்பவன்டி ஐஸ்வரிய மள்ளி யளிப்பவன்டி ஐக்கியம் வளர் சாரீமதிலுறை நிசப்த பதி அவனானவன்டி

ஒளி மரமாக மொளிர்பவன்டி ஒருவினை ஓட்டிடு மாலவன்டி ஒளிதரு கதிரவன் தொழுதெழு ஒழுக்க நிசப்த முறைபவன்டி

ஓதுவார் உள்ளத்தில் உறைபவன்டி ஓராட்டுப் பாடத் துயில்பவன்டி ஓங்கு புகலுடை தாழங்குடா ஓச்ச நிசப்தம் உறைபவன்டி

ஔவியம் அகற்று அரிராமனடி ஔதாரியக் கொடை வள்ளலடி ஔடதமான நிசப்த பதியுறை பௌவிய தேவகி பாலனடி.

கம்ச சங்கார சுந்தரன்டி கன்டெறிந்து கனி கவர்ந்தவன்டி கருணை மழைபொழி நிசப்த கண்ணனடி மணி வண்ணனடி.

கார்முகில் வண்ண மேனியன்டி காயாம்பூ நிறக் கஸ்தூரியன்டி கானமிசைக் குயில் நிறைநிசப்த காரன்டி வடிவான வன்டி.

கிண்கினி தண்டை யணிபவன்டி கிளிமொழிக் கோவியர்க் கிசைபவன்டி கிருபை நிறை நிசப்தமதுறை கிருஷ்ணனடி கீதை சொன்னவன்டி.

கீர்த்தனைக் கர கோவிந்தனடி கீதை உபதேச ஏந்தலடி கீர்த்தி ஓங்கிடு நிசப்தமுறை பாரளந்த பரன் ராமனடி.

15

குழ லிசைக் கோவர்த்தனடி குன்றெடுத்துக குடை பிடித்தவன்டி கற்சிலை அகலிகை சாபம்தீர்த்து நற்சிலை வளைத்த சதீராமனடி.

ஆடுங்கடி கும்மி ஆடுங்கடி ஆழி மழைக் கண்ணனாலயத்தே பாடுங்கடி கும்மி பாடுங்கடி தாளங்குடா நிசப்த கோயிலிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்மியடி பெண்காள் கும்மியடி கோபால கிருஷ்ணன் சன்னிதியில் தட்டுங்கடி தாளம் தட்டுங்கடி சரீர நிசப்த திருப்தியில்.

கோவியரே ஒன்று கூடுங்கடி - வந்து கோசலை மைந்தனைப் பாடுங்கடி தாழங்குடா நிசப்த தாமோதரன் சாதனைகள் சொல்லி யாடுங்கடி.

மங்களமே ஜெய மங்களமே மதி சூதனனுக்கு மங்களமே மங்களமே ஜெய மங்களமே நிசப்தபதி மாதவனுக்கும் மங்களமே.

புதுக்குடியிருப்பு கண்ணகை அம்பாள்

பத்தரைமாதப் பசும் பொன்னான புத்தொளி புதுக குடியிருப்பின் பத்தினிக் கண்ணகை கும்மிபாட ஸ்ரீ விக்னேஸ்வரர் காப்பாமே.

வங்கக் கடலலை ஓசையிலே சங்கம் வளர்த்த இசைபரவி தங்கத் தமிழ்மொழிப் பாதழுவப் பொங்கிடுமே தினம் இன்பமெங்கும்.

பட்டொளி வசீடும் பௌர்ணமியால் கடட்ழகி கோவில் வதியெங்கும் எட்டுத் திக்கிருந்தும் கூடும்மக்களுக்கும் மட்டற்ற மகிழ்வோடு வரமளிப்பாள்.

விக்னேஸ்வரர் ஆலயத்தே யிருந்து மிக்க சிறப்புடன் ஊரேசேர்ந்து கற்புடையாள் எழுந்தருளப் பெத்தான் குடியார் திருக்கதவு திறப்பார்.

வித்தைகள் காடடியே ஆட்சிசெய்து உத்திகள இல்லாது நீதிகொல்லும் பித்தர்கள புத்தியில் சத்தியமுணர்த்த வித்தகைக் கண்ணகையே வந்திடம்மா.

16

கொண்ட கொழுநனைக் கொன்றதாலே பாண்டி மற்றேறி நீதிகாத்தாய் வண்டமிழ் ஈழவர் நீதியற்றிங்கே தூண்டிற் புழுவாகத் துடிக்கலாமோ?

சுதந்திரம் என்று கிடைத்ததுவோ சுரண்டலுக் குள்ளாகி நீதிமாழ சுந்தர ஈழத்தமிழர் சுயநிர்ணயம் வஞ்சகர் வலையிலே மாட்டியதே.

பிரித்தாண்டிடு சூழ்சசியில் வலல்வர்களிங்கே உரித்தான தந்திர சாகசத்தால் மரித்திட்ட நீதிநியாய மெப்போதாயே உயிர்த்தெழுந் துண்மை உணர்த்துமம்மா?

அன்னிய நாட்டுச் சனநாயகமும் எண்ணிய தில்லையே ஈழவர்துயரை கண்ணிருந்தும் குருடர்க ளாகியே உண்மை ஏய்ப்போருக்கே உதவுகின்றார்.

அபப்பாவி மக்களைக் கைதுசெய்தடைத்து அபப்ட்டமான கதையிடடுக் கட்டி தப்பிதம் செய்கின்ற சாணக்கியம் விழ எப்பொழு திங்கே எழுந்தருளவ்ாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தமனிதரும் சொந்தமண் தன்னிலே பந்தமுடன் வாழ மறுதலிக்கும் விந்தைமனிதர்கள வேண்டாவாதம் கண்டும் சிந்தைநீ கொள்ளா திருக்கலாமோ?

அடிமை வலையிலே அருவரைவழீத்திட ஆள்பவர் ஊதும் மகுடியிலே மயங்கிடு மண்புழு மடையரிங்கே தலையெடுத் தாடுதல் தான்முறையோ?

இரண்டாம் நாள் இரவுசச்டங்கை இன்முகத்தோடு பணிக்கனா ரியற்ற சிறாம்பியடிப் பிள்ளையார் கோவிலிருந்து சிறப்போடு காவடிக ளாடிவருவார்.

மூன்றாம்நாள் பகல்சடங்கு செய்து படையாட்சி குடியினர் மாட்சிபெற இரவுச் சடங்கதை இரம்மியமாககியே கலிங்க குலத்தவர் விளங்கிடுவார்.

நான்காம்நாள சடங்கைப் பாங்காக கோமளக் கோப்பி குடியார்நடத்த இருடிகேசன் தங்தையிரவுச் சடங்கை வரீய படையாட்சியார் ஏற்றிடுவார்.

ஐந்தாம்நாள பகல் சடங்கதனை பாந்தமுடன் பணிக்கனார் தான்முடிக்க பச்சைவெட்டிப் படையாட்சி குடியினர் மெச்சிடயிரவுச் சடங்கு செய்வார்.

17

வைகாசித் திங்கள் ஆறுநாட்கள் கைராசிக் கண்ணகை சடங்குசெய்து பௌர்ணமி நன்னாள குளுத்தியதை பெத்தான் குடிமக்கள் செய்திடுவார்.

வேபபிலை ஆரங்கள் தொங்கவண்ண பூப்பந்தல் தோரணங்கள் மின்ன பத்தினிக் கண்ணகை குளுத்தியன்று பெத்தான் குடிமக்கள் அலங்கரிப்பார்.

இயந்திரயுத்தக் கழுகுகள் கொண்டே ஆள்பவர் அறுபடையாலே ஈழமது சோபை யிழந்த சுடலைகளாகுதே கோதை கண்ணகையே பாருமம்மா?

அற்பர்கள் ஆற்றிடும் தப்பிதத்தாலம்மா அல்லலுற் றீழவர் அனுதினமும் சொல்லவொண்ணா அவமானம் தாங்கிறார் வெகுமானங்கள் வென்றிடும் நாளையெண்ணி.

குளுத்தி நாளன்றிரவு மிகுந்த கூட்டமாய்க் காவடிகள குவிய கோலாட்டம் கும்மி கரகாட்டங்கள் பக்திப் பரவசம் ஊட்டிடுமே.

தண்ணீரிலேவளர் தாமரை தன்மேலே தண்ணீரை ஒட்ட விடுவதில்லை தாயகத்தே பிறநத்வளர் ஈழவர் தன்மானமோடு வாழ முடியவில்லை.

வலைவசீ அலையைப் பிடிகக்லாமோ? வசியத்தால் திசைதனை மாற்றலாமோ? சமாதானத்திற்கான போர்என்று சொல்லும் சண்டாளரே ஈழவர் மாழலாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளுத்தியதாடிக் குளிர்ச்சி அடைந்திட்ட கொம்பனையாள் கம்பீர மாயெழுந்து கொட்டும்குரவை உடுக்கொலி முழங்க விக்னேஸ்வரர் ஆலயம் சென்றிருப்பாள்.

நற்சிந்தனையும் நல்வந்தனையும் தூய நல்லொழுக்க சீல நற்குணமும் அற்புதஅருவர்கள் தப்பாது கைக்கொளள் கற்புடை கண்ணகை நற்பதமளிப்பாள்.

ஈழவர் எண்ணம் நிறைவேறுமன்று அகிலமெலாம் உறவாடி நின்று தூயதமிழ் கொண்டு கவிபாடத் துன்பங்கள் யாவும் பறந்தோடும்.

மங்களமே என்றும் மங்களமே செங்கண்மால் தங்கைக்கு மங்களமே மங்களமே சுப மங்களமே - புதுக் குடியிருப்புத் தாயே மங்களமே.

18

ஆரைநகா் செங்குந்தா் வீதி முத்துமாரி

தந்தனத் தான தனத்தான - தன தானதந்தத் தானானா தந்தனத் தான தனத்தான - தன தான தந்தனத் தானானா.

காப்பு

மங்கள வாரைநகர் எல்லை தன்னிலே செங்குந்தர் வதியில் கோவில் கொண்ட முத்துமாரி கும்மி பாடத் திருநீல கண்ட விநாயகர் காப்பாமே.

அன்போடருள் கடாட்சம் வேண்டி செங்குந்த குலமக்கள் பந்தலிட்டு சுந்தரச்செந்திரு முத்துமாரி தன்னை சந்தோசமாய் வழி பட்டனரே.

ஆரணங்காள் கயிலைவிட் டாரணியில் ஏழுகும்ப கரகம் நிறுத்தி ஊசியிரண்டை பொன்னெழுத் தாணியில்குத்தி யரனைநோககி நின்று தவம்புரிந்தாள்.

இப்படிக் கடும்தவம் செய்த சக்தியவள் பக்கத்தில் பரனுமே வந்து நிற்க பூமகள் பூப்பாரம் தீர்க்க பூபாலனே முத்து வரமதைத் தாருமென்றாள்.

ஈசனும் மனமது தான்மகிழ்ந்து ஈரொம்பது முத்துகக்ள் தானளித்து இன்றுமுதல் முத்துமாரி நீயென்று மேதினியில் சென்று விளையாடுமென்றார்.

உத்தமி மாரிநீ பெற்றமுத்தைப் பரிசோதிக்க பரமன் மீதெறிந்தாய் உககிர கனலாலுடல் தகிகக் - அவர் முத்தை யிறக்கிட வேண்டினரே.

ஊக்கமுடன் திருநீற்றால் சூடு தனித்து வேபபிலை தடவி முத்தை யிறக்க பூவுலகம் சென்று பொல்லாரை வதைத்து பூப்பாரம் தீரு மென்று மறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்கலாதேவி நீபெற்ற முத்துகக்ளோடு திக்விஜயம் செய்யச் சிந்தைகொண்டு முத்துமாரி யவதார மெடுத்துமே இப்பதியில்வந்து வமர்ந்து கொண்டாய்.

ஏந்திழையுனக்குக் கற்கோவில் கட்டி ஆண்டுதோறு மானித் திங்களிலே எழுந்தருள கதவுதிறந்து கும்பம்வைத்து தவநிலைதேர் கப்பல்சடங்கு செய்வார். ஐயமின்றி பத்தாசி முறைப்படி சடங்குகள்

19

பச்சைகட்டி பலி நெற்குத்து சர்க்கரையமுது கன்னிமார் பூசை திருக் குளுத்தியும் திறம் படச் செய்திடுவார்.

ஒய்யாரமாக கப்பல் தேர்ச ் சடங்குகளில் ஊர் வலமாக நீ வருகையிலே ஊர் வதீயெங்கும் மகர தோரணங்கள் உன் சோபனம் சொல்லியே யாடிடுமே.

ஓதரிய வித்தகியே யொவ்வொரு வாசலிலும் கும்பம் வரவேற்க வாழை கமுகு கன்னல்வழிகாட்டிட ஆயிழை மகிழ்ந்தூர்வலம் வருவா(ய்).

பொற் கரகத்தோடு பிரம்பும் வெண்ணீறு வேபபிலையும் கைப்பிடித்து பொன்னுடுக்கு கண்டசரமாலை கொண்டு பொன்னனை மாரி யூர்காத்திடுவா.

சுந்தர செந்திரு செங்குந்தமாரி துர்க்கனை வென்ற கற்பகமாரி பந்தமுடனாரை நகரைக் காக்க பவனி யூர்வலம் வந்திடுவா.

காமனை வென்ற கருமாரி வாமனன் தங்கை மகமாரி நோய்பிணி போக்கி யூரைக்காக்க நேயமுடன் தேரேறி வலம்வருவா.

பஞ்சமா பாதகரை வதைத்து பக்தி செய்வோர்கடு வரமளிக்க செந்தமிழ் முத்துமாரி சித்தமோடு எங்க;ரைக் காக்க வந்திடுவா.

வையக மேழும் தளைத்தோங்க பொய்யாது மாரி பொழியவைத்து மைவிழிக் கண்ணழகு மாரி மெய்யன ் போடுர் வலம்வந்திடுவா.

கன்னியர் கருப்பூரச் சட்டியேந்திவர மின்னனையார் கவரி வீசிவர பொன்னடியில் பூமாரி பொழிந்திட தண்டை யலம்பத் தாயார்வருவா.

ஆனிமாதம் பிறந ் தாச்சிதடி மாரியம்மானை ஆடிட வாருங்கடி கூடுங்கடி ஒன்று கூடுங்கடி கோதைமுத்துமாரி கோவில் வாசலிலே.

செங்குந்தர் வதீமேவி யமர்ந்தவடி சிங்கவாகன மேறி வருபவடி குங்குமப் பொட்டு அழகியடி மங்களம் சொல்லிக் கொண்டாடுங்கடி.

20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்நாடு நீங்கி வங்கக் கடல்தாண்டி தேன்நாடு மட்டு நகரி லமைந்த பொன்னான வாரை நகரி லமர்ந்த கண்மணி மாரி புகழ் பாடுங்கடி.

சர்க்கரை யமுது தாயாருவந் தேற்று மிக்க மகிழ்வோடு கன்னிமார்பூசை முடித்து திருக் குளுத்தியாடித் திருப்தி கொண்டு தேவராளர் பலியேற்று மலை யேறிடுவார்.

வங்கக் கடலிலே கும்பம் சொரிய செங்குந்தர் மக்களோடு சென்றுதிரும்பி வந்தமர்ந்து வைரவர் பூசை முடித்து செந்திரு தித்திக்க வரமளிப்பா.

மங்களமே சிவ மங்களமே நீலகண்ட விநாயகருக்கு மங்களமே மங்களமே சிவ மங்களமே முத்துமாரி பாதமும் மங்களமே.

ஆரைநகர் வடபத்திரகாளி கும்மிப் பாடல்

காப்பு

கணத்தலைவன் காத்தான் குடியிருந்த காத்தான்குடி பார்த்தமர்ந்த ஆத்தாள் படபத்திர காளிமேல் கும்மிபாட கடமர்த்த கணபதி காப்பாமே.

அடைய லியந்திரத்தி அழகுமின்ன மடைதனிலே அவமுகம் விளங்க படையலிலே பூசை முறையிலங்க தடையின்றிக் காளி வரமருள்வா.

ஆவணித் திங்கள் முன்னிலவு முதல் ஆறு நாட்கள் பின்னிருட்டு வரை ஆரைநகர் பட பத்திர காளிக்கு ஆண்டு தோறும் சடங்கு செய்வார்.

இருடிகேசன் தங்கை காளியாத்தா - திரு நீலகண்ட பிள்ளையா ராசியோடு நிரைநிரையாக வதீ எங்கும் - நிறை கும்பம் விளங்க எழுந்தருளவ்வா.

ஈதென்ன அதிசயம் எனவியக்க வதிதோறும் தோரணங்கள் ஆடி சோபனங்கள் கூறி வாழ்த்துரைக்க ஆரணங்காள் காளி தான்வருவா.

உன்னதமாய்க் காளி நடைபயில மின்னலென முகவொளி பரவ அன்னையாலய மின்விளக் கொளிர விண்ணகத் தாரகை தனைமறைக்கும்.

21

ஊரே சேர்ந்து பின்னாலே வரப் பாவாணர் பாடல் தேனாய் யினிக்க பூசகர் உடுக் கொலியில் மயங்கி பூசுரர் பூமழை பொழிந்து நிற்பார்.

எண்ணஎண்ண இனித்திடவே யடுத்த நாள அதிகாலை வேளையிலே அடியார் கூட்டம் அலைமோத அன்னைகாளி திருக்கதவு திறப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏந்திழை காளி ஆத்தாவிற்கு பகல்வேளை அபிடேக ஆராதனைதான் சாத்துப்படியிலே பூத்துக் குலுங்கியே சாமுண்டி காளி சித்தியளிப்பா.

ஐஸ்வரியம் அளி காளியாத்தா வரீகம்ப மதைக் கொண்டுவர பேச்சியம்மாள் ஆலயம் சென்று வரீபத்திர காளியா மீண்டிடுவா.

ஒடப்ம்நிறை தயாபரி காளியாத்தா திங்களன்று திக ளொளியாள் வதியுலாவரப் பூரண கும்பங்கள் பாதைநெடுகிலும் வரவேற்று நிற்கும்

ஓலைப்பூ மணத்தழகி அவ காலத்தை வெண்ட காளிகாதேவி ஆரைநகரை காக்க வென்று - தன் கோலவிழி திறந்து பார்த்திடுவா.

ஔடத மாயிரு காளியர்க்கு பௌவியமாக நெல் நேர்ந்துவைத்து உள்ளன்போ டுலக்கை பற்றிக்குத்திட வெள்ளமென மகளீர் முனவ்ருவார்.

உலக்கை ஒலியின் ஓசைகேட்டு தலவிருட்ச மமர் குயிலினங்கள் கிளைக்குக்கிளை தாவிச் சந்தோசத்தால் இனிக்கும் குரலிலே பாடிடுமே.

ஓமகுண்டலத்தில் அக்கினியைக் கூட்டி பூசகர் ஆகுதியைச் சொரிந்து யாகம் வளர்த்துப பூசையியற்ற யோகம் அனைத்தும் காளிதந்திடுவா.

ஊருக கெல்லாம் உணவளித்துக் காக்கும் ஊழி கால வொளிக் காளியர்கக் நோன்பி ருந்து நோர்ப்புக் கடடிட தீங்க கற்றித் தினம் காத்திடுவா.

வடக்கு முகக்காளி பூம் பட்டாடை புனைந்தடையல் அமர்ந்து பாம்பணி பராபரியாள் காளி பூத்திருக்கா பொலிவுடன் புன்னகைத்து.

22

கடல் நீராடக் காளிசெல்கையிலே படையணியாய் மடந்தையர் வருகையிலே தேவகன்னியர்கள் வந்தனரோ வென்று ஆவலுடன் பார்ப்போர் அதிசயிப்பார்.

பன்னீராயிரம் மடை பரப்பி ஏற்றிடு தீபவொளியாலே தீமுட்டி அன்னை மகிழ்ந்திட நறுவளித்து பின்னரே காளிகக் பலிகொடுப்பார்.

புதனன்று அதிகாலைப் பூசையிலே பிரணவ சொருபிக்கு பலியதிட்டு வரீகம்பச் செந்தணல் கொண்டு பூசகர் தீக்குழி மூட்டிடுவார்.

தீமிதிக்க வென்று காப்புக்கட்ட் திடமனதோடு மக்கள் வந்துநிற்பார் பாலகரும் பயபக்தியோடு வந்து ஆலயம் தன்னில் தவம்கிடப்பார்.

தீவளர்கும் தீக்குழியைக் காளி பூக் குழியாகவே மாற்றிடுவாள் தீது நினைக்கும் தீயவரையவ தீ கொண்டே சுடடெரிப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயபக்தியோடு பக்தர் போற்றிநிற்க பொன்னனை காளியும் புன்னகைக்க பொன்னுலக மெனப் பொற்பதியொலிக்க பொற்றொடி மாதர் குரவையொலிக்கும்.

படைநகர்த்தி அசுர குலமளிகக்கும் படபத்திரகாளி பதி யெங்கும் மடைநீர் பெருகி வழிவதுபோல் இடையறாதே காந்த சக்திபரவும்.

கசடு தீர்த்தறும் காத்திடுவா - காளி அசடர் உறவை அறுத்தெறிவா பஜனை பாடித் துதிக்க - நாளும் நிஜசொரூபம் காட்டி யருள்வா.

சாதிபேத வெறி ஓட்டிடுபா - நீதி நெறி நிலைத்திடச் செய்திடுவா ஆதியந்தம் ஆனவதான் காளி ஓதியுணர் வோர்கக்குப் பேறளிப்பா.

பட்டொளி தெறிக்கும் முகவழகுகண்டு துட்டரெலாம் தூரநடுங்கி நிற்பார் கெடட் குணமுடையோரைத் திருத்தி கடடியணைத்து கருணை பொழிவா(ள்).

கூத்தனோடு கூடி யாடிடுவா - காளி பூத்த புதுமலராய்ச் சிரிப்பாள் வாழ்வில் விடியலை எமக்களிகக் படபத்திர காளியும் வந்திடுவா(ள்).

23

வங்கக் கடலது சோபனம் - கூற மட்டுவாவி மீனினம் பாடடிசைக்க சிங்க வாகனம் மேலமர்ந்து - காளி எங்களைக் காத்திட வந்திடுவா(ள்).

அடையல் அமர்ந்திடு காளியர்கக் ஆயுதபூசை தான் நிகழ்த்தி ஆனந்த வலலி அடிதொழுதடியார் நேரில் தரிசித்து வழிபடுவார்.

அடிபணியு மனைவருக்கும் - காளி வாரி வரங்களைத் தான்வழங்கி நித்திலம் தன்னிலே நிடூழிவாழ மெத்தமனம் வைத்துக் காத்திடுவா(ள்).

விண்ணைப் போல வியாபித்திருந்து கண்ணைநிமை காப்பதுபோல காத்து பண்ணமைத்துப் பாடு பாவலரையென்றும் அன்புட னேயவரை வாழவைபப்பாள்.

மங்களமே வெற்றி மங்களமே மலையரசன் மகளுக்கு மங்களமே மங்களமே வெற்றி மங்களமே படபத்திர காளிக்கும் மங்களமே.

காளி அம்பாள் கும்மி

காப்பு அக்கினி தன்னில் அவதரித்த - காளி ஆற்றிய அற்புத லீலைகளை செந்தமிழால் கும்மி செப்புதற்கு ஸ்ரீமுத்தி விநாயகர் காப்பாமே.

அன்பு வடிவம் ஆனவளே - காளி அறம் வளர்த்த அன்னையாளே துன்பக் கடலிலே மூழ்கிடமுனன்ரே தோணியாய் வந்து துணைபுரிவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயன் சகோதரி துரந்தரியே - காளி மானது வலையிலே பட்டதுபோல் மயங்கித் தியங்கி வருந்துகின்றோமம்மா மனோ கரியே காத்திடம்மா.

இன்ப சுரங்களாய் இனிப்பவளே - காளி இனிய சுகங்கள் அளிப்பவளே ஊனஉட்ருகி உயிர் ஓயமுன்னே - வந்து உன்னொளி ஒருமுறை காட்டிடம்மா.

ஈஸ்வரி திரிசூலி காளிகாம்பா பாடிப்பதம் தினம் நாடிடுவோம் தேடும் நலம்யாவும் கூடிவந்திட உத்தர காளிநீ உதவிடம்மா.

24

உலகாளும் ஓங்காரி உத்தண்ட - மாகாளி ஆனமீக நல்லறம் காத்திடுவாய் நஞ்சைபுஞ்சை நிலம்நன்றாய் விளைந்திட நாச்சியே நல்லருள் தந்திடம்மா.

உதிர்ந்திட்ட கூந்தலில் பூ - அழகா? உதிரிப்பூ எமக்கு யாரிருக்கா? குயிலுக்கு கருங்காகம் இணையாகுமா? நல்லாட்சியில்லா நாடு தளைத்திடுமா?

உண்மைகள் உள்ளத்தி லுறங்கிடுமா? - என்றும் உருட்டும் புரடடும் நிலைத்திடுமா? வன்மைகள் செய்து மறைப்பதனாலே - உலக கண்கள் இருண்டு மறைந்திடுமா?

ஊராரின் நோய் தீர்க்கும் வேபபிலைக் - காரியே ஏழக்டல் தாண்டி நீ இங்குவந்து ஆறோடு நீரா ஊர்செழிக்க வைத்து மண்ணுயிர் வாழ வைத்திடம்மா

எத்திக்கும் நன்மை நயந்திடுவாள - காளி நீறெடுத்துப பூச ஓடிவருவாள் பூ மெத்தையாகத் தீயிலிருப்பவளே தோள கொடுத்தெம்மைத் தூககிவிடம்மா.

எல்லோரும் வாழ உலகம் படைத்தாய் சாதி பேதமென்று கலகம் படைக்கார் நல்மரத்தில் பாய்ந்த நஞ்சுருவி போல எல்லை பறித்துத் தொல்லை கொடுக்கார்.

ஏழை எளியோரைக் காப்பவளே - காளி வேபபிலையால் பிணி தீர்ப்பவளே அன்பாயுருகு மடியவர் அகத்திலே - நீ என்று மிருந்து அருள்பவளே.

ஐக்கியம் கொண்டு அடி பணியத் - தினம் நற்கதி நல்கி நலம் அளிப்பாய் மிக்க மனம் வைத்து நெக்குருக - வந்து விக்கினம் போக்கி வினை களைவாய்.

ஓட்டலர் துட்டர் களோட்டிடு தேவியே ஓமெனும் மந்திர ஜெய தாம்பிகையே ஏமாப்பு பிணி மூப்பெமை எட்டமுன்னமே கோல விழித் தாயே காருமம்மா.

ஓங்கார ஒலியாக ஒலித்து நிற்பாள் பாங்காகச் சிங்கத்தில் உலா வருவாள் அகங்காரம் அகற்றி யரவணைத்து தினம் சுகங்க ளளித்துத் துணை யிருப்பாள்.

கண்ணீர்க் கடலிலே தத்தளித்து கதறுகிறோம் நித்தம் பிரிவையிடடு வண்ணமலர் உன்பாதம் தொட்டு வணங்கிடு எமக்கு வரமளிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25

கல்வி செல்வம் கீர்த்தியளிப்பவளே வலல்மை தந்திடு வாலாம்பிகையே சக்கரத்தால் புகை சாய்ப்பவளே வரீமும் வெற்றியும் தந்திடம்மா.

காசினி ஏழும் கலந்தவளே - காளி மேதினி யெங்கும் நிறைந்தவளே பாதிப் பிறையணிபரம னுடலிலே பாதி யாகி வறீறிருப்பவளே.

காலத்தைப் போராடி வென்றுமே - நீ காளிகா தேவியாகி நின்றாய் உளள்த்தை வென்றிட எங்களுக்கு வலல்மை தந்திட வந்திடம்மா.

கிண்கினி சிலம்பொலி கேடப்வளே - காளி கண்ணில் கனல்ககக்ப் பார்ப்பவளே வினை வருமுன்னே காப்பவளே பிணி வந்தபின்னாலும் தீர்ப்பவளே.

கீதை உபதேசிகன் தங்கையரே - காளி கீர்த்தி நிறைந்திடு நர்த்தகியே கோளும் கொடுங்கூற்று மணுகாமல் நாளும் துணையாக வந்திடம்மா.

குவலயம் தன்னில் உலாவருவாள் - காளி வானாகி வளியாகித் தீயாகிடுவாள் நீரின் நடுவே நிலம்படைப்பாள் - அவ நித்திய சத்திய வித்தகியாள்.

கூன்குருடு குரை நோய்களெல்லா - மம்மா மாண்புடன் போக்கி வரமளிப்பாள் விதிமிதிப்பாள் ஜென்ம வினையறுப்பாள் வரீமாகாளி சோதி உருவெடுப்பாள்.

கெடட் துடட்ர்களை வெட்டிடுவாள் - காளி கொட்டும் முளக்கதில் குடியிருப்பாள் நத்தனம் ஆடி நயக்கவைபப்ள் - அவள் கைத்தலம் தந்தமே காத்திடுவாள்.

கேடுவந்தால் ஓடி வந்திடுவாள் - காளி கேண்மையோடு கை கொடுத்திடுவாள் பாடும் பாவலரால் பாவாகி - அவ நாடுமுழுதும் உலா வருவாள்.

கையிலே சூலம் தரித்திருப்பாள் - காளி அக்கினி ஏந்தியும் ஆடிடுவாள் ஏழக்டல் மூவுல காண்டிடுவாள் - என்றும் ஏதி லார்க்கு உதவிடுவாள்.

கொடியோர் கொடுமுடி சுடடெரிப்பாள - அவ சக்கரங்கள் ஆறில் ஆடிடுவாள் உலகைப் படைத்தால் விஸ்வரூபத்திலே உயிர் படைத்தால் சக்திலீலையிலே.

26

கொற்ற மிருந்தும் குடியிருந்தும் - காளி சுற்ற மிழந்தோம் சுகமிழந்தோம் சொந்த மண்ணி லகதியுற்றே - தினம் நொந்துசிந்தும் கண்ணீர் தெரியலையோ?

கோடி பேதமவள் தான்எடுப்பாள் - காளி கும்பிடுவோர் நெஞ்சில் குடியிருப்பாள் ஓதும் மறை நாதமாகிடுவாள் - சக்தி ஊழ்வினை நக்கி உபசரிப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்டை யில்லாப் பம்பரம்போல் - எம்மை ஆட்டு விக்கின்றார் ஆள்பவர்கள் கேடக்த் துணிந்தால் துரோகி - என்று பூட்டி வைத்து வாட்டுகின்றார்

தலைக்கு மேலே வெள்ளம்மேவு - முனனே பிழைக்க நினைப்பதில் தவறுஏதுதாயே? உலைத்தல் நிலைக்கும் உலுத்தர் - களை தொலைத்து சுகவாழ்வு தந்திடம்மா.

நிலவின் ஒளியிலே பேதமுண்டோ? - பூக்கும் மலரதன மணத்திலே சாதியுண்டோ? காற்று மழையில் மதமமதையுண்டோ? - ஏற்க எண்ணாத நெஞ்சங்கள் நஞ்சுதாயே.

நெஞ்சுகத்ள நீதியை ஒளித்து - வைத்து பஞ்சிட்டுத் தீயணைக்க நினைக்கும் வஞ்சக பஞ்சமா பாதகரைத் - தாயே வெஞ்சமர் செய்து வென்றிடவா?

பட்ட மரத்து மனதுடையோர் - கேடு கெடட்லைய வைத்து வாட்டுகிறார். சட்டமும் தண்டிக்க வில்லையம்மா - நீ கைவிட்டால் நாமெங்கு செல்வதம்மா?

புயல்காற்று மழைக்குப் பயநதொளிந்து - நாமும் செயலாற்றும் கடமை மறந்தாலே வயல்பூத்துக குலுங்கிப் பொலிவுறுமா? உன் கருணையில்லாது அருள்வருமா?

தாயை மறந்தால் நல்வாழ்வு - உண்டோ? தாய்நாட்டை வெறுத்தா லுயர்வதுண்டோ? கறந்திட்ட பால்முலை புகுவதுண்டோ? சுயவுரிமை இழந்திங்கே வாழ்தல்நன்றோ?

வெள்ளையர் ஆட்சியை ஒருங்கிணைத்தார் - கள்ள உளள்த்தார் உரிமை தரமறுத்தார் எல்லைகள் பறித்து இடரிழைத்து தொல்லைகள் செய்கின்றார் வலல்வளே.

வையகம் செழிக்க வளம்கொளிக்க - தாயே நையப் புடைப்பாய் வஞ்சகரை சாந்தி சமாதானம் என்றும்தளைத்திட பாந்தமுடன் அன்பு காட்டிடம்மா.

27

மங்களமே ஜெய மங்களமே சுபேசனன் தங்கைக்கு மங்களமே மங்களமே சுப மங்களமே காளியாத்தா கழல் மங்களமே

3. காவடிப்பாடல்

காவடியாட்டம் பண்டுதொட்டு முருக வழிபாட்டுடன் இடம்பெற்று வந்தாலும், காலப்போக்கில் அனைத்து ஆலயங்களிலும் விநாயகர், சிவன், திருமால் என்று ஆண் தெய்வங்களுக்கும் கண்ணகை, மாரி, பேச்சி, காளி, கடலாட்சி, காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி யென்று பெண் தெய்வ வழிபாட்டு ஆலயங்களிலும் காவடியெடுக்கும் நேர்த்திக் கடன் நிறைய நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றது. ஆரம்ப காலத்தில் இடும்பன் என்பவனே சிவகிரி, சந்திரகிரி என்ற மலைகளைக் காவடிபோல் தூக்கி வந்தானென்றும், தான் தூக்கியது போல், காவடி தூக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமடியாரக் ளுக்கு அருள்புரிய வேண்டுமெனக் கேட்டு க் கொண்டதாகவும் மரபுழவழிக் கதையாகக் கூறப்படுகின்றது.

கன்னத்திலும் முதுகிலும் வேலும் செடில்களும் குத்தி காவடியாட்டம் ஆடுவார்கள். வேல காவடி, பால் காவடி, பன்னீர்க்காவடி, புஸ்பக்காவடி, சந்தனகக் ாவடி, சரப் பக்காவடி, சேவல்க்காவடி, தூக்குக்காவடி, புரதட்சணைக்காவடி, முள் மிருத்தடிக்காவடி, தூக்குமரக்காவடி எனப் பல வகையான காவடிகள் பக்தர்கள் நேர்த்தியாக வேண்டுதல் வைத்து ஆலயங்களுக்கு எடுத்துச் செல்வது உற்சவ காலங்களிலும், சடங்கு காலங்களிலும் எடுத்து வருவார்கள். அன்றியும் ஆனந்தக் காவடியென்று பல பக்தர்கள் கூடியாடி எடுத்து வரும் வழக்கமும் தற்போது காணக்கூடியதாகவுள்ளது.

இக் காவடிகள் எடுத்து வரும் போது காவடிச்சிந்து, காவடிப்பாடல்கள் பாடப்படுவது வழக்கம். எமது பிரதேசத்தில் எல்லாத் தெய்வங்களுக்கும் காவடிப்பாடல் பாடியே எடுத்து வருவார்கள்.

விநாயகர் காவடிப் பாடல்

அவனியிலே ஆதியோடு அந்தமுமாகி அலைகடல் நீராகி நிலமும் நீயேயாகி அளவற்ற அனைத்துருவும் தாங்கி வேறாகி அணைகடந்த அன்புருவாகி மனிதம் வாழ அறம் தளைக்க கருணை வளள்லாகி யென்றும் அடியவர்க்கு எளியோனாய் அருளளித்து காக்கும்... ஐங்கரனே உன் மான்மியம் அடியேன் பாட... அனுதினமும் அருளளித்து காருமையா...

ஆற்றங்கரை அரசமர நிழலேற்று மகிழ்ந்து வறீறிருந்து வினைகள் போக்கிக்காகக்ம் வித்தக வினோத முத்தான மூலமுதலுமான தத்துவ ஞான சகலகலா வல்லவ உத்தம உச்சிட்ட கணபதியாய் நித்தம் விளங்கி அத்தனை உயிர்களையு மணைத்து நின்று... அரனார்க்கு மம்பிகைக்கும் மகனுமான... மாமாவின் முகத்தான் மலர்ப்பாதம் போற்றி...

28

இவ்வுலகில் மானிடப்பிறவி யெடுத்துநாளும் இறுமாப்போ டிடரிழைத்து வாழும்வாழ்வு இனிமேலும் எந்தனற்கு வேண்டாமையா பிணிமூப்புப் பொய்கக்ரம்பை தன்னைநீக்கி பழிபாவம் மலிவாகி மனிதம் மழுங்கிமாழும் அழிவாளர் அதிகரித்து அநீதியாளும்... இழிவான இப்புவிநீக்கி யுன்னை நானும்... மறவாது வாழவை மகோற்கடகணபதியே...

ஈரேழு உலகிலு முனககிணை யில்லையென பூமாதைப் புணர்ந்திட்ட புயல்வண்ணப் பெருமானாகி நாமாது தனை மணந்த நான்முகனுமாகி போர்மாது நயக்கும் என்தோள் கோமானுமாகி நீராகி நிலமாகி நெருப்புமாகி வாயுமாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டத்துப் பிண்டங்க ளெல்லாமாகி... மண்ணாகி மக்களனைத்துப் பொருளுமான... பேரான பிரணவ குஞ்சரனே போற்றி...

உன்னுடைய கீர்த்தி தன்னை உலகோர்க் குணர்த்த உபாயமளித்து தேவர்கள் துயர்துடைகக் உமையாள பாகனிடம் உயர் வரங்கள்பெற்று உலகனைத்தும் ஆட்சிசெய்த துராசனனை உன்னதமாய்ப் பஞ்ச வதனம் கொண்டு வககிர துண்ட கணபதி வடிவமாகி... உககிரமுடன் அவுணர் குலமழித்து... உடுண்டி விநாயகர் ஆனாய் போற்றி...

ஊரை ஏய்த்து ஊதாரியாகி வாழ்ந்து கூடாத கூட்டம் கூடிக் குழிபறித்து கேடுகொண்ட ஜென்மமாய்க கீழோனாகி நாடுவிட்டு நாடுசென்று நயவஞ்சகனாகி தேடுவாரற்றுத் தெரு வதியில் கிடந்தவென்னை பட்டறிந்து கெட்டறிந்து ஊகித்துணரவைத்து... சித்தமது தெளியவைத்து திருவடி தந்துகாத்த... சித்தி விநாயகதேவே பாதம்போற்றி...

எத்தனையோ தப்பிதங்கள் வாழ்வில் செய்து இரக்கமற்ற வேடதாரியானோரையும் கண்கலங்கும் காலமதில் காப்பேனென்று சென்னியிலே திடமுடனே எடுத்துச் செப்பி செய்பிழை யுணர்ந்து திருவடி பணிபவர்கக் தீங்கில்லை சிறப்பே உண்டென்றுகூறி... உண்மை உணரவைத்து பாங்காயணைத்து... ஆங்காரம் அடக்கும் ஐங்கரனே போற்றி... ஏதிலார்கக் இரங்கிடு ஏரம்பனே யென்றும் நீதிதவறி நேர்மையற்ற செயல்கள் புரிந்து ஏனாப்புக்கொண்டு பிறரை ஏய்ப்போரை ஏதனவன் மேதினியில் விட்டுவைத்ததில்லை ஏற்றம் பெறமானிடர் வகுத்த வழிமாற்றி ஏற்றத்தாழ்வு எப்பிறப்பிலுமில்லை யென்றுணர்த்தி... ஏகபாவ மனமளித்த வரேகத்துவமடைய... ஏரம்பனே யென்றும் அருள்வாய் போற்றி...

29

ஐயமின்றி உன்தனையே ஆனைமுகனே உளள்க் கோவிலிலே உயர்பட்த்தேயிருத்தி இதயத்தாழியிலே குருதியான நெய்யையூற்றி உயிராலேதீபமேற்றி யுணர்வெனு மொளிபரப்பி அறுநதிடா அன்புஎனும் கயிற்றால்கட்டி அறுகாரம்சூட்டி வழுவாமல் வழிபடுவேன்... நற்குஞ்சரமே நானுனக்கே யடிமையையா... ஐங்கரனெ அடியேனை ஆளுமையா...

ஒருக்கமற்ற கஜமுகன் இன்னல் தாங்காது ஒன்று சேர்ந்து தேவர்கள் உன்னைநாட ஒப்புதலுடன் ஒய்யாரமாக அசலன் மீதிலேறி ஒற்றைக் கொம்பொடித்தவன் மேலேவீச என்றுமிறவா வரம் பெற்றிருந்த வசுரனஞ்சி ஓடியே மூஷிகமாக மாறியுன் னடிபணிய... அக்கணமே யவனை வாகனமாக்கியேறி... ஒயில்நடனமிட்ட விநாயகரே போற்றி...

ஓகாரமாய்ப் பெருவயிறு விளங்கும் ஓச்சமிகு அங்குசக் கையழித் தொழிக்கும் வமீபுசெய் கொடியவர்கள் விதியை மாற்றி மாண்புற வாழவைகக் வழிவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகரே செருவிதர்கள் குலமழித்து குவலயம் காக்க கெருடவாகன மருகா கெதியில் வா!வா!... கேண்மையுடன் அப்பமுப்பழம் அளிப்போம்... கஜானனனே காத்தருள வா!வா! அபபா...

அஞ்ஞானமகற்று மக்ஞான நாசகரா போற்றி மெய்ஞான மூலகரவக்ர பூஷ்யனே போற்றி சகமோக சங்கார சகடவிநாயகா போற்றி சகலவியாபி சாலவகன மருகா போற்றி வன்மையகற்று வன்னியிலை பூசகனே போற்றி எண்ணியதை யீடேற்று மெலிவாகனனே போற்றி... நெஞ்செரிப்பு நீறாக்கும் நெடுமால்மருகா போற்றி... பெற்றுத்துவசன் பிளள்ளயேயுன் தாள போற்றி...

ஆரையம்பதி அரசடிப்பிள்ளையார் காவடிப் படல்

ஆரைநகர் மத்தியிலே நன்குயர்ந்து படர்ந்த அரசடி நிழலமர்ந்த பிள்ளையார் மேல் அன்போடு செந்தமிழ் காவடிப் பாடல்பாட ஆசை கொண்ட அடியேனைப் பாடவைக்க அடியெடுத்துக கொடுத்து வரு வழுவகற்றி வரிதோறும் நிறைவுறத் திருவளிக்க... நலமோடு நாவினிலே நாமகளேயிருந்து... பலமதைத் தந்திடம்மா கலைமகளே...

ஆனைமுகனே உன்தனக் கூரில்நான்கு ஆலயங்கள் அமைத்து வழிபட்டாலும் அரசடிப் பிள்ளையாருன் திருவடிபணிய வருமடியாறுறுமன மகிழ்வு வேறெங்குமில்லை அனுதினமும் அடிதொழு அடியவரைநாழும்

30

அனுசரித்தணைத்துக் காக்கும் கருணையாலே... பட்டிதொட்டி யெலாமிருந்து பக்தர்வந்து... மன்றாடி மனமுருகி வழிபடுகின்றாரே...

வெள்ளை மணல்பரப்பு கம்பளம் விரிக்க நல்லரச மரக் கிளைகள் குடைபிடிகக் உளள் மதைக் கௌவ்வியுன் உருவிழுக்க பிள்ளை மனதாகி தந்தையுனைப் பணிய சில்வண்டு தேனுண்டு ஙகாரம் இசைகக் அள்ளுண்டு வுன்னருள் வெளள்ம் பரவ... படர்மலர்க் கொடிகள் பூத்துக் குலுங்கு... அடரரச மரநிழலமர்ந்த ஐயாபோற்றி...

தும்பிக்கை யானுனைத் துதிப்பவர்கசு் நம்பிக்கையோடு நலமழித்துக் காத்து சோதனையால் வேதனைக் குள்ளானோரை போதனை செய்துண்மை புரியவைத்து கேடட்வரம் கொடுத்து கைதூக்கிவிட்டு வாட்டம் போக்கியுன் நாட்டம்காட்டும்... பரமசிவ பார்வதி மூத்தபாலச்சந்திரரான... அரசடிப்பிள்ளையாரே உன்பாதம் போற்றி...

மாந்தமதால் வயிறூதும் பிளள்ளைகட்கு பாந்தமுடன் பெற்றோர்கள் நேர்திவைகக் காந்தமது இரும்புதனைக் கவர்வதுபோல் ஏகதந்த கணபதியே நோய்தணிப்பாய் பொல்லாத நோய்பிணி களையவேண்டி எல்லோரு முனன்ாலயம் வலம்வருவார்... வலல்ரல் சூழ்குளிர் நீரோடைமேவும்... நல்லரசடிப் பிள்ளையாரே பாதம்போற்றி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடரென உரைத்திடு நீசர்களிங்கு ஆடிடுநாடகப் பாத்திரங்கள் பார்கக் வாடிட வதைத்து வேதனையூட்டுதையா நாடினோமுன் துணைதுவிமுக கணபதியே ஓடிடுவொரே நிறவிரத்தத்தின் இரத்தங்களின்று சாடிடுசாதிபேத குரோதங்கள் கொல்லுதையா... மனிதம் நிறைந்தோரே உயர்ந்தோரென்ற... உண்மை உணர்த்திட ஓடிவந்திடையா....

தந்திர நெஞ்சரை தண்டிக்கும் கணபதியே இந்திரனுக் கருளிய மந்திர கணபதியே நைந்திடு எங்களை கைதந்து தூக்கிவிட பைந்தமிழ்ப் பாவலர் நாவுறை பாலகணபதியே வந்து துதிப்போர் நெஞ்சுறை வல்லவையே நிந்திப்போரையும் சிந்திக்க வைத்திடுபவரே... அரனார்க்கு மகனான ஆனைமுக வைங்கரனே... அரசடிப் பிள்ளையாரே திருவடி போற்றியையா...

தாயும் தந்தையும் தானே உலகமென்று நேயமுடன் காட்டி ஞானக்கனி பெற்றவரே நோய்நொடி யுனைத் தொழுவோர்க் கணுகாது ஓட்டி நல்வழி காட்டிடு கணபதியே ஊருதோறும் கோயில்கள் இருந்திடட்டாலும்

31

நூறுவருட தொன்மை மிக்க இப்பதியின்... உன்னருள் ஆட்சி உலகெலாம் பரவுதையா... எமையாளும் அரசடிப் பிள்ளையாரே போற்றி...

சந்தமறை ஆகமங்க லனைத்தும் நயே பந்தமகற்று மனந்தரு குணபாலன் நயே வேதமுதலும் நயே நாதமுடிவும் நீயே ஓதற்கரிய ஓங்கார பிரணவமும் நீயே மூர்த்தியாகி தலமாகி தீர்த்தமுமாகி கீர்த்திபெறு அண்ட பிண்டங்களும் நீயே... வார்த்தையால் சொல்லொண்ணா வடிவங்களாகி... ஆத்திகமளிக்கும் பிள்ளையாரே போற்றி...

அகத்தியர் கமண்டலத்தே அடக்கி வைத்த காவிரியை காகமாகி கவிழ்த்து விரித்தாய் ஔவைபிராட்டி கொடுத்த பால்தேன் பருப்புண்டு திவ்விய முத்தமிழ்தனை அளித்தாய் நம்பியாண்டார் அமுதளித்த பிரசாதமுண்டு நல்லினிய ஞானகானம் பாடவைத்தாய்... பிரணவப்பொருளான ஆனைமுக வைங்கரனே... அரசமரமமர்ந்த அரசடிப் பிள்ளையாரே...

கலைஞானத் திறவுகோலே கஜமுகனே அலைபாயும் மனமடக்கும் ஆதிதேவே விலைபேசி மனிதம்வாங்கி நீதிகொன்று வலைவசீ விண்மீன் பிடிக்கஏங்கும் நலிவான மனமுடையோர் நாணிக்கோண தெளிவான சித்தமுடையோ ராக்கிவிட... கலியுகக் கநத்னுக்கு உதவிய கணபதியே... குயில்பாடு அரசடியமர் பிள்ளையாரே வா!வா!...

சிவனாரின் தேரச்சுடைத் துனையுணர்த்தி எக்காரியமும் உனைநினைத்தே ஆற்றவைப்பாய் முனன்வனே உன்வலியால் முடியாத துளதோவையா முக்கண்ணனே யானை முகத்தவனே கொம்பொடித்து மகாபாரதம் எழுதி வேதவியாசருக் கருள்பாலித்த விநாயகனே... பாபுனைந்து பாடிவரும் அடியேன் முன்னே... பாலவிநாயக அரசடிப் பிள்ளையாரே வா!வா!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரையாட்சராரவுன் திருவுருவ தத்துவமுரைக்க - இத் தரையில் எந்தனகக் வித்தக மில்லையையா திருமுகம் முக்கண்மாலை சிவனைக் குறிக்க திருவடிகள் கிரியா ஞானசக்திகளை விளக்க பேழை வயிற்றுக்குள் உலக அடக்கம்காட்ட வேளைதோறு மைந்தொழிலை ஐங்கரங்களாற்ற... பெருச்சாளியுன் பரிபூரண நினைவையூட்ட.... அருமருந்தான அரசடிப்பிள்ளையாரே போற்றி...

பிள்ளையாக என்றும் நீயிருப்பதற்காக எள்ளுருண்டை அப்பமவல் மோதகம் கடலை முக்கனி சர்க்கரையளிக்க சிவபோதம் விளங்கும் உண்டுமகிழ்ந்து பொழிமதநீரில் கருணை துலங்கும் எம் மலராரம் சூட்டினாலும் ஏற்றாளுமையா அறுகாரம் சூட்டினாலே உருகி ஏற்பாயையா...

32

சென்னியிலே குட்டித் தோப்புக் கரணமிட... முனவ்ந்து நிற்பாய் அரசடிப் பிள்ளையாரே...

விநாயகாவுன் திருமேனியிலே தெய்வகீம் கண்டோம் அவயவங்கள் தத்துவங்கள் உணர்த்தக் கண்டோம் அங்கு சக்கை யருளளிகக்க் கண்டோம் பாசமேந்தும்கை நேசமாய்ப் பிணைக்கக் கண்டோம் செபமாலை சிந்தனாசக்தியை வளர்க்கக் கண்டோம் அபயக்கரம் பாதுகாப் பளிக்கக் கண்டோம்... தும்பிக்கை நம்பிக்கை யூட்டக் கண்டோம்... அரசடிப் பிள்ளையாரடியில் அமைதி கண்டோம்...

முப்பத்து முன்று முகூர்த்த தத்துவங்கள் சித்த மெல்லாம் சிந்திக்க வைகத்தையா முப்பழமோடு மோதக மேந்து துதிக்கை பால கணபதி கோலமதைக் காடடுதையா வேதாள வில்லம்போடு பதினா றாயுதமும் வரீ விநாயகர் தீரத்தைக் காட்டுதையா... பொழு தெழு கேணியில் தீர்த்தமாடு... அழகுநிறை அரசடிப் பிள்ளையாரே போற்றி...

புதுக்குடியிருப்புக் கண்ணகையம்பாள் காவடிப் பாடல்

புதுகக்ப் புறமலி புனித புதுகக்டியிருப்பில் புதுமையளிக்கப் புகார்தாண்டிப் புகுந்த புடப்பாகன் தங்கை நற்காரிகைக் கண்ணகை புண்ணிய திசை நோககிக் கோவில்புக்கி புருடார்த்த மீர்ந்து ஈழவரைக் காக்க புடப்பாஞ்சலி செய்து புகழ்ந்து பாட... புலமகள் நாவிலிருந்து வரும் வழுவகற்ற... புயங்கன் மகன் வாரணமுகத்தான் காப்பு...

அன்னையவள் ஆலயத்தின் சூழல் தன்னை அன்பர்கள் அறிந்திருத்தல் இன்பம் தானே இந்திரன் திசையில் வங்கசாகரம் ஆர்க்க புண்ணியதிசைக் கண்ணாமுனைப் பிள்ளையாரு சிறாம்பியடிப் பிள்ளையார் நிருதியிலிருந்து பரிதிகாட்ட விக்கினேஸவ்ரர் வாயு மூலையிலிருந்து வாழ்வுகூட்ட.... நற்கல்விச் சாலை தெற்கே நல்லறிவையூட்ட... பொற்பு நிறை கண்ணகையாலய அற்புத அழகிதுவே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரணங்காள் ஆலயத்தை எழிலோங்க வைகக் ஆணித்தரமான தூணெழுப்பி மாபிள்கள் பதித்து ஆசாரவாசல் கோலாகல மண்டபம் அமைத்து ஆனந்த அழகூட்டும் தீந்தை தீட்டி ஆழிமழைக் கண்ணன் சோதரியாள் ஆத்தாள் ஆரோகணித் திருந்து அருள் பூப்பூத்து... ஆங்கார மகற்றி ஆசாபாச மடக்கி... ஆத்திகம் காத்திருக்கும் அழகு பாதம்போற்றி...

இளங்கோவின் சிலப்பதிகாரச் செல்வி நீயே இரத்தின தீபகிழக்கீழ இறைவி நீயே இரவை நீக்கவந்த ஒளிமிகு தீபம்நீயே இரக்கமற்ற அரக்கர் குலவாட்சி அறுப்பவள்நீயே

33

இன்னிசையாய் என்றென்றும் இனிப்பவள் நீயே இன்பக்கரையில் சேர்க்க வந்ததோணி நீயே... இருடிதொழு இருநிதிச் செல்வம் நீயே... இகலோக பரலோக ஈஸ்வரியும் நீயே...

ஈஸ்வரனார் தேவி ஈஸ்வரியாள் ஆலயத்தில் ஈடேற்றம் மிக்க இளைஞர் கூட்டத்தார்க்கு ஈடேற்ற விருத்தர் சேர்ந்து வழிகாட்டிநிற்க ஈடில்லாத் தொண்டாற்றி எல்லைசுத்தி செய்து ஈதென்ன சோபிதம் என்று அதிசயிக்குமாறு ஈறில்லான் சத்தியர்க்கு எழிலான பந்தலமைத்து... ஈர்மூன்றுநாள சடங்கிற்கேற்ற ஒழுங்கு செய்ய... ஈன்றாள் நின்கதவு இனிதாய்த் திறப்பார்தாயே...

உத்தமிக்கு பெத்தான் குடியார் கதவுதிறக்க உகந்த முறையனைத்தும் மகிழ்ந்து கருமமாற்றி உயர் விக்கினேஸவ்ரர் ஆலயத் திருந்தம்பாளை உடுக்கொலியோடு மிடுக்காயெழுந் தருளப் பண்ணி உண்ணாமுலையாள் ஆலயத்தே கொண்ணடு வந்து உரிய பத்தாசிப்படி பணிவிடைகள முடித்து... உன்னத பெத்தான்குடியார் உபயமதில் சடங்குசெய்ய... உளள்ன்போடு ஊரையே காப்பாய் தாயே...

ஊக்கமுடன் பணிக்ககுடியார் இரண்டாம் நாளிரவு ஊழியான் பத்தினியாள் சடங்கு தன்னை ஊகித்துணர்ந்து ஊரே மெச்சும் விதமாய் ஊற்றுக் கண்ணாயிருந்து சிறப்போடு செயலதாற்ற ஊர்மக்கள் நேர்த்தியாக வன்று தொடக்கம் ஊர் சிறாம்பியடிப் பிள்ளையா ராலயமிருந்து... ஊணொறுத்து உடல் வருத்தி முள்ளும்குத்தி... ஊங்குதலோடு காவடி எடுத்து வருவார்தாயே...

எல்லையற்ற மூன்றாம் நாள் பகற்சடங்கை எழிலுடனே படையாட்சி குடியார் செய்ய எழுச்சியுடன் கலிங்ககுடி இரவுச் சடங்கை எண்ணமதில் நிலைக்கும் வண்ணம் செய்ய எட்டுத் திக்கிருந்தும் மக்கள் வந்துகூடி எண்ணியதை ஈடேற்றிடு அன்னையர்க்கு... எழிலணங்கார் கருப்பூரச்சட்டி எடுத்து வர... எல்லோருக்கும் நல்லாசி நல்குவாய் தாயே...

ஏகத்துவமளிக்கும் ஏந்திளையாள் கண்ணகைக்கு ஏற்புடை நான்காம்நாள் பகற்சடங்கு ஏற்றமுறு கோப்பிக்குடியார் இனிதாய்ச்செய்ய ஏகபாவத்துடன் இரவுக் கல்யாணச்சடங்கை ஏற்றம்மிகு வரீயப் படையாட்சிகுடி ஏந்திழைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைப்பொருட்கள் பட்டுடனே... ஏந்திவருவார் திருவிளக்கு ஒளியூட்ட... ஏற்புமிகு பூப்பந்தலுடன் சன்னிதிக்குத்தாயே...

ஏதுமறியா ஏழை எண்ணமதில் மின்னும் ஏந்திழைமேல் பாந்தமுடன் காவடிப்பாடல் பாட ஏக்கமுடன் பொய்யான வாழ்வில் புலன்செல்லாது ஏதிலார்க கென்று மிரங்கிடு மனம்தருவாய் ஏடனையோடுதிர நெய்யூற்றி என்னையே தீபமாக்கி

34

ஏகன்தேவி நின்பாதம் கொண்டேன் தஞ்சமென்று... ஏய்க்காது கைகொளள்ளவு கருணை தருபவளே... ஏந்தெழில் நாயகியே உன்பாதம் போற்றி...

ஐந்தாம்நாள பகல் சடங்கு பணிக்கனார்கே ஐயையே இரவு பச்சைவெட்டு படையாட்சியார்க்கே ஐக்கியத்தோ டகமகிழ்ந்து சிறப்புடனே ஐதிக முறைப்படி அன்னையவள் சரிதம்மின்ன ஐயமறத்தோரண அலங்கார மமைத்து ஐம்பொறி யடக்கி அன்புடியார்கள மயங்கி... ஐமுகனதேவி அற்புத வரலாற றியவைத்து... ஐஸ்வர்யம் மெய்யடியாற் கருளவ்ாய் தாயே...

ஒருமை மகளே உன்சன்னிதி முற்றமெங்கும் ஒயிலுடன் தமிழிசை புரண்டு தவண்டு ஒருங்கே காவடி கரகத்தேன்பா மிதந்து ஒன்மைச் சிங்காரத் தமிழே யதியளிக்கும் ஒன்னல பாடகர் பூபாளத்தை மரணகீதமாக்கி ஒவவொரு நாளும் முராரி பாடவைக்க... ஒருவினையால் இதயமது கனத்திடம் மாறி... ஒறுவுடனே அழுது துடிப்பதறியாயோ தாயே...

ஓதும் தமிழ் வேதமாய் விளங்கும்தாயே ஓங்கார நாதமாகி ஒலிப்பவளும் நயே ஓதவனம் தாண்டி வந்த உத்தமித்தாயே ஓங்குபுகழ் புதுகக்டியிருப் பன்னை நீயே ஓது வாருள்ளத் துறைபவளே தாயே ஓய்வின்றி உலகை யியக்கும் சக்திநீயே... ஓர் மதியறியா உன்மகன் பாடலுக்குநீயே... ஓசமிகு மன்றில் துணையாகி வாழ்த்துதாயே...

கண்ணியமான உண்மை வெல்லும் நிச்சயம் கடிவேதம் சொல்லும் தத்துவம் செத்ததோ! கண்ணீர் வெந்நீரில் கருவுற்ற முகிலே ஈழமண்ணில் கனத்த மழைத்துளியாகி முத்தமிட ரத்தவாடை கனலாகச் சுட்டெரிக்கச் துயர் கொண்டு கலங்கியே வேரற்ற மரமாக விழுந்தபின்பு... கண்துடைப் பாயமும் வணீர்கள் விந்தைகண்டும்... கடட்ழகி கண்ணகையே எமைக் காப்பதெப்போ...

காற்றே திசையே கடலே உனக்கோர்சேதி காபப்வரே கன்னமிட்டால் தப்புமோ நீதி காருண்ய பாதையிலே அசோகன் செய்சேவை காண்தகு புனன்கைதேவன் வீடென்பதைத் துறந்தார் காலந்தோறும் ஆயிரம் சொன்னோ மமைதிநாடி காதகர்கள் அனைத்தும் மறுத்தாரழிவினை செய்து... கார்மேகம் காணாத பயிராகப் பதறுகின்றோம்... காலகாலன் தேவியரே காத்திட வாதாயே...

கிண்ணர விசை விண்பரவக் கிழக்கீழமெங்கும் கிண்கிணி கிணியெனக் காற்சிலம் பொலியெழுப்ப கிரிசனார் தேவி பங்கய முகமிலங்க கிளி மொழிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் கரகமெடுத்தாடிவர கிளைத்துக் கருப்பூரச்சட்டி புகை வான்மறைக்க கிளுகிளுத்து மரமநதி துள்ளியோடி மறையும்...

35

கிளைப்புப் பொதும்பர் விளங்கு புதுகக்குடியிருப்பு... கிருஷ்ணன் தங்கை அமர்ந்த பதியேதாயே...

கீழ்த்திசையில் கடலார்கசும் அலை ஓசையது கீதமாய்ச் சடங்கு காலயிரவு வேளைஒலிக்க கீர்த்திபெறு கண்ணகை சிலம்பார்க்கு மிசை கீர்த்தனம்பாடித் தோத்திரம்செய் பா அடியசையும் கீற்றாகக் காற்றலையில்வந்து காதுகளில் மோதுவது கீரிடமுத்தமிழ் வித்தகம் முழுவதையும் ஓதிவிடும்... சரீரக அத்தனைக்கும் சிகரம்போல வினிக்கும்... கீதையான்சோதரி ஆலயத்தே பூசகர் செய்பூசைதாயே...

கும்பங்களின் கம்பீர களையான தோற்றத்திலே கும்பிடுவார் அழகுகண்டு ஆனந்தப் பரவசத்தால் குழறியே மெய்மறந்து உன்நாமம் கூறிஅழைப்பார் குன்றின்மேல் விளக்காக நின்று சோதிதன்னை குன்றாத தூயமனத் தாருக்கே காட்சியளித்து குறையாத வரமளித்து நிறைவாக வாழ்வளிப்பாய்... குற்றேவல் செய்து குறைகளை வேண்டிநிற்போர்... குனியாதுவாழ குறைபோக்கி அருள்வாய் தாயே...

கூடிவரும் மக்கள்குழாம் கோவில் வதியெங்கும் கூட்டாக அமர்ந்து கோதையுன் பெருமைமீட்க கூரிய வெளிச்சமது கோடிட்டு காட்டிநின்று கூறிடும் தோரணங்கள் சாதனைக் காதையதை கூசியே விண்மீன்கள் விண்ணொளி வண்ணத்தாலே கூசாதுகோலம் கீறிக்காட்டும் மேகங்கள் வானத்திலே... கூடலன் மன்றேறி சிலம்பு கொண்டு மீட்டநீதி... கூனிக்குறுகித் தவிக்கலாமோ ஈழவரிழந்து நீதி...

கைம்பெண்ணாகி கணவர் பட்டதாலன்று கையுடனே கதிரவனைக் கொண்டுமாமதுரை யழிக்கையிலும் கைகாட்டி ஆணையிட்டாய் பொல்லாதார் பக்கமேபுகுதீயே கைதவன்செய்தபிழை கட்டறுத்த கனல்கண் கண்ணகையே கைகொடுத்துத் தூககிவிட்ட கைஈரம் காயும்முன்னே கைம்பெண்களான பெண்ணினங்க லெண்ணிலடங்கா... கைகொடுத்துக் காகக் உனையன்றி வேறுயாரு... கைராசிக்காரி காத்திடவா பொய்யாது நீதி...

கொக்கரித் தெக்களிப்போ ரெம்மின மழிக்க கொல்லடண்டகள் இரத்தத்தை உறிஞ்சும் வேளை கொற்றவையே தட்டிவிட்டுத் தற்காத்தல் தவறோ? கொடியவர்கள் கூரையிலே நெருப்பை மறைக்கும் கொடூரம் கண்டும் வாழாதிருத்தல் முறையோ? கொழுந்து விட்டு வளர்விஞ்ஞானம் போரைநாட... கொத்தடிமை கூடாதென்று மெய்ஞ்ஞானம் அமைதிதேட... கொன்றைசூடி தேவியே நடுநின்று காத்திடம்மா...

கோபாலன் தங்கையே புதுகக்குடியிருப்பு அமர்ந்த கோகனத மதிமுகத்து கோமள வலலியாளே கோட்டை கொத்தலங்கள் கேடக்வில்லை யம்மா கோடிசொத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலாகல வாழ்வும் வேண்டாம் கோரிடும் வரமதென்றும் உன்னிடம் ஒன்றேயம்மா கோபம் கொள்ளாது முகம் கோணாமல்நயே... கோடிமாதவம் செய்து கும்பிடுவோம் தாயே...

36

கோரியே ஈழவரையன்றும் சுதந்திரமாக வாழவைப்பாயே...

சங்கரியாள் திருக்கோவில் சடங்குகாணச் சனங்கள் எல்லாம் சந்தோச சாகரத்தில்மூழ்கி சத்தியத்தின் வித்தகியாள் சன்னிதானம் கூடி சமரசமாய்ச சக்தி பாதம் சரணாகதியாகி சங்கத்தமிழ் சங்கீர்த்தன சங்கீதம் பாடி சமர்ப்பணமாக மனக்கமல மலரைச் சூட்டி... சக்தினிபாதம் தம்மை நிதம் பற்றவேண்டி... சக்கரத்தான் தங்கை பாதம்நிதம் பணிவார்தாயே...

நஞ்சுப் பொதியை உளள்த்தேவைத்து என்றும் நல்லவராக வஞ்சகப் புகழ்சசி உதட்டில்கொண்டு நலமோம்பி வாழ லாபக்கணக்கை எண்ணி நடலைநிறை அமாவாசை அகத்தின ராலின்று நலிவுற்றுப் பொலிவிழந்து வாடும் ஈழவரை நட்டாறில்விட்டுப் பரிதவிக்க வைகக் மெட்டபப்ரை... நவனீதன் தங்கையாளே முகமூடி கிழித்தெறியும்... நன்னாளது எம்வாழ் நாளில் வருமோதாயே...

புராதன மாமதுரை மாநகரில் பிறந்ததமிழ் புரவலன் தென்னவன் மடியிலே தவழ்ந்ததமிழ் புரையோர் சங்கத்துணையில் வளர்ந்த தமிழ் புலவர் சபைபுகுந்து புதுமைக்கவி கண்டதமிழ் புதுகத்டியிருப்புக் கண்ணகை கைக்கொண்ட தமிழ் புலம்பெயர்ந்தும் செந்தமிழர் போற்றி வளர்க்கும்தமிழ்... புல்லார் புன்னெறி புறவாழி புகுந்தமிழ்ந்துபோகாது... புருசோத்தமன் தங்கையே புறங்காத்தருள தாயே...

பூரணைப் பால்நிலவு பொழிகின்ற நிலாவொளியும் பூட்டிய மின்குமிழ்களின் வர்ணப் பேரொளியும் பூம்பநதல் தோரணத்தில் பட்டுத் தெறிக்கையில் பூமியெங்கும் பொன்னதனை உருக்கி வார்த்து பூரணமாக மின்னுநவரெத்தினங்கள் சேர்த்து கோர்த்து பூபாலன் தங்கை புதுக்குடியிருப்பு ஆலயத்தே... பூச்சரமாக்கிப் போட்டனரோ இவ்வூ ராரென்று... பூரணியாள் குளுத்தி காணவந்தோர் கதைக்காரம்மா...

பெத்தான் குடியார் பெருமனச் சித்தம்வைத்து பெருமையுடன் வைகாசித் திங்களன்று ஒத்து பெண்ணனை ஆலயத்தை பொன்னிலங்கு புத்துலகாக்க பெருவியப்பளிக்கும் பக்தர்கள் கண்கள் மலைத்து பெருநெறி பற்றிப் பூம்பந்தல் கட்டி பொலிவளித்து பெருமாள் தேவியின் வேப்பிலையாரம் தொடுத்து... பெருநிரல் நிரையாகத் தொங்கதென்றல் முகர்ந்து... பெருமருந்தாகத் திக்கெட்டும் பரவிப்பிணி தடுத்திடும்தாயே...

வங்கக் கடலலை வாழ்த்தொலியும் மட்டு வளவாவி மீனர மகளீர் பாட்டொலியும் வந்து தினம் சடங்குகால இரவுகளில் வளர்தல விருட்சங்கள் தலை தடவ வரும்மகிழ்வால் மரக்கிளைகள் அசைந்து தென்றல்வீச வடிவமைத்த தொங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோரணங்கள் நடனமாட... வடிவழகி கண்ணகை ஆலய அழகதனை... வடிவமைத்து வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதுதாயே...

37

மாதவன் சகோதரியாள் மடவளாகம் வந்துசூழ்ந்து மாதங்கியாள் திருக்குளுத்தி மாட்சிகண்டு களித்து மானசகீமாகத் தங்கள் துன்பதுயர் எடுத்துரைத்து மாதவத்தாள் மதரணி மஞ்சரீப் பாதமலர்பணிந்து மாண்புடனே மாதங்கியாள் மான்மிய முரைத்து மாலவன் தங்கை மனமகிழ்ந்து வரமளிக்க... மாதர்கள் குரவையொலி நாற்றிசையும் ஒலிக்க... மானசி விக்னேஸ்வரர் ஆலயம் சென்றமர்வாள்...

வம்மிக்கேணி முத்துமாரி காவடிப் பாடல்

ஆரைநகர் வம்மிக்கேணி முத்துமாரி அன்னையவள் காவடிப் பாடல்பாட செம்மொழிச் செந்தமிழ் எமக்கு ஈர்ந்து சிந்தையிலே வழுவாது துணையிருந்து தங்கத் தமிழ் சொற்பூக்கள் தந்து தந்தி முகத் தொந்திக் கணபதியோடு... பூமகள் சரஸ்வதியும் நாவிவிருந்து... பிழைகள் வராது காக்கக் காப்பதாமே...

அறநெறில் அணுவளவும் வழுவாது அன்புநிறை மக்கள் சூழ்ந்த ஆரல்கீரை மருங்கிலடர்ந்து வளர் வம்மிமர நிழலமர்ந்து பெண்ணொருத்தி தொழிலாற்று வேளை அவ்விடம்வந்து அமர்ந்த ஆச்சொருத்தி அடியாளுக்கு... ஏற்ற இருப்பிடம் இதுவேயென்று கூறி... பார்த்தவுடன் மறைந்துவிட்ட மாரித்தாயே...

ஆரவாரித் தப்பெண் அதிசயத்தைக்கூற அவ்விடம் வந்தமக்கள் அடிச்சுவட்டைத்தேட அன்னைநீ அமர்ந்திருந்த தடம்தவிர அங்குவேறு அடையாளம் காணாது ஆதிசக்தி முத்துமாரி யெனறுசொல்லி அவ்விடத்தில் கோயிலுக்காகப் பநத்லிட்டு... வெள்ளிதோறும் விசேட பொங்கலிட்டு... உளள்ன்போடு பணிந்தார் மாரித்தாயே...

இககேணி தன்னிலே அந்தவேளை இனிய நறுமணம் கமழ்மலர்களான அல்லி முல்லை செந்தாமரையுடன் அருகினிலே அடர்தாழை மலர்மணமும் இதமாக நாசினிக்கின்ப இதமளிகக் தென்றலடி வருடிவரு தண்ணளியில்... வம்மிமர நிழலமர்ந்து அடியவர்க்கு... வரமளித்துக் காத்திருக்காய் மாரித்தாயே...

ஈரேழு உலகமாளு மாரியர்க்கு இயற்கை எழில் சூழ்ந்திலங்கு இப்பதியும் பொற்பதியாய் விளங்கி இந்திர திசையினிலே கடலும்முழங்க கன்னியர்கள் கருப்பூரச்சட்டி ஒளியும் காளையர்கள் ஆடிடு காவடியும்கண்டு... விண்ணவர்கள் புதுமலர்கள் தூவிவாழ்த்த... வம்மிமர நிழலமர்ந்தருளும் மாரித்தாயே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38

உந்தனகக் ஆனியிறுதி ஏழு நாட்கள் பந்தமுடன் சடங்கு செய்ய பக்தியோடு திருக்கதவு திறக்கும் தினமதன்று வந்திடுவர் மக்கள் வானகத்து வெளளிகளாக கூடிடு பெண்கள் குரவை யொலியும் சேவிக்கும் தவிலின் தேனிசையும்... பக்தி யருளோட்டத்தைப் பாய்ச்சி விட... பரபக்தியோடுன் பாதமதைப் பணிவோம் தாயே...

ஊரெல்லை காவல் செய்ய இரண்டாம் நாளன்று மாரி கும்பமெடுத்து வர மாவிலை மகர தோரணங்கள் கட்டி வதியிரு மருங்கும் நிறைகும்பம் வைத்து கும்மி தாலாட்டுக் காவியங்கள் பாடி கூட்டம் கூட்டமாய் பூசகர்கள் சூழ்ந்து... தேவியின் சாதனைச் சோபனங்கள் கூறி... தேங்காய் வெட்டிப் பலி கொடுப்பாரம்மா...

எக்கலாதேவி மூன்றாம் நாள் சடங்கன்று எழுந்துவரக் காத்தான் வழிமறித்து நிற்க கழுமரத்தில் காத்தானைக் கட்டி விட்டு முத்துப் பெறநீ தவம்புரியும் காட்சி பக்தர்களைப் பரவசப் படுத்தும் மாட்சி மாரியுன் நாமமதை ஓதிவழிபட்டு நிற்பர்... தவம் முடித்து அகம்மகிழ்ந்து அதிகாலை... காத்தானுக்குப் பள்ளயம் படைத்திடு வாயம்மா...

ஐவிரலி இதலழகு மாரியன்னையர்க்கு ஐயன்மதுர வரீனாலயம் இருந்து மடைப்பெட்டி எழுந்தருளப் பண்ணிவர செந்தமிழ்க் காவியங்கள் செவிக்கினிக்க தேவாதிகள் ஏற்றபடி கூடியாடிவர வானவேடிக்கை வண்ணமது மனங்கவர... நெஞ்சமெலா முன்நினைவால் நிறைய... வந்திடுவர் மக்கள் ஒன்றாய்க் கூடியம்மா...

ஒப்பம் நிறைய தேவராளர் ஆடிவர படுகள மிட்டு ஒருசாரார் மகிழ வெட்டியாட்டு பூசாரிகள் திறன் மிளிர தொண்டர் தண்ணீர் கொண்டுத்தி நிற்க விண்ணவர் கண்டு மனம் களித்து பூமாரி பொழிந்து வாழ்த்தி நிற்பது... அகக் கண்ணில் அழியாத கோலமாகி... உனைநினைந் துள்ள முருகும் தாயே...

ஓதிடு அரோகராச் சத்தமோடு சேர்ந்து உடுக்கின் ஒலி மிடுக்காய் அதிர தேங்காயைப் பாங்காகப் பற்றி அங்கப் பிரதட்ஷண மெடுத்தடியார்வர வார்த்தை யின்றி மக்கள் உருகிவர சேர்த் தணைத்து திருவருள் அளித்து... காத்திடு கருணைக் கடல் மாரித்தாயின்... சேத்திரமாம் வம்மிக்கேணி வாறோமம்மா...

39

ஔவும் சௌவுமான மாரியன்னையர்க்கு ஆனிப் பௌர்ணமி நாளதனறு எங்குமே மஞ்சள் மணம் மிஞ்சவசீ பொங்கல் பானைக ளெங்கும்நிறைய திங்களாள் திக்கெட்டும் முகங்காட்டிமகிழ தங்கமெனத் தாயார் சன்னிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்க... மந்திரங்கள் மாமறையோ ரோதியுரைக்க... சுந்தரமாய்த் திருக்குளுத்தி ஆடுவாய்தாயே...

சர்க்கரை அமுதினிலே பங்கு கொள்ளச் சன்னிதியில் கன்னியர்கள் வந்து நிற்க சந்தோசமா யணைவரோடும் சேர்ந்து பொங்கலோடு பூசை யுகந்தேற்று அதிகாலை வங்கக் கடலுக்குச் சென்று தீர்த்தமாடித் திரும்பி வந்து... அன்றிரவு தாளடைகக் மகிழ்ந்து முத்து... மாரி மக்களுக்கு வாழ்வளிப்பா...

கந்தன் காவடிப் பாடல்

அவுணர் குலமழித்துத் தேவர் குலம்காக்க அரனார் நுதற் கண்ணிலாறு பொறிகளாகி அழகுநிறை சரவணப் பொய்கை தன்னில் அணிசெய்த தாமரையில் தவழ்ந்து வந்த கலியுகத்துக கந்தனது கருணை பாட சிந்துதமிழ் வாக்களித்து மனதில் நிற்பாய்... நம்பிக்கை நல்கியே நலமேசெய்வாய் எங்க... தும்பிக்கையான் பாதம் துதிப்போம் நாமே...

ஆதிசக்தி அன்னையவள் ஆசையோடு ஆறுசிறு குழந்தைகளை ஒன்றாய்ச் சேர்க்க ஆறுமுகம் பன்னிரெண்டு கைகளோடு ஆனைமுகன் தம்பியாக அவதரித்தார் பொய்கையினால் சரவணனாய்ப் பெயரும்பெற்ற கார்த்திகைப் பெண்வளர்த்த கார்த்திகேயா... சக்தியுமை தந்தவேலால் வேலனானாய - சுவாமி... சண்முகனாய் வந்திடையா எங்கள் முன்னே...

இனியதமிழ் இளமைகண்டு முருகன் என்றும் இலங்கு நலீமயிலேறி மயூரன் என்றும் இதமாகப் பழநியிலே பழம் நீ என்றும் குன்றுகளில் கோயில் கொண்ட குமராவென்றும் ஆண்டி வேடம்பூண்டு பண்டாரம் என்றும்... கண்கண்ட கலியுக வரதன் என்றும்... தொண்டுசெய்யும் தொண்டர்கள் பணிந்து நிற்கும்... வடிவேலா வந்திடையா எங்கள் முன்னே...

ஈர்மூன்று எழில்படை வீடமர்ந்த வேலா என்றுமே எமையாளும் செந்தூர் கந்தா ஈடில்லாச் செந்தமிழ் மூதாட்டி ஔவை இனியதமிழ் கேடடு மகிழ்மண்டூர் கந்தா இடையூறுசெய் அரக்கரை அழிக்கும் தேவா தடையின்றித் தமிழ்இனத்தை காக்கும் கந்தா... தருணமிது இப்போதே வருவாய் கந்தா... அருமருந்தே வந்திடையா எங்கள் முன்னே...

40

உமைமகனே பிரமாவை கயிலைதன்னில் பிரணவப்பொருள் மறக்க சிறையிலிட்டாய் சிவனுக்கே குருவாகி உபதேசித்து தந்தைக்கு பாடம்சொன்ன சுவாமிநாதா சிவனடியார் சிந்தையிலே சிறந்துவாழும் சிவகுமரா தீங்களித்துக் காப்பாயையா... எங்களது தீவினைகள் போக்கவேண்டும்... கந்தனே வந்திடையா எங்கள்முன்னே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறுசெய்த அரக்கனுக்கு மெய்யுணர்த்த வரீபாகு தேவனையே தூதனுப்ப செருக்குற்ற அரக்கர்கள் அதைமறுக்க விஸ்பரூபம் காட்டியவர் குலமழிக்க தேவர்குலம் சிறைமீண்டு உம்மைவாழ்த்த தேவேந்திரன் தெய்வானை மகளைத்தநதே... தேவசேனா பதியுனக்கு விவாகம்செய்தார்... தீங்ககல வந்திடையா எங்கள்முன்னே...

எழிலான மலைக்குறத்தி வளளி தன்னை தினைப் புனத்தில் பண்டாரமாகி நின்று தேன்தினைமா வேண்டியுண்டு திணறி விக்கி வேங்கை மரமாகிநின்று வியக்க செய்தாய் வேழமுகன் துணையோடு வளளி தன்னை விரும்ப வைத்து காதல்மணம் புரிந்தவேலா... விளையாட்டு வித்தகனே நல்லூர் கந்தா... வேலோடு வந்திடையா எங்கள் முன்னே...

ஏதுமே அறியாத பிள்ளை போல ஏற்றமுற அருணகிரி அங்க மெல்லாம் நாற்றமுறு தொழுநோயால் தொய்ய வைத்து உளமுடைந்து உயிரைவிடத் துணிந்த போது கைகொடுத்துப் காத்தருளி தமிழில் அன்று கந்தரந்தாதி திருப்புகழ் நூல்கள் தன்னை... மனமுருகிச் சிறப்புடனே பாட வைத்தாய்... சுந்தரரே வந்திடையா எங்கள் முன்னே...

ஐயையோ உய்யவழி இல்லை யென்றும் அசுரர்களின் கொடுமையினித் தாங்காதென்றும் இந்திராதி தேவர்கள் பணிந்து சொல்ல ஏகாதசி உருத்திரர்கள் கலங்கள் பற்றி அவுணர்களை திண றடித்து நாசமாக்க வரீமிகு சூரபத்மன் மரமாய் மாற... கூர்வேலால் இருகூறாய் பிளந்த வேலா... நேரிடையாய் வந்திடையா எங்க ளெதிரே...

ஒருகூறு மயிலதாகி உன்னை ஏற்க மறுகூறு முருகாவுன் கொடியில் வாழ சிறைமீட்டுத் தேவர்குலம் மகிழ வைத்தாய் இப்புவியில் எண்ணற்ற தலம் அமர்ந்தாய் தப்பாது நீ புரிந்த விளையாட்டுக்கள் செப்பிடவும் இப்பிறவி போதுமோ தான்... சரச கோபாலனது மருகா வேலா... உரமளிக்க வந்திடையா எங்கள் முன்னே...

41

ஓம்முருகா ஈராறு விழிகள் கொண்ட மயிலேறு பூரணனே உமையாள் மைந்தா பேசாத குருபரனைப் பேச வைத்தே கந்தர்கலி வெண்பாவைப் பாட வைத்தாய் கலியுகத்துக் கந்தனே உன் அற்புதங்கள் கணக்கில்லை எம்கவலை மறையச் செய்வாய்... அஞசேல்என அருள்தருவாய் செந்தில் வேலா... ஆறுமுக வடிவேலா முனனே வாராய்...

ஔவைகக் சுடட் நாவற்பழம் கொடுத்தாய் அருந்தமிழால் அறிவுக்கண் திறக்க வைத்தாய் கதிர்காமத் தலத்தில் நீஅமர்ந்து கொண்டு போர் செய்த சூரசங்கார வேலா தமிழ்ஈழம் எங்கும் பலகோவில் கொண்டு ஆடும்மயில் மீதேறி அருளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவே... வாடும்மடியார்கள துயர் துடைகக் வேண்டும்... ஓடியே வந்திடையா எங்கள் முன்னே...

கருணைக்கடல் கந்தவேளே சக்திவேலா கதிரமலை மீதுறையும் கருணைக்கந்தா சுந்தரனே சுவாமிமலைப் பதியிலன்று தந்தைக்கே பிரணவத்தின் பொருரைத்தாய் பழம்நீயாய் இருக்கையிலே பழம்எதற்கு பழநிமலை மீதமர்ந்த ஞானவேலா... ஆறுமுகம்துலங்க அருள்சுரக்க வேண்டும்... நாறுமலர் மார்பாமுன் வந்திடையா...

தாராள சிந்தையுள்ள உகந்தைக் கந்தா சரீலை வாயிலிலே சுப்பிர மணியா பரங்குன்றில் தெய்வானை கரம் பிடித்தாய் திருத்தணியில் வள்ளி மணவாளன் ஆனாய் திருக்கோயில் திருப்பதிக்கு வேலாய் வந்தாய் சின்னக் கதிராம மண்டூர் உறையும்வேலா... வண்ண மயில் மீதிலேறி இங்குநீயே... திண்ணமுடன் வந்திடையா எங்கள் முன்னே...

கிளிமொழியாள் மானீன்ற வளளிபாகா கீர்த்திபெறு மயிலூரும் செல்வாநீவா சஷ்டியிலே இருந்தால் அகப்பையிலேறும் தத்துவத்தை எமக்குரைத்த சக்திவேலா கந்தசஷ்டிவிரதம் ஆறுநாட்கள் நோர்க்க கண்டபிணி கவலையெல்லாம் மறைந்தேபோகும்... கந்தபுராணமதை மனதில் வைத்தேன்... பந்தவினை பறந்தோட வாராய்முன்னே...

கூடிவரும் கூட்டம் உன் சன்னிதிக்கு கோடான கோடியதை நாமும் கண்டோம் பாடிடும் பாட்டொலியைக் கேட்டு அங்கு ஆடி வரும் காவடிகள கொஞ்சமல்ல நாடி வரும் நன்மைகளை நயந்தளிக்கும் ஈடுஇணை உனக்கன்றி யார்க்கும் உண்டோ... சாடிவரும் பொல்லாப்பை நீக்கும் அப்பா... ஓடோடி வந்திடையா எங்கள் முன்னே...

42

கெட்டழிந்து கீழ் நரகம் வீழ்ந்துழன்று பட்டழிந்து பாளான மரமாய் நின்றோம் உற்றதுணை எம்மை மீட்க யாருமில்லை உகந்தமலை முருகனையே நம்பி வந்தோம் கைத்தலமாய் காவடியைப் பற்றி நாளும் கதறியே அழுது நாம் வருகின்றோமே... கை கொடுத்து காப்பதுன் கடனேயையா... மெய்பொருளே வந்திடையா எங்கள் முன்னே...

கேடுசெய்த அசுரர்குலம் அழித்து அன்று தேடிவந்து தேவர்குலம் காத்த வேலா கோடி சொத்து மாடிமனை கேடக்வில்லை கேண்மையுடன் கேடப்தித்து ஒன்றேயையா கடியநோய் எம்மைப்பிடித்து தாகக்ம் தந்து கொடிய எமன்வந்து எம்மைக் குதறுமுனனே... நாடியெமை உம்மோடு அழைத்துச் செல்வாய்... ஓடியே வந்திடையா எங்கள் முன்னே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைசோர்ந்து மெய்தளர்ந்து காலும் நோக தையல்வள்ளி நாயகனை நாடி வந்தோம் ஐயாநீ அமர்ந்த திருக் கோவில்தேடி விலாவெழும்பு நறுநறுக்க முள்ளும் பாய்ச்சி உளநாகமும் விருவிருக்க அலகும் குத்தி பதைபதைக்க முள்ளாணிச் செருப்பும் போடடு... பாவ வினை பறந்தோட வந்தோமையா... பரிவோடு வந்திடையா எங்க ளெதிரே...

கொடிமுடியைக் கொண்டிலங்கும் குமரவேளே பொடிநடையாய் உன்பதிக்கு வருவதற்கு அடியேனும் நடைபவனிக் கூடிவந்தேன் கொடியபல விலங்குநிறை காட்டினூடே தடியூன்றித் தள்ளாடும் பண்டாரம்போல் துடியிடையாள் வள்ளிமுனனே வந்தாற்போலே... கடிமணப்பூ மாலைஅணி கந்தவேளே... காட்சிதர வந்திடையா ஏங்கள்முன்னே...

கோடான கோடி மக்களோடு நானும் கோயில் சுற்றிக் கும்பிட்டு நின்றேனையா தேன் கலந்த திணைமாவில் விளக்குமேற்றி தேவார திருப்புகழும் பாடி நின்றேன் பாவியெந்தன பாவவினை அகலச் செய்து ஆவியது என்னை விட்டுப் போகும்முன்னே... தாவிவந்து உன்காலடிக்குச் சேர்க்க வேண்டும்... மேவியே வந்திடையா எங்கள் முன்னே...

கௌரியன்னை அனைப்பில் வந்த கந்தவேளே மாய வலை அகப்பட்ட மீனுமாகி குவலயத்தே கோல் இழந்த குருடனாகி அவதியுற்று அல்லல் பட்டு அலைகின்றேனே உலைபட்ட மெழுகாகி உருகி உள்ளம் நிலையில்லா வாழ்விது என்றுணர்ந்தேன்... விலையற்ற செல்வம் உன்பாதம் என்று... வருகின்றோம் வந்திடையா எங்கள் முன்னே...

43

பிறர் நலனை ஒருநாளும் கருதமாட்டேன் உருப்படியாய் எவருக்கும் உதவ மாட்டேன் நல்லவர்கள் உள்ளமே கோவில் என்று இதுவரையில் உணராது வாழ்ந்து வந்தேன் தறிகெட்டு வாழ்ந்த என்னை தடுத்தாய்நீயே தடைக்கல்லே வாழ்நாளில் படிக்கல் என்று... உடைத்து நீ காடடியது உண்மையையா... படைத்தவனே வந்திடையா எங்கள் முன்னே...

வருந்தியே உமைஅழைக்கும் அடியார் தன்னை வருத்துதல் உமக்கழகோ வள்ளி பங்கா தமிழ் கேடக் ஔவையிடம் ஏகினாயோ புகழ் பாட அருணகிரி வந்திட்டானோ அண்ணனின் துணை நாடிச் சென்றிடட்டாயோ ஆதிசிவ சக்தியிடம் போய் விட்டாயோ... எங்கிருந் தாலும் சுகம் தரு வாயையா... காங்கேயா வந்திடையா ஏங்கள் முன்னே...

சித்தம்நிறை சிவபால உனையே நாளும் முத்தமிழால் பாடி நாம் பணிவோமல்லால் சத்தியத்தின் வித்தகனே உமையாள மைந்தா வேறுவித சிந்தனைகள் எதுவும் இல்லை இப்புவியில் உள்ளவரை எப்போதும் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பிதங்கள் செய்யாமல் காகக் வேண்டும்... பச்சைமா மயிலேறும் ஆரைநகர்க் கந்தா... இச்சையுடன் வந்திடையா எங்கள் முன்னே...

குன்றுகள் தோறுமே நீ குடியிருப்பாய் குறவள்ளி தன்னைக் கூடிக் குதுகலிப்பாய் நின்றாடு மயிலேறி நீ பறப்பாய் வண்டாடு மலர் மாலை நீதரிபப்பாய் திண்டாடும் எங்களை நீ தேற்றுதற்கு உன்னையல்லால் வேறுதுணை உண்டோ ஈழத்... திருச் செந்தூர் உறைகின்ற திருமுருகா... அருள்தரவே வந்திடையா எங்கள் முன்னே...

எக்காளம் இடடுஇடர் இழைத்த சூரர் முக்காலமுனர் கந்த வேலால் வெந்தார் திக்கெட்டும் காத்துவரும் சக்தி வேலால் தீயபுத்தி எம்மை அணுகாதே காத்தாய் சித்தமதில் உமைநிலையாய் நிறுத்த வேண்டும் அத்திமுகன தம்பியையே துதிக்க வேண்டும்... அறுபடை வடீடைய அரனார் மைந்தா... அறுமுகனே வந்திடையா எங்கள் முன்னே...

சித்தாண்டிக் குடியமர்ந்த சிவபாலன் நீ ஈழத்துச் திருச்செந்தூர் வடிவேலன் நீ தாந்தா மலையுறை ஸ்ரீஸ்கந்தன் நீ மண்டூரில் வாழுகின்ற மயூரன் நீ ஆரைநகர் மீதமர்ந்த அழகு கந்தா கல்லடியில் கோயில் கொண்ட சுப்பிரமணியா... உகந்தமலை வறீறிருக்கும் உமையாள் மைந்தா... உவந்திங்கு வந்திடையா எங்கள் முன்னே...

44

விண்ணவர்கள் துயர் தீர்த்த வேலாபோற்றி கன்னியர் இருவர் நீங்காக் கந்தாபோற்றி வஞ்சனைகள் செய்பவரை வதைப்பாய் போற்றி சஞ்சலங்கள் தீர்த்து வைக்கும் சரவணாபோற்றி ஏறுமயில் ஏறிவரும் எழில் வேலாபோற்றி கூறுமடியார்கள் குறை குறைப்பாய் போற்றி... ஆறுமுகமான பொருள் அளிப்பாய் போற்றி... ஆரைநகர் அமர்ந்தருளும் அழகா போற்றி...

கண்ணன் காவடிப் பாடல்

கிருதயயுகத்தில் நரசிம்ம வடிவம் எடுத்தாய் கிரேதா யுகத்தில் ரகுவம்ச ஸ்ரீராமனானாய் துவாபர யுகத்தில் கிருஷ்ணா யவதரித்தாய் கலியுகத்தில் கல்கி அவதாரம் எடுத்து அதர்மம் அழித்து தர்மம் தளைக்கவைகக்கும் அச்சுதன் லீலைகளைக் காவடிப் பாடல்பாட... ஆனைமுகவா வுனைஅனுதினமும் துதிப்பேன்... அருளளித்து வழுவகற்றிக் காருமையா...

அண்ணன் கம்சன் தங்கை தேவகிக்கு ஆண்குழந்தை பிறந்தால் தமக் கபாயமெனறு அஞ்சிக் கணவனுடன் தேவகியைச் சிறையிலிட ஆண்குழந்தை பிறக்க அகம்மகிழ்ந்து வாசுதேவன் அன்றிரவே ஆயர்பாடி கொண்டு செல்ல மழைபொழிய ஐந்துதலை நாகம் குடைபிடிகக்... செல்வழியில் யமுனையாறு வற்றி வழிவிட... யசோதை மடிதவழ்ந்த யசோதரா போற்றி...

ஆயர்பாடி வடீதோறும் வெண்ணை திருடியுண்டாய் கோவியரோடு கூடி விளையாடி நின்றாய் குழலிசைத்து கோவினங்கள் கூட வைத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறும்பிழைத்து கோகுலத்தைக் கலங்க வைத்தாய் வெண்ணையுறி யறுத்து உரலிலே கட்டுண்டு மண்ணுண்டு உலகை வாய்க்குள் காட்டி... கொல்ல வந்த பூதகி முலைப்பாலுறிஞ்சி... கொல்லுவித்த கோபாலா பாதம் போற்றி...

இந்திரன் இறுமாப்போடு ஆயர்களை இந்திர விழாவெடுக்காது தடுத்து நிறுத்த இடிமுழக்கம் மின்னலோடு கல்மழை பொழிய புயலதனை ஏவிவிட்டான் தன்வலிமை கூட்டி இடருற்ற மக்களெல்லாம் ஏங்கி நிற்க கோவர்த்தன மலை பிடுங்கிக் குடைபிடித்து... கொடுமை செய் இந்திரன் செருக்ககற்றி... விழா வெடுக்கவைத்த வீரராகவனே போற்றி...

ஈனமதாய் யமுனை நதியிலிருந்தனறு நஞ்சுமிழ்ந்து இடரிழைத்த நாகபாம்பால் கனமிருக பட்சிகளும் நஞ்சதனாலிறக்க கடம்ப மரத்திருந்து காளியனின் தலைமேல்தாவி களிநடமாடி காளிங்கன் வலுகுறைத்து கர்வமதைக் களைந்தெறிந்து காத்த... கண்டார் வியந்து மனம் கொண்டேதுதி... கமலக் கண்ணனே யுன்பாதம் போற்றி...

45

உம்முடைய மகிமை யறிந்த கம்சன் உனையழிக்க எத்தனையோ யுபாயம்தேட அத்தனையும் அனலிடைப் பஞ்சதாக்கி கன்றெறிந்து கனி கவர்ந்து காட்டி கம்சனை வதம்செய் தீமக்கடன் முடித்து தாய் மாமனானாலும் தரணி மீது... அதர்மம் செய்வோரை அழிப்பேனென்ற... தர்மத்தைக் காத்த தரணிதரனே போற்றி...

ஊட்டமுடன் என்றும் சாகாது நீடுவாழ தேவரோடசுரர் கூடியமிர்தம் எடுக்க மந்தார மலையை மத்தாக்கி வாசுகியை கயிறாக்கிக் கடைய மந்தார மலையது ஆழியிலே அமிழ ஆழிமழைக் கண்ணனிடம் தேவர்கள் சென்று சேதிகூறி வேண்ட... ஆமைவடிவம் தாங்கிக் கடலில் குதித்து... அமிழ்ந்த மத்தைமீட்ட வரிராமா போற்றி...

எத்தர்கள் எவவிடர் ஏற்படுத்தினாலும் எழில் வண்ணா நித்தம் நீகாத்திடுவாய் இரணியன பூமியைப் பாயாய்ச் சுருட்டி சாகரத் தடியில் தலைமறை வாயிருக்க வராகவடிவாகி சப்தசாகரம் புகுந்து அரக்கனை யழித்து பூமியை மீட்க... தேவர் துந்துவி முழங்கி பூமாரிபொழிய... பூவராகப் பெருமானான பூபாலா போற்றி...

ஏய்த்திடு அரக்கர் குலத்தலைவன் ஹயக்கரீவன் நால்வேதங்களை வஞ்சனையால் கவர்ந்தொளிக்க ஊழிப் பேரழிவின் பின் உலகதையாள சாகர சூழ்புவியில் சார்ந்திடு உயிர்பொருளை வைவசுவத மனுவேந்தனுடனே காகக் மச்சவதாரமாகி அரக்கனை அழித்து... வேதங்களை மீட்டு மீண்டும் வாழவைத்த... வேகபப்ள் வாகன காருண்யா போற்றி...

ஐக்கியமாய் அமுதமுண்டு தேவர் வாழ அடித்தளமாய் பாற்கடலை கூர்மமாய்த்தாங்க அமுதம்கடைய அரவம் ஆலத்தைக் கக்க உண்டரனின் கண்டமதை யன்னை அழுத்த அபப்னவன் துப்பா தரிவாயை மூட கண்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றவிஷம் கறைக் கண்டனாகக்... தன்வந்திரி கடலில் அமுதபாத்திர மீய... பச்சைமாலே தேவர்க்கு பங்கிட்டளித்தாய்...

ஒடட்டார அரகக்ர் அமிர்தம் கேடக் ஒய்யார மோகினி உருவம் கொண்டு கண்டார் மனம் கொண்டே மயங்க திண்டாடு அவுணர்களைச் சுண்டி யிழுத்து நெடுந்தூரம் கொண்டோட்டி நிறுத்தி மாயமாகத் திரும்பி வந்த மணிவண்ணா... ஆத்ம சுத்தியோடு பணி யன்பர்கக்ருள்... அரிகேசவனே அடிபணிந்தோம் போற்றி...

46

ஓதிராவுன் பாதம் வுறுதியாகப் பெறுவதற்கு ஓலமிடு மடியேனை யுணரா திருக்கலாமோ? கருவிலே திருவுடை பிரகலாதனுக்கு உருக் கொடுத்த தந்தையே ஊறுசெய்ய நாராயணா உன்நாமம் நவின்று ஏற்ற பாறைமோதிய மட்பாண்ட மாக்கியவரே... துக்கமாங் கவலையாலே நெஞ்சினுள்ளே... துடித்திடு மெம்மைக் காப்பாய் போற்றி...

ஓளவித்தங் கொண்டு ஆங்காரமா யிரணியனும் அரியபெறு தவங்கள் செய்து அழிதலின்றி உடன்பிறப்பை யழித்த உபேந்திரனை யழிக்க உறுதிபூண் டிறுதிவரை முயன்றுநிற்க மகனைக் கொண்டே மமதையடக்க மாலவனே நரசிங்க வடிவம் தாங்கி... பெற்றவரம் பேறாகா வகையில் வதைத்து... பிரகலாதனை மூவுல காளவைத்தாயே...

கண்ணாநீ கடுந்தவம் செய்த காலை மாவலி பூலோக தேவலோகம் வென்று மண்ணுலக விண்ணுலகைப் பங்கப்படுத்த தானம் செய் தருணமதில் வாமனனாகி காலளவு மூன்றடி நிலம் மாவலியைக்கேடக் தாரை வார்த்துத் தருவதாக உறுதிசெய்ய... வானையும் வையகத்தையு மிரடியாலளந்து... மூன்றாமடி மாவலி தலையில் வைத்தழித்தாயே...

காயாம்பூ கண்ணா மாவலி கெண்டியிலே சுகக்கிராச்சாரி சிறு உருக்கொண்டு துளையூடாக தாரையைத் தடுக்க தருப்பையினால் குத்திக் கண்கெடுத்து கொடுப்பார் கொடுக்கக் கெடுப்பார்ககே கேடென்று காட்டியவா கோணார்க் கைக்கோலாகி குவலயத் தலையாது... வானோர் போற்று மாமருந்தே வந்து... தேசிகனாயிருந்து காத்தரு ளுவாயே...

கிருபையுடன் தவசி பண்ணி பரசுபெற்று தந்தை சொல் மந்திரமென்று தாயைக்கொன்று தாயிற் சிறந்த கோயிலில்லையென்று எழுப்பவைத்து பக்திபாசம் பாரோர்க் கெடுத்தியம்ப பரசுராம அவதாரம் எடுத்த பஞ்சவர்ணா உடற் சந்திலே உயிர்ப் பந்தைஒளித்து... சாலவருத்தி தளர்ந் துள்ளம் தடுமாறாது... மாலவனே மதியளி மணிவண்ணா போற்றி...

கீர்த்திபெறு பரசுராம அவதாரத்தால் கார்த்தவீரியனைக் கொன்று பசுக்கன்றைமீட்க அவன்மக்கள் மறைந்திருந்துன் பிதாவைககொல்ல மாண்டிட்ட தந்தைக்காய் தாய் மூவேழுமுறை அகத்தினிலே அறைந்தழ அரசமரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழழ்மூன்று தலைமுறை யழிப்பேனென்றாய்... துணையாக வென்று மெங்களோடிருந்து... மனக்கவலை போக்கு மணிவண்ணா போற்றி...

47

குலவிளகக்காய் கோசலை பெற்றராமா விசுமாமித்திரர் வேளவி காத்தராமா தொல்லைசெய் யரக்கர்குல மழித்தராமா அம்பெய்து தாடகையைக் கொன்றராமா அகலிகைசாப விமோசனம் தீர்த்தராமா பரசுராமர் வில்வளைத்து தவபப்லம் வெண்டராமா... சிவதனுசு வளைத்து சனீதயை மணந்தராமா... பாவியெமைக் காத்திடு பரன்ராமா போற்றி...

கூனிதந்திரத்தால் மணிமகுடம் துறந்தராமா தந்தை சொல்காக்க கானகம் சென்றராமா பரதனுக்குப் பாதச்சுவடி ஈர்ந்தராமா விராட அரகக்னைக் கொன்றராமா சூர்ப்பனகை சதியால் சீதையை இழந்தராமா சுகர்வீ அனுமானோடுறவு கொண்டராமா... வாலிதனை மறைந்திருந்து வதைத்தராமா... ஏழையெமையும் காத்திட வந்திடுராமா...

கெருடனேறு ரெகுராமா புவியில் கொடியவர் கொடூரம் கோலோட்சுதையா பாஞ்சாலிமானம் காகக் சீலைகொடுத்தாய் பார்த்தன் மயக்கம் போக்க கீதைசொன்னாய் பார்த்தசாரதியாகிப் பாரதப்போர் முடித்தாய் பரிதவிக்கும் பாவிகளெமை யெப்படிமீட்பாய்... துளசாரம் சூட்டித்துதிப்போம் தினம்... விடிவெமக்குத் தந்திடவிரைந்து வந்திடையா...

சலீம்மிகு பௌத்தஅவதாரம் எடுத்து புனித சித்தாத்தர் போதனையைச் சிதைத்து சனநாயகப் போர்வை போர்த்து ஏய்கார் கேசவனே கேடு செய்த இராவணனும் போர்க்களத்தில் நிராயுதனாய் நின்ற போது இன்றுபோய் நாளைவா என்றுரைத்தாய்... பாம்பணையில் பள்ளி கொள்ளும் பச்சைமாலே... தேம்பியழு எங்கள் துயர் துடைகக்வா! வா!...

கைகளிலே சங்கு சக்கரம் ஏந்தி பையரவில் பள்ளி கொள்ளும் பச்சைவண்ணா கைகளயர்ந்து கருத்தும் அழிந்து மிப்போ செய்யும் செயல் மறந்து தியங்கிநிற்கோம் மெய்யும் கலங்கி அறிவு மிழந்திங்கே வேழமுண்ட விளாங்கனி போலானோம்... நையாண்டிபண்ணி மற்றோர் நகைக்கு முனனே... கைகொடுத்துக காத்திடவா கமலக்கண்ணா...

கொண்டல் வண்ணா இராவணனைக் கொன்று கொடிமுடியை விபுடனனுக் களித்தாய் பௌத்தமதப் போதனைகளை மறந்துபாரில் பண்ணுகின்ற அட்டகாசச் செயலால் ஒடுங்கி அடங்கி நடுங்கிவாழ விதியாச்சே தயங்கி தியங்கி மயங்கி மதியுமிழந்து... அழிந்தொழியும் அபலையெமைக் காக்க... அச்சுதனே வந்திடையா மெத்த மனதுடனே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிந்தா கோகுலத்தில் பலராமனாகி உழுபடைக் கலப்பை படைகக்லமாயேந்தி உழவுத் தொழிலுக்கு உயர்வளித்துநின்று உம்மடியார் துயர்துடைத்து நின்றாய் ஆணவத்தால் அதிகாரம் மீறுதெங்கும் வணீர்களால் நல்லவர்கள் மெலிகின்றாரே... ஆனதுணை நீயென்று அச்சுதனேநம்பி... ஓடிவருமெங்கள் முன வாருமையா...

கௌரவரைக் கொல்லுவித்த பாண்டவர்நேயா கர்ணன் வலுகுறைத்த கபடநாடகக் கண்ணா உற்றவினை தீர்த்து உறுதுணையாயிருந்து நற்றமிழர் வாழ்வை நலம்பெறச்செய்ய பொல்லாத பாதகரைப் பொறியில்மாட்டிப பூதலமெங்கும் புதுமைகளைக் காடட்... நாராயணநாமம் பாராயணம் செய்தோம்... தேவாமிர்தம் அளித்திடையா திருமாலேபோற்றி...

காரணனேகரிய முகில்மேனியனே கண்திறவாய் வாரணனே இலட்சுமிகாந்தா வடிவம்காட்டு ஆரணனே ரகுராமா அருகில் வா!வா! பூரணனே புருசோத்தமா புவியில் வா!வா! வருவினைகள் வந்தவழி ஓடச்செய்ய கருமைநிறக் கண்ணா கருணைதா!தா!... நற்கதியைநாளும் எங்களுக்கத் தந்திடையா... கருப்பூரம்மணக்கும் பொற்பாதம் பணிந்தோம்...

பாரினிலே பத்தவதார மெடுத்திட்ட பச்சைமுகில் மேனியனே பணிந்தோமையா சோதனை பார்த்திடுவாய் துதிப்போர் தம்மை வேதனை போக்கிடுவாய் சாதனையால் ஒப்பிலா மணிவிளக்கே ஒளியைத் தா!தா! தப்பிதம் செய்வோரைத் தரையில் சாய்ப்பாய்... சஞ்சலங்கள் தீர்த்து சமநீதி காக்க... சத்தியனே நித்தியனே சடுதியாய் வா!வா!...

சூடிக்கொடுத்த சுடர்க் கொடியாளுக்கே மணமாலை சூட்டிய மதுசூதனனே பாடிப் பணியும் பக்தர் குறையனைத்தும் நாடிவந்து குறைத்திடு நாராயணனே விடியலுக்காய் விழிநீர் சொரியுமெமக்கு நல்லமுடிவைத் தந்திடவா முகுந்தா... சாதிமத பேதமறுத்திடு சக்கரத்தாலே... சமஉரிமை தந்திடு கல்கி அவதாரத்தாலே...

அடியவரை ஆதரிக்க அச்சுதா தயங்கலாமோ? ஆழிமழைக்கண்ணா இன்னும் நீ உறங்கலாமோ? சுதந்திரக் காற்றைச் சுவாசித் தெப்போதும் சுகந்தமிகு பிரிந்தாவனம் சுற்றி வந்து சுந்தரத்தமிழில் நாம கீர்த்தனங்கள் பாட பைந்தமிழ் பாவலர்க்கு நாவண்மை தாரும்... கோவிந்தன் நாம சங்கீர்த்தனங்கள் தானே... குறைகள்போக்கும் தேவாமிர்த மருந்தாகுமே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49

ஆரைநகர் பேச்சியம்பாள் காவடிப் பாடல்

அண்டபகிரண்ட மெலாம் நின்றிலங்கி அன்புடனே ஆரைநகர் வந்தமர்ந்த அன்னையவள் பேச்சியம்பாள் மீது அண்டிவந்தடி பணிந்துகாவடிப் பாடல்பாட அடியேனுமாசை கொண்டோடி வந்தேன் அடியெடுத்துக் கொடுத்தருள் அளிப்பதோடு... அணுகு பிழையதனை யகற்றிக்காக்க... அனுதினமும் துணைபுரிவாய் ஐங்கரனே...

ஆலிலையில் பள்ளிகொண்ட அரிராமன் அரசமர அடியினிலே ஒளியாய்நின்று ஆலயம் இவ்விடத்தில் அமைத்துஎன்னை ஆராதிக்க அகன்றிடுமே தொல்லையென்று ஆகாசவாணியாய் உரைத்த சத்தம்கேட்டு அறுதுயில் விட்டெழுந்த அன்பர்கூட்டம்... அதிசயித்துப் பதைபதைத்து ஊரைக்கூட்டி... அவ்விடத்தே ஆலயம் அமைத்தனரே...

இன்னமுதே உன்தனக்கு பந்தலிட்டு இட்டமுடன் மனமுவந்து சடங்கியற்ற தண்டமிழ் தலைவன் காத்தான்குடியிருந்த காத்தான் குடிநோக்கி வாயிலிட்டு பண்ணுடனே செந்தமிழ் காவியம் பாடி சேர்ந்துமே பக்தர்கள் பணிந்துநிற்க... சண்டமாருதம் வசீப்பந்தல் சாம்பலாக... அமைவிடம் மாற்றுமென்றாய் பேச்சியம்மா...

ஈர்மூன்று அகவைச் சிறுமி உருவந்தாடி ஈசான மூலையிலே கோடிட்டுக் காட்டி இவ்விடம் பேச்சிக்கு ஆலய வாயிலை வங்கக் கடல் நோககி அமையு மென்றும் கண்ணனுக்கு வண்ணநகர் வடக்கு நோககி அன்போ டமைத்து ஆராதிக்கவும்... வார்த்தையால் மனம் மகிழ்ந்து கூற... வடிவமைத்தார் கோவிலதைப் பேச்சித்தாயே...

உந்தி பூத்தோன் தங்கை பேச்சியர்க்கு கும்பம் வைத்து கும்பிட்டு வணங்க கும்பமது பீடத்தை விட்டு மேலெழுந்து கம்பீரமாய் கணப் பொழுதில் ஒலியார்க்க அதிசயித் தடியார்கள ்தமை மறந்து அன்னை பேச்சி நாமம் சொல்லியோத... ஆரை நகர் கோவில் கொண்டவளே... ஆச்சியே அன்பு நிறை பேச்சித்தாயே...

ஊழியம் செய்துனது எல்லைதன்னை ஒற்றுமையாய் அடியார்கள் சுத்தம் செய்ய ஓங்கி மண்வெட்டியால் வெட்டும் போது ஓங்கார நாதம் கேட்டுற்று நோகக் இயந்திரத்தில் மந்தரிக்கப் பட்டபல விந்தைநிறை தகடுகள் பளபளக்க... கண்டெடுத்து ஆலயத்தே வைத்தவற்றை... ஆண்டுதோறும் வழிபடுறோம் பேச்சித்தாயே...

50

எண்ணாத எண்ணமெலாம் எண்ணித்தாயே எழிலோங்கு உன்பதியை நோககிவாறோம் கண்ணாறக் கண்டுனது கருணைபெற்று கவலைகளைக் காலடியில் களைந்துவிட்டு மண்ணாசை பொன்னாசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்துநாளும் மதியொளியாள் மாதவன் தங்கைநேசம்... எந்நாளும் எங்களுக்குக் கிடைகக்குமென்று... நன்நாளில் நாடிவந்தோம் பேச்சித்தாயே...

ஏழிசையாய் எண்திசையும் ஒலிக்கும்தாயே ஈரேழு புவனமாய் விளங்கும்தாயே வானாகி மண்ணாகி வேதாகமமுமாகி பண்ணாகிப் பாதனிலே உறையும்தாயே உன்நாமம் ஓயாது உரைத்துவாறோம் ஓடோடிவந்து துயர்துடைத்துக காப்பாய்... ஓங்காரரூபி பிரணவ சொரூபியான... பேரான பேரருளே பேச்சித்தாயே...

ஐம்பத்தொரு அட்ஷரத்தாதி நீயே ஐந்தெழுத்துப பஞ்சாட்சரி நீயே ஐயமுறு பரிகலத் தோடாடுபவள நீயே அரனோடு திருநடனம் ஆடுபவள நீயே வையத்தில் கவலை மாற்றுபவள நீயே தைதையென தண்டையொலி யெழுப்பும்தாயே... உய்யவழி தெரியாது உபாயம்தேடும்... மெய்யடியாரைக் காப்பாய் பேச்சித்தாயே...

ஒன்றுமறியாத பாவி நானும் உன்நாமம் உசச்ரித்து ஓடிவாறேன் கன்மவினை தனையகற்றிக் காப்பாயம்மா கர்த்தனுடன் நர்த்தனங்கள் ஆடும்தாயே மன்னுபுகழ் மாறனை வதைத்ததாயே உன்னரிய மகிடனை வென்றாய்நீயே... பொன்னனைய பூவிலுறை கண்மணித்தாயே... முனனின்று காத்திடம்மா பேச்சித்தாயே...

ஓங்காரியே ஒற்றுமையின் இருப்பிடமாய் உன்னாலயமே ஊர்தனக்கு எடுத்துககாட்டு ஓங்கார ஒலியதனின் வடிவமாகி ஓதுவார் நாவினிலே உறைபவளே ஓவாத துன்பமதைக் களைந்துகாக்க ஓதினோ முன்நாமம் ஆயிரம்கூறி... ஓடிவந்து உன்னொளிதந்து காப்பாய்... ஓங்குபுகழ் கொண்டவளே பேச்சித்தாயே...

ஔவிய மகமதிலே ஆட்கொளள்து காத்து ஔதாரிய மடியேனைப் பற்றாமல் மீட்டு பாவியான் பிறவிக் கடலைத் தாண்டி பௌவியமாயுன் பாதமலர் பற்றி வாழ்ந்து துவ்வாமை எம்வாழ்வில் கவ்வாது நீத்து செப்பரிய வமிர்த கலைதன்னை யீர்ந்து... சௌபாககியமாய் வாழ வழிகாட்டி நீயும்... ஔடதமாய் வந்திடம்மா பேச்சித்தாயே...

51

கண்டதே காட்சி யென்று மதிமயங்கி கயவர்களின் கேண்மை தனில் தினமிரங்கி கொண்டதே கோலமென வாழ்ந்த வென்னை கோதையே போதை நீக்கியுன் சோதிகாட்டி அண்டமெலாம் மாயையென அடித்துக கூறி ஆயிழையே அரவணைத்தாய் அருளைக் காடடி... தெண்டனிட்டேன் வந்திடம்மா ஆடி வெள்ளி... தீமிதிக்கக் காத்திருக்கோம் பேச்சித்தாயே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரியே ஆடித்திங்கள் வந்து விட்டால் சனங்களெல்லாம் உறங்கார் உன்னினைவால் சனிவாரம் நல்லிரவு திருக்கதவு திறக்க சன்னிதியில் மக்கள் வெள்ளம் வந்துமோதி சங்கற்பம் கொண்டு சக்தி நாமம்ஓதி தவம் கிடப்பார் எழுந்தருளும் காட்சிகாண... திங்களன்று விசேட பூசை கொள்வாய்... திப்பியமாய்த் தித்திக்கும் பேச்சித்தாயே...

ஞயம்பெறு பூசகர் கூட்டம் வந்து திறம்படக் காவியம் செப்பி நிற்பார் செவ்வாய் ஊர்வலச சடங்க தன்று தெருவெலாம் நிறைகும்பம் வைத்து மக்கள் வருமும்மை வரவேற்று நிற்கும் காட்சி உருக்கிடுமே உளத்தை சொல்லொணா மாட்சி... பெருக்கிடுவாய் பக்தியதை யெல்லோருக்கும்... பேதமறப் பணிந்திடுவார் பேச்சித்தாயே...

தட்சணத்தே குணகீர்த்தன் கோலதோட்ச தங்கை நங்கை நீயே செங்கோல்கூட்ட தட்பமான புதன பொதுப் பூசைகாணத் தடாதகையே எண்டிசை யிருந்துமேதான் தவிப்போடு பக்தர்கோடி வந்துநின்று தத்துவத்தின் வித்தகியுன் தாட்சண்யம்கண்டு... தப்பை தம்பட்டம் தமருதமு மார்க்க... தமோகுண மகற்றிடுவாய் பேச்சித்தாயே...

நந்தா விளக்கே நாராயணன தங்கையே நர்த்தனத்தின் வித்தகியே நாராயணியே நவையற்ற வியாழன் வீரகம்பம் வெட்ட நாச்சியே பேச்சியுருக் கொண்டு சென்று நவனீம் பெறு வரீகம்பம் வெட்டியபின் துங்கம் நிறை துரோபதியாய் முகம்மாறி... தங்கம் நிகர் அருளொளிப் பொலிவுகாட்டி... நாயகமாய் நகர்நாடும் பேச்சித்தாயே...

பரன்ராமன் சோதரியே ஆடிவெள்ளி பணிவுடனே வெட்டிய வீரகம்பமதை பக்தியுடன் யாகதீயிலிட்டு தணலதாக்கி வரீமிகுவீரமர விறகடுக்கி வேண்டுதல்செய்து தங்கமதை யுருக்கித் தரையிலிட்டதுபோல் தகதகக்கும் அக்கினிக் குழிசமைத்து... பத்ததி முறைப்படியே மந்தரித்து... பத்திமை கொள்ளச்செய்யும் பேச்சித்தாயே...



மகமாயித் தாயே மதிசூதனன் தங்கையே மகிழ்வாய் பாலரோடு விருத்தர் கூட்டம் நோயகற்ற வேண்டி நோன்புநோர்த்த கூட்டம் பெண்மைதனில் திண்மை பெறுபெண்டீர் கூட்டம் நின் திருவடியைத் தொழுது நின்று தீமிதிக்கக் கூடிநிற்கும் கண்கொள்ளாக் காட்சி... தீமையகற்றும் உனதரு ளுக்குச் சாட்சி... துரோபதை வடிவம் கொண்ட பேச்சித்தாயே...

வராகனுடை தங்கையே வலல்வையே வரம் வேண்டிப் பூசகர் தீக்குழியிலிட்ட பங்கயம் பசுமையுடன் பர்ணமிக்கும்காட்சி அடுத்தநாள் கண்டிடலா முன்அருளாட்சி அன்பெலாம் உன்னுருவாய் ஒன்றித்தாயே அளித்திடுமே

உலகமது நீயென்றுகூறி... கண்கண்ட தெய்வம் நீயன்றிவேறு... கண்டதில்லை பொன்னனைய பேச்சித்தாயே...

தீமிதிப்பின் பின் அடுத்தநாள் அதிகாலை திரண்டிடுவார் கன்னிமார்கள் எண்ணற்றபேர்கள் கன்னிமார் பூசையென்ற பள்ளயம் தன்னில் கலந்திடும் அன்னவர்கள் குறைகள் தீர்க்க வண்ணமுடன் இன்னமுது படைத்து வகை வகையாய் அதிரசமு மிட்டு... பாலோடு பழம்தயிர் கூழ் படையலிட்டு... கன்னிமார் பூசை செய்வார் பேச்சித்தாயே...

பள்ளயச் சடங்கதனையுள்ளன் போடு படையலிடும் பாங்கதனைப் பூசகரன்றி எள்ளளவும் மற்றவர்கள் காணாவண்ணம் பரபக்தியோடு பணிவு கொண்டு சிறந்த இதயசுத்தியோடு செய்யும் சேவைதனைப் பூசைநேரம் காணும்தோறும்... புல்லரித்துப் பொலிவுடனே உருகசெய்து... புளகிதம் கொள்ளச்செய்யும் பேச்சித்தாயே...

தேவியே உன்னுடைய திருச்சடங்கு தனில் தெய்வ உருக் கொண்டாடத் திக்கெட்டிருந்தும் தேவராளரோடு தேவராட்டி கூடி யாடும் தெய்வகீக்காட்சி கண்டு வாக்குக் கேட்க ஏராளமான பக்தர்கள ஏங்கி நிற்பார் பாரளந்தோன் தங்கையே பய பக்தியோடு... தாராளமாய் வந்துசேரும் நேர்த்தி யெல்லாம்... கார்த்தி யாயினியுன் காணிக்கை பேச்சித்தாயே...

பள்ளயச் சடங்கின் பின் பலிசச்டங்கிற்காக கிழக் கெல்லையில் கடற்கரைக்குச் சென்று பலியிடடுத் தெய்வங்களைத் திருப்தி செய்து படிமுறையாகச் சடங்கதனை நிறைவு செய்து சமுத்திரத் தீர்த்தமாடி தாயார் மகிழ்ந்து தன் சன்னிதிக்குத் திரும்பிச் சந்தோசமாக... அன்றிரவு பூசையிட்டுத் தாழ் அடைகக்... ஆண்டு தோறும் அருளளிகக்ும் பேச்சித்தாயே...

53

சிவனுடைய காவடிப் பாடல்

வேதத்தின் வித்தக விநாயகனே போற்றி நாதத்தின் நற் குஞ்சரனே போற்றி சென்னியிலே கங்கையணி சிவனார் மேல் செந்தமிழால் காவடி பாடல் பாட சிந்தையிலே வந்த எண்ணம் சித்திபெற வந்திவ் வேளை வழுவகற்றிக் காருமையா... பேர் புகழும் வேழமுக விக்னேஸ்வர... அறு காரமணி ஆனைமுகன காப்பாமே...

அங்கமெல்லாம் படமெடுத்து அரவ மாட தங்க நவ குண்டலங்கள் காதிலாட மங்களத் திருநீறு நுதலில் துன்ன பங்கமற நெற்றிக் கண் ஒளியாய்மின்ன துங்கச சடாமுடியில் பிறை துலங்க வங்கக் கடல்தரு தரளவிதழ் விளங்க... பங்கயப் பாதவுமையாள் இடப்பாக மிலங்க... சிங்காரத் தோற்றமளி சிவனே போற்றி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைமுக ஐங்கரனார் அப்பரான ஆரணனே காரணனே பரிபூரணனே ஆன்மாக்களுக்கு அருள்செய் ஆலகண்டா ஆரணியம் தனிலாடு நீலகண்டா தோடோடு குண்டலம் ஆடுசெவியா சூரியசந்திர அக்கினி முக்கண்ணுடைய... பாய்புலித் தோலாடை அரைக்கணிந்த... வேய்குழலா லுமைபாகா போற்றி...

இரத்தின சிம்மாசனம் அமர்ந்து இதழினிலே புன்னகைப் பூசுமந்து இன்முககிம்புரு நாரதர்களிசை முழங்க இருடிகேசர் இருகரம் குவித்துவணங்க இந்திராதிதேவர் பணிந்து குறையுரைக்க இடர்தீர்க்க முறைகூறி நீதிசெய்து... இடப்பாகச்சகதி உமையாளோடு சேர்ந்து... திருக்கயிலை வறீறிருக்கும் சிவனேபோற்றி...

ஈடுஇணை உந்தனகுக் எவருமில்லை இகபரசுகம் ஈபவரும் நீயேயப்பா ஊனாய்உயிராய் ஓங்கார ஒலியுமாகி உளக்வா ருள்ளத்தே உண்மையொலியுமாகி வளர்கின்ற தீயாகி வற்றாதநீருமாகி வானாகிக் காற்றாகிப் பஞ்சபூதமுமாகி.... நாராயணபிரமன் நண்ணாத பொருளுமான... காணாமிர்தப் பிரிய கடவுளே போற்றி...

உன்புகழை உலகறிய எடுத்துரைக்க என்தனக்கு இப்பிறவி போதாதையா சந்தங்கட்டி யுன்மேல் பாடல்பாட சந்திரசேகர கௌரி சமேதரராக வந்தெங்கள் வினையகற்றி வழிகாட்டி தொந்தரவு துன்பதுயர் துரத்திநாட்டில்... இன்பமதென்றும் இலங்கச் செய்வாய்... இந்திரதேவர் ஏறும் இறையேபோற்றி...

54

ஊரோங்கு குடிகள் எல்லாம் தழைத்துவாழ உன்நாமம் உச்சரித்து ஓடி வாறோம் சரோங்கு சுருதிமீட்டு கரங்கள் கூப்பி சிவாகமத்தை சிந்தையிலே நிறுத்தி வாறோம் பாரோங்கு பைந்தமிழ் பாடல் பாடி பார்பதிபாகா உன்பதி தேடி வாறோம்... தாரோங்கு கலைஞானம் தரணியில் வாழ... தன்னருளாம் ஓங்காரா வுன்தாள் போற்றி...

எங்கள் மனம்களித்திட வேதாகமம் ஈர்ந்து திங்கள் சடைதரித்த திரிசடை மூர்த்தியே ஞான சம்பந்தனுக்கு ஞானப் பாலூட்டி திக்கெட்டும் தெய்வீக புகழ்பரவச் செய்து சைவநெறி வாழத் திருவிளையாடல் காட்டி வையமதில் வளர் ஞானப் பொருளாதாகி... பொய்மை நிறை அரக்கர்குலச் செருக்ககற்றி... புன்னகையால் திரிபுரமெரித்தவா போற்றி...

ஏகாந்த நாதாவுன் பாதம் தேடி ஏழைகள் காவடிகள் எடுத்தாடி வாறோம் காந்த மிரும் பதனைக் கவருமாற்போல் பாந்தமுடன் பக்தியோடாடி வாறோம் மேகமது பயிர்கக்குதவி செய்வது போல பாவமது எங்களைப் பற்றாது காரும்... நாகமது தேகமதில் நர்த்தனமாடும்... ஆலமுண்ட கண்ட அரனே போற்றி...

ஐந் தெழுத்து பஞ்சாட்சரமும் நயே பைந்தமிழின் முந்து சிவனும் நீயே நந்தி தத்துமித் தோமென மேளம்தட்ட புந்தி மகனயன் சுருதி சேர்க்க கந்தரூபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைபயின்று கானம் பாட கலை மகள் யாழ்தாங்கி மீட்க... அருள் பொழிய ஆலயம் மெங்குமேதான்... அமர்ந்தறம் காகக்கும் ஐயா போற்றி...

ஒருநாமம் ஓருருவம் அற்ற வுன்னை ஓயாமல் பலநாமம் உரைத்து வாழ்த்தி மாயோனயன் மகபதியுமுன் மலரடி போற்ற மாதொரு பாகமாயமர்ந்த காட்சி கண்டு தூய தவயோகி தேவர்கள் மலர்கள்தூவ ஆயமறை யாகங்கள் அந்தனர் ஓத... நேயமுடன் தூயமனம் கொண்டு நாளும்... தேடியே துதிப்போம் சிவனே போற்றி...

ஓங்கார உட்பொருளாயிருந்து நீயே உலகமது இயங்கிடவே நடனமாடி காளநந்தி தட்டை பம்பையோடு பேரிதவில் கொம்புசங்கு வணீயார்க்க மாமறையோர் மறையோத விண்ணில்மாதர் சோபனங்கள் சொல்லித் துதித்துப்பாட... பார்வதியை இடப்பாகமதாய்க கொண்டு... பதிதோறும் உறைகின்ற பரனேபோற்றி...

55

ஔடதமாய் அடிபணிவோர் பிணியகற்ற ஆலயங்கள் கொண்டமர்ந்த அரனே வானாகி மண்ணாகி வளியுமாகிவற்றா வாவியாகி வருஞ் சராசரமுமாகி கோனாகிக் குடியாகி யமரகுலமுமாகி குறித்த நவபேதமாகி நிற்குமுனன்ன... யாகமது செய்துமக்கள் போற்றும்... யோககாரண வடிவச் சிவனேபோற்றி...

கடல்கடைந்தமிர்த முண்டு நீடுவாழ கைகோர்த்து தேவரசுரர் முனைய கடடுக்கடங்கா தழிக்க வந்தஆலமதை கணடமதிலடக்கிக் கறைக் கண்டனான கல்லானையை கருணையோடு கரும்புண்ணவைத்து பிள்ளையில்லா பாண்டியனுக்கு பேறளித்த... எல்லையில்லாக கருணையுள்ளங் கொண்ட... ஈச்சரங்கள் அமர்ந்த சிவனேபோற்றி...

காதலுடன் கசிந்துருகிய அன்பருக்காய் காலனையே உதைத்து மார்க்கணடனைமீட்டு கருக்குருவியான இராசராச பாண்டியனை மிருத்தியுஞ்சிய மந்திரத்தால் முக்திகாட்டி நாரைக்கு நாடிய வடுபேறளித்து நந்தனுக்கு நடனக் காடசிநல்கி... மதுரையிலே சோமசுந்தர மீனாட்சியாகி... நல்லாட்சி நயந்த சிவனேபோற்றி...

கிருபையுடன் தருமி வறுமைபோக்க செம்பகப்பாண்டி தையல்குழலினி லையம்புகுத்தி சபைதீர்காச் சந்தேகம் தன்னை சுவைமிக்க பாடலாக்கி யளித்து நெற்றிக்கண் திறப்பிலும் குற்றம்குற்றமேயென்று நக்கீரனுடன் நற்றமிழில் வழக்குமாடி... சங்கத்தமிழ் திறமையெங்கு மோங்க... இங்கிதமாய்ச் செய்த இறையேபோற்றி...

கீரனைநெற்றிக் கண்ணால் எரித்துபபின்பு கீர்த்தியுடன் பொய்கை விட்டெழுப்பி அகத்தியரைக் கொண்டே இலக்கணமுணர்த்தி அகந்தையதை அறிவாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரவைத்தாய் இடைகக்டன் பிணக்குத் தீர்த்திருளகற்றி கடைகக்ண் கருணைகாட்டி கவலையோட்டி... செகம்புகழ் சிவனான தேவதேவே... அகவிருளை அகற்றுமரனே போற்றி...

குன்றாத கோணேச மலையமர்ந்து குவயத்தில் அடியவர்கள ் குறைகளைந்து ஈழமணித் திருநாட்டின் நாற்றிசையும் ஈச்சரங்களி லமர்ந் தின்னருளளித்து திருக்கேசச்ரம் கோணேச்சர மமர்ந்து தேவாரப் பாடல்கள் பாடவைத்தாய்... தென்னாடுடை சிவனேயுன் திருவிளையாடல்கள்கோடி... தான்தோன்றி ஈச்சரமமர் சிவனேபோற்றி...

56

கூற்றுவன் கைபட்டு வழீவண்ணம் குரம்பை விட்டுவுயிர் மீளமுன்னும் அகிலமெல்லாம் மாயையென உணரவைத்து குவலயத்தில் மதியுற்று நிலைகுலையா உண்மைநிலை உணர்த்தி விட்டாய் எப்பிறவி யெடுத்தாலும் உன்பாதமளிப்பாய்... கற்பனைக்கெட்டாத பரனே யுந்தன்... நற்கதி நாடினோம் பாதம்போற்றி...

கெருடணேறு மாயனறியா சோதி காபாலமேந்தி கபாலியாகி காத்தாய்நீதி தில்லையிலே நடமாடி நடராசராகி எல்லையற்ற கருணையினால் ஐந்தொழிலாற்றி வலிமைமிகு கசாசூரன் தோலைஆடையாக்கி இல்லையுனக்கீடு என்ற உன்மைகாட்டி... தொல்லைபோக்கி தேவர் துயர்துடைத்த... நல்லசிவனே உன்பாதம் போற்றி...

கேகநாதா திங்களைச ் சடையில் வைத்து இருடிகளேவிய மழுமானைக் கரம் பிடித்து சந்திர சேகரராகிச் சரிபாதி தன்னை சுந்தரம் நிறை சக்தியர்க ்கீர்ந்து தரும தேவதையை இடபமாககி இடபரூபராகி பெரு நிதியா யாலயங்கள மர்ந்து... சொல்லவொண்ணா துயர் போக்கி காகக்கும்... எல்லையற்ற கருணை யிறையே போற்றி...

கயிலயங்கிரி கருணாநிதியே போற்றி பயின்ற வினையகற்று பரனேபோற்றி பாலரோடு விருத்தர் பலரும்கூடி பயபக்தியுடன் சன்னிதி வாறோம் பரனே பாராமுகமாய் நீயிருந்தால் யார்தான் எம்மைக் காப்பார்... காராளகுணம் படைத்த பேராளனே.. ஏராளர் ஏய்க்காமல் காத்திடவா...

கொன்றை மலர்க் கோவேயுன் பதியில் நின்றிடு பக்த கோடி மாசித்திங்கள் கிருஸ்ண பட்சச் சதுர்த்தி யறிந்து தேடிவந்து சிவராத்திரி விரதம் பிடித்து சித்திர குப்தர் விரதம் நோர்த்து தத்துவ வித்தகனே தாட்சண்யம் வேண்டி... நச்சரவ நாகமணி மார் பழகா... நற் கதி தந்திட வாருமையா...

கோணேஸ்வரமமர்ந்த கோனே போற்றி கேதீஸவ்ரமுறை கிருபாகரனே போற்றி
முனனேச்சரமிருக்கு முதல்வா போற்றி தான்தோன்றீஸ்வரத் தலைவா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகுலேச்சரமமா் நாதா போற்றி பவவினை போக்கிடுபரனே போற்றி...
பார்க்குமிடமெங்கும் நிறைபரனே போற்றி... பார்வதி பாகனேபாதம் போற்றி...

57

காவியப்பாடல்

சிறுதெய்வ வழிபாடுகளில் உடுக்குத் தெறித்துக் காவியம் பாடுவது தனிச்சிறப்பான செயற்பாடாக விளங்குகின்றது. இவற்றைச் சடங்குக காலங்களில் பூசாரிமார்கள் உடுக்குத் தெறித்து ஓசை நயத்துடன் பாடும்போது தெய்வவுருக் கொண்ட தேவாதிகள உணர்வுப்பூர்வமாக அழகாக அசைத்து அசைத்து ஆடுவதும் பக்தர்கள் பக்திப் பரவசத்துடன் தங்கள் நிலையை மறந்து மெய்யுருகித் தெய்வ வழிபாட்டிலே தம்மை அர்ப்பணித்து நிற்பதும் ஆலயங்களில் காணக்கூடியதாக அவதானிக்கக் கூடியதாக இருக்கும். ஒரு பூசாரி காவியத்துக்கான தருவினைப் பாட மறு பூசாரிமார் அவ்வவ் தெய்வத்தில் அவதாரம், தோற்றம், அவதார நோகக் ம், அருட்கடாட்சம் என்பவற்றை விருத்தப்பாவில் அமைத்துப் பாடுவார்கள். தரு „தந்தன தனாதனன னாதனன னானா தனனா தனா தந்த னாதந்த னானா தந்தன தனாதனன னாதனன னானா தனனா தனா தந்த னாதந்த னானா" எனப் பாட காவியப்பாடலை ஒவ்வொன்றாகப் பாட மீண்டும் தரு பாட தொடர்ந்து காவியம் பாடி வழிபாடி முடிப்பர். சில ஆலயங்களில் பூசை முடிவுற்றதும், பத்திரம் பக்தர்களுக்களிக்கபட்டு காவியம் பாடி வழிபாடி முடித்த பின் பத்திரம் சாற்றி முடிப்பர்.

காவியமானது எமது பிரதேசத்தில் வைரவர், வீரபத்திரர், நரசிம்மன், ஆஞ்சநேயர் போன்ற ஆண் தெய்வங்களுக்கும், கண்ணகை, மாரி, பேச்சி, காளி, காமாட்சி, கடலாட்சி போன்ற தேவதைகளுக்கும் பாடும் வழக்கம் இன்றுமுண்டு.

வைரவர் காவியம்

நிறைவுற்ற நீலநிற மேனி வைரவரின் திருநிறைச் செந்தமிழ்க் காவியம் பாட குறைவற்ற குணபதி குஞ்சர முகத்தோன் கறைபெற்ற கழலடி தனை நிறைவுறவே மறைகற்ற திசைமுகன் மாதுகலை வாணி துணையுற்றுத் தினமெனது நாசினிலிருந்து வரையொத்த மார்பன் வடுக வைரவரை துதிசெய்து போற்றிடத் துணையாக வருவரே.

வருகெடுதி யறியாத பிரமனிட மன்று அருளுறு முனிவர்க ளறிந்திடச் சென்று பெருவாழ்வாய் இறவாது உயிர் வாழ்வதற்கு அருளான முழுமுதற் கடவுள் யாரென்று திருவாய் மலர்ந்தருள வேண்டி நிற்க உருவாக்கு மூழிமுதல்வன் நானன்றி இருப்பாரோ இவ்வுலகில் வேறொருவரென்று செருக்காகச் சொன்னான் கருவூலம்தானென்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானென்ற அகந்தை தனையகற்றத் திருமால் நேர்சென்று நீதிமுறை தூய்மையோ டுரைக்க பாரளந்தோ னுரைதனை மறுதலித்து

58

நானென்ற நமட்டுச் சிரிப்பை யுதிர்த்த கோனென்ற சிவனார்நீ நேராகத் தோன்றி கோப்பெருஞ் சோதிதனுள் பார்வதியைக்காட்ட ஈசனே ஐந்துதலை எனக்கு முனடென்றுகூற கோபாக்கினி வைரவ மூர்த்த மெடுத்தாய்.

மூர்த்தமோடு பிரமன் ஐந்தாம் தலைகொய்ய ஆர்ப்பரித் தென்னாணவ மகன்றது என்று தீர்க்கமதா யவன் சென்னியி லுணர்ந்து மூர்க்கமற வைரவ மூர்த்த முனைப்பணிந்து பார்க்கடல் பள்ளிகொள் பரநத்தாமன் பகர்ந்த வார்த்தைகளை நான் மதியாது கெட்டேன் கார்கறைக் கண்டனே கருவூலமென்று மார்தட்டி நிறுவினரே வைரவ உருக்கொண்டு. கொண்ட பிடிவாத மதனால் தர்கக்ன் அண்டமதிலுள்ள தேவர்களை அழைத்து துண்டப் பிறையணி யுன்னவி பாகம்மறுக்க மண்டலத் தோரறியச் செய்வேளவி யழித்து உண்டென் பவர்க் குதவும் மறைப்பொருளே எண்ணற்ற வடிவங் கொள்துட்ட வைரவரே பண்ணோடு பாபுனை பாவலர் தன்னைக் கண்ணெனெக் காத்திடு கால வைரவரே.

வைரவ சொருபமென நூற்றெட்டு மூர்த்தம் பையரவ மணிபரனே நீ யெடுத்து வையக முய்திபெறப் பலவழி சமைத்து வைகை பெருக்கி மண்சுமந்து மாறன் கைப் பிரம்பாலடி பட்டு மறைந்து தையலுமை யங்கச் சரிபாதி யாகி மையலுறு மானிட மயக்கம் போக்கி ஐயமற ஆணுக்குப்பெண் சமத்துவ மென்றாய்.

என்றுமே நீ யட்ட வைரவராகி எண்திசையு மாகி நீணிலம் காத்து கொண்டிடு வாய்பால பூசை வேளவிகளும் நன்றாய் கருணைபொழி கங்காள வைரவரே திண்டோளில் சிவப்புப் பட்டுடன் வடைமாலை நின்றாடு பாதமதில் தண்டை களாட விண்ணோர் மண்ணோரு முனன்டியை நாட எந்நாளும் காத்தருள் வரீ வைரவரே.

வைரமணி யாரமோடு செங்கமல மலரும் குங்குலிய தீபமுடன் செவ்விளநீரும் மங்கலகுங்கும கஸ்தூரி கருப்பூரமும் செந்தூர சந்தண நல்மடைக ளேற்கும் நிறுமான வைரவ குணநிதி இறையே ஒருநாம மோருருவ மற்றதிரு மறையே மறவாமல் எமையாளு வடுக வைரவரே உரமோடு திரிசூல மேந்தி வருவாயே.

59

வருவாய் நீ ஆலயடி வைரவருமாகி தருகுவாய் காட்சி நீள்சடா முடிதாங்கி இருகோரைப் பற்கள் வெளிநீட்டி நிற்க நெருப்புக் கனல் கொப்பளிக்கும் கண்களில் அச்சம் அளித்திடு ஆரவாரச் சிரிப்பும் தீச்சுட ருடுக்கு பாச கபாலமோடு புரிதரு வடுகனென முக்கண்கள் காட்டி உகிர வைரவராக உருவமெடுப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்த இராவணன் செருக்கை இழித்து தடுத்துச் சாம கானச் சங்கீதம் ரசித்து செருக்கு அகற்றி நற்கதி கொடுத்து கடுத்து முப்புரம் கண்ணா லெரித்து துடித்திடு அசுரர்கள் அகந்தை ஒடுக்கி பிடித்துக கிழித்து குடலை எடுத்து மடித்து மாலையா யணிந் திரணியன் துடுக்கு அடககிய கால வைரவரே.

வைரிகளை வதைத்து வையகம் தளைக்க வைத்திடு வல்லமகா வைரவரும் நீயே தைதையெனத் திருவடிச் சிலம் பொலிக்க நடமிடு நரசிம்ம வைரவரும் நயே காலனைக் காலா லுதைத்து மார்க்கண்டன் ஆயுளைக் காத்த ஆதிவைரவரும் நீயே பித்தனென் றேசிய சுந்தரர் சித்தம் தெளிவித்த சுவர்ண வைரவரும் நீயே.

தருமமோடு சமநீதி தப்பாது வாழி! குருவோடு சைவம் குவலயம் வாழி! நறுமணம்வீச நான் மறைகள் வாழி! அருவரோ டவர்களு ரிமைகள் வாழி! கடகரிமுக கணநாத கணபதி வாழி! குறமாது மணவாள குருபரன் வாழி! சிறப்போடு சிவநாமம் செகமெலம் வாழி! நயக்க வாகனஞான வைரவரும் வாழி!

மட்.்.மஞ்சந்தொடுவாய் ஸ்ரீ வரீபத்திரர் காவியம்

சரீபூத்த ஈழநாடு மட்டுநகர் தெற்கே பேர்பெற்ற தமிழெல்லை கிராமமாய் விளங்கு கார்பொழி மஞ்சு கொஞ்சு மஞ்சந்தொடுவாய் ஊர்காத்து உறுபிணி நோய்கள அகற்ற பார்படாந்த பரமசிவன் அருள் தோற்ற ஆர்பூத்த சடைமுடி வரீபத்திரர் மேல் நேர்த்திநிறை செந்தமிழ்க் காவியம்பாட காரொத்த கரிமுகக் கணபதி காப்பாமே.

அறம்காத்து மறமழித் தடியவரைக் காக்க அன்றுதொட் டின்றுவரை பல வடிவெடுத்த அரனே அன்றொரு நாள அறிவழிந்து அகந்தை நிறைதக்கன் உனை அவமதித்து

60

அம்மானென்ற அரிய உறவுமுறை மறந்து அவிபாகம் அளியாது செய்வேள்வி தன்னை அழித் தவனது செருக்கதனை அடக்க அருட்சிவனே வரீபத்திர ரானவரே.

ஆலமதுண்டு அமரர் இடர் தீர்த்த ஆரனனே அங்கமெலாம் அரவம தாட ஆரணியம் தன்னில் நடமது புரிந்து ஆங்காரம் நிறை அவுணரை அழிக்கும் ஆலிலை மேற்றுயில் அரிராமன் பாகா ஆதரவற்ற அநாதையுற் ரருவர் ஆழியலை மேற்ருரும்பாய் அலையாது ஆலமர்செல்வ வரீபத்திரரே காப்பாய்.

இகலோக பரலோக மருள்பவர் நீயே இமயவில்லி நாமமுடை ஈசனும் நீயே இலிங்க வடிவாயமர்ந்த வரும் நீயே இடபாருடராகி யின்னல் தீர்ப்பவரும் நீயே இன்னிசையாகி யின்பம் தருபவரும் நீயே இந்திராதி தேவர்தொழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்வரர் நீயே இரவரசி ஒளிதனிலே எழில்பெறு மஞ்சியதாய் இலங்கு மஞ்சந் தொடுவாய் வரீபத்திரரே.

ஈஸ்வரனே உன்தன் மகிமை எடுத்துரைக்க ஈரேழு பிறப்பு எடுத்தாலும் முடியாது ஈழத் தமிழ்த் தாயக நாற்றிசையும் ஈச்சரங் கலமர்ந் தருள் சுரக்கும் ஈடிணை அற்ற அருளான இறையே ஈண்டு நாமம் உரைப்பவர் தனக்கு ஈமத் தாடியே இகபரசுக மளித்திடு ஈசனே ஶ்ரீவீரபத்திர நேசனே.

ஒருநாம மோருருவ மற்ற உன்னை ஓயாது பலநாமம் உரைத்து வாழ்த்தி மாயோனயன் மகபதியும் போற்ற தூயதவயோகி தேவர்கள் துதிக்க ஆயமறை யாகமம் அந்தண ரோதிட கந்தருவர் கலைபயின்று கானமழைபொழிய நேயமொடு மஞ்சந் தொடுவாயமர்ந்த யோகவடிவான வரீபத்திரர் நீயே.

காதலுடன் துதித்த மார்க்கண்டேயனைக் காக்க காலனைக் காலால் உதைத்தவர் நீயே கருக் குருவியான இராச பாண்டியனை மிருத்தி யுஞ்சிய மந்திர முத்தியளித்து நாரைக்கு நாடிய வடுபே றளித்து நந்தனுக்கு நடனக் காட்சியு மளித்தாய் பந்தமுடன் பணியு மடியவர் எமக்கும் வந்துபே ரளித்திடு வரீபத்திரரே.

61

நக்கீரனை நெற்றிக் கண்ணாலெரித்து நற்கீர்த்தியுடன் பொய்கை விட்டெழுப்பி அகத்தியராலே இலக்கண முணர்த்தி அகந்தையதை அறிவால் அகற்றி இடைகக்காடன் பிணக்கு தீர்த் திருளகற்றி கடைக்கன்னாலே கவலையை யோட்டி செகம்புகழ் மஞ்சந்தொடுவா யமர்ந்த செந்தமழ் ஶ்ரீவரீபத்திரரும் நயே.

வானாகி விண்ணாகி வளியாகிவற்றாத வாவியா யண்டசராச்ச ரங்களுமாகி கோனாகி குடியாகி அமரர்குழாமாகி குறித்த நவபேதமாகி நிற்குமுனன்ன காளநந்தி பம்பைதட்டை உடுக்கோடு பேரிதவில் கொம்புசங்கு, வணியார்க்க குரவையோடு மஞ்சந்தொடு வாயூரார்பணிய கிருபைதரு உருவலிமை வரீபத்திரே.

முதற்பொருளான மூஷிக வாகனன் வாழி! முதற்பணியாய் தொண்டாற்று பூசகா வாழி! தேவாதி தேவரோடு செகமதுவும் வாழி! திக்கெட்டும் சிவசமய சிவாகமம் வாழி! வந்து வழிபடுபவர்கள் சந்ததியும் வாழி! நொந்து நீதியற்றுத் தவிப்பவரும் வாழி! மஞ்சுகவி விஞ்சுமஞ் சந்தொடு வாயுறை நெஞ்சகலா ஶ்ரீவரீபத்திரரும் வாழி!

நரசிங்கரூபன் காவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியோ டகிலமும் கிடுகிடென் றதிர பரிதியும் மறைய பலதிசையோ ருமஞ்ச குருதிவாய் சிந்த கைநேமிப்படை மிஞ்ச பெருத்த நரைத்த சடை நின்றாடிட உரத்த தூணை உதைத்துத் தள்ளியே உதித்த நரசிங்கன் காவியம் பாட உறுதுணையாக எம்மோ டிருந்து கரிமுக கணபதியே காத்திடையா.

காருமென்று கதறிய முத போதும் கருமுகில் வண்ணன் வராகமதாகி பூமிதன்னையே பாயாய்க் சுருட்டி சாகரம் தன்னிலே தலை மறைவான இரணியாசுரன் சகோதரனு மான இரணியட்சுதனை வதைத்திடவே ஈரேழு உலகத்தில் ஓடிஒளிந்தாலும் நாரணனை யழிப்பே னென்று இரணியனன்று.

இரணியாசூரன் இறுமாப்புக் கொண்டு பிரமனை நோககிக் கடும் தவம் பூண்டு இறவாப்பிறவா வரங்களைப் பெற்று மூவுலகையும் அடிமையுற வைத்து தேவர்களை யெல்லாம் தினமும் வருத்தி

62

தேவேந்திரனைத் திக்கெங்கும் தேடிப் பிடித்து சிறையிடு தேவலோக மதால் குதித்து நடங்க ஏவலர்களே என்றான்.

என்றதுமே ஏவலர்கள் மூவுலகு மலைந்து இந்திரன் குயிலாகி இருக்கப் பிடித்து ஈசனெனப் பீற்றும் இரணியன் முன்விடுக்க உன்சிரசிலே குட்டியெனக் கேவல் செய்யென்றார் நீண்டவனே நெடுமாலே எங்களுக்கு மூண்டவிதி யிதையுரைத்தோம் கேட்டு தாண்டவமாடி அசுரர் குலமழித்த ஆண்டவனே வழிகாட்டு திருமாலே.

திருவிலே கருவா யுருவாக்கிட நேமிப்படையைப் பிரகலாதனாகி போய் இரணியனுக்கே புத்திரனாக் கிட மங்கள கேசி மகனையு மீன்றாள் ஐந்துவயதில் மகனருங்கலை கற்க வந்திட்ட ஆசான் தந்தையப் போற்றென்ன அழிந்திடு தந்தை இறைவன் அல்ல அரிநாராயனனே ஆதிமூல மென்றான்.

ஆதிமூலமோ தாய்தந்தை தானில்லாத நாதியற்ற வஞ்சக மாயனென்று ரைத்தாய் தந்தையென்னையே நிந்தித்த உன்னையே நொந்து மடிந்திடத் தொந்தரவு செய்தும் வந்து காத்திட கபடக் கண்ணன் எங்கேடா இருக்கிறா னென்று கேடக் தூணிலும் துரும்பிலு மிருப்பா ரென்றுரைக்க இந்தத் தூணிலுமா வென்று தூணை அடித்தான்.

அடித்தும் உதைத்துமே அவதாரமாகி துடித்திடு சிங்கமுக நரனுமாகி தடித்துப் பெருத்த கோர நகங்களாலே பிடித்து மடிகிடத்தி இரணியனைக் கிழித்து இரணமணிக் குடலை இழுத்து எடுத்து தரளவட மாலையாகவே யணிந்து எழுந்த உதிரமதை விழுந்தே யருந்தி இறவாவர இரணியனை அழித்தாய்.

அழியாவரம் பெற்றிடட் அகந்தையதாலே பழிவாங்கிடு அசுரகுல மழித்திடவே பலவவதாரங்கள் பச்சைமாலே எடுத்தாய் பிரகலாதன் பரபக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்திடவே பொல்லாப்பு செய்திடட் துடட்ரணியனை வலல்ாமை போக்கி பெற்றவரம் மாறாது நான்காம் அவதார நரசிங்கனாகி அந்திபடும் நேரம் இரணியனை யழித்தாய்.

அழித்திட்ட அகோரம் தணிக்க முடியாமல் ஈரேழு லோகமும் கோபங் கொண்டலைய சிவனோடுமை சினம் தணிய வேண்டியும் மறுதலிக் கின்றதே மனம் என்றுகூறப் பிரத்தியங் கிரிக்காளி காட்சி கண்டு

63

மறந்துமே கோபந்தணிந்து மகிழ்ந்து பிரகலாதனை மூவுலகங்களு மாள முடிசூட்டி மகிழ்ந்த நரசிங்க ரூபனே.

வராகமொடு கூர்ம அவதாரி நீயே வாமன அவதார மெடுத்தவரும் நீயே பரசுராமராக உதித்தவரும் நீயே பார்த்தனுக்குக் கீதை போதித்தவரும் நீயே பாம்பணையில் பள்ளிகொள் பரன்ராமன் நீயே இராமாயண இரம்மிய ராமனும் நயே ஈரைந்து அவதாரம் எடுத்தவரும் நீயே ஈரிரெண்டாம் அவதார நரசிங்க ரூபனே.

சரேறு ஐங்கரன் திருவடி வாழி! பார்போற்று பரமனுடன் பார்வதி வாழி! நாபோற்று நாமுகன்தேவி சரஸ்வதி வாழி! கார்நிறக் காயாம்பூக் கண்ணனும் வாழி! ஊர்வாழி ஓங்கு தமிழ்மறை வாழி! பேர்பெராரை நகருறை அன்னையர்கள் வாழி! இரணியசங்கார தேவரூப மெடுத்த நரசிங்க நாராயணனும் வாழி!வாழியவே!

ஆஞ்சநேயர் காவியம்

அஞ்சலை வாயுமகனாய் அவதரித்த அஞ்சாத அந்தமில் நெஞ்சவனுமானை செந்தமிழில் காவியம் பாடுதற்கு எண்ணிய என்தனற் கெழுமறையளிக்க பண்ணியம் பாகுதேனோடு பாலும் நண்ணயமாக நானுகந் தளிகக்க் கண்ணுதல் ஈன்ற செல்வக்களிறே கணபதியேயுனை மனதில் மறவேனே.

மறவாத மகிமைபெறு மாருதமைந்தா உறவாய் அறிவாய் வந்திடுமாருதியே செஞ்சுடர் தன்னைப் பழமென நினைத்து பிஞ்சுக் கரத்தால் பிடித்துப் புசித்த வஞ்சம் இல்லாத வடிவழகு பெற்ற அஞ்சல் அறியா அருமை அருமணியே நெஞ்சார உந்தனை நேசிக்குமடியேனை வஞ்சனை செய்யாது வந்துதவு மனுமானே.

வந்திடு வந்திடு வானர முதலே விந்தைக் கிறயாம் வித்தகப் பொருளே நந்தியின் நாதனும் நாரண தேவனும் அந்தியும் பகலும் சிந்தையில் போற்றும் மார்கழி மூலம் கேதுகாலி லுதித்த பார்புகழ்கின்ற இராம பக்தனே விராதனை வென்றிடட் வீரதீரனே புராதனன் புனிதராமன் போற்றிடுதூதனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதனாய் ராமசாமி துணையாகி நாமமாயிரம் நவின்றேற்றிப் போற்றும் வேரியங் கமலச்செல்வி வியந்தேற்றும் காரிய காரணமான கனவானே

64

மாருதி உண்டேல் சோருதலில்லை யென்று ஆறுதல் கொண்டு அவனியில் இன்று வாழ்கின்ற எம்மை வாழ்வாங்கு வைகக் பாழ்பிறவியது பற்றாது காத்திடுமையா.

காத்திடு முந்தனற்கு நேர்த்தியதாகச் சாற்றிடுவோம் தக்கவடை மாலை கந்தம் துளசி கபள கஸ்த்தூரி நொந்திடா வண்ண வெற்றிலை மாலை பல்கனி வர்க்கமும் படையலிட்டு தெள்ளிய உண்ணீரும் அளிப்போம் கண்ணாக எங்களை நீகாத்து எண்ணிய தீடேற என்று மருள்வாயே.

அருளாளன் இராமனுக்குத் தூதனுமாகி பெருவலி வாலி போர்வலி கூறி மறுதலியாது வாலியை வதைக்க திருநிறை சுகர்வீன் அரசதனை யாள சனீதயைத் தேடித் தென்திசை போந்து ஓசைக் கடலைத் தாவிக்கடந்து மேவியசோக வனத்தில் புகுந்து ஆவிபோக்க நினைத்த சீதையைக் காத்தாய்.

காத்துமே அன்னைக்கு கணையாழிகாட்டி ராமதூதன் நானெனத் தென்பதைக்கூட்டி வார்த்தையால் ராமபெருமையை ஊட்டி நேர்த்தியாய் நீடுவாழ் எனவன்னை போற்ற சூடாமணியைச் சுடர்க கொடியீர்ந்து நாதனிடம் நயவுரை கூறிடக்கூறி அசோக வனத்திலுறு அல்லலைஓதி சிறைமீட்க வருமாறு தேவிகேடட்னளே

கேடட்னை இலங்கைக்கு பூண்டிட வைத்து கேடுறு ராவண படைகளை அழித்து வேகமோட சோகவனத்தை அழிக்க நாகபாசத்தால் இந்திர சித்தன பிணைக்க ராமதூதன் என்று ராவணனுக் குரைக்க கோபத்தால் வாலில் நெருப்பினை யெரிக்க இலங்காபுரி தன்னையே எரித்து ராமனிடம் சென்று சரிதம் உரைத்தாய்.

உரைததைக் கேடடு உருகியே நொந்து விரைவாய்ப் புனலிடை புத்தணைகட்டி போரிடைப் பொருதிடப் படைதனை நகர்த்தி வேரறப் பகையை விலக்கி முறித்து சறீப்பாய்ந்து சிரஞ்சவீ கொணர்ந்து சருீடை இலக்குவன் மயக்க மகற்றி பணியாத பகைவர் கதைகள் முடித்து மணிமுடி விபுடணனைத் தரித்திடச் செய்தாய்.

சனீதயைச் சிறைமீட்க உதவியது நயே ஸ்ரீராம அரியணை தாங்கியது நயே சதீராமரை நெஞ்சில் வைத்தது நயே சரீன பிரமச்சாரியாய் வாழ்ந்ததுவும் நயே கோளுறு பாவம் தீர்ப்பவனும் நயே

65

வாழ்வுறச் செய்யும் வடிவமும் நயே ஏங்கிடும் பக்தர்க்கு உதவுவதும் நீயே ஏதிலார்க் முன்வந்துதவு மனுமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி புத்தி விநாயகர் வாழி! ஸ்ரீராம மந்திரப் பொருளது வாழி! சிவனா ரோடுமை சேர்ந்துமே வாழி! கதிர்காமந் தன்னிலுறை கந்தனும் வாழி! கலைவாழி செந்தமிழ் மொழி வாழி! நிலையான சமாதானம் நித்திலத்தில் வாழி! உனது பெருமை புவிமீதோதுபவர் வாழி! அஞ்சலை ஆஞ்சநேயனும் வாழி வாழியவே!

ஆரைநகா ˙கண்ணகை அம்பாள ˙காவியம்

அருமறைக ளனுதினமு மதிகாலை யொலி குருகுலத்தோர் வாழ் ஆரைநகருறை கருணைசொரி கற்புடை கண்ணகை மீது பெருமை செறி காவியத் தார்புனைந்தணிய உருமறையோர் ஓதியுணர் பிரணவ அறுகார வாரமணி பூரண வடிவ கருதறிய ஆயர்மனைக் கண்ணனின் திருமருக னைங்கரனைத் தினமும் மறவேனே.

மறவாது வழிபடு மடியார்களுக்கு வருதுன்ப துயர்துடைத்துக ˙காகக் மதிநிறைச் செல்வி மதன கம்பீர அதிலாபண்ய ரூபி அரிஓம் அட்சரத்தி பாதிமதி சூடுபரம சிவன்பாரி நீதிநிலை நிறுத்த நித்திலம் மீதில் ஆனபதி ஆரைநகரென தேர்ந்தமர்ந்த ஆதியே நீதியே அன்பு மாதாவே.

மாதவே உன்பெருமை ஓதியுரைக்க போதாது இப்பிறவி யென்தனக்கு காதலன ˙செய்த கடும்பிழை பொறுத்து வாதாடி வழக்குரைத்து நதீகாத்த பேரான பேரரசி கண்ணகையேநீ ஆதரவற்று அநாதை களாகி நாதியற்று நடுநீதியற்றுத் தவிக்கும் அருவரினம் காகக் வாகாதோவம்மா.

அம்மானை பாடி ஆரணங்கார்போற்ற மெய்யான அன்போடு மேவிவரமளித்து வைகாசி திங்கள் வருவே னென்றுரைத்த கைராசிக் கண்ணகைக் காரிகையாளே பொய்வாதம் செய்து புவியாள நினைக்கும் அஞ்ஞான வாதிக ளாங்கார மகற்றி மெய்ஞான முணர்த்தி சமநீதி காக்கும் அந்நாளது என்நாளில் வரும் தாயே.

தாயே தஞ்சமென்று மாழிபணியு மெம்மை நேயமுடன் தூககி நீநிறுத்தா விட்டால் பாரினிலே யாரத்தான் எம்மைக் காப்பார்

66

வாரணியே நாரணியே காரணியே சொல்லு தாழ்வான எண்ணங்கள் தன்னை யோட்டி மாழாத ஆணவப் பேய்தனை மாய்த்து ஏழைக ளெம்மைக் காக்க வின்னுமேன் தாமதம் காரணம் நயூரை செய்தாயே.

செய்திரு செயலெல்லாம் மெய்யாக வேண்டும் வையத்தே நிம்மதி தனைத்தோங்க வேண்டும் பொய்யான வாதங்கள் போயகல வேண்டும் சாந்தி சமாதானம் தான் மலர வேண்டும் பித்தவாத சிலேற்பன நோய்களகன்று நித்தில மக்கள் நிறைவோடு வாழவேண்டும் இத்தனையும் நீமனது வைத்தாலாகாதோ? உத்தமியே யாரைநகருறை கண்ணகையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகையே உன்தன நாமமதை ஓதக் கண்டபிணி யாவுமே மண்டியிட்டோதும் கன்மவினை யென்றுமே எம்மையணுகாது துட்டபபிசாசுகளும் தூரவேயோடும் எம்மிதயம் நிறை பொன்னனைய தாயே கன்னலெனத் தித்திக்கும் கோலமொழியாலே அன்பாலேயெமை யாதரிப்பே னென்றுரையும் ஆரைநகர்ப்பதி யமர்ந்த அம்பிகையே

அம்பிகையே அரனாரோ டாடுபவள நீயே தும்பிக்கை விநாயகரை ஈன்றவள் நீயே மாநாகர் மகளாக வளர்ந்தவள நீயே மாசாத்தார் மருமகளானவளும் நயே கோவலரோடு மதுரை புகுந்தவள் நீயே கோமாறன பாண்டியனை வதைத்தவ நீயே மன்றேறி நீதிதனை வென்றவள் நயே நன்றான வாரைநக ரமர்ந்தவளும் நயே.

நீயன்றி நீதிநிலை நாட்டு வாருண்டோ? சாதிசமய பேதம் போக்கு வாருண்டோ? ஆதியந்த மில்லாச் சோதிவடி வானவளே பாரிலுமைப் போல்வேறு பெண்தெய்வ முண்டோ? நோயுற்று பாய்பற்றிப் படுத்தழுந்து முன்பே நீவந்து கைதந்து எமையேந்து மம்மா ஆரல்கீரை நரோடை மருங்கில் வளர் ஆரைநகர் அன்னையே எமையாளுவாயே.

ஆள்பவர்கள செய் அநீதிகள் களைந்து தாளப்ணிவோர் வாழ்வுதனை உயர்த்தி நம்பியவர்க் கெனறும் நல்லருள் நல்கி தும்பியலில் தோய்ந்து துவழாது ஏந்தி நாடது செழிக்க நல்மாரி பொழிந்து ஊருதனைக்க உயர் செல்வ மீர்ந்து எங்கள் வழிபாட்டை ஏந்திழையே ஏற்று தந்திடம்மா நல்வாழ்வு தாயே நீயென்றும்.

67

முநதுசிவன் மூத்தமகன் கணபதி வாழி! தந்தைக் குபதேசித்த சாமிநாதாதன வாழி! அர்த்தநாாஸீவர அம்மையப்பன வாழி! அயனோடு திருமாலு மனுதினம் வாழி! ஓதுமறை ஆகமங்கள் நீடூழி வாழி! ஓங்குதமிழ் மொழி பாங்காக வாழி! உன்னத ஆரைநகர் அமர்ந்தருளும் அன்னை கண்ணகையும் வாழிவாழியவே!

பேச்சி அம்பாள காவியம்

வங்கக் கடலொலி வாழ்த்தது வுரைக்க வாவிதனிலே வாழ் மீனின மிசைக்க தென்றலெனும் நல்லாள் சுருதியும் மீட்க கொண்டல் உருக்கொண்டு நடனம தாட ஆயர்பாடியில் அவதரித்த பேச்சியின் மீது ஆற்றல்மிகு காவியம் அன்போடு பாட எந்தனக் குற்ற துணையா யிருக்கும் ஏரம்பன் பாதமலர் என்றும் காப்பாமே.

அதிரூப நாரணி அரிஓம் பகவதி அறுகோண அட்சர ஆசனத்தி அச்சுதன் சோதரி அழகு அபிராமி அகிலமது காத்தறம் வளர்கக்ம்தேவி அனைவரதமாயி அருள் சித்தி முத்தி அரனோடு நர்த்தன மாடு மகமாயி அறிவிலி நானென்று முனன்டிமைதாயே அன்னையே என்னைநீ ஆதரிப்பாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரித் தாளும் ஆகாயப் பேச்சி ஆனந்த பராபரி ஆடிடும் ரூபி ஆதிசிவனாரின் அங்க மதில் பாதி ஆகி நீ அனைவருக்கு மருள்சகதி ஆலிலையில் துகிலரி ராமன் சோதரி ஆங்கார ஓங்கார ஆனந்த மாயி ஆதரவற்றுத் துயர் உற்ற எம்மை ஆரணங்கே நீ அணைக்க வாயிங்கே.

இங்கே காலனவன் அணுகாது எங்களை இன்னருள் தந்தட வந்திடு அம்மா இன்னமும் ஏழையை ஏறிட்டுப் பார்க்காது இருப்பது முமக்கழகு தானோ சொல்லம்மா இந்திரன் திசையில் வாழ்ஈசனார் தேவியே இணையொருவ ரில்லாப் பரிபூரணத்தி இன்னல்கள் தீர்த்தருள இரங்கிவா தாயே இன்னமுதே எங்கள்குறை போக்கி யாளவ்ாயே.

ஈபவளும் நீயே இரட்சிப்பவளும் நயே ஈஸ்வரனார் பாக ஈஸ்வரியும் நீயே ஈரேழு உலகங்கள் ஆள்பவளும் நீயே ஈடில்லா மெய்ப்பொருளானவளும் நயே ஈவிரக்க மின்றி எத்தர் களௌமை ஏய்க்க ஈதென்ன கொடுமைகள் இழைத்தோ மிங்கே ஈனர்கள் செய்கொடுங் கோண்மை கண்டும் ஈஸ்வரியே பேசாதிருப்பது முறையோ?

68

உம்பர் தொழுதேவியே உன்னத பேச்சியே உளள் முருகியான் உன்புகழ் பாட உன்னருள் என்றுமே உமையே தந்திடு உபேந்திரன் தங்கையே உலகமாதாவே உடுக்குத் தொனியாலே உலகு காப்பவளே உன்கைச சக்கரத்தால் பகை மாற்றி உன்மக்கள் என்றும் உயர்வோடு வாழ உத்தமியே ஊனரெமக் கூன்றுகோல் நீயே.

ஊன உடம்பதனை உண்மையென நம்பி ஊறுசெய் ஊரளிகளை ஒறுத்து ஊழ்வினை கதிராளி படுபனி யாக்க ஊழியாள் தேவிநீ பேரொளி காட்டு ஊமையனைப் பேசச்செய் பேரான பேச்சியே ஊழியம் செய்குவோர் வேதனை போக்கி ஊக்கமுடன் காத்திடு உச்சிட்ட தேவியே ஊட்டமற் றுறக்கமற் றுழலும் எமையே.

எகத்திலே மாங்கிசம் தனை யுகந்தவளே எக்கலா தேவிமுத்து மாரி சகோதரியே எழிலான வேபபிலையில் ஒளிரும் பேச்சியே எழிலிய மேகநற் குழலழகு தேவியே எமது பகைபிணி தீர்க்கவந்த அம்பிகையே என்றும் நயேதுணை ஆதி அன்னையே எப்போதும் மறலியெமை அணுகாது பாத்து எங்களைக் காத்தருள ஏகாந்த ரூபியே.

ஏட்டறிவு பாடட்றிவு ஏழையானறியேன் ஏற்புடைய குருவடி வணங்கியு மறியேன் ஏழக்டல் சூழ்புவியில் இன்பமதறியேன் ஏழையானுனைத் துதிக்கு முறையு மறியேன் ஏனிந்த மானிடப் பிறவி யென்றறியேன் ஏழைஎளியோருக் கெதுவு மீந்து மறியேன் ஏகதந்தன தாயே எழிலரசி பேச்சியே ஏறாளர் பாரமல் எமைக்காருமுமையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பொறி ஆசைவழி செல்லா தடககி ஐயமது மெய்யறிவைப் பற்றா தொடுக்கி ஐதீக மணுவளவும் மீறாது காத்து ஐஸ்வரிய ஆசைகளை அடியோ டழித்து ஐந்தாம் படை அரக்க குணம் தடுத்து ஐயுறவகற்றி அடியேன் பிழை பொறுத்து ஐயையே அடியேன் வணக்கமுறை யேற்று ஐம்முகன் தேவியே யருளும் அம்பிகையே

கருணைசெறி கஜமுக கணநாதன் வாழி! கயமையொழி கைவேல கந்தனும் வாழி! மருநிகர் மகிமைபெறு மன்னுபவன் வாழி! திருவோடு வேதனுமை சரஸ்வதியும் வாழி! அருமறையும் நல்லோரும் சிறப்புடன் வாழி! உருவான செம்மொழிச் செந்தமிழும் வாழி! இருமைதனில் சமநதீ சமத்துவம் வாழி! பெருமைபெறு பேச்சியும் வாழி வாழியவே.

69

ஆரைநகா படபத்திரகாளி காவியம்

தரு

தந்தன தனாதனன தானனத தானேயம்மா தனனா தனாதந்த நாதனத தானேயம்மா தந்தன தனாதனன தானனத தானேயம்மா தனனா தனாதந்த நாதனத தானேயம்மா.

மிடற்நீல முடைய சிவனார் திருத்தேவியம்மா படபத்திர காளியின் பெருமைகளைப் பாடவம்மா உடன் நாவிலேயிருந்து உற்றதுனை யாகியம்மா திடமுடனே செந்தமிழ் சொற்பூக்களரீந்தம்மா உறுபிழை களைந்துயர் மணமது பரப்பிடம்மா நறுசொட்டு நற்காவிய மாலையது பாடவம்மா திருநிறை கமலமலரமர் வாணியோடு அம்மா மருப்புடைய வேழமுக ஐங்கரனும் துணையேயம்மா.

அரனாரங்கப் பாதியாகி அகிலமதை ஆளுமம்மா அந்தரிய கிலலோக மோகினியே தாயேயம்மா அண்டம் தொழுதேற்றுகின்ற அபிராமி நீயேயம்மா அதிலாபணிய இதழழகு அட்சரத்தி நீயேயம்மா அனுதினமும் அடியேன் மனத்திருத்தி உன்னையம்மா அழகுதமிழ் காவியமே மனமுருகி ஓதவம்மா அன்னையே என்னைநீ வந்து தினம் காருமம்மா ஆரைநகராள் படபத்திரகாளி என் தாயேயம்மா.

ஆழிமழைக் கண்ணனவன் சோதரியும் நீயேயம்மா ஆயிமகமாயியே ஆனந்த சோதியம்மா ஆனறோர் புகழ்ந்தேற்றுகின்ற ரூபினியே தாயேயம்மா ஆனைமுகன அன்னையே அடியவரைப் பாருமம்மா ஆதியந்தரியே நீதியற்றுத் தினம் அலைந்தோமம்மா ஆட்டிடும் கூட்டத்திற்கு அடிபணியலாமோவம்மா ஆனந்தவல்லியே எம்மை வந்து காருமம்மா ஆரைநகர் வாழ்ந்தருளும் படபத்திர காளியம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமயவல்லிக் கிணையாக நடனமாடி வந்தவளே இருடிகேசன் தங்கையாளே இந்திரபத மளிப்பாய் இகழுநர் இடுக்கண்னது துடைத்து எறிவதம்மா இன்னநாள என்றுநீயும் இடித்துரைத்து சொல்வாயம்மா இகபரசுக மளியிருநிதி இறைவியம்மா இந்துமதியா யிலங்கு இந்தராணி நீயேயம்மா இச்செகத்தில் எங்களை அன்போடு காத்துஅம்மா இன்புற வாழவை படபத்திர காளியம்மா.

ஈடுஇணை யுனக்கெவருமில்லை யிந்த உலகிலம்மா ஈசனோடு பூசுரரும் பணிந்தேற்றும் தாயேயம்மா ஈட்டியுடன் ஆயுதம் எட்டுக்கரம் ஏந்தியம்மா ஈவிரக்கமற்ற அசுரகுலம் அழிக்க அம்மா ஈரேழுலோகமும் படைகக்லம்தான் கொண்டவளே ஏழையெமைக் காக்கவேன் தயக்கமின்னும் சொல்லனம்மா ஈன்றதாய் நீயன்றி வேறுதுணை யாருஅம்மா இப்புவியில் துணையான படபத்திர காளியம்மா.

70

உந்திபூத்தவன் உடன் பிறந்தவளே தாயேயம்மா உத்தண்ட கெம்பீரி உதவிடு தேவியம்மா உந்தனையே நம்பியுயிர் வாழுமெம்மைப் பாருமம்மா உறவிழந் துயிரிழந் துடமையு மிழந்தோமம்மா உளள்முடைந்தே உன்பதி தேடிநாம் வந்தோமம்மா உத்தமியே மெத்தமனமுடைய காளி நயேயம்மா உத்தூளன வெண்ணீறு நெற்றியி லிலங்குமம்மா ஆரைநகர் வாழ் படபத்திர காளியம்மா.

ஊழியம் செய்பவர்கள் செய்பூசைதனை யேற்றுஅம்மா ஊழியான் தேவி உவர்ந்துமடை ஏற்றுஅம்மா ஊழ்வினை உறுபிணி நோய்களது மாற்றிஅம்மா ஊறுசெய் பொல்லார் வல்லமையைப் போக்கியம்மா ஊனுடல் வளர்க்கவே கேடுசெய்யும் மாந்தரை உண்மையுணர்ந் துன்பதி நாடவை தாயேயம்மா ஊழிகால முதலே உன்னால் ஆகாததில்லையம்மா ஆரைநகராள் அன்னை படபத்திர காளியம்மா.

எருமையுரு மஹிடனைக் கட்டியதும் பொய்யோவம்மா எதிரிலே சிங்கமாகி அவன்வந்ததுவும் பொய்யோவம்மா எழுந்துமேயவன் அம்பு எய்ததுவும் பொய்யோவம்மா எக்காளயானை கரம்வெட்டி வழீத்தியதும் பொய்யோவம்மா எதிரியவன் உடலைவெட்டி சாய்த்ததுவும் பொய்யாவம்மா எழுச்சியோடு தேவர்களும் ஆடியதும் பொய்யோவம்மா எழில்கானம் கந்தரூபர் பாடியதும் பொய்யோவம்மா ஆரைநகராள் பவளே காளிஎம் தாயேயம்மா.

ஏற்றூர்தி சிவன்பாகமான அது மெய்யேயம்மா ஏதிலார்க்கு என்றும் இரங்குவதும் மெய்யேயம்மா ஏர்பெறு திருமாலின் தங்கையானதும் மெய்யேயம்மா ஏகதந்த னன்னையாய் வந்ததுவும் மெய்யேயம்மா ஏளன சண்டமுண்ட சங்கரிநீ மெய்யேயம்மா ஏந்திழையே மகிடாசூர மர்த்தனிநீ மெய்யேயம்மா ஏகபரி தும்ரலோசனை வதைத்ததுவும் மெய்யேயம்மா ஆரைநகர் வாழ்பவளே காளிஎம் தாயேயம்மா.

ஐம்முகன் தேவியம்மா ஐவிர இதழழகி ஐயமுறப் பரிகலத்தோ டாடுபவள நீயேயம்மா ஐயயே விஞ்சுவித்தகம் செய்காளி நீயேயம்மா ஐய்தீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதவேதாந்த வித்தைகளும் நயேயம்மா ஐக்கிய சமாதான சாந்தியும் நியேயம்மா ஐந்தெழுத்துப் பஞ்சாட்சரம் ஆனசிவ தேவியம்மா ஐயரேற்றும் கீதமோடு நாதமும் நயேயம்மா ஆரைநகராள் படபத்திர காளிஎம் தாயேயம்மா.

ஒடுக்கிட்ட சும்பனை நிசும்பனை வதம்புரிந்தாய் ஒடப்மற்ற சுரமதுகைடபரை மாய்த்து வந்தாய் ஒருசேர முச்சக்தி சாமுண்டி காளியம்மா ஒருங்கு பலசக்தியும் துரந்தரியும் நீயேயம்மா ஒப்பான திரிபுவன சௌந்தரி பயங்கரியே ஒத்தாசை புரிந்தருளவ்வாய் கும்பமுறை நாயகியே ஒப்புரவுடையவளே சிரோன்மணித் தாயேயம்மா ஆரைநகராள் படபத்திர காளிஎம் தாயேயம்மா.

71

ஓதுபவர்க் குதவுகின்ற உத்தண்ட கெம்பீரி ஓங்காரி உன்பெருமை ஓதுவதெளி தோவம்மா ஓட்டிடவா மந்திர தந்திர சூனியத்தை ஓதிடம்மா பண்டுபழி பாவம்கண்டு ஓடிடவே ஓர்மையள் நெஞ்சத்தில் சஞ்சல மணுகாதுஅம்மா ஓவிய நிர்குணி சர்குணியே தாயேயம்மா ஓதரிய தங்கமுகத் திங்களொளியாளே யம்மா ஆரைநகர்மேவு காளிஎம் தாயேயம்மா.

புரிந்துணர்வு அற்றுஎமை வருத்துவதை காணவம்மா சஞ்சலம் விஞ்சுதம்மா நெஞ்சமு மஞ்சுதம்மா மெத்தமனம் நொந்துதான் தஞ்சமென வந்தோமம்மா உளள்த்துப் பீதிபயம் போக்கியெமை ஆளுமம்மா தாய்வயிற்றிலே பிறநது காயமது வளர்த்தோமம்மா காயாய்த் திரிந்து மாயவாழ்வில் மதிமயங்கி பாயில் படுத்துமே நோய்களில் அழுந்தாது காப்பவளே படபத்திர காளிஎம் தாயேயம்மா.

சங்கநிதிச் செந்தமிழ் மீட்டிடும் எம்மையம்மா அங்கமது சோர்ந்து தளர்ந்திடு முனபேயம்மா காலனுக் கஞ்சாமல் கலியனும் மிஞ்சாமல் காயாம்பூ மேனியன் தங்கையே காரனம்மா துன்புற்றே துயரக் கடலிலே மூழ்கிடாது வஞ்சிக்கும் வஞ்சகரை வாளகொண்டு வெட்டனம்மா வில்லின் நாணொலியில் நடுங்கிட வையுமம்மா ஆரைநகர் வாழ் படபத்திர காளியம்மா.

பத்துவிரல் மோதிரமே மெத்தப் பிரகாசமம்மா முத்து மூக்குத்தியும் ரத்தினப் பதக்கமம்மா செங்கையில் பொற்காப்பும் மங்கள தண்டையுமம்மா செண்பகம் முடிந்த செவியாடுகின்ற குழையுமம்மா மாணிக்கமிழைத்த பாதச் சிலம்பொலியும் தானேயம்மா உலகெலாம் விலைபெற்று முகமெலாம் பொலிவுற்று இலங்கு மெழிலழகுதனை எடுத்தியம்ப லாமோவம்மா ஆரைநகர் ஆள்பவளே காளிஎம் தாயேயம்மா.

சத்திய விரதனைக் கவிஞனாய் மாற்றியம்மா சங்கோடு சக்கரம் ஏந்துகின்ற சூலியம்மா பாசம்வாள் வில்கத்தி தீச்சட்டி யேந்தியம்மா படைநகர்த்தி தடையகற்று சண்டிகா தேவியம்மா துட்டப் பிசாசுகளை வெட்டியுயிர் கொன்றவளே மோதுகட லேழையும் உறிஞ்சிக் குடித்துவம்மா அறுபத்து நான்கு கலை ஓங்குபுக ழோங்குமம்மா ஆரைநகர் வாழ் படபத்திர காளியம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடரிய தெய்வபணி செய்பவர்கள் வாழியம்மா சாந்தி சமாதானம் சமநீதி வாழியம்மா உரமுடன் தொண்டாற்றும் பூசகரும் வாழியம்மா திறமுடன் தமிழிசைக்கும் பாவணர் வாழியம்மா திருவாழி மறைவாழி வேதங்கள் வாழியம்மா கரிமுக கணபதி கைவேல் கந்தன் வாழியம்மா தமிழினமும் தமிழ் மொமியும் நீடூழி வாழியம்மா ஆரைநகராள் படபத்திர காளியும் வாழிவாழியம்மா.

72

4. கரகப்பாடல்

"கரகம் பிறந்ததம்மா கன்னலூர் மேடையிலே", என்று கரகமானது இந்தியாவிலே ஆரம்பமானதென்பதும் மாரியம்மனின் ஆலயத்தே மாரிக்கே உரியது கரகாட்டம் என்பது வெளிப்படை உண்மையாக விளங்குகின்றது. எமது மட்டகக் எப்புத் தமிழகத்தில் அன்று பழம்பெரும் கிராமங்களான பழுகாமம், வெல்லாவளி, எருவில், கோட்டைகக் ல்லாறு, ஆரையம்பதியாகிய இடங்களில் ஆடப்பட்டு வருகின்றது. பெரும்பாலுமிவை அம்மன கோயில் சடங்குகளிலே நிகழ்த்தப்படுவதோடு, திருவிழாகக்காலங்களில் பட்டெடுத்து வரும் வேளையிலும் திருவிழா நடைபெறும் போது, சுவாமி வதீ யுலா வரும் போதும் கரகாட்டப்பாட்டுடன் கரகம் தூக்கி ஆடி வருவது, எமது பிரதேசத்தில் இன்றும் சில ஆலயங்களில் நடைபெறுகிறது.

ஏழுபேர் அல்லது ஒன்பது பெண்கள் அல்லது ஆண்கள் கரகம் தலையில் வைத்து பாடலுக்கும், இசைக்கும் ஏற்ப ஆடி வருகிறார்கள். மலர்மாலைகள், வேப்பமிலைகள் என்பன பயனப் டுத்தி வேபப் ிலைக்கரகம், பூக்கரகம் என்பன வடிவமைக்கப்படுகின்றது. கரத்தின் உச்சியிலே கிளி வடிவம் வைகக்ப்படும். பெண்கள் தூக்கி ஆடி வரும் கரக வடிவமைப்பு, உயரம் அவர்களின் இயல்புக்கேற்ப அமைக்கப்படும். ஆண்கள் தூக்கி ஆடிவரும் கரக வடிவம், உயரம் மிகவும் அகன்றும், உயரமாகவும் வடிவமைக்கப்படும். பாடடு க்கும் தாளத்திற்கும் ஆடும் போது கரகமானது தலையிலிருந்து விழுந்து விடாது ஆட்டத்தின் போது சமநிலை பேணப்படுவது சாமர்த்தியமாகும்.

பேச்சியம்பாள் கரகம்

பிள்ளையாரு கரகம் இது பிள்ளையாரு கரகம் தொல்லைதனை போக்க வலல் பிள்ளையாரு கரகம்.

கல்லடி உப்போடை வாழுகின்ற பிள்ளையாரு கரகம் நல்லபடி நல்லோரை நாளும் காத்திடும் நற்கரகம்.

பொல்லாங் கெலாம் தவிர்க்கும் பிள்ளையாரு கரகம் எள்ளுச்சேனை யுறை எங்க பிளஎ்ளயாரு கரகம்.

கல்லடி உப்போடை நொச்சிமுனைப்பேச்சி கரகம் உளஎ்ன்போடு பள்ளயம் உவந்தளிக்கும் கரகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சியாத்தா கரகம் செங்கோலோட்சும் கரகம் மாட்சியுறவே ஆட்சி மாற்றிவிடும் கரகம்.

ஆடியமாவாசையின் பின் தேடிஆடி வரும் கரகம் நாடி அடியார்கள் தூககி ஆடிவரும் கரகம்.

பாடும் பாடலுக்குப் பாவ மோடாடு கரகம் கூடும் கூட்டமதை தாளம் போடவைக்கும் கரகம்.

நாராயணி கரகம் ஊராண்டிடச் செய் கரகம் பாராயணம் பாடிப்பக்தர் பணிந்து நிற்கும் கரகம்.

வடமா முகத்தி கரகம் திடமாவாடு கரகம் கோடான கோடி பக்தர் கொண்டாடு கரகம்.

ஆரைநகர் தனிலே பேரான பேச்சி கரகம் தாரணி தயாபரியாள் தத்துவ வித்தகக் கரகம்.

73

தீக்குழி தன்னை என்றும் பூக்குழியாக்கு கரகம் பூபாலன் தங்கை பேச்சி கோமளவல்லி கரகம்.

வேபபிலைநிறை கரகம் பிணிபோக்கி யாளும் கரகம் தாமோதரன் தங்கை பேச்சி சன்னிதானக் கரகம்.

தேத்தாமர நிழலில் வீற்றிருக்கும் பேச்சி கரகம் பூத்த புதுமலராய்ப் பூரிப்போடு ஆடு கரகம்.

பள்ளயப் பேச்சி கரகம் வலல்மைமிக்க கரகம் வெள்ளைக்காரர் விரக்தி போக்கி யாளும் கரகம்.

ஆகாயப்பேச்சி கரகம் பாராள வைகக்ும் கரகம் ஆள்பவா அநீதி அழித் தொளிக்கும் கரகம்.

சாந்தி சமாதானம் என்றும் ஓங்கச் செய்யும் கரகம் சேர்ந்து இனங்கள் ஒன்றாய் வாழச் செய்யும் கரகம்.

பொங்குதமிழ் இன்பம் எங்கும் தங்கச் செய் கரகம் வங்கக் கடல் வாழ்த்தி நன்கு வாழ்த்துரைக்கும் கரகம்.

பௌர்ணமி ஒளிபட்டு மின்னிப் பளளக்கும் கரகம் அவுணர் குணமழித்து அருள் அளிக்கும் கரகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிமதி சூடு சிவபரன் தேவி பேச்சி கரகம் சாதி வெறி போக்கி நீதிநிலை நிறுத்தும் கரகம்.

பையரவ ஆரம்புனை பரமசிவன் பாரி கரகம் நவவி நயனப் பேச்சி துள்ளிஆட மகிழும் கரகம்.

உ ளள்த்து ணர்வுகளை நல்லபடி காட்டிடு கரகம் வெள்ளமனப் பேச்சி அள்ளி அருள் வழங்கு கரகம்.

கேடகும் வரம் அனைத்தும் தூக்கித் தரும் கரகம் நாட்டுப் பற்றை மனதில் நிலைநாட்டி விடும் கரகம்.

முத்துமாரி கரகம்

வம்மிக்கேணி முத்து மாரி கரகம் பாரு துன்பதுயர் தீர்க்கும் நீ தூக்கியாடிப் பாரு.

ஆரைநகர் மாரி ஊரைக் காத்திருக்கா பாரு மாரிபொழிய வைத்து முத்துமாரி யருளவ்ா பாரு.

பூக்கரம் பாரு நீ பூரிப்போடு ஆடு காகக்கும் கரமாரி அவ காவலிருப்பா பாரு.

வேப்பிலைக் கரகம்பாரு வேதனை போக்கு மாடு கூப்பிக ˙கரம் குவித்தால் தூக்கிவிடுவா பாரு.

சுற்றிச் சுற்றி ஆடு நீ துணிந்து நின்றாடு பெற்றதாய் தான் மாரி என்றும் பேணிக் காப்பாபாரு.

சொன்னபடி ஆடு கண்ணன் தங்கை கரகம்பாரு வண்ணமலர் தொடுத்து வடிவமைத்த கரகம் பாரு.

74

வம்மிக் குயில் கூவும் நசீம்மதித்து ஆடு கேணிமலர்த் தேனீ பாடும் கானம் கேடடு ஆடு.

மூன்றுகரகம் பாரு நெஞ்சில் தோன்று மின்பம் கோடி ஆண்டு தோறும் மாரி ஆதரித் தருள்வா பாரு.

ஐந்து கரகம் பாருநீ அசைந்து அசைந்து ஆடு பைந்தொடியாள் மாரி மனம் மகிழ்ந் தருள்வா பாரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்கரகம் பாருநீ நன்றாகத் துள்ளி யாடு தற்பரியாள் மாரி பொற் பதமளிப்பா பாரு.

பொற்கரகம் பாரு நீ பக்தியோடு துதித்தாடு உத்தமியாள் மாரி ஓடி வந்தருளவா பாரு.

ஏழுகரகம் பாருநீ சாய்ந்து சாய்ந்து ஆடு ஏழைக் கிரங்கும்மாரி தாவி யனைப்பா பாரு.

பத்துக கரகம் பாருநீ குத்தி மிதித் தாடு முத்து மாரி யூரு வம்மிக் கேணியென்று பாடு.

கருமாரி கரகம் பாரு நீ உருக்கொண்டு ஆடு வழுவாது தொழ மாரி வந்தருள வா பாரு.

பேச்சி கரகம் பாருநீ மூச் செடுத்து ஆடு மோட்ச மருள முத்து மாரி வருவா பாரு.

மரண பயத்தைப் போக்கும் மாரி கரகம் பாரு சரணம் சொல்லி நாளும் மாரி சன்னிதியை நாடு.

கேசவன் தங்கை மாரி கோயிலைச் சுற்றியாடு பாசமோடு மாரி நல்வாக்குச் சொல்வா பாரு.

துளளி மிதித்தாடி மாரி கொள்கை யழகைப்பாடு அள்ளி அணைத்து மாரி ஆதரித்துக காப்பாபாரு.

ஆவணித் திங்கள் மாரி குளுத்தி யன்று ஆடு பாவாணர் பாடல் கேடடுத் தாவித்தாவி யாடு.

மடை விரிப்புப் பார்த்து மகிழ்ந்து மகிழ்ந்து ஆடு தடை யில்லாது மாரி நேரில் வந்தருளவ்ா பாரு.

5. கவி பாடுதல

நாட்டார் பாடல் வகைகளுள் „கவி'' யும் ஒரு வகைப்படும். கவி எனும் சொல்லுக்குப் பாடல், புலவர் எனும் ஒத்த சொற்களும் தமிழில் குறித்து நிற்பினும் எமது பிரதேசத்தில் தமிழ் மக்களிடையேயும், முஸ்லிம் மக்களிடையேயும் கவி பாடும் மரபு மருவி நிற்கிறது. இது அக்காலத்தில் வளர்ந்தோர்க்கான ஒரு பாடல் வகையாக, பெரும்பாலும் காதல் கருத்துச் சார்ந்தவையாக காணப்பட்ட போதிலும் தற்காலத்தில் பல்வேறு பொருள் பற்றிப் பாடப்படுகின்றது. எமது பிரதேசத்திலுள்ள ஊர்களைக் குறித்தும் அவற்றின் சிறப்புப் பற்றியும் கவி பாடப்படுவதுண்டு. முஸ்லீம்கள், தமிழர்கள் தொழில் செய்யும் இடங்களில் களைப்புத் தெரியாதிருக்கக் „கவி'' பாடி தம் வேலைகளைச செய்வது வழக்கமாக அபபோது இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75

இங்கு வாழும் முஸ்லீம்களின் பண்பாடு, மொழிநடை, உறவுமுறைகள், தமிழ்ர்களுடன் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. இவர்களின் „கவி" பாடலிலும் அகச்சுவை கலந்த சொல்லாட்சியும், பொருட்செறிவும் இழையோடுகின்றன.

பெண்: மண்முனைப்பட்டியில் பால் கறந்து காய்ச்சிருக்கன் வட்டைகக் போறநங்க வயிறாற குடிச்சிப்போங்க ஆண்: நேத்திராவு குடிச்சபாலு நெஞ்சுகக் மேல நிக்கி ஊத்தித்தா போத்தலில் உழவடிக்க போகனுங்க பெண்: உமலுக்கவொரு துண்டு ஓட்டுக்கொழுக்கட்டரிக்கி மறவாம தின்னுமச்சான் திறமாகத் தித்திக்குங்க ஆண்: கண்டவங்க கண்ணுபடும் திண்டதுமுன ' நினைப்புவரும் நிண்டுவேல செய்யாம நேராக வந்திடுவன் புள்ள பெண்: பாயிழைக்க பன்னறுக்க பாலமுனைக்கு போறமச்சான் திராய் கிடக்காம் புடுங்கிவாங்க திண்டு வெகுநாளாச்சி ஆண்: திராயில பித்தம்புளள் திண்டானொகக் சத்திவரும் ராவைகக்க ' கூத்துப்பாக்க நாம சேரந்து போகனுங்க பெண்: காங்கேய னோடைகக்ள கால்நடையா போற மச்சான் மீன் கிடந்தா வாங்கிவாகா முளகுதண்ணிகாய்ச் ஆண்: கண்ணகை அம்பாள் கதவு திறக்கப் போறாங்கபுள்ள ஊரெல்லாம் மச்சமில்ல உனக்குத் தெரியாதகா என்றும், மகள்: ஆற்றுக்கு அக்கரையால் ஆசைக்குழல் ஊதுதம்மா தங்குதில்லை தரிக்குதில்லை நான் தண்ணிக்ப் போய்வரட்டோ. தாய்: தண்ணீருக்குப் போமகளே தரியாமல் வாமகளே கண்ணுக்கு உசந்தவரை கடைகக்ணாலும் பாராதே. என்றும் தாய் மகளுக்குப் புத்தி சொல்லும் வகையான கவியும் தமிழர்கள ' பாட முஸ்லீம்கள்,„காத்தான்குடிகக் கரத்தகொண்டு போற மச்சான் பூபபோடட் சீத்த புதிசா வந்தா வாங்கி வாகர்" என்று பெண் கூறுவதும்,"அஞ்சாங்கட்ட வட்டயில அஞுசேகர ' செய்திருக்கன் தாலிக்கொடி வாங்க என்ற தங்கமயில் நாகூருக்கு" என்று பதில் கூறுவதும்,"காவல் பறண்மேலே கண்ணுறங்கு வேளையிலே என் கண்ணான மச்சிவந்து கால்ஊன்றக் கனவுகண்டேன்" என்று மச்சியின் காதில் கேடக்ப் பாட,"வாவென்று சொல்வேன் மச்சான் வாயாலே பாயவிரிப்பன் வாப்பா அறிஞ்சாரெண்டால் அரவாளால் வசீடுவார்" என்று பதிலளிப்பதும்,„கவி" பாடடின் மூலம் கேட்டு ரசிக்கக்கூடியதாக இப்பிரதேசத்தில் இன்றும் வழக்கொழிந்து போகாமல் இருக்கிறது. 6. ஊஞ்சலப்பாட்டு

சித்திரைப் புத்தாண்டுக் காலங்களிலும், சிவராத்திரி காலங்களில் இளம்பெண்கள் நித்திரை கொள்ளாது விழித்திருப்பதற்காகவும் எங்கள் பிரதேசத்தில் ஆலமரம், புளியமரம் அல்லது மாமரம் போன்ற பெருமரங்களில் ஊஞ்சலக் டடி அதில் ஏறியிருக்க இருவர் இருபுறக்கயிறுகளிலும் பிடித்து நிண்டு உத்தி ஊஞ்சல் இருபுறமும் வசீப் பாடல்களைப் பாடி ஆடுவார்கள்.

76

ஊஞ்சல ' பாடல் தரு

„தந்தன தனாதன தனாதன தனானே தான தனாதந்த னாதந்த னானே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருமடி தோழியரே நாங்களிருபேரும் வந்த சிவராத்திரியைச் சிந்தையுடன நோற்போம்

கடற்கரையில் மணல்பரவி நடகக் முடியாது கானலிலும் வெயிலிலும் ஓட முடியாது

காவோலை சரசரக்க வண்டென்றிருந்தேன் காககொத்து மச்சானைப் பெண்டென்றறிந்தேன்

ஓடோடு புளியம்பழம் உடைந்துடைந்து விழுவானேன் ஒரு கிண்ணச் சந்தனம் ஒழுகொழுகப் பூசுவானேன்

கண்டபிணி கொண்டபிணி கால்மாறி ஓட கண்டசிவ ராத்திரியைக் காதலுடன் நோற்பாய்

ஏறி மயிலேறி விளையாடிமலை தோழி இரணியனைக் கொன்றமலை தெரியுதடி தோழி

விளையாடி வெகுதுயரம் வருகுதடி தோழி மெதுவாக ஊஞ்சலைத் தணியும் தோழி என்றும் ஆரையம்பதி கிராமத்தில் புதுவருட காலத்தில் கோயில் வளவில் ஊஞ்சல கட்டி கோயில் பூசகரான ஐயரை முதலில் அழைத்துச் சென்று முருகப்பெருமானின் பிரகிருதியாக இருத்தி வளளியம்பாளின் திருமணமுறையைப் பாடலாக்கி அபபோது ஊஞ்சல் ஆட்டிப் பாடுவது வழக்கம், இதோ அந்தப்பாடல், தரு

„தனதன தந்தோம் தானை தானதனத்தோம் தானை தானதனாதன தானதனாதன தானதந்தோம் தானானே"

பாடல்

கரிமுகயானை தும்பிமுகவனே உந்தனபாதக் களலினைத்தொழு தோமிருபதமருள்புரி கந்தனூஞ்சல் இசைபாட

திருவளர் ஆரைநகர் சனனிதி வாழும்மெங்க செல்வசிகாமணி கந்தனை வணங்கி ஊஞ்சலிசை பாடிடுவோம்

மலருறை வாணியுந்தனருள புரிதாயே அந்த மயில்மிசை வருமொரு முருகனையனுதினம் மகிழ்ந்து ஊஞ்சலிசை பாட

அரிதிருமருகன் கங்கை தருமொரு புதல்வன் எங்கள் ஆறிருதோள முருகேசனை அனுதினம் ஊஞ்சலிசை பாட

77



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமுதிரச்சோலை வள்ளிபுனமதுதனிலே நல்ல பறனதிலி ருந்து கைக்கவனது வீசியே பறவைகளைத் துரத்தினளே

குயிலிசை போல வள்ளி குரலிசை கேட்டு வங்க குற்றமில்லாதொரு நந்தவ நாரதர் குறமகளருகில் வந்தனரே

மயிலினச் சாயல்வள்ளி வருவதுகண்டு அப்போ மறைமுனி நாரதர் அறுமுகவேலர்தன் மனைவி இவளாமெனவே

மடல்தனில் முனியும் வள்ளியருவழகெழுதிமுனன்ர ˙மான் அருள் மகளிவள்தான் செய்தவத்தினால் மான்வயிற்றில் வந்துதித்தாள்

செய்தரு முனிவர் நல்ல தினபப்னல் விட்டுளங்கள் செந்திரு மாநகர்வாழ் கநத்னை அனப்டன் சென்று கணடு அடிபணிந்தார்.

பூதலமீதில் வேடர் புனமது தனிலே நல்ல பூங்கிளியோ மயில் மாங்குயிலோவொரு பொற்கொடியைக் கண்டு வந்தேன்.

மான்மகள் கன்னி நல்ல வளளிதன் அழகை அந்த மடல்தனில் எழுதிய உருவழகதனை முன ˙மறை முனிவர்தான் கொடுத்தார்.

மணல்தனில் வேடர் வள்ளி அடியது கண்டபபோ மனமது தளர்வுற எதுவிதமோவென மாயை கொணடு நின்றனரோ.

சிற்றூர்கருகே வேடர் தினப்புனமதிலே வளளி சேடியர் கூடவே பாடியே யவளொரு சிறுபரணிலிருபாளென்றார்.

கந்தருமப்போ வள்ளிமேற் காதலனுகி வெகு காடுகள் மலை வனம் தேடித் தினப்புனத்தில் கண்டனரே வள்ளி தன்னை.

மருமலர் சோலை வேடர் புனமது தனிலேயங்கே கண்டதும் வேலவர் நின்று துயர ˙கொண்டு கானகத்தில் கதறினரே.

கானக மீதில் வள்ளி நீ தனியிருக்க வந்த காரணமெதுவிது நானறியும் படி கனனியரே சொல்லுமென்றார்.

வேடுவர ˙கன்னி நானும் வேலர் தன் அருளால் இந்த விழைபுனந் தனிலெனை தனியிருவென்றுமே வேடரிங்கே காவல் வைத்தார்.

மயில் குயிலாளே வளளி ஒயில் நடையாளே யுந்தன் மனமது தயவுடன் எனையணைபுரியடி மாங்குயிலே வளளியென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடுவர ்கண்டாள ் உன்னை விடுவார்களோடா நீயும் வணீலே தான் மடியாமலே போவெனவே வேல ்விளியாள ் சொன்னாள்.

போகவோ நானுமிங்கே வந்தது வளளியிந்த புனமது தனிலே உனை அணைபுரியால் போவெனொடி பொற்றொடியே.

78

கொலைபுரி குறவர ் தங்கள் குணமறியாயோ வந்தால் குன்றது போலவே உன்தலை கீழ்விழக் கொன்றிடுவார் என்றனனே.

கூரவிழிமாதனே என்மேல் கோபம் வையாதே இப்போ கூடுவோ மிருவரும் வாடியினி தின்புற குறமகளே வளளியென்றார்.

குருபரமுருகன் எங்கள் குலகுரு தெய்வமன்றிக் கூடுவனமென்றுன தாசை வையாதே நீ கொடிய பாவி போடா வென்றாள். என்ற பாடலை முற்றாகப் பாடி ஊஞ்சலாடிய பின்னரே ஊர்ப்பிள்ளைகள் ஏறி ஊஞ்சல் ஆடுவர்.

பிள்ளைகள் ஊஞ்சலாடும் போதுஇ பெரியவர்கள ்பல ஊஞ்சல ்பாடல்களைப்பாடுவர்.

“அரிமிளகு திரிமிளகு அன்னம் பிலாக்காய் அம்பட்ட் வண்ணானை கூப்பிட்டழைத்து ஆறுமுகச் சாமியை கயிறாகத் திரித்து பன்னிரண்டு கப்பலுக்குப் பாய்மரம் நிறுத்தி” என்ற பாடலும் பாடுவர். அன்றியும்இ

“வெள்ளைக்காரன் கப்பலுக்கு விளக்கேற்றி வைத்த போடியார் வள்ளங்கா பீரங்கி வைகக் ஆக்காளும் தங்காளும் சுக்கான் பிடிக்க போகுதாம் கப்பல் பெரியதுறை பாரக்க” என்ற ஒவ்வொரு வரியாகப் பாட பிள்ளைகள் ஏலேலோம் ஏலோலம்இ போடுவர்.

08. களிகம்பு (பொல்லடிப்பாடல்)

எமது பிரதேசத்தில் வாழும் பாலமுனை, காங்கேயனோடை முஸ்லிம் மக்கள் கொண்டாட்ட வேளை, பிரமுகர் வரவேற்பு, பெருநாள் காலங்களில் பொல்லடிப்பாடல் (களிகம்பு) அடித்துப ் பாடுவது மிகவும் இரம்மியமாக இருக்கும். இப்பாடல் எமது பிரதேச தமிழ் மக்களின் கோலாட்டப் பாடலின் திரிபாகவே கொள்ளப்படுகின்றது. இறைவன் மீதும், திருத்தூர் முகமது நபி(ஸல்) அவர்களைப் பிரார்த்தனை செய்தும், புகழ்ந்தும் பாடப்பட்டவையாக காணப்படும். தன்னால் கீச்சான் போர், தரித்தடித்தல், பள்ளியீட்டு, நாலுவட்டுக்குச் செல்லுதல், தேன் கூடு, மான்வளையம், ஆறுவெட்டு, ஒன்பது வெட்டு என்று பலவகையான பொல்லடிகள ் உளள்ன. பாடல்களைப் பாடும் அண்ணாவியாரின் பாடலுக்கேற்ப பொல்லடிகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ாரர்களின் இயக்கம், உடலசைவு, கம்புகளைத் தட்டும் வேகம் பலவகை நுடப்ங்களுக்கேற்ப மாறுபடும் தமிழ் மக்களின் வசந்தன் ஆடலைப் போன்றும் பொல்லடியும் அமைந்திருக்கும் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

பொல்லடியின் போது அண்ணாவியார் வருத்தத்தைப் பாடி ஆட்டம் தொடங்கி முடியும் வரை பாடிக் கொண்டே வழிநடத்த குழுவினர் அடிக்கடி "தரு" பாடிக் கொண்டே ஆடுவார்கள். பெரும்பாலும் பொல்லடிப் பாடல்கள் கீழ்வரும் "தரு" வடிவிலே அமைந்திருப்பதால்,முதலில் இத்தருக்களைப் பார்ப்போம்.

"தந்தனத் தான தனதான தந்த தான தந்தன தானானா.."

தந்தனத் தான தந்தினா தின தான தந்தினத் தந்தினா"..
என்றும்,

79

"தந்தநதி நாதிநதி நாதிநதி நானா தினநாதி நாதந்த நாதந்த நானா தந்தநதி நாதிநதி நாதிநதி நானா தினநாதி நாதந்"த நாதந்த நானா"....என்றும்

"தன்னன்னை நானே நேதன துன்னன்ன நானா நேதன துன்னன்னை நானே நேதன துன்னன்ன நானா நே"... எனவும் "தானே தந்தன நா நானே தன தானே தந்தன நா நானே தன தந்தனத் தானே தின தானே தன தானே தந்தனத் தானானே"என்றும் பாடும் விருத்தங்கள் இறைவனையும் அவர் தூதர் முகமது நபி (ஸல்) அவர்களையும், இறை நேசச் செல்வர்களையும், ஊர்சச் சிறப்புறக்களையும், இயற்கை வளங்களையும், அழகினையும் வாழ்த்தி ஏற்றிப் போற்றி நிற்க பாடல்களை பாடுவர். சிலவிருத்தங்கள் பின்வருமாறு,

"ஆதிமுதல் அந்தமாக அழைத்து வரும் யாறசூளே...ஓ... அந்தரம் விளங்கி எங்கும் புகழ் சிந்தி ஒளியாய் வரும் யாறசூனே...ஓ.

"மனமுடனுறங்கள் செய்யும் மும்மதலி பாதுகூாவே நெறிமுறை தவறாச் செங்கோல் நடத்தினீர் இதற்கு முன்னர்...ஓ..

"ஏழைக்கிரங்கி முகம் பாரும் லியாவுல் உறமது எனும் கொடி நிழலில் சேரும் செந்நெற் களனிகள் சீர் பெற்றிலங்கும்

சிறப்பான எங்கவூரினிலே... ஓ... வங்காள விரிகுடா வாழத்தொலி கூறிடும் வளமான எங்கவூரிலே...ஓ..

மட்/ பாலமுனை அண்ணாவியாரின் களிகம்புப் பாடல்கள் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்தமல்லி

விருத்தம்

சரீகொண்ட மேனியும் - மாறாத செல்வச் சிறப்பழகும் நேர்கொண்ட மேகக்கொடை மெய்ஞானக் சொரக்கத்தின்நேர்கொண்ட சொர்கக்த்தின் ஏந்நாளும் செம்பாய்தனில் திலந்துறங்கும் சரீகொண்ட கொங்கை மடவார்கள் போற்றும் முகமதுவே

தரு

"தந்னனத் தானானே தனதனத் தானினம் தானானே தந்னனத் தானானே தனதனத் தானினம் தானானே".

பாடடு ஆலம் படைத்தவனே – புகழ் ஆளும் ரகுமானே காலமும் உள்ளவனே – கிருபையாய் காத்தருள ஆண்டவனே.

வளள்ல் முகமதோடு – அவர்கள் வரிசையாய் நால்பேரையும் உள்ளகத்தே இருத்தி – அனுதினம் ஓதிப் புகழ்ந்திடுவோம்.

அண்டர் புகழ்போற்றும் - உசனார் அங்கே யிருக்கையிலே வன்டன் எசிதுடைய – படை வந்து சுற்றி வளைந்ததுவே.

அந்தச் சமயத்திலே – அலியக்பர் ஆத்துமரத்தோ டெழுந்து முநதியே போர செய்யவே – ஒருவன் முனனிதாய் வெட்டிவிட்டான்.

தன்னுடனே பிறநத் – அலியக்பர் சயிதாங்க் கிடப்பதனை மன்னர் அத்துல் காசீம் - அவர்கள் கண்ணினால் கண்டெழுந்தார்.

நொந்து படைக களம்போய் - அவரை நொடிக்குள் எடுத்துவந்து அந்தக் கருபலாவில் - அனைவரும் கூட்டியடக்கினரே....என்று அபப்பாடல் தொடரும்....

81

கப்பல் பாட்டுத்தரு

லாகிலாகா இல்லல்லா கூ இல்லல்லா கூ முகமது ரசூ லுல்லாகீ சூலல்லாகி

பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைக்கடல் பொங்கிநின்று அலிபுலாம்மீம் மொழிதிரண்டு ஓவையதில் வலம்புரியும் - அதினும் ஓடும் கப்பல் முகமதியாம்

துடிப்பு

பிரதான நாசூக்குப் பெரிதான கப்பல் பலவடூ யமுகூத்துக ˙திருவாசல் நோக்கி அதிதான வேதமது பொறுக்கானும் இஞ்சில் அதுவான சரக்கெல்லாம் மெதுவாக ஏற்றி நெறியான கக்குடைய துதிஜி விரிலும் நேராக மலைக்குற்றில் கும்பாசை வைத்து குறிப்பான தானமது காப்பாகவுசெனில் குல்கூ அல்ஹா என்று ஓடுவார்கப்பல்

பாடல்

அஞ்செழுத்து பஞ்சவர்ணம் (இல்லல்லா கூ) அவதாரமென நாடிடுவார் (இல்லல்லா கூ) பிஞ்செழுத்து பளபளவெனவுருவம் (இல்லல்லா கூ) பிசகாமல் நின்றசையுதுபார் (இலலல்லா கூ)

துடிப்பு

முத்து முகப்பணி முச்சந்தி வாசல் முதலோன் முகமது மீகாயிலங்கே பத்து விளக்கொன்று கயிற்றுன் ஒத்தில் பத்தாகி கப்பல் கொடியும் பறக்க முத்துக ˙கலிமா சித்திரக் கண்ணாரக்ள் சேங்கமலர் மாமதியும் நின்று விளையாடும்.

மத்தியின் மதிமுத்து தொட்டில ˙நடுவே மன்றகம் முகையத்தீன் நின்றாடுதையா

(லாகிலாகா….இல்லல்லா கூ...) என்று தொடரும் மேற்கூறப்பட்ட விருத்தங்களும், தருக்களும் ஏற்ப பாடப்படும் பாடல்கள˙ அக்காலக் கிராமத்து முஸ்லிம் மக்களிலே இரண்டறக் கலந்திருந்த சமயப் பற்றையும், முஸ்லிம் பெண்கள் நகை, நட்டுக்களையும், ஊர்

82

சிறப்பையும், கிராமத்து எழிலையும், வளத்தையும் இறைநேச செல்வர்கள் பற்றியும் எடுத்து இயம்புவனவாக அமைந்திருக்கும்.

09 விளையாட்டுப்பாடல்கள்

அந்நாட்களில் ஓய்வு நேரங்களில் பொழுதுபோக்கிற்காகவும், உடலுள வளர்சச் ிக்காகவும் குழந்தைகள் முதல் இளைஞர், யுவதிகள் வரை விளையாட்டுக்களில் நேரத்தைக் களித்தனர். எமது பிரதேசத்தில் தமிழ் முஸ்லிம் மக்கள் தங்கள் தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடு, கலாசார விழுமியங்களுக்கமைய விளையாட்டுப் பாடல்களைப் பாடி விளையாடுவார்கள்.

கிட்டிபப்புள்ளு விளையாட்டு

கிட்டிபப்புள்ளு விளையாட்டை சிறுவர்களும் இளைஞர்களும் விளையாடுவார்கள். இதில் கிட்டியும் புள்ளுமென இருதடிகள பயனப்டும். ஒருதடி ஒரு முழம் நீளமானதாகவும், ஒரு பக்க நுனி கூராக்கப்பட்டுமிருக்கும். இது தாய்ககிட்டி எனப்படும். மற்றயது தாய்ககிட்டியின் மூன்றில் ஒருபங்கு நீளமுடையதாகவும் இருமுனைகளும் கூராக்கப்படடி ருக்கும். இருகுழுக்களாக சிறுவர்கள் பிரிக்கப்பட்டு விளையாடும் போது குறிப்பிட்ட எண்ணிக்கையான புள்ளிகளைப் பெற்றதும் "பாடட்ம்" என்பது மூச்சிவிடாமல் பாடிக் கொண்டு ஓடுவது, அப்பாடல்

"கவடியடிக்க கவடியடிக்க கால்கை முறிய கால்கை முறிய காலுக்கு மருந்து தேடிக்கடடு" என்று பாடியும்

"ஆலையிலே சோலையிலே ஆலங்காடிச் சந்தையிலே குிட்டிப்புள்ளும் பம்பரமும் கிறுகியடிக்கப் பாலாறு பாலாறு என்றும் எமது பிரதேச முஸ்லிம் சிறுவர்கள், ஜீம் ஜீம் "ஆதம் மலைக்குப் போனாராம் ஆதம்பாவாவும் போனாராம் ஆதம் பாதம் கண்டாராம் ஆகா அற்புதம் என்றாராம்" என பாடிவிளையாடுவோம்.

கொத்து விளையாட்டு பாடல்

இவ்விளையாட்டு விளையாடும் போது, சிறுவர்கள் பெரிய வட்டமாக அமர்ந்திருக்க ஒருவர் முதலில் ஏதாவது ஒரு மரக்கிளைக் கொத்தை (மா, புளி) எடுத்து வட்டத்துக்கு வெளியே வலப்பக்கமாகச் சுற்றிச் சுற்றி பின்வரும் பாடலைப் பாடி, யொருவர் பின்னால் இக கொத்தை போடடுவிட்டு ஓட, மற்றவர் அக்கொத்தை எடுத்து, போடட்வரைத் துரத்தியோட கொத்துப் போடட்வர் ஓடிச் சென்று, துரத்திச சென்றவர் முன்பிருந்த இடத்தில் அமர, விளையாட்டுத் தொடரும், இதோ பாடல்,

"கொத்திருக்குக் கொத்து என்ன கொத்து மாங்கொத்து என்ன மா புளி மா

83

போடடுத்துப போங்க", என்று பாடி விளையாடுவர்.

சங்கு விளையாட்டுப் பாடல்

சிறுவர்கள், சிறுமிகள் ஒன்று கூடி அமர்ந்திருந்து இவ்விளையாட்டை விளையாடுவர். உறவுமுறைகளைச சொல்லி தங்கள் கைகளைச் சங்கு வடிவில் பொத்தி ஒவ்வொருவர் கைகளின் மேலும் மாறிமாறி வைகக் ஒருவர் மட்டும், ஒருகையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கடுக்கில ் வைத்து, மறுகையின் ஒரு விரலால் அடுக்கிய சங்குகளின் கீழிருந்து மேல் நோகக் ி அல்லது மேலிருந்து கீழ் நோககி, இது யாரு சங்கு? இது யாரு சங்கு? என்று கேடக் மற்றவரக்ள் இது அம்மா சங்கு, இது அபப் ா சங்கு.... என்று கூற கடசியில் வெட்டவா? தீட்டவா? ஏன்று தலைவர் கேடக் ஒருவர் பதில் கூற தலைவர் சங்குகளை இரண்டாக வெட்ட சிறுவர்கள் சங்குகளைத் தங்கள் வாய்களில் வைத்துச் சங்கூதுவது போல ஊ...ஊ...ஊ.... என்று ஊதுவர். இதோ அந்தப் பாடல்,"இது ஆருசங்கு? அம்மா சங்கு இது ஆருசங்கு? அபப்ா சங்கு இது ஆருசங்கு? அண்ணா சங்கு இதுஆரு சங்கு? அக்கா சங்கு இதுஆரு சங்கு? தம்பி சங்கு இதுஆரு சங்கு? தங்கை சங்கு" என்று பாடுவார்.

ஆலாப்பறபறபாடடு

சிறுவர்கள் வட்டமாகத் தரையில் அமர்ந்து உள்ளங்கையை நிலத்தில் படவைத்திருக்க, மற்றவரக்ள் அவர்கையின் மேல் தங்கள் கைகளை மாறிமாறி வைத்து ஒருவர் ஆலாப்பறபற எனக்கூற மற்றவரக்ளும் கைகளை எடுக்காது தூக்கி, உயர்த்தி ஆலாப்பறப்பது போல் செய்து விளையாடுவர். இதோ பாடடு,

"ஆலாப்பறபற.... ஆலாகக்ுஞ்சு பறபற.... கொக்குப் பறபற... கொக்குக்குஞ்சு பறபற... குருவி பற பற... குருவிக்குஞ்சு பறபற... ஏன்று பாடிப் பாடி மகிழ்வர். இவ்வாறு எமது பிரதேசத்தில் இப்படியான பல விளையாட்டுப் பாடல்களைப் பாடி விளையாடுவர்.

10. ஒப்பாரிப் பாடல்

ஒருவரின் இறப்பில் மற்றவரக்ளை ஒப்புக்குச் சொல்லி அழும் பாடல்கள ் ஒப்பாரிப் பாடல்கள ் ஆகும். இப்பாடல்கள் சோகரசம் ததும்பும் பாடல்களாகும்.

84

கணவன் இறந்தபின் மனைவிபாடும் ஒப்பபாரி

"என்னை ஆளவந்த ராசாவே! என்னை விட்டுப் போனீரோ! எத்தனை கற்கனைகள் கட்டியிருந்தோமே! இடைநடுவில் என்னை விட்டு போனீரோ! எப்படி யுங்கள் முகத்தை நான் மறப்பேன்! என்று இனி உங்களைக் காண்பேன்! என்றும்

சிறுவயதில் இறந்த மகளைப் பாரத்து தாய்பாடுவது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ர மகனே பத்துக ˙கடடுப் பனையோல நீ படிக்கும் சுருள் ஓல படிப்பாய் என்றிருந்தேன் படித்து முடிய முன்னே பாலனுன்னை நானிழந்தேன்", என்றும் இளந்தாரிப் பருவ வயதிலிறநத்ால்,

"வாலைப் பராய மல்லோ! வயது மிகச் சொற்பவல்லோ தாலிக்கோர் நாட் பார்கக் காவுக்கோர் நாளாச்சே! கூறைக்கோர் நாட்பார்க்க கொள்ளிக்கோர் நாளாச்சே!" என்றும், தாயிறந்தபோது,"என்னப் பெத்த தாயாரே கப்பல் சுணங்கி வருமம்மா நீங்க போடட் கடிதம் முன்னே வரும் நான் கடிதத்தைக் கண்டவுடன் கண்ணீரை இறக்கி விட்டேன், என்றும் தந்தை தந்தை இறந்த போது,

"அபபா ந °வாற வழியிலேயே வழி மறித்து நில்லனப்பா நீ மாண்ட இடத்திலேயே மாமர மா நில்லனப்பா வேலி அருகினிலே நீ விரி மரமாய் நில்லனப்பா", என்றும் சகோதரியிறப்பில் தங்கை பாடுவது,

என்ர பிறவியரே நீ பாயில் படுக்கவில்ல பத்து நாள ˙செல்லவில்ல நோயில் படுக்கவில்ல நொந்தழுது கண்டதில்ல சிவனை வணங்கி நானும் சிவ பூசை செய்து வந்தேன்", என்றும், பற்பல விதமாக ஒப்பாரிப் பாடல்களை எமது பிரதேசத்தில் பாடுவதைக் கேட்க முடியும்.

**மூ.அருளம்பலம்**
**ஆரையம்பதி**

## கனிஷ்ட பிரிவு கவிதை எழுதுதல் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம்

**1ம் இடம் - செல்வி.மோ.தர்சிகா**
**மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம்**

**2ம் இடம் - செல்வி.தி.அபிலாசினி**
**மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம்**

**3ம் இடம் - செல்வி.கு.டோஜினி**
**மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்துக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்து மறைந்த கலைஞர்கள்



**பெயர் : அமரர் ஐ.பரமானந்தம்**
**பிறந்த திகதி : 07.04.1923**

ஆற்றிய சேவைகள் : இவர் ஆரையம்பதியின் முன்நாள் இலக்கியவாதியும் எழுத்தாளருமாவர். இவர் 1941, 42, 43ஆம் ஆண்டுகளில் பிரசித்தி பெற்ற றோயல் கல்லூரியில் ஆசிரியராக படமையாற்றிய போது வீரகேசரி, சுதந்திரன், தினகரன் ஆகிய பத்திரிகைகளில் கட்டுரைகள் , இலக்கியம் சம்பந்தமான ஆய்வுகள், கவிதைகள் என எழுதிவந்துள்ளார்.அது மட்டும் அல்லாமல் பல சிறந்த ஆங்கிலக்கவிதைகள், கதைகள் என்பனவற்றை தமிழாக்கம் செய்து மேற்படி பத்திரிகைகளில் பிரசரமும் செய்து வெளிவந்துள்ளது. சில ஆங்கில குறுநாடகங்களும் பாடசாலைகளுக்கு எழுதிக் கொடுப்பதும் உண்டு. வாளவீமன் தென்மோடி நாட்டுக்கூத்து பூரணமான நூல் வடிவமாகவும் எழுதியுள்ளார். சிறந்த ஆங்கில ஆற்றலும் அதேபோன்று தமிழ் ஆற்றலும் கொண்ட பாலபண்டிதர் ஆன படியால் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டதமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றினார்.



**பெயர் அமரர் கலாபூஷணம் : ஐ.சிவசுந்தரம்**
**பிறந்த திகதி : 18.8.1932**

ஆரையம்பதியைச் சேர்ந்த இவர் பாடசாலையில் கல்வி பயிலும் காலங்களிவல் பேச்சுப் போட்டிகளிலும் கட்டுரைப்போட்டிகளிலும் பல பரிசில்களை பெற்றுள்ளார்.அதன் பிற்பாடு பல இவர் 100ற்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார்.இவரின் நாடகத்தில் 40ற்கும் மேற்பட்ட நாடகங்கள் மேடையேற்றம் செய்யப்பட்டது. அனேக நாடகங்கள் புராண இதிகாச சரித்திர நாடகங்கள் ஆகும்.இவரின் நாடகமான ஷசாளுவப்புயல்' எனும் நாடகம் கொழும்பில் மேடையேற்றம் செய்யப்பட்டு சாகித்திய பரிசிம் பெற்றது சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : அமரர் க.அமரசிங்கம்
பிறந்த திகதி : 09.04 1926

இவர் கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள் என பல ஆக்கங்கள் எழுதியவர். சிறுவர் இலக்கியம் எழுதுவதில் திறமை மிக்கவர். இவரின் "சிறுவர் குரல்" நூல் தமிழியல் 2008 பரிசு பெற்றது. அதுமட்டுமன்றி அன்னாரின் தழிழ் எழுச்சிப் பாடல்கள் "திருமலைக்குரல்", காக்கைவிடு தூது எழிச்சிப்பாடல்கள் தழிழர் உரிமைகளை தமிழர்கள் எல்லோரிடத்திலும் பிரபல்யமாக்கியது. .அதுமட்டுமன்றி ஐந்தாவது உலகத் தழிழர் மகாநாட்டு நினைவு மலர் 1981.01.10 இல் இவரின்"கன்னித்தழிழுக்கோ கவியாரம்" வெளிவந்துள்ளது. ஆரையம்பதியில் மட்டுமல்லாது நாட்டின் பல பாகங்களிலும் பிரசித்தி பெற்ற ஆரையூர் அமரன் என்னும் நாமத்தால் அழைக்கப்படும் இவர் ஆரையம்பதியின் கிராமசபை தலைவராகவும் இருந்து சேவையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



பெயர் : அமரர்நல்.அளகேமுதலியார்
பிறந்த திகதி : 1915

தமிழ். தாய் காவியம் "கித்தாண்டி தலைப்புராணம் , கந்த விரத அம்மானை"முதலிய நூல்களை இயற்றியும் மற்றும் அச்சேறாத நூற்றுக்கணக்கான தனிப்பாடல்களையும் சில்லறைக் கோவைகளையும் "ஆரையூர் கோவை"என்னும் அரியநூலையும் ஆக்கியுள்ள புலவர் நல். அளகேச முதலியார் அவர்களது தழிழ் இலக்கிய புலமையைக் கண்டறிந்த மட்டக்களப்பு கலாசாரப்போரவை அன்னாருக்கு"இலக்கிய மணி" பட்டத்தை அளித்து கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் அமரர் : சீனித்தம்பி ஆறுமுகம்**
**பிறந்த திகதி : 1928**

ஆரையம்பதியைச் சேர்ந்த இவர் பிரபல்யம் பெற்ற எழுத்தாளர் கதை, கட்டுரை, கவிதை என பல தரப்பட்ட எழுத்தாக்கங்களை படைத்தவர். இவர் ஈழநாட்டில் மட்டுமல்லாது தழிழகத்திலும் பல சஞ்சிகைகளிலும் இவரது எழுத்தாக்கங்கள் பரிசுகளும் பாராட்டுகளும் பெற்றுள்ளன.அவற்றில் சில நந்தாவதி (சிறகதை தொகுதி) வாரிசுகள், அழகு சுடும், குமரி முதல் சென்னை வரை பிரயாணக்கட்டுரை, நீலவேணி, மாசில் வீணை, தமிழின்பம் ஆகும். இதே போன்று பல இலக்கிய ஆக்கங்களைப் படைத்து அன்னார் பிறந்த ஆரையம்பதிக்கும் எமது ஈழ திருநாட்டிற்கும் பெருமை தேடித்தந்த பெருமகன்.



**பெயர் அமரர் : த.நல்லலிங்கம்**
**பிறந்த திகதி : 08.10.1938**

ஆரையம்பதியை வசிப்பிடமாக கொண்ட இவர் நாட்டார் பாடல்கள் காவடிப்பாடல்கள் கும்மிப்பாடல்கள் பலவற்றை இயற்றியவர் இப்பாடல்கள் அனைத்தும் சிறிய புத்தகமாக பதிப்பு செய்து ஆலயங்களுக்கும் பாடசாலைகளுக்கும் வழங்கியுள்ளார். அவைகள் இன்றும் பாடப்படுகின்றன நாட்டுக்கூத்தையே தன் உயிர்மூச்சாக கொண்டிருந்தாலும் கதாப்பிரசங்கம் வில்லுப்பாடல்கள் நாட்டிய நாடகங்கள் போன்றவற்றை ஆக்குவதிலும் இயக்குவதிலும் சிறந்து விளங்கியவர் அத்துடன் தெய்வீக பாடல்களும் பொதுவான பாட்களையும் யாத்து தனது குரலில் பாடி ஒலிப்பேழை வடிவில் ஆக்கம் செய்துள்ளார்.மேலும் மண்முனைப்பற்று பிரதேசத்தில் உள்ள எல்லா ஆலயங்களையும் பற்றி இவரால் எழுதப்பட்ட தெய்வ காணம் எனும் நூல் மிகவும் பிரசித்தி பெற்ற நூலாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **அமரர்திரு.இராசய்யா நாகலிங்கம் (அன்புமணி)**

**பிறந்த திகதி** : **06.03.1935**

ஆரையம்பதி 01ல் பிறந்து வாழ்ந்த அன்னார் ஈழத்து முன்னனி எழுத்தாளராகவும் கலைஞராகவும் சமூக சேவையாளராகவும் சமாதான காவராகவும் சிறந்த அரச நிர்வாகியாகவும் சிரேஸ்ட பிரஜையாகவும் காணப்பட்ட இவர் 1970ல் மட்டக்களப்பில் மலர் எனும் பெயரில் இலக்கிய சஞ்சிகையை வெளியிட்டு பல முன்னனி எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் தமிழ் எழுத்துலகிற்கும் அறிமுகப்படுத்தியவர் அத்துடன் அன்புமணி வெளியீடு எனும் நிறுவனத்தை ஆரம்பித்து அந்நிறுவனம் மூலம் பல எழுத்தாளர்களின் நூல்களை வெளியிடுவதற்கு அனுசரணை வழங்கியவர்.இவரால் தெமிழ் இலக்கிய அறிமுகம், எட்டுத்தொகை பத்துப்பாட்டு பதினென் கீழ்கணக்கு நூல்களும் ஒரு தந்தையின் கதை எனும் நாவல், இல்லத்தரசி, வரலாற்றுச்சுவடுகள் எனும் சிறுகதை தொகுப்பும் ஒரு மகளின் கதை எனும் குறுநாவலும் வெளியிடப்பட்ட நூல்களாகும். மேலும் இவர் பல விருதுகளை பெற்ற சிறந்த இலக்கியவாதியாவார்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : அமரர் கணபதிப்பிள்ளை சபாரெத்தினம்**

**பிறந்த திகதி : 05.04. 1946**

ஆரையம்பதியில் பிறந்த கல்வி கற்று தமிழ் ஈழத்தின் பிரபல எழுத்தாளராக இலக்கியவாதியாக பல்கலை வித்தகராக கவிஞராக நாடக எழுத்தாளராக நடிகையாளராக பல்வகை பரிமாணங்களும் பெற்ற இவர் தமிழ் இலக்கிய பரப்பிலே மீசை எனும் கட்டுரை மூலமாக தினகரன் புதன் மலரின மூலம் காலூன்றி, பீஸ்மர் ஆரையம்பதி க.சபாரெத்தினம் எனும் புனைபெயரை கொண்ட எழுத்தாளர் ஆவார். மேலும் இவரால் 20ற்கு மேற்பட்ட சிறுகதைகள் 50ற்கு மேற்பட்ட கவிதைகள் 30ற்கு மேற்பட்ட தமிழ் கட்டுரைகளும் 5 ஆங்கில கட்டுரைகள் 5 நாடகங்கள் 6 தனிப்பட்ட நூல்கள் இவரால் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் 2002 ல் எழுதிய மொஸ்கோ அனுபவங்கள் பயணக்கட்டுரை சர்வதேச ரீதியில் நல்வரவை பெற்றது. அத்துடன் ஏற்றம் இறக்கம் நாளை என்பதில்லை, தொங்கு தோட்டமும் இறங்கு படிகளும், அவனுக்குத்தான் தெரியும், காதல் என்பது தேன்கூடு, இப்ப காலம் மாறி போயிச்சு, தகுதி........., விபரீதம் எனும் சிறுகதைகள் எனும் கதைகள் தேசிய பத்திரிகைகளில் வெளிவந்தன. மேலும் பல நூல்களையும் வெளியிட்டார் இறுதியாக ஆரையம்பதியின் கண்ணகை

வரலாறும் வழிபாடும்எனும் நூலின் தொகுப்பாசிராகவும் விளங்கினார்.2012ஆம் ஆண்டு பல்துறைக்காக இலங்கை அரசு தேசிய விருதாக கலாபூணமும் 2013ம் ஆண்டில் கிழக்கு மாகாண முதலமைச்சர் விருதும் 2004ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு கல்வி அமைச்சின் சிறந்த நூலிற்கான விருதினையும் பெற்றுக் கொண்டார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலில் பிரதேச கலாசார அதிகார சபையினரால் நடாத்தப்படும் பிரதேச இலக்கிய விழா – 2018ல் வெளிவரும் புதிய மழை தூறல் - 02 நூல் இம்முறையும் போட்டியாளர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றது.

இந்நூலிற்கான வாழ்த்துச் செய்தியை வழங்கிய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அவர்களுக்கும், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அவர்களுக்கும், எமது அதிகார சபையின் ஊடாக மனமாந்த நன்றிகளை தெரிவித்து கொள்வதில் பெருமிதம் அடைகின்றோம்.

அத்துடன் இவ்விழாவிற்கான செயற்பாடுகளுக்கு உறுதுணையாக நின்ற பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் இப்போட்டிக்கு நடுவனம் புரிந்து சிறந்த ஆக்கங்களை வகைப்படுத்தி வழங்கிய நடுவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். இவ் இலக்கிய விழா போட்டியில் பங்கு பற்றுவதற்கு பாடசாலைகளை ஊக்கவித்த அதிபர், ஆசிரியர், பெற்றோருக்கும் இப்போட்டியில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் மற்றும் கலைஞர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இப்புதிய மழை நூலுக்கான அனுசரனை வழங்கியவர்களும் அட்டைப்படத்தை வடிவமைத்து தந்த நல்லுள்ளங்களுக்கும் சிறப்பான முறையில் நூலை அச்சிட்டு தந்த அச்சகத்தினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பிரதேச கலாசார அதிகார சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org























**அனுசரனை :**

**கலாசார அலுவல்கள் திணைக்களம்**

**அஷ்ஷூப்பான் நலன்புரிச் சங்கம்**
**பீ.ஜே.எம். வீதி,**
**காத்தான்குடி - 06**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org